
# விவேகானந்தன்

# VIVEKANANDAN

## சுவாமி விவேகானந்தரின் இலங்கை விஜய நூற்றாண்டு நினைவு விழா பூர்த்தி விசேட மலர்





**SPEICAL SOUVENIR TO MARK THE CONCLUDING SESSION OF THE CENTENARY CELEBRATION OF SWAMI VIVEKANANDA'S VISIT TO SRI LANKA**

RAMAKRISHNA MISSION

விவேகானந்த சபை, கொழும்பு

அகில இலங்கை இந்து மாமன்றம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விவேகானந்தன்

1998

VIVEKANANDAN

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விவேகானந்தன்
1998
VIVEKANANDAN

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விவேகானந்தன்
1998
VIVEKANANDAN

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ




சுவாமி விவேகானந்தரின் இலங்கை விஜய
நூற்றாண்டு நிறைவு விழாவை ஒட்டி

கொழும்பு இராமகிருஷ்ணமிஷனின்
ஆசியுடனும்

அகில இலங்கை இந்து மாமன்றத்தின்
அனுசரணையுடனும்

# விவேகானந்த சபை

கொழும்பு

வெளியிடும் விசேட மலர்

# விவேகானந்தன்

## வெளியீட்டு வைபவம்

காலம் : 14.02.1998 மாலை 5.00 மணி

இடம் : விவேகானந்த சபை மண்டபம்,
கொட்டாஞ்சேனை, கொழும்பு - 13.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

"யதா பஸ்ய பஸ்யதே ருக்மவர்ணம் கர்த்தாரமீஸம்
புருஷம் ப்ருஹ்ம யோனிம்
ததாவித்வான் புண்ய பாபே விதூய நிரஞ்சன
பரமம் ஸாம்யம் உபைதி"

- முண்டக உபநிடதம்-

பிரம்மமாகவும், அதன் பிறப்பிடமாகவும் சிருஷ்டி
கர்த்தாவாகவும், ஈசனாகவும் உள்ள பொன் போல்
விளங்கும் பரம்பொருளை, எப்போது, பார்க்கின்ற
திறமையுடையவன் பார்க்கின்றானோ அப்பொழுதே
அவன் புண்ணியம் பாபம் இரண்டினையும் உதறிவிட்டு
மாசற்றவனாய் பரமபுருஷனை அடைகின்றான்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மலர் வாயில்

'விவேகானந்தன்' என்ற
பெயரிலுள்ள ஏழு
எழுத்துக்களுக்கேற்ப இப்
பல வர்ண மலரினை கீழ்வரும்
ஏழு இதழ்களாகப் (அத்தியாயங்கள்)
பிரித்து ஆக்கங்களைச்
சமர்ப்பித்துள்ளோம்.

இதழ் 1 – ஆசிகளும் அறிக்கைகளும்
இதழ் 2 – ஆய்வுரைகளும் கருத்துரைகளும்
இதழ் 3 – வருகையும் சொற்பொழிவுகளும்
இதழ் 4 – எழுச்சியும் மலர்ச்சியும்
இதழ் 5 – விழாக்களும் நிகழ்வுகளும்
இதழ் 6 – வாழ்க்கையும் நோக்கமும்
இதழ் 7 – நிழற் படங்களும்
நினைவுச் சின்னங்களும்

இந்த அழகு மஞ்சரியின் இதழ்களில் ஊறும் இன்பத்தேனைச் சுவைத்துப் பருகிட இம்மலர் வாயிலில் நின்று அன்புடன் கை கூப்பி அழைக்கின்றோம்.

மலர் ஆசிரியர் குழு.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# விவேகானந்தன்

## சுவாமி விவேகானந்தரின் இலங்கை விஜய நூற்றாண்டு நினைவு விழா பூர்த்தி விசேட மலர்


| | | |
|---|---|---|
| மலர் வாயில் | - | i |
| பொருளடக்கம் | - | ii |
| நிகழ்ச்சி நிரல் | - | v |


### இதழ் 1 - ஆசிகளும் அறிக்கைகளும்


| | | | | |
|---|---|---|---|---|
| 1. | Message | - | Swami Bhuteshananda<br>*President, Ramakrishna Math, West Bengal* | 1 |
| 2. | Message | - | Swami Atmaganananda<br>*Ramakrishna Mission, Colombo* | 2 |
| 3. | Message | - | H. E. the President of Sri Lanka | 3 |
| 4. | Message | - | H. E. the President of India | 4 |
| 5. | Message | - | High Commissioner of India | 5 |
| 6. | அருள் மிகு சுவாமி விவேகானந்தர் | - | திரு. வி கைலாசபிள்ளை<br>*தலைவர், அ.இ. இந்து மாமன்றம்* | 6 |
| 7. | அறிவிற்கோர் ஆலயம் | - | திரு. இராஜபுவனீஸ்வரன்<br>*பொதுச்செயலாளர், விவேகானந்த சபை, கொழும்பு* | 7 |
| 8. | இந்து மாமன்றமும் விவேகானந்தர் நூற்றாண்டும் | - | | 10 |


### இதழ் 2 - ஆய்வுரைகளும் கருத்துரைகளும்


| | | | | |
|---|---|---|---|---|
| 9. | "விவேகானந்தன்" ஒரு வரலாற்றுக் களஞ்சியம் – மலர் அறிமுகம் | - | எம். ஆர். ராஜ்மோகன் | 13 |
| 10. | இலங்கையில் சுவாமிஜி | - | பெ. சு . மணி | 15 |
| 11. | Foot prints on our shores | - | Prof. C. Suriyakumaran | 24 |
| 12. | வீரனாக எழுந்து நில் | - | சுவாமி கமலாத்மானந்தர் | 26 |
| 13. | Swami Vivekandanda's visit to Ceylon | - | M. Nagaratnam | 28 |
| 14. | சைவ மண்ணில் ஒரு வேதாந்தி | - | பேராசிரியர் பொ. பூலோகசிங்கம் | 29 |
| 15. | சுவாமிவிவேகானந்தரின் உலகப்பொதுமறைக் கருத்துக்கள் | - | செல்வி. க. தங்கேஸ்வரி | 31 |
| 16. | இளைஞரும் விவேகானந்தரும் | - | திருமதி. பத்மா சோமகாந்தன் | 34 |
| 17. | இந்து சமயத்துக்கு சுவாமி விவேகானந்தர் அளித்த விளக்கம் | - | என். கிருஷ்ணமூர்த்தி | 37 |
| 18. | விவேகானந்த பஞ்சகம் | - | சுவாமி விபுலானந்தர் | 39 |
| 19. | இந்து உன்னால் மகிமை பெற்றது | - | கவிதை | 40 |
| 19. | விவேகானந்தரும் வாலிபரும் | - | கவிதை | 40 |

## இதழ் 3 - வருகையும் சொற்பொழிவுகளும்
(நூற்றாண்டுகளுக்கு முன்)


| | |
|---|---|
| 20. சிக்காகோ சொற்பொழிவுகள் | 41 |
| 21. Chicago Addresses | 53 |
| 22. விவேகானந்தரின் இலங்கை விஜயம் | 64 |
| 23. 'நமது பெருமை' - கொழும்பு சொற்பொழிவு | 67 |
| 24. 'நமது அடிப்படை' - யாழ் சொற்பொழிவு | 73 |


## இதழ் 4 - எழுச்சியும் மலர்ச்சியும்
(கடந்த நூறாண்டுகளில்)


| | |
|---|---|
| 25. விவேகானந்த சபை, கொழும்பு - தோற்றமும் வளர்ச்சியும் - விவேகானந்தன் | 83 |
| 26. The Ramakrishna Mission | 90 |
| 27. 'விவேகானந்தன்' - இதழ் ஆரம்பமும் வளர்ச்சியும் | 91 |
| 28. Fiftieth Anniversary of Parliament of Religions at Chicago - | 92 |


## இதழ் 5 - விழாக்களும் நிகழ்வுகளும்
(நூறாண்டுகளின் பின் 1993-1997)


| | | | |
|---|---|---|---|
| 29. விவேகானந்தர் நூற்றாண்டு விழாக்கள் | - | அஞ்சல் தலை வெளியீடு | 94 |
| 30. Centenary Celebration - A brief Report | | | 95 |
| 31. Centenary Celebration Speeches | - | Swami Ranganathannandaji Maharaj<br>*Vice President, Ramakrishna Math Culcutta* | 96 |
| | - | Hon. Mangala Samaraweera<br>*Minister of Post and Telecommnications.* | 98 |
| 32. பரு. துறையில் விவேகானந்தர் | - | | 99 |
| 33. யாழ். திருநெல்வேலி இராமகிருஷ்ணாலயத்தின் நிகழ்வுகள் | - | | 102 |
| 34. மட்டக்களப்பு, அம்பாறை மாவட்டங்களில் நூற்றாண்டு விழா | - | சுவாமி ஜீவனானந்தா | 105 |
| 35. நாட்டின் இதர பகுதிகளில் நூற்றாண்டு விழாக்கள் | | | 108 |
| 36. Centenary Celebration of Swamiji's Return to India | - | | 110 |
| 37. நூற்றாண்டு விழாக்களை ஒட்டிய போட்டிகளின் முடிவுகள் | | | 112 |


Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

## இதழ் 6 - வாழ்க்கையும் நோக்கமும்


| | | | |
|---|---|---|---|
| 38. யுக புருஷர் | - | திருமதி வசந்தா வைத்தியநாதன் | 114 |
| 39. Life of Vivekanada | - | | 117 |
| 40. விவேகானந்தரின் ஆக்கங்கள் ஒரு வழிகாட்டி | - | | 124 |
| 41 The Ideal & Realization of a Universal Religion | - | Swami Vivekananda | 134 |
| 42. Swami's Views on other Religions | - | | 135 |
| 43. கணக்கறிக்கை | - | | 138 |


## இதழ் 7 - நிழற்படங்களும் நினைவுச் சின்னங்களும்


44. கால ஓட்டத்தில் விவேகானந்தர்

45. சுவாமியின் நினைவு அழியாச் சின்னங்கள் -

- Ancestral Home of Swami Vivekananda in Calcutta
- Vivekananda Rock, Kanyakumari
- The House where Swamiji Lived in Belur Monastery
- The Room where Swamiji Breathed his last
- Vivekananda Temple at Belur
- விவேகானந்தர் கொழும்பில் தங்கிய சத்திரம்
- விவேகானந்த மண்டபம், கொழும்பு
- நிறுவப்பட்ட சுவாமிஜியின் சிலை

46. விழாக்கள் -

| | | |
|---|---|---|
| 47. மலர்க்குழு | - | 139 |
| 48. நன்றி உரை | - | 140 |


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நிகழ்ச்சி நிரல்

மாலை

| | | |
|---|---|---|
| 4.30 | - | மங்கள வாத்தியம் |
| 5.00 | - | புஷ்பாஞ்சலி |
| 5.15 | - | மங்கள விளக்கேற்றல் |
| 5.30 | - | பஜன் - கம்பளை, ஸ்ரீ முத்துமாரி அம்மன் தமிழ் வித்தியாலய மாணவர்கள் |
| 6.00 | - | வரவேற்புரை - திரு. வி. கயிலாசபிள்ளை *தலைவர் விவேகானந்த சபை கொழும்பு.* |
| 6.15 | - | ஆசியுரை - ஸ்ரீமத் சுவாமி ஆத்மகனானந்தஜீ மகராஜ் *ராமகிருஷ்ண மிஷன், கொழும்பு.* |
| 6.30 | - | பிரதம அதிதியுரை - கௌரவ பேராசிரியர் ஏ. வி. சுரவீர அவர்கள் *பிரதி கலாசார அமைச்சர்* |
| 6.45 | - | விசேட மலர் வெளியீடு கௌரவ ஷிவ்ஷங்கர் மேனன் அவர்கள் *இலங்கைக்கான இந்தியத் தூதுவர்* |
| 7.00 | - | மலர் அறிமுகவுரை - ஸ்ரீமதி வசந்தா வைத்தியநாதன் *கலாசார செயலாளர் விவேகானந்த சபை* |
| 7.20 | - | விருந்தினர்க்கு விசேட மலர் கையளிப்பு |
| 7.35 | - | பரிசளிப்பு -அகில இலங்கை ரீதியில் நடத்தப் பெற்ற சுவாமி விவேகானந்தர் நாவன்மைப் போட்டியில் வெற்றியீட்டிய மாணவர்களுக்கு பரிசு வழங்கல். |
| 7.45 | - | நன்றியுரை - திரு. க. இராஜபுவனீஸ்வரன் *கௌரவ பொதுச் செயலாளர்* |
| 7.55 | - | கலாசார நிகழ்ச்சிகள் விவேகானந்த சபை நடன மன்ற மாணவர்கள் தயாரிப்பு – செல்வி W. ஞானாம்பிகை *விவேகானந்த சபை நடனமன்ற ஆசிரியர்* |
| 8.00 | - | மங்களம் |

# Programme

| | |
|---|---|
| 4.30 p.m. | ***Mangala Vaadyam.*** |
| 5.00 p.m. | ***Pushpanjali to the Statue of Swami Vivekananda*** |
| 5.15 p.m. | ***Lighting of the Traditional Lamp.*** |
| 5.30 p.m. | ***Bajan Shri Muthumari Amman*** *Tamil Maha Vidhyalayam Students - Gampola* |
| 6.00 p.m. | ***Welcome Address*** **Mr. V. Kailasapillai** *President Vivekananda Society.* |
| 6.15 p.m. | ***Blessing By. Srimat Swami Athmaganandaji*** *Ramakrishna Mission Colombo-6.* |
| 6.30 p.m. | ***Address, By the Chief Guest.*** **Hon. Prof. A. V. Suraveera** *Deputy Minister of Cultural & Religious Affairs* |
| 6.45. p.m. | ***Release of the Souvenir*** ***By His Excellency*** **Shivshankar Menon.** *High Commissioner of India.* |
| 7.00 p.m. | ***Introductory Speech SpecialSouvenir.*** ***By.*** **Srimathi Vasantha Vythiyanathan** *Cultural Secretary V. S.* |
| 7.20 p.m. | ***Release of the Souvenir to the invitees.*** |
| 7.35 p.m. | ***Distribution of Prizes :-*** ***Winners of the All Island Swami Vivekananda Oratory Contest*** |
| 7.45 p.m. | ***Vote of Thanks : By*** **Mr. K. Rajapuvaneeswaren** *Hony General Secretary. Vivekananda Society* |
| 7.55 p.m. | ***Cultural Show*** *Students of the Vivekananda Dance School.* Produced by **Miss W. Gnanambikai** *Teacher Vivekananda Dance School.* |
| 8.30 p.m. | ***Mangalam.*** |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**சுவாமி விவேகானந்தரின் இலங்கை விஜய நூற்றாண்டு விழா விசேட மலர் வெளியீடு**

**1897-1997**

*14.02.98 சனிக்கிழமை மாலை 5.00 மணிக்கு சபை மண்டபத்தில் இடம் பெறும் விசேடமலரை வெளியிடுபவர் :*

கௌரவ ஷிவ்ஷங்கர் மேனன் அவர்கள்
*(இலங்கைக்கான இந்தியத் தூதுவர்)*

பிரதம அதிதி :
கௌரவ ஏ. வீ. சுறவீர அவர்கள்
*(பிரதி கலாசார அமைச்சர்)*

சிறப்பு விருந்தினர்கள் :

★ கௌரவ கே. விக்னராஜா அவர்கள்
*மேல் மாகாண ஆளுனர்*
★ கௌரவ ஏ. டி. சுசில் பிரேம ஜயந்த
*மேல் மாகாண சபை – முதல் மந்திரி*
★ நகர பிதா கரு ஜயசூரிய அவர்கள்
*கொழும்பு மாநகர சபை*
★ கௌரவ பி. பி. தேவராஜ் பா. உ
★ கௌரவ திருமதி. ஆர். எம். புலேந்திரன் பா. உ
★ கௌரவ ஆர். யோகராஜன் பா. உ
★ ஸ்ரீ பி. எஸ். பிரகாஷ் அவர்கள்
*இலங்கைக்கான பிரதி இந்தியத் தூதுவர்.*
★ திரு. டி. எம். சுவாமிநாதன்
*முன்னைநாள் மேல் மாகாண ஆளுனர்*
★ திரு. கே. கணேசலிங்கம்
*முன்னைநாள் நகரபிதா*
★ திருமதி இராஜலெட்சுமி கயிலாசநாதன்
*பதில் பணிப்பாளர், இந்து சமய கலாசார அலுவல்கள் திணைக்களம்.*

*We cordially invite you*
*to*
The Release of the Souvenir

*by*
***His Excellency Shivshankar Menon***
(High Commissioner of India for Sri Lanka)

*Saturday 14th February, 1998 at 5.00 pm*
*at the*
*Vivekananda Society Hall*
*34, Vivekananda Hill, Colombo 13.*

Chief Guest - ***Hon. Prof. A. V. Suraweera***
(Deputy Minister of Cultural & Religious Affairs)

*Guests of Honour*

★ **Hon. K. Viknarajah**
*Governor . Western Province*
★ **Hon. A.D. Susil Prema Jayantha**
*Chief Minister. Western Province*
★ **His Worship Karu Jayasuriya**
*Mayor of Colombo*
★ **Hon. P.P. Devaraj. M.P.**
★ **Hon. Mrs. R.M. Pulendran. M.P.**
★ **Hon. R. Yogarajan M.P.**
**Shri. B.S. Prakash**
★ *Deputy High Commissioner of India*
★ **Mr. D. M. Swaminathan**
*Former Governor - Western Province*
★ **Mr. K. Ganeshalingham**
*Former - Mayor*
★ **Mrs. R. Kailasanathan**
*Additional Secretary Ministry of Hindu Affairs*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# JANUARY 1897



| FRI | SAT | SUN | MON | TUE | WED | THU |
|---|---|---|---|---|---|---|
| **1** | **2** | **3** | **4** | **5** | **6** | **7** |
| **8** | **9** | **10** | **11** | **12** | **13** | **14** |
| **15** Arrived at **Colombo** at 6 p.m.- Was accorded a grand reception by the local people and given an Address of Welcome | **16** Delivered his first lecture at the Floral Hall (now the Empire Theatre) the subject being India the Punyabhumi | **17** Visited the famous Sri Ponnambalawaneswarar temple at Kochchikade | **18** Delivered his second lecture at the Public hall on 'Vedanta Philosophy' | **19** Reached **Kandy** by train at 11.20 a.m. Accorded a warm reception and given an Address of Welcome - left for **Matale** and halted there for the night | **20** Journeyed to Jaffna- passed the night in the carts | **21** Reached **Anuradhapura** - gave a short address under the shade of the sacred Bo tree- journey continues- reception with all honour at **Vavuniya** and the presentation of an address |
| **22** | **23** | **24** Reached **Jaffna** - accorded a fitting reception | **25** Torch- light procession with native music from the town to the Hindu College with thousands joining it - delivered a lecture on Religion' | **26** Left for India by steamer | **27** | **28** |
| **29** | **30** | **31** | | | | |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# விவேகானந்தன்

இதழ் 1

# ஆசிகளும் அறிக்கைகளும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

**RAMAKRISHNA MATH**
P. O. Belur Math, Dist. Howrah
West Bengal - 711 202.

# Message

I am glad to know that the organizing committee of the centenary celebrations of Swami Vivekananda's visit to Sri Lanka has planned to conclude its year-long celebrations in a befitting manner. I am informed that a commemorative souvenir will be published on this occasion.

During the last one year, the noble citizens of Sri Lanka have expressed their deep love and respect for Swamiji in several ways. All the celebrations that were held to commemorate Swamiji's visiting this island were enthusiastically conducted and people spontaneously took active part in them. Such celebrations give strong impetus to know more of Swamiji's ideas and follow them with avidity. May the blessings of Swamiji be showered on the people of Sri Lanka so that they may have peace and prosperity.

I convey my best wishes to everyone associated with the centenary celebration, and wish the concluding part of the function all success.

**Swami Bhuteshananda**
*President*
*Ramakrishna Math & Ramakrishna Mission*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# Message

The Vivekananda Society of Colombo is holding on the 14th February, 98, the concluding function of the year-long celebration of the Centenary of Swami Vivekananda's visit to Sri Lanka in 1897.

The Centenary celebration began with all earnestness on the 15th January,1997, with the unveiling of the bronze statue of Swami Vivekananda, in the premises of the Vivekananda Society. The Government of Sri Lanka also highlighted the significance of the celebration by releasing a commemorative stamp on the same occasion.

Swami Vivekananda symbolises the unity of mankind. He is a meeting- point, so to say, of all diverse races, religions and cultures, harmonising them all in a beautiful way without disturbing any of their individuality. He is a universal phenomenon.

Though the Centenary celebration is brought to a close, the inspiring words of Swami Vivekananda, Arise! Awake! And Stop not till the goal is reached ! will continue to instill faith and courage in the hearts of thousands and thousands of people of this country, cutting across all differences of race, religion and language.

I take this opportunity to congratulate the Vivekananda Society Colombo and all other organisations through out the country for making this Centenary celebration a great success, by observing this event in a fitting manner.

May the blessings of Swami Vivekananda be on us all!

**Swami Atmaghanananda**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ශ්‍රී ලංකා ජනාධිපති
## இலங்கை சனாதிபதி
# President of Sri Lanka

I am pleased to send my warm greetings to the Ramakrishna Mission on the occasion of the centenary celebrations of Swami Vivekananda's historic visit to Sri Lanka.

This special occasion presents a fine opportunity to acknowledge Swami Vivekananda's valuable message of peace and harmony and his noving appeal. "help and not fight assimilation and not destruction; harmony and peace and not dissension" We in Sri Lanka remember the Swami as a great advocate of Hindu-Buddhist unity which stregthens the close links we've had with India.

Moreover, his thoughts on education are very relevant to us in Sri Lanka. To him education was not the amount of information that is put into one's brain........... but should be a man-making, character building assimilation of ideas. It is only then that self- reliance. strength of mind, expansion of intellect and the development of peace and human excellence could be had. His idea that women should receive equal opportunities for education as men, is something we in Sri Lanka have accomplished to a great extent.

I understand that a statue of the Swamiji is being installed to mark this occasion, This is indeed timely.

I convey my sincere good wishes for the success the centenary celebrations.

03/01/1997

**Chandrika Bandaranaike Kumaratunga,**
*President*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# President
# Republic of India
# Message

I am happy to learn that the Ramakrishna Mission in Colombo is celebrating the centenary of Swami Vivekananda's visit to Sri Lanka.

Swami Vivekananda's call for commitment to the values of pluralism and peace is increasingly relevant as our nations and peoples strive for a better future.

Let us dedicate ourselves to the great ideals that Swami Vivekananda held aloft and strive for the cause of Peace, Friendship and Cooperation for the good of all.

I wish the celebrations success.

New Delhi
December 29th, 1996.

**Shanaker Dayal Sharma**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# Message

December 18,1997

I am happy to learn that the Vivekananda Society in Colombo is celebrating the centenary of Swami Vivekananda's visit to Sri Lanka. One hundred years ago, Swami Vivekananda taught us to be proud of our own cultural heritage while showing tolerance and acceptance to all religions. Swami Vivekananda's message of universal brotherhood and peace is as relevant today when we strive for a better, peaceful world, and represents a goal to which we should rededicate ourselves.

Please accept my best wishes for a successful celebration.

**Shivshankar Menon**
*High Commissioner of India*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அருள்மிகு சுவாமி விவேகானந்தர்


வி. கயிலாசபிள்ளை,

*தலைவர், அகில இலங்கை இந்து மாமன்றம்*

*விவேகானந்த சபை கொழும்பு.*


இராமகிருஷ்ண சுவாமிகளின் சிஷ்யனாகிய அருள்மிகு சுவாமி விவேகானந்தர் இலங்கைக்கு வருகைதந்து நூறு ஆண்டுகள் பூர்த்தியானதையிட்டு அகில இலங்கை இந்துமாமன்றமும் விவேகானந்த சபையும் ஒரு ஞாபக வெளியீடு செய்வதாக தீர்மானிக்கப்பட்டது.

சுவாமி விவேகானந்தர் சிக்காகோ நகரில் தமது ஆணித்தரமான பேச்சினால் மேலை நாட்டவரின் உள்ளத்தைக் கவர்ந்து ஓர் சரித்திரம் படைத்தார். இந்து சமயத்தினை உலகளாவிய முறையில் யாவருக்கும் அறிமுகப்படுத்தினார். கிறிஸ்தவ மதத்தைச் சேர்ந்த பல மேலை நாட்டு மக்கள் சுவாமிகளின் ஆணித்தரமான பேச்சினால் கவரப்பட்டு இந்து மதத்தைத் தழுவினர். சுவாமிகளின் காலம் இந்து சமயத்தின் ஓர் மறுமலர்ச்சிக் காலமெனக் கூறலாம்.

அமெரிக்க விஜயத்தை முடித்து தாய்நாடு திரும்பும் வழியில் அவர் இலங்கையில் பல பாகங்களில் அருளுரையாற்றினார். கொழும்பு, யாழ்ப்பாணம் போன்ற இடங்களில் சுவாமிகளின் பேச்சைக் கேட்பதற்கு பல்லாயிரக் கணக்கான மக்கள் கூடினர். சுவாமிகள் இங்கு விஜயம் செய்த சில ஆண்டுகளின்பின் இலங்கைவாழ் இந்து மக்கள் விவேகானந்த சபையை கொழும்பில் ஸ்தாபித்தனர்.

விவேகானந்த சபை 1902ம் ஆண்டு தொடக்கம் இலங்கையில் சமயத்தொண்டு ஆற்றி வருகின்றது. சமய விழாக்கள் பலவற்றை கொண்டாடுவதுடன், சமய சொற்பொழிவுகள் பலவற்றையும் சபை ஒழுங்குசெய்து வருகின்றது. குழந்தைகளுக்கான நுண்கலைக் கல்வி வகுப்புக்களும் சபையினரால் நடாத்தப்படுகின்றன. வருடாவருடம் சைவ சமயபாடப் பரீட்சைகள் மூன்றாம் ஆண்டு முதல் க.பொ.த. வகுப்பு வரை நடாத்தப்பட்டு புலமைப் பரிசில்களும் சபையினரால் வழங்கப்படுகின்றது.

போர்த்துக்கேயர், ஒல்லாந்தர் எமது நாட்டை ஆட்சி புரிந்த காலத்தில் எமது புராதன ஆலயங்கள் பல அழிக்கப்பட்டு படிப்பிற்கும் உத்தியோகத்திற்குமாக மக்கள் மத மாற்றத்திற்கு உள்ளாக்கப்பட்டமை யாவரும் அறிந்த விடயமாகும். அந்தச் சூழ்நிலையில் தோன்றிய ஆறுமுகநாவலர் பெருமான் பல்வேறு சவால்களுக்கும் முகம் கொடுத்து எமது சமயத்திற்கு மறுமலர்ச்சி கொடுத்தார். இந்தியாவில் சுவாமி விவேகானந்தர் போன்ற மகான்கள் தோன்றி சமய மறுமலர்ச்சியை உண்டாக்கினர்.

இது போன்று இன்றும் போரினாலும் வன்முறைகளினாலும் நலிந்து கஷ்ட நிலையில் இருக்கும் இந்துக்கள் நாடளாவிய ரீதியில் பரவலாக, படிப்படியாக மதம் மாற்றப்பட்டு வருகின்றனர். இவற்றைத் தடுக்க இந்துமாமன்றத்துடன் விவேகானந்த சபையும் ஒருங்கிணைந்து செயற்பட வேண்டிய கட்டம் வந்துள்ளது. இச்சவாலை எதிர்கொண்டு உரிய நடவடிக்கை எடுப்பதற்கு எமக்கு எல்லாம் வல்ல இறைவனின் அருளை வேண்டி நிற்கின்றோம். மேலும், இன்றும் விவேகானந்தர், ஆறுமுக நாவலர் போன்ற பெரியாரொருவர் தோன்றி சைவ சமயத்திற்கு ஓர் மறுமலர்ச்சியைக் கொடுக்க வேண்டுமென்று இறைவனை வேண்டுவோமாக.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சுவாமி விவேகானந்தர் இந்து தர்மத்தையும் இந்தியாவையும் காப்பாற்றியவர். அவர் இல்லா விடில் நம்மதம் மறைந்து போயிருக்கலாம். இந்திய நாட்டிற்கு விடுதலையும் கிடைக்காமல் போயிருக்கலாம். அதனால் பூரணமாக அவருக்கு நாம் கடமைப்பட்டுள்ளோம். அவருடைய திடநம்பிக்கை, வீரம், ஞானம் ஆகியவை நம்மை என்றும் ஊக்குவிக்கட்டும். அதன் வாயிலாக அவரிடமிருந்து பெற்ற அரிய பொக்கிஷங்களைப் போற்றிப் பாதுகாக்கலாம்.

–சக்கரவர்த்தி. ஸ்ரீ இராஜ கோபாலாச்சாரியார்–

# அறிவீந்தோர் ஆலயம்



*சிவஞானச் செல்வர்*
க. இராஜபுவனீஸ்வரன்
*கௌரவ செயலாளர், விவேகானந்த சபை.*

இந்திய சுதந்திரத்தின் விடிவெள்ளியாக விளங்கியவர் சுவாமி விவேகானந்தர். 18.06.1902இல் கொழும்பு வாழ் இளைஞர்கள் சுவாமியின் இலங்கை விஜயச் சொற்பொழிவுகளால் ஈர்க்கப்பட்டு ஆன்மிக உணர்வை ஊட்டக்கூடிய ஒரு சபையின் தேவையை உணர்ந்தார்கள். 18.06.1902இல் அனைவருக்கும் சபை அமைப்பதற்கான அழைப்பு விடுக்கப்பட்டது. இந்த நிலையில் தான். 04.07.1902 இல் சுவாமிகளின்மகாசமாதி எதிர்பாராதவிதமாக நிகழ்ந்து விட்டது. அந்த மகான் மகாசமாதியடைந்த ஒன்பதாம் நாள் 13.7.1902 ல் விவேகானந்த சபை கொழும்பு உதயமாயிற்று. சுவாமிஜியின் நினைவாக நிறுவப்பெற்ற சபைகளுள் உலகின் மூத்த சபை எமது விவேகானந்த சபையே என்று கூறிக்கொள்வதில் மட்டற்ற மகிழ்ச்சியடைகின்றோம்.

இத்தகைய பழம்பெருஞ்சபையில் சுவாமி விவேகானந்தரின் வனப்புமிக்க திருவுருவச்சிலை இல்லாதது ஒரு பெருங்குறையாக எனது உள்ளத்தில் உறுத்திக் கொண்டே இருந்தது. எனது எண்ணக் கருவை உருவாக்க சபையின் அங்கத்தினர்களைக் கூட்டி ஆலோசித்தேன்; பலரும் பலவிதமான கருத்துகளை முன்வைத்தனர். நிறைவாக, சுமார் 3' 6'' உயரத்தில் பதுமாசனக் கோல தியான நிலைத் திருவுருவை பளிங்கினால் அமைத்து சபையின் கீழ் மண்டப முற்றத்தில் ஓர் அழகிய மணி மண்டபம் அமைத்து நிறுவுவது என்றும், பலரும் சென்று தியானம் புரிவதற்கு அது உகந்ததாக இருக்கும் என்றும் திட்டமிடப்பட்டது. கட்டிடக் கலைஞர் திரு. வி. எஸ். துரைராசாவிடம் வரைபடமும் பெற்று செலவுத் தொகையை மதிப்பிட்டால் சுமார் அறுபது லட்சம் தேவை என்று தெரிய வந்தது. தொகையின் பெருக்கம் எங்களை வினாக் குறிக்குள் சிக்க வைத்தது. இரவும், பகலும் இதே எண்ணம்.''

''காட்டிய தெய்வமே ஊட்டும்'' என்ற பொருள் மொழிக்கேற்ப இந்த எண்ணத்தை எங்களுள் தோற்றுவித்த சுவாமி விவேகானந்தரே அதற்கான வழியையும் காட்டுவார் என்ற உறுதி எங்களுள் ஊன்றியது.

*''எண்ணிய எண்ணியாங்*
*கெய்துப எண்ணியார்*
*திண்ணிய ராகப் பெறின்.''*

என்பது வள்ளுவம் காட்டிய வழியாயிற்றே.

நிதி வளக் குறைவு எங்கள் நினைவு வளத்தைக் குறைக்கவில்லை. தமிழ் நாட்டிற்குச் சென்றேன். பல அறிஞர்களை அணுகினேன். பெங்களூர் விவேகானந்த கேந்திரா – திருக்குறள் மன்ற அமைப்பாளர் புலவர். கணபதி ஆகியோர் இப்பணியில் பெரிதும் உதவினர்.

அவர்கள் அறிவுரையின் வண்ணம் சிலைவல்லுநர்களைத் தேடிச் சென்ற பொழுதுதான் பளிங்குச்சிலை அமைப்பதன் அருமையை எம்மால் உணர முடிந்தது.

1893 செப் 11ம் நாள் சுவாமி விவேகானந்தர் சிகாகோ சர்வமத மாநாட்டில் நிகழ்த்திய உலகப் புகழ் வாய்ந்த உரையின் நூற்றாண்டு விழா தொடக்க நிகழ்ச்சி கல்கத்தா நகரத்திலே நிகழ இருப்பதால் அவ் விழாவில் பங்கு கொள்வதற்கென கொழும்பு இராமகிருஷ்ண மிஷனுடன் இணைந்து விவேகானந்த சபை பிரதிநிதிகளாக ஒரு குழுவினர் சென்றோம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விழா நிறைவுற்று நாங்கள் சென்னைக்கு மீண்ட சமயத்தில் திருக்கேதீஸ்வர சபைச் செயலாளர் திரு. நமசிவாயம், சபைத் தலைவர் திரு. க. வேலாயுதப்பிள்ளை, அன்பர் செ. வைத்தியநாதன், அடியேன் அனைவரும் சிற்பக்கலா வித்தகர், திரு. கணபதி ஸ்தபதி அவர்களது இல்லத்திற்குச் சென்று சிலை சம்பந்தமாக அவரிடம் கலந்து ஆலோசித்ததில் பல நல்ல பயனுள்ள குறிப்புக்களைத் தந்து உதவினார். மேலும் மாமல்லபுரச் சிற்பக்கலைக் கூடத்தின் முதல்வர் திரு. முத்தையா ஸ்தபதி அவர்களுடனும் இதுகுறித்துப் பேசுமாறு கூறினார்.

நாங்கள், எங்கள் முகாமைச் சபையை கலந்து கொண்டு முயற்சியைத் தொடரலாம் என்ற எண்ணத்துடன் தாயகம் திரும்பினோம்.

நாட்கள் நகர்ந்தன எண்ணிய எண்ணம் செயலுருப் பெறவில்லையே என்ற ஏக்கம் உள்ளத்தை அரித்தது. இதற்கிடையில் எனது சொந்த அலுவலுக்காக சென்னை சென்ற இடத்து மாமல்லபுரம் சென்று ஸ்தபதியைக் கண்டு பேசினேன். நாங்கள் விரும்பும் வண்ணம் சிலையைச் செய்வதற்குக் கூடிய கால அவகாசம் தேவை என்றும், அத்துணை பாரமான சிலையை இலங்கைக்கு எடுத்துச் செல்வதில் எழும் நடைமுறைச் சிக்கல்களையும், விளக்கினார் சிக்காகோ உரை நூற்றாண்டு விழாவின் ஓராண்டு நிறைவு விழாவும் நெருங்கியது.

விவேகானந்த சபையினின்று இராமகிருஷ்ண மிஷனுக்குச் செல்லும் பிரம்மாண்டமான கலாசார ஊர்திபவனியிலே சுவாமிகளின் புதிய திருவுருவத்தையே எடுத்துச் செல்ல வேண்டும் என்று எவ்வளவோ முயன்றும் முடியவில்லையே என்றதாக்கம் எங்கள் அனைவருக்குமே இருந்தது. என்ன செய்வது. அதற்கெனக் குறிக்கப்பட்ட காலமும் இணைய வேண்டுமே........

கொம்புத் தேனுக்கு ஆசைப்பட்டு இருகாலும் முடமான ஒருவன் அது கிடைக்காமையால், தனது உள்ளங் கையைக் குழித்து, மலைமுகட்டிலே இருக்கும் கொம்புத்தேனை ஒருவிரலால் சுட்டி, அத்தேன் தனது கையிலே நிறைந்து விட்டதாக எண்ணிச் சுவைத்தானாம். எங்கள் நிலையும் அது தான்.

*"குறுந்தாட் கூதளி யாடிய நெடுவரைப்*
*பெருந்தேன் கண்ட இருக்கை முடவன்*
*உட்கைச் சிறுகுடைக் கோலிக் கீழிருந்து*
*சுட்டுபு நக்கி யாங்கு . . . . .* *(குறுந்தொகை)*

எங்கள் சபையிலே நிமிர்ந்த நன்னடை, நேர் கொண்ட பார்வை, திமிர்ந்த ஞானச் செருக்கும் உருவெடுத்த சுவாமியின் கதையிலாலான திருவுருவத்தையே அலங்கரித்து பவனி வரச் செய்தோம்.

"எழுமின்! விழிமின்! கருதிய கருமம் கைகூடும் வரை அயராது உழைமின்" என்பது அந்த யுக புருஷரின் தாரக மந்திரமல்லவா.! எங்கள் எண்ணத் தூய்மையை உணர்ந்து கொண்டார் போலும்.

இராமகிருஷ்ண மிஷனில் விவேகானந்தரின் இலங்கை விஜய நூற்றாண்டு விழா சம்பந்தமான செயற் குழுக் கூட்டம். அதில் கொழும்பு மாநகர சபை முதல்வர் மாண்புமிகு. கே. கணேசலிங்கம் அவர்கள் காலிமுகக் கடற்கரையை நேர்வழிப் பெருஞ்சாலையாக்கும் திட்டம் உள்ளது. அதில் இராமகிருஷ்ண மிஷனுக்கருகே சுவாமி விவேகானந்தரின் சிலையை நிறுவலாம் என்று கருத்துத் தெரிவித்திருக்கின்றார். இதனை மறுநாள் காலையில் தொலைபேசி மூலம் எனக்குத் தெரிவித்த பொழுது நான் கூறினேன். "ஐயா! விவேகானந்தர் சிலையை இலங்கை விஜய நூற்றாண்டு விழா ஞாபகார்த்தமாக நிறுவுவது என்றால் விவேகானந்த சபையை விட வேறு எந்த இடமும் பொருந்தாது. காரணம் சுவாமிகள் அவர்கள் தங்கியிருந்தது. ஜிந்துப்பிட்டியிலுள்ள மகாராஜா சத்திரத்திலே. அவரது திருவடிபட்டுத் தூய்மையான இடமும் இதுதான். அவர் உலவி நடந்து மகிழ்ந்தது இச்சபையின் சூழலில் தான் மேலும் அவருக்கு திருவுருவம் ஒன்று அமைக்க நாங்களும் முழு மூச்சுடன் ஈடுபட்டுக் கொண்டிருக்கின்றோம். விவேகானந்த சபையிலே நீலக்கடலை நோக்கியவாறு சிலையை அமைப்பதே சாலச்சிறந்ததாகும் என்று கூறினேன். அவரும் அதனை ஏற்றுக் கொண்டார்.

என்னால் அடுத்த செயற்குழுக் கூட்டத்திற்கு எனது வங்கி அலுவல் காரணமாகச் செல்ல முடியவில்லை. ஆனால் அங்கு சென்றிருந்த சபைத் தலைவர் திரு. க. வேலாயுதப்பிள்ளை கொழும்பு மாநகர முதல்வர் மாண்புமிகு. கே. கணேசலிங்கம், இந்து மாமன்றத் தலைவர். திரு. வி. கயிலாசப்பிள்ளை இந்து மாமன்றச் செயலாளர் திரு. கந்தையா நீலகண்டன் முதலியோர் விவேகானந்த சபையே சிலை அமைக்கப் பொருத்தமான இடம் என்று கூற சுவாமி ஆத்மகனானந்தா அவர்களும் முழுமனதுடன் அதனை ஏற்றுக் கொண்டார்கள்.

எல்லோரும் துரிதமாகச் செயற்பட்டார்கள். சுவாமி ஆத்மகனானந்த மகராஜ் அவர்கள் சிலைக்காகக் கல்கத்தா சென்றார். நாங்கள் எதிர்பார்த்த படி சிலை அமைப்பதென்றால் உடனே முடியாது. இலங்கை விஜய நூற்றாண்டு விழாவிற்குக்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கிடைக்காது. இதிலும் ஒரு திருவருட் பொருத்தம் பாருங்கள் ஆந்திராவில் இராஜமுந்திரி இராமகிருஷ்ண மடத்திற்காக செய்யப்பட்ட சிலை ஒன்று கல்கத்தாவில் இருப்பதாகவும், அவர்களை அதனைப் பெற்றுச் செல்ல யாரும் வரவில்லை என்று சுவாமிகளுக்குச் செய்தி கிடைத்தது. உடனே அவர் சென்று பார்க்க எங்கள் விவேகானந்தர் அங்கு இருந்தார். சுவாமிகளுக்கு மிக்க மகிழ்ச்சி 9அடி 6'' உள்ள வெண்கலத்தாலான ஆஜானு பாஹுவான நின்ற திருக்கோலம் அறிவின் சிகரமான தலைப்பகை. ஒளி உமிழும் கண்கள் கண்டாரைக் காந்தமென ஈர்க்கும் மென் சிரிப்பு. எல்லாவற்றிற்கும் மேலாக திருவடிகளை அணி செய்யும் பாத அணி (Boots) யின் அழகை வர்ணிக்க வார்த்தைகள் போதாது.

சுவாமிஆத்மகனானந்தா அவர்கள் உடனே பேசி முடித்து இலங்கைக்குக் கொண்டு வரும் ஏற்பாடுகளை விரைந்து செய்தார். செய்தியை செவிமடுத்த எங்களுக்கு செவிக்குள்தேன் பாய்ந்தது போலிருந்தது. நீண்ட நாள் ஊமன் கண்ட கனவு மெய்ப்படப் போகின்றது என்றால் மகிழ்ச்சிக்குக் கேட்க வேண்டுமா!

நான்கு வீதிகளும் கூடும் விவேகானந்த மேட்டிலே சபையின் முகப்புப் பகுதியில் இடம் தேர்ந்தெடுக்கப்பெற்று கட்டிடக் கலைஞர் திரு. வி. எஸ். துரைராசா அவர்கள் மேற்பார்வையில் அழகிய மணிமண்டபம் தொண்ணூறு நாட்களுக்குள் காண்பவர் வியக்கும் வண்ணம் உருவாயிற்று 13.01.1997இல் மண்டபத்தில் சிலை நிறுவப்பட்டது.

14.1.1997 அன்று திருவுருவச் சிலைக்கு ஆகமமுறைப்படி வாஸ்துசாந்தி முதலியன செய்து தூய்மையாக்கப் பெற்றது. 15.1.1997 ஜனவரி திங்கள் பாரதத் தாயின் அரும்பெறற் புதல்வன் பகவான் ஸ்ரீ இராமகிருஷ்ணர் கண்டெடுத்த நல்முத்து உறங்கிக் கிடந்த இந்தியாவைத் தனது வீர உரையால் தட்டியெழுப்பிய வீரத் துறவி விவேகானந்தரின் திருவுருவச் சிலைத் திறப்பு விழா, சுவாமிகளின் இலங்கை விஜய நூற்றாண்டு விழாவின் துவக்க விழாவாக கோலாகலமாக நடைபெற்றது.

ஸ்ரீ பொன்னம்பல வாணேஸ்வரர் ஆலயத்தினின்று புறப்பட்ட பாடசாலை மாணவர்கள், சைவ அன்பர்களின் ஊர்வலம் மணிமண்டபத்தை அடைய, மங்களவாத்தியங்கள் முழங்க, விவேகானந்த கீதங்கள் காற்றில் மிதந்து வர கல்கத்தா இராமகிருஷ்ண மிஷனின் உப தலைவரும், பேராளருமாகிய ஸ்ரீமத் சுவாமி ரங்கானந்தாஜி மகராஜ் அவர்கள் திருவுருவத் திறப்பு விழாவை சிறப்பாக நடத்தி வைத்தார்.

''நாயேனையும் இங்கு ஒரு பொருளாக நீயே நினைவின்றி ஆண்டு கொண்டாய்''. என்ற அபிராமிப் பட்டரின் அருள்வாக்கை நினைந்து வலிய வந்து ஆண்டு கொண்ட வள்ளலின் பாத கமலங்களில் எங்கள் ஆனந்தக் கண்ணீரையே அஞ்சலியாக்கி மகிழ்ந்தோம். குறிப்பாக இத்திருவுருவத்தைக் கொண்டு வருவதற்கும், விழாவைச் சிறப்புற நடத்துவதற்கும் உறுதுணைபுரிந்த உத்தமர்கள் அனைவருக்கும் எனது நன்றியைத் தெரிவித்துக் கொள்கின்றேன். சிறப்பாக ஒரு சிறிதும் சலிக்காது அயராது அனைத்துப் பணிகளிலும் தன்னை ஈடுபடுத்திக் கொண்ட சுவாமி ஆத்மகனானந்த மகராஜ் அவர்களுக்கு எப்படி நன்றி கூறுவதென்பது எனக்குத் தெரியவில்லை. அவர்கள் திருவடிகளுக்கு என்றுமே ஆட்பட்டிருப்பேன் என்று கூறிக் கொள்வதில் உவகை கொள்கின்றேன். அடுத்து திரு. வி. எஸ். துரைராஜா அவர்கள் முழு மனதுடன் ஒத்துழைக்க வில்லையென்றால் மணிமண்டபம் இத்துணை சிறப்பாக அமைந்திராது. அவரது தேர்ந்த அனுபவமும் ஈடுபாடுமே எங்களை ஊக்குவித்தது. அவருக்கு விவேகானந்த சபையினரின் சார்பாக நன்றிகளை உரித்தாக்குகின்றேன்.

ஞானத்தின் கொடுமுடியாக விளங்கிய சுவாமி விவேகானந்தரின் அருளாசி அனைவருக்கும் கிட்ட வேண்டுமென இறைஞ்சி நிறைவு செய்கின்றேன்.

*ஓம் சாந்தி.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# அகில இலங்கை இந்து மாமன்றமும் விவேகானந்தர் நூற்றாண்டும்

## மாமன்றப் பதிவுகளின் தொகுப்பு

சுவாமி விவேகானந்தரின் 130வது பிறந்ததினமான 12.01.1994 அன்று, கொழும்பு இராமகிருஷ்ண மிஷன் மண்டபத்தில் மா்மன்றத் தலைவர் திரு. வி. கயிலாசபிள்ளை தலைமையில் சர்வதேச சமயக் கருத்தரங்கு நடைபெற்றது. இலங்கைக்கான இந்திய உயர் ஸ்தானிகர் மாண்புமிகு நரேஸ்வர தயாள் அவர்கள் ஆரம்பித்து வைத்த இக்கருத்தரங்கில் இந்து சமயத்தின் சார்பில் மேல் நீதிமன்ற நீதிபதி திரு. சி. வி. விக்னேஸ்வரன் அவர்களும், பௌத்த மதத்தின் சார்பில் மொரட்டுவ பல்கலைக்கழக உபவேந்தர் பேராசிரியர் ஜி.ரி.எப்.டி. சில்வா அவர்களும், கிறிஸ்தவ சமயத்தின் சார்பில் பேராசிரியர் திரு. பேர்றம் பஸ்தியாம்பிள்ளை அவர்களும், இஸ்லாமிய மதத்தின் சார்பில் நளீமியா இஸ்லாமிய கல்வி நிலைய இயக்குநர் கலாநிதி எம்.ஏ.எம். சுக்ரி அவர்களும் கலந்து கொண்டு நான்கு மதங்களின் சார்பிலும் மதங்களின் பரந்த கருத்துக்களை எடுத்துரைத்தனர். அவர்கள் சமர்ப்பித்த உரைகளின் பிரதிகளை நூல்வடிவில் மாமன்றம் வெளியிட்டு வைத்தது. இவ்விழாவில் மேற்கத்திய நாட்டுப் பெண்ணான ஜேர்மனியைச் சேர்ந்த செல்வி. சோனியா கிளின்றன் பரத நாட்டிய நிகழ்ச்சியை வழங்கினார். சுவாமி விவேகானந்தரின் Songs of the Sanniyasin" நூலின் மறுபதிப்பையும், தமிழ்மொழி பெயர்ப்பையும், மாமன்றத்தின் அங்கத்துவ சங்கமான ஈழத்துத் திருநெறி மன்றத்தினால் இவ்வைபவத்தில் வெளியிட்டு வைக்கப்பட்டது.

29.05.1994 அன்று கொழும்பு மாநகரில், அகில இலங்கை இந்து மாமன்றம் முதலிய நிறுவனங்களுடன் இணைந்து கொழும்பு விவேகானந்த சபை நடத்திய சுவாமி விவேகானந்தர் மோட்டார் பவனியில் மாமன்றப் பேரூர்தியும் கலந்து கொண்டது.

சுவாமி விவேகானந்தர் நூற்றாண்டு விழாவையொட்டி மாமன்ற சமூக நலன் குழுவின் முயற்சியால் இரத்மலானை இந்துக் கல்லூரி நூல் நிலையத்திற்கு ஒரு தொகுதி நூல்கள் அன்பளிப்பு செய்யப்பட்டன.

அகில இலங்கை இந்து மாமன்றத்தின் தலைவர் திரு. வி. கயிலாசபிள்ளை, திருமதி. வானதி ரவீந்திரன் ஆகியோர் 1993 செப்டம்பர் மாதத்தில் கல்கத்தாவில் நடைபெற்ற நூற்றாண்டு விழா தொடர்பான அங்குரார்ப்பணக் கூட்டத்தில், மன்றத்தின் சார்பில் பிரதிநிதிகளாகக் கலந்து கொண்டனர்.

சுவாமி விவேகானந்தரின் சிகாகோ சொற்பொழிவு நூற்றாண்டு தொடர்பாக இந்து மாமன்றம் அனைத்திலங்கை ரீதியில் பாடசாலை மாணவர்களிடையே தமிழிலும், ஆங்கிலத்திலும் கட்டுரைப் போட்டிகளை ஏற்பாடு செய்து நடாத்தியது. ஐந்து பிரிவுகளிலும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

1216 மாணவர்கள் கலந்து கொண்டனர். வளர்ந்தோருக்காக ஆராய்ச்சிக் கட்டுரைப் போட்டியும் நடாத்தப்பட்டது. "சிகாகோவில் சுவாமி விவேகானந்தர்", "சுவாமி விவேகானந்தரும் சமூக மறுமலர்ச்சியும்" "இராமகிருஷ்ணரும் சுவாமி விவேகானந்தரும்" ஆகிய தலைப்புகள் போட்டிக்காக கொடுக்கப்பட்டிருந்தது. ஆறு பிரிவுகளிலும் முதலிடத்தைப் பெற்றவர்களுக்கு, கே.ஜி. இன்டஸ்ரீஸ் திரு. ஜீ. ஆர். பத்மராஜ், காலஞ் சென்ற அவரது தந்தையாரான திரு. க. குணரத்தினம் அவர்கள் ஞாபகார்த்தமாக வழங்கிய தங்கப் பதக்கங்கள் பரிசளிக்கப்பட்டன. இரண்டாம் இடத்தைப் பெற்றவர்களுக்கு 1000.00 ரூபா, வீதமும் மூன்றாம் இடத்தைப் பெற்றவர்களுக்கு 500.00 ரூபா வீதமும் பரிசளிக்கப்பட்டன.

திரு. ஆ. சிவநேசச் செல்வன், பேராசிரியர் எஸ். சந்திரசேகரம். திரு. ஆ. குணநாயகம், திருமதி. பொன்மணி குலசிங்கம், திருமதி. வசந்தா வைத்தியநாதன், திரு. ஹரிகரசர்மா ஆகியோர் போட்டி நடுவர்களாகக் கடமையாற்றினர்.

மேற்படி கட்டுரைப் போட்டியின் முடிவுகள்:

கனிஷ்ட பரிசு(தமிழ்)

| | |
|---|---|
| 1வது பரிசு (தங்கப் பதக்கம்) | செல்வன். எஸ். ஜீத் – (ஏழாலை தெற்கு எம்.ரி.எம். பாடசாலை, சுன்னாகம்) |
| 2வது பரிசு (ரூபா 1000.00) | செல்வி. குகதாஸ் துஷ்யந்தி – (விவேகானந்த கல்லூரி, கொழும்பு – 13) |
| 3வது பரிசு (ரூபா 500.00) | செல்வி. ஆர். விஜயசந்திரிகா – (மவுசாகெலியா தமிழ் வித்தியாலயம் (இல.1) மவுசாகெலிய) |

மத்திய பிரிவு (தமிழ்)

| | |
|---|---|
| 1வது பரிசு (தங்கப் பதக்கம்) | செல்வன். பி. திவாகர் – (இந்துக் கல்லூரி, கொழும்பு) |
| 2வது பரிசு (1000.00) | செல்வி ஸ்ரீ செல்வி. செல்வரத்தினம் – (விக்கினேஸ்வரா மகாவித்தியாலயம், திருகோணமலை) |
| 3வது பரிசு (ரூபா 500.00 ) | செல்வி. ரி. தவமலர் – (கணேச வித்தியாலயம் சேனைக்குடியிருப்பு, கல்முனை) |

சிரேஷ்ட பிரிவு (தமிழ்)

1வது பரிசு (தங்கப் பதக்கம்) செல்வன். சந்திரகாசன் விநாயகலிங்கம் – (கல்லடி உப்போடை சிவானந்த வித்தியாலயம், மட்டக்களப்பு)

2வது பரிசு (ரூபா 1000.00) செல்வி. பி. தவமணி – (பலாங்கொட தமிழ் மகாவித்தியாலயம், பலாங்கொட)

3வது பரிசு (ரூபா 500.00) 1. செல்வி. எஸ். ஜெகதீஸ்வரி – (விவேகானந்தா மகளிர் மகாவித்தியாலயம் கல்லடி – உப்போடை, மட்டக்களப்பு)

செல்வி. ஆனந்தி சச்சிதானந்தன் – சென். மேரிஸ் கல்லூரி, திருகோணமலை)

மத்திய பிரிவு (ஆங்கிலம்)

| | |
|---|---|
| 1வது பரிசு (தங்கப் பதக்கம்) | செல்வன். அமிர்தலிங்கம் பிரசன்னா – (இந்துக் கல்லூரி, கொழும்பு) |
| 2வது பரிசு (ரூபா 1000.00) | செல்வி. பிரசாந்தி இராஜதுரை – (சென். மேரிஸ் கல்லூரி, திருகோணமலை) |
| 3வது பரிசு (ரூபா 500.00) | செல்வி. திவ்யா பத்மநாதன் – (இராமநாதன் இந்து மகளிர் கல்லூரி, கொழும்பு–04) |

சிரேஷ்ட பிரிவு (ஆங்கிலம்)

| | |
|---|---|
| 1வது பரிசு (தங்கப் பதக்கம்) | செல்வி. கு. பூர்ணிமா – (இராமநாதன் இந்து மகளிர் கல்லூரி, கொழும்பு –04) |
| 2வது பரிசு (ரூபா 1000.00) | செல்வி. அருணோதினி அருள்சுப்பிரமணியம் – (சென். மேரிஸ் கல்லூரி, திருகோணமலை) |
| 3வது பரிசு (ரூபா 500.00) | செல்வி. கீதா சிதம்பரநாதன் – (சென். சேவியர் கல்லூரி, திருகோணமலை) |

வளர்ந்தோருக்கான ஆராய்ச்சிக் கட்டுரை

திருமதி. பத்மா சோமகாந்தன்
215 G 1/1, பார்க் றோட், கொழும்பு – 05.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சுவாமி விவேகானந்தரின் நூற்றாண்டு விழாவுக்கான இணைப்புக் குழுவில் அகில இலங்கை இந்து மாமன்றத்தைச் சேர்ந்த திரு. வி. கயிலாசபிள்ளை (தலைவர்) திரு. ஆ. குணநாயகம் (உப தலைவர் ) திரு. கந்தையா நீலகண்டன் (பொதுச் செயலாளர்) திரு. வி.ஏ. திருஞானசுந்தரம் (செயலாளர், நூற்றாண்டு விழாவுக்கான விசேட குழு ) திருமதி. வானதி ரவீந்திரன் (செயலாளர், சமூக நலன் குழு) ஆகியோர் இந்து மாமன்றத்தின் சார்பில் பிரதிநிதித்துவப் படுத்துகிறார்கள்.


## சுவாமிஜி விவேகானந்தரின் இலங்கை விஜய நூற்றாண்டு நினைவு வைபவங்கள்.

மாமன்றம் விடுத்த வேண்டு கோளுக்கு இணங்க 15.01.97 அன்று அரசாங்கம் சுவாமி விவேகானந்தரின் இலங்கை விஜய நூற்றாண்டு நினைவு முத்திரையை வெளியிட்டது. இராமகிருஷ்ண மிஷன் தலைவர் சுவாமி ஆத்மகனானந்தஜி தலைமையிலான நூற்றாண்டு ஒழுங்குகள் இணைப்புக் குழுவில் மாமன்றத் தலைவர், பிரதித் தலைவர், பொதுச் செயலாளர் ஆகியோர் இடம் பெறுகின்றனர். கொழும்பு விவேகானந்த சபை முன்றலில் 15.01.1997 அன்று நிறுவப்பட்ட சுவாமி விவேகானந்தரின் சிலைக்கான செலவு ரூபா நாலரை இலட்சத்தையும் மாமன்றமே கொடுத்து உதவியது. இது தொடர்பாக உதவி வழங்கியமைக்காக திருவாளர்கள் வி. கயிலாசபிள்ளை மா. தவயோகராசா, திருக்குமார் நடேசன், செ. சிவராசா ஆகியோருக்கு நன்றி கூறுதல் வேண்டும்..

இலங்கை விஜய நூற்றாண்டு நிறைவை யொட்டி அகில இலங்கை இந்து மாமன்றம் அகில இலங்கை ரீதியில் கட்டுரைப்போட்டி யொன்றை எற்பாடு செய்து நடாத்தியிருக்கிறது.

ஆறாம் வகுப்பு முதல் பதின்மூன்றாம் வகுப்பு வரையிலான பாடசாலை மாணவர்களுக்காக மூன்று பிரிவுகளாகவும், பல்கலைக்கழக மாணவர்கள் மற்றும் வெளியாருக்காக இன்னொரு பிரிவாகவும் (ஆராய்ச்சிக் கட்டுரை) போட்டி நடாத்தப்பட்டது.

முதல் மூன்று பிரிவுகளுக்கும் முதலாம் பரிசுகளாக ரூபா 3000.00, இரண்டாம் பரிசுகளாக ரூபா 2000.00, மூன்றாம் பரிசுகளாக ரூபா 1000.00, வழங்கப்படவிருக்கின்றன. நான்காம் பிரிவான ஆராய்ச்சிக் கட்டுரைக்கு முதலாம் பரிசாக ரூபா 5000.00, இரண்டாம் பரிசாக ரூபா 3000.00, மூன்றாம் பரிசாக ரூபா 2000.00 வழங்கப்படவிருக்கிறது.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# விவேகானந்தன்

இதழ் 2

# ஆய்வுரைகளும் கருத்துரைகளும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# விவேகானந்தன்

## ஒரு வரலாற்றுப் பொக்கிஷம்

### மலர் அறிமுகம்

**எம். ஆர். ராஜ் மோகன்**





சுவாமி விவேகானந்தர் சிக்காகோ உலக சமய பாராளுமன்றத்தில் 1893ல் கலந்து கொண்டு மூன்று வருடங்களின் பின்னரே இலங்கைக் கூடாக தாய் நாடு திரும்பியிருந்தார். இந்த மூன்று வருட காலத்தில் இலங்கையிலும் இந்தியாவிலும் அவரது புகழ் இமயமலையின் உச்சியளவிற்கு உயர்ந்து விட்டிருந்தது. இந்து சமயப் பிரதிநிதியாக மகாநாட்டிற்குச் சென்று எமது பெருமையை உலகறியச்செய்த பெருமகனை எப்போது தரிசிப்போம்.என்றிருந்த இலங்கை மக்கள் 1897 ஜனவரி 15இல் அவர் நாட்டில் காலடி வைத்தது முதல் ஜனவரி 26 இல் தாய்நாடு செல்லும்வரை நாட்டின் பலபாகங்களிலும் அவரை வரவேற்று உபசரித்து அவரது கருத்துக்களைக் கேட்டு இன்புற்றனர்.

சுவாமியவர்கள் தாய்நாடு சென்ற பின்னரும் அவரது கருத்துக்கள், முயற்சிகள் மறையாமலிருக்கும் வண்ணம் இலங்கையின் பல பாகங்களிலும் அவர் பெயரில் சபைகள், மன்றங்கள், பாடசாலைகள் ஸ்தாபிக்கப்பட்டன. அவற்றில் சில காலக்கிரமத்தில் செயற்பாடுகளை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முன்னெடுத்துச் செல்வோர் இன்றி மறைந்து போயின. ஆயினும் இலங்கையில் முதன்முதலாக விவேகானந்தர் பெயரில் ஆரம்பிக்கப்பட்டு நூறாண்டுப்பூர்த்தியை நெருங்கும் சமயத்திலும் துடிப்புடன் செயற்பட்டு வரும் கொழும்பில் அமைந்துள்ள விவேகானந்த சபை விவேகானந்தர்பாதையில் தனது செயற்பாடுகளை முன்னெடுத்துச் சென்றது மட்டுமன்றி பல சமய நிறுவனங்கள் இலங்கையில் தோன்றுவதற்கும் முன்னோடியாக இருந்துள்ளது. சபையின். 25 வருடப்பூர்த்தியின் பின்னர் சபை ஆதரவுடன் ஆரம்பமான கொழும்பு இராமகிருஷ்ணமிஷன், 1955ல் சபையின் உந்து சக்தியால் கூட்டமைப்பாக ஆரம்பிக்கப்பட்டு அகில இலங்கை இந்துமாமன்றம் மற்றும் கதிர்காம தொண்டர்சபை, விவேகானந்த வித்தியாலயம் கொழும்பு, விவேகானந்த வித்தியாலயம் நீர் கொழும்புஆகியவற்றை சபையின் பங்களிப்புக்கு உதாரணமாகக் கூறலாம்.

விவேகானந்தரின் கருத்துக்களைக் கூறும் பல நூல்கள் இதுவரை வெளிவந்துள்ளன. ஆயினும் இந்நூற்றாண்டு நினைவுமலர் அவற்றினின்றும் சிறிது விலகி வித்தியாசமான முறையில் எமது மலர்க்குழுவினரால் தொகுக்கப்பட்டுள்ளது. இம்மலரில் விவேகானந்தர் வரலாறு, அவரது இலங்கை விஜயம், அதன் மூலம் ஏற்பட்ட எழுச்சி, (1893முதல் 1897 வரை) சிக்காகோ சொற்பொழிவுகள், இலங்கை விஜயநூற்றாண்டு விழாக்கள் ஆகியவற்றுடன் பல பெரியாரது கட்டுரைகளையும் அடக்கி ஒரு முழுமையான தொகுப்பாக அமைக்கப்பட்டுள்ளது. வருங்காலத்தில் சுவாமி விவேகானந்தர் பற்றி அறியவும் அவர் கருத்துக்களைப்படிக்கவும் விரும்பும் மாணவர்கள், சமயத் தொண்டர்கள் ஆராய்ச்சியாளர்கள் அனைவருக்கும் உதவும் முகமாக இந்த மஞ்சரி உருவாக்கப்பட்டுள்ளது. சுவாமியவர்களின் சிக்காகோ உரைகள் முழுமையாகத் தரப்பட்டுள்ளன. மேலும் விவேகானந்தரால் ஆக்கப்பட்ட அனைத்துக் கடிதங்கள், கட்டுரைகள் சொற்பொழிவுகள் ஆகியவற்றின் தலைப்புக்களும் அவ்வாக்கங்கள் பரிமாணங்கள் விளக்கும் வகையில் அவை பிரசுரமாக்கப்பட்ட பக்கங்களின் தொகைகளும் அவ்வாக்கங்களில் அச்சேறியுள்ள நூல்களின் விபரங்களும் முழுமையாகத்தரப்பட்டுள்ளன. கூடுமானவரை முக்கிய விபரங்கள் ஆங்கிலம் தமிழ் ஆகிய இரு மொழிகளிலும் தரப்பட்டுள்ளன.

சிக்காகோ பிரசுரங்கள் மற்றும் மகாநாடு பற்றிய குறிப்புகள் 1893இல் வெளியிடப்பட்ட'The World's Parliment of Religions' எனும் நூற்றாண்டு பழமைவாய்ந்த நூலிலிருந்து நேரடியாகவும் மற்றும் பிற்காலத்தில் வெளியிடப்பட்ட நூல்களிலிருந்தும் தொகுக்கப்பட்டுள்ளது. நாட்டின் பலபாகங்களிலும் நடைபெற்ற நிகழ்ச்சிகள் விழா ஏற்பாட்டாளர்களது குறிப்புகளிலிருந்தும் தொகுக்கப்பட்டன. ஆயினும் பல்வேறு காரணங்களினால் இன்னும் பல நிகழ்ச்சிகளின் விபரங்கள் எமக்குக் கிடைக்காது போனதால் இங்கு பிரசுரிக்கமுடியவில்லை. இக்குறைப்பாட்டிற்கு சம்பந்தப்பட்டோரிடமிருந்து மன்னிப்பைக்கோருகிறோம் மேலும் சுவாமியவர்களதும் மற்றும் விவேகானந்த சபை சம்பந்தப்பட்டதுமான அரிய பல புகைப்படங்களைச் சேகரித்து இந்நூலில் சேர்த்திருக்கிறோம்.

மேற்படி பல குறிப்புகள் நாம் சேகரிக்க உறுதுணையாக இருந்தது நாட்டின் மிகப்பழைமை வாய்ந்த சமய நூலகமான விவேகானந்த சபை நூலகம் நேரத்தில் கை கொடுத்துதவியதாலாகும். தற்காலக் குறிப்புகள் பலவற்றை கொழும்பு இராமகிருஷ்ணமிஷன் தலைவர் ஸ்ரீமத் ஆத்மகனானந்தாஜீ மகராஜ் அவர்கள் பெருந்தன்மையுடன் தந்துதவினார்.

இன்னும் நூற்றாண்டுகளுக்கு மேலாக வரலாற்றுப் பொக்கிஷமாக பாதுகாத்து வைக்கக்கூடிய வகையில் விவேகானந்தர் பற்றிய சகல விபரங்களும் அடங்கிய இந் நூலை சகலரும் வரவேற்பார்கள் என்பதில் எமக்கு ஐயமில்லை. தவறுகள் இருப்பின் அவற்றை மன்னிப்பதோடு நின்றுவிடாது எங்களுக்கும் அறிவித்தால் மற்றவர்களும் பயன் பெறும் வகையில் அவற்றைப் பிரசுரிக்க உரிய நடவடிக்கை எடுக்க உதவியாக இருக்கும்.

சுவாமி விவேகானந்தரின் இலங்கை விஜய நூற்றாண்டு நினைவு பூர்த்தி விழாவில் வெளியிடப்படும் இம்மஞ்சரிக்கான அறிமுகக் குறிப்பை மலர்க்குழுவின் சார்பில் சமர்பிக்கக்கிடைத்த சந்தர்ப்பத்திற்கு சகலருக்கும் நன்றி கூறுகின்றேன்.

மலர் ஆசிரியர் குழு சார்பாக
**எம். ஆர். ராஜ்மோகன்.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இலங்கையில் சுவாமிஜி

பெ. சு. மணி

## வருகைக்கு முன்

சுவாமிஜியின் சிகாகோ சாதனைகளின் எதிரொலியை இலங்கையில் தமிழர்களிடையே 1894லேயே கேட்க முடிந்தது. "ஈழத்துத் தமிழ் சைவத்தின் தனிச் செங்கோலாகத்" தோன்றியது "இந்து சாதனம்" எனும் இதழ். 1889இல் இரு மொழி இதழாக (தமிழில், 'இந்து சாதனம்' ஆங்கிலத்தில், (Hindu Organ) தோன்றிய இந்து சாதனம் சிகாகோ சாதனைச் செய்திகளை ஆதரவுடன் வெளியிட்டு மகிழ்ந்தது. கிறித்துவ சமயத்தின் புகழ் பரப்ப 1841–இல் தோன்றிய 'உதயதாரகை', சிகாகோ சாதனைகளை ஏற்காமல் திரித்துக்கூறி எதிர்த்து எழுதியது தொடர்பாக தம்முள் கருத்துப்போரையே நிகழ்த்தியுள்ளன. கருத்துப்போர் இல்லாமல் சிகாகோ செய்திகளை 'சிலோன் அப்சர்வர்', 'சிலோன் இன்டிபெண்டென்ட்' எனும் ஆங்கில இதழ்கள் வெளியிட்டன.

மெர்வின் மேரிஸ்நெல் என்பவர் சிகாகோ சர்வமத சபையில் சுவாமிஜி புகழ்பெற்றதைக் குறிப்பிட்டு 'பயனீர்' பத்திரிகைக்கு எழுதிய கடிதத்தை 'இந்து சாதனம்' மொழி பெயர்த்து தனது 21–3–1894 ஆம் இதழில் வெளியிட்டது. 'அமெரிக்காவில் இந்து மதம்' எனும் தலைப்பில் இந் மொழிபெயர்ப்பு பின்வரும் குறிப்புரையுடன் வெளிவந்தது.

"அமெரிக்காவில் சிக்காகோ என்னும் நகரத்திலே இன்றைக்கு ஐந்து மாதங்களுக்கு முன்னே கூட்டப்பட்ட சர்வ சமய மகாசபையிலே சாஸ்திரப்பகுதிக்கு அக்கிராசனாதிபதியாக வீற்றிருந்து, அங்கே உலகத்துப் பலதிசைகளினின்றும் போயிருந்த பற்பல சமயக் கொள்கைகளையெல்லாம் கேட்டுச் சீர்தூக்கிய மெஸ்டர்மேர்வின் மேரிஸ் நெல் என்னும் அமெரிக்க பண்டிதர் 'பயோனியர்ப்' பத்திரிகைக்கு எழுதிய விஷயத்தைச் சங்கிரகித்து இங்கே மொழி பெயர்த்துக் கூறுகின்றோம்." (இலங்கையில் சுவாமி விவேகானந்தர், நூற்றாண்டு விழா வெளியீடு, யாழ்ப்பாணம், ப.1)

இந்த மொழிபெயர்ப்பின் ஒரு பகுதி வருமாறு:

"இவரிடத்திலே இவ்வளவு அபிமானத்துக்கு காரணம் அமெரிக்காவுக்கு இந்தியர்கள் இவர் மூலமாக அனுப்பிய ஆன்ம ஞானத்தின் மீதுண்டாகிய பெருங்காதலன்றி மற்றியாது? உலக விவகாரத்திலும், அறியாமையிலும், கிராமியப் பழக்கத்திலும் அமிழ்ந்திக் கிடக்கும் பலதரப்பட்ட அமெரிக்கருள்ளே ஆங்காங்கே பலர்க்கு இப்போதொருவாறு ஆன்ம ஞானத்தின் மீது பெருங் காதலெழுந்திருக்கின்றது. இங்ஙனம் இங்கே பரந்து வருதலைப் பெற்ற இந்துமதவுணர்ச்சியாகிய படர்கொடிக் கொழுந்துக்கு விவேகானந்த சுவாமிகளது பிரசங்கங்கள் கொழுகொம்பாயின...

"இவ் விவேகானந்த சுவாமிகளுடைய இனிய பிரசங்கத்தையும் அவரைச் சனங்கள் புகழ்ந்து கொண்டாடுவதையும் காதில் வீழ்த்தப் பொறாமை கொண்டவர். புரோடெஸ்டாண்டுக் கிறிஸ்தவருள்ளும் றெவரெண்டுக் குருமார் சிலரினும் சிலரேயாம். அவர்கள் பொறாமை முதலியனவெல்லாம், பாரத வருஷமாகிய இந்தியாவினின்றும் வந்த பச்சைப் பீதாம்பரதாரியும் பரமசாதுவுமாகிய விவேகானந்த சுவாமிகளது மாறாக் கருணை, மாறாச் சாந்தம், மாறாப் பெரும்பொறை, கலங்காக் கல்வி, குளிர்ந்த மலர்ந்த முகம், மதுர பாஷணம் முதலிய நற்குணங்களில் முன்னே சூனியமாகி நசிந்து விட்டன."

'இலங்கையில் சுவாமி விவேகானந்தர்' நூலாசிரியர் திரு.ச.அம்பிகைபாகன் நூலின் முன்னுரையில் பின்வரும் செய்தியையும் குறிப்பிட்டுள்ளார்.

"இதை மொழி பெயர்த்து இந்து சாதனம் வெளியிட்டதோடு, மகாநாட்டுத் தலைவர் டாக்டர் பரோஸ் எழுதிய கட்டுரையையும் சேர்த்துத் தனிப் பிரசுரமாக வெளியிட்டது."

இந்து சாதனத்தில், 'A Hindu' என்பவர் எழுதிய ஒரு கடிதம் வெளியிடப்பட்டது. அதில் 'உதயதாரகை'யில் 'ஓர் வேதன் என்பவர் எழுதிய கடிதம் விமர்சனம் செய்யப்பட்டுள்ளது. "ஸ்ரீ விவேகானந்த சுவாமி அவர்களும் உதயதாரகைக் கடிதமும்" எனும் தலைப்பில் வெளியிடப்பட்ட கடிதத்தின் முக்கியப் பகுதிகள் சில, பின்வருவன:

"இந்த மாதம் 1–ம் திகதியன்று பிரசுரிக்கப்பட்ட 'உதய தாரகை' இருபதாம் இலக்கப் பத்திரிகையில் 'ஓர்வேதன்' எனக் கைச்சாத்திட்டு, ஒருவர் "விவேகானந்த சுவாமியும் நாலாயிரம் பெயரும்" என்ற முகவுரையோடு ஓர் கடிதம் வரைந்திருக்கின்றார். இக்கடிதம் மிக நீடித்த தொன்றாயினும் கட்டுரை மிகச் சுவல்ப்பமே. அன்றியும், கடிதர் தோளின் மீதிருந்து செவியைக் கடிப்பது போல, விவேகானந்த சுவாமியவர்கள் செய்யும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கிருத்தியங்களையும், அவரது கீர்த்திப் பிரதாபங்களையும் பற்றிப் புதினப் பத்திரிகைகள் பல பகர்ந்திருக்கும் சாக்ஷியங்களை ஒருவாறு நிராகரிப்பவர்போல் நடித்து எமது சமயத்தின் மீது தூஷண அஸ்திரங்களைப் பிரயோகிக்கின்றார்.

"அமெரிக்கா, இங்கிலாந்து ஆதியாம் தேசங்களில், ஸ்ரீ விவேகானந்த சுவாமியவர்கள் செய்து வரும் இந்து மதப் பிரசங்களைக் கேட்டு, அநேகாயிரவர் இந்து மதாநுசாரிகளாய் விட்டனர் என்ற சங்கதி அபத்தமென்பதும், சுவாமியவர்களுடைய பிரசங்க மண்டபங்களிலே சனங்கள் திரண்டு குழுமுதல் அவர் செய்யும் போதனையில் அபிமான முற்றன்று, வேடிக்கை பார்த்துக் களிப்புறற்கே யென்பதும், "இந்து தேச மார்க்க கிரியா சாரங்களை நன்குணர்ந்த கிறிஸ்த சுதேசி அவர் பிரசங்கத்திற் சமூகமாயிருப்பின்" சுவாமியவர்கள் தலை குனிந்து பயந்தொடுங்கி விடுவாரென்பதுமே "வேதன்" கடிதத்துட்டுறை...

"இனி விவேகானந்த சுவாமியவர்கள் தமது முயற்சியிற் சித்தியடைந்து வருகின்றரோ அன்றோ என்பதை உலகமே தூக்கியறியட்டும். முழுப் பூசனிக்காயைச் சோற்றில் மறைக்கும் சக்தி எம்மிடத்துமில்லை. வேதனிடத்துமில்லை.... சுவாமியவர்களினது பிரசங்க மண்டபங்களிலே எமது மதாசாரநியமங்களை நன்குணர்ந்த ஓர் சுதேசக் கிறிஸ்தன் சமூகனாயிருந்தால், சுவாமியவர்களுடைய பேச்சு கீச்சுக் கீச் சென்னுங் கிளி போன்றிருக்குமோ" என்று 'வேந்தன்' மனப்பால் குடித்து மகிழ்வெய்துகின்றார்.....

"அப்படியாயின் கிறிஸ்த மிஷனரிகள் எம் மூருக்கு வந்து தம்மதத்தைப் பிரசங்கித்துத் திரியும் சமயங்களிலெல்லாம் மேலைத்தேசச் சமயாசார நியமங்களை நன்குணர்ந்த இந்து ஒருவர் பிரசன்னராயிருப்பின் மிஷனரிகளெல்லாம் சிங்க சந்நிதானத்துற்ற சம்புகங்களை நிகர்த்திருப்பரே என்று நாமும் சொல்லி விடலாமே. இதனாலுள்ள பயனென்னோ ?"

இந்த 'கடிதப்போர்' தொடர்ந்து நடந்தது, 'உதயதாரகை' பத்திரிகை, சுவாமிஜியின் சாதனைகளை அமெரிக்கப் பத்திரிகைகள் வாயிலாக அறியட்டும் என்று மீண்டும் 'A Hindu' என்பவர் தம்முடைய மற்றொரு கடிதத்தில் (இந்து நேசனில்) பின் வருமாறு கூறியுள்ளார்.

"சுவாமியவர்கள் சங்கதிகளை வெளியிட்ட பத்திரிகைகளின் நாமங்களை ஈண்டு தருகின்றோம். அப்பத்திராதிபர்களுக்கு கடிதம் நேரே யெழுதியவர்கள் அறியாமையை நீக்கிக் கொள்ளட்டும். அங்ஙனமின்றி சமய தூஷணத்தில் மீண்டும் தலையிட்டுக் கொண்டு அவதிப்படல் புத்தியன்று.

பத்திரிகைகளின் நாமங்கள் வருமாறு :-

"Iowa State Register"
"New York Critic"
"The Interior, Chicago"
"Chicago Daily Interior Ocean"
"The Newyork Herald"
"Westminister Gazette"

உதயதாரகை கடிதர் ஆங்கில அமெரிக்க பத்திராதிபரை அறியாமையுள்ளார் என்று காட்டப் புகுந்த மதி குருவுக்குபதேசிக்கத் துணிந்த சீஷன் மதியை யொக்கு மென்க."

சுவாமிஜி யாழ்ப்பாணம் வந்த பொழுதும் இந்து சாதனம், உதயதாரகை கருத்துப்போர் தொடர்ந்தது.

**யாழ்ப்பாணத்தில்**
**'நாவலர் மரபு'**

சுவாமிஜியின் யாழ்ப்பாண வருகையின் தாக்கத்தை அறிவதற்கு முன்பு, அங்கு செல்வாக்கு செலுத்தி வந்த 'நாவலர் மரபு' பற்றிய சுருக்கமான அறிமுகம் இன்றியமையாததாகும்.

குருதேவர் ராமகிருஷ்ண பரமஹம்சரின் சம காலத்தவரான யாழ்ப்பாணம் நல்லூர் ஆறுமுக நாவலர் பெருமான் (1824-1879) யாழ்ப்பாணத்தில் சைவ சமயப் பேரெழுச்சியை ஏற்படுத்தியவர். சைவ சமய எழுச்சியை, தமிழ் எழுச்சியாகவும், தேசிய அடையாளங்களின் எழுச்சியாகவும் முதன்மைப்படுத்தியவர் நாவலர் பெருமான். இந்த ஒருங்கிணைப்பை 'நாவலர் மரபு' எனக் கூறத் தகுந்தது.

நாவலர் மரபின் ஊற்றுக்கண்களாக அவர் தொடங்கிய "சைவப் பிரகாச வித்தியாசாலை"யும், அவருடைய மாணவ பரம்பரையினரும், யாழ்ப்பாணத்து சைவ பெரு மக்களும் தொடங்கிய 'சைவ சமய பரிபாலனசபை'யும் விளங்கின.

சைவ மாணவர்கள் திருநீறு அணிந்து வந்தால், அவர்களுக்கு அநுமதி மறுத்தன, கிறிஸ்துவ கல்வி நிறுவனங்கள். இதற்கு வழிகாணவே, "சைவப் பிரகாச வித்தியாசாலைகளை" பல இடங்களில் நிறுவினார், நாவலர் பெருமான். அக்காலத்தில் கிறித்தவப் பாடசாலைகளில் சேர்க்கும் சைவப் பிள்ளைககளுக்கும் ஒரு கிறிஸ்தவப் பெயரை முன் வைத்தே பாடசாலைப் பதிவேடுகளில் பதியும் வழக்கம் இருந்தது என்பதும் இங்கு நினைவிற்குரியது.

சைவ வழிபாட்டுணர்வை விளக்க, பரப்ப பின் வரும் சிறு-சிறு வெளியீடுகளை வெளியிட்டார் நாவலர் பெருமான்.

அனுட்டான விதிமுதற் புத்தகம் (நித்திய கன்மவிதி), அனுட்டனவிதி இரண்டாம் புத்தகமும், குருவாக்கியமும்,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிவாலய தரிசன விதி, சைவ சமய சாரம், சைவ வினாவிடை முதற் புத்தகம், இரண்டாம் புத்தகம் (1875), திருக்கோயிற் குற்றங்கள் (1878).

சைவ சமயத்தைக் கண்டனம் செய்து கிறிஸ்துவர்களால் தொடுக்கப் பெற்ற பிரசாரத்தை முறியடிக்க நாவலர் வெளியிட்ட நூல்களாவன : சைவ தூஷண பரிகாரம் (1854), சுப்பிரப்போதம் (1853) வச்சிரதண்டம்.

நாவலர் மாணவர் பரம்பரையினர், அத்வைத வேதாந்தத்திற்கு மறுப்பாக சைவ சித்தாந்த உயர்வை நிலைநாட்ட பத்திரிகைகளிலும், நூல் வெளியீட்டுகளிலும் பெரும் முனைப்பு காட்டினர். 29-4-1888இல் நிறுவப் பெற்ற "சைவ சமய பரிபாலன சபை"யும், அதன் பிரசார முரசாக 11-9-1889இல் வெளிவந்த "இந்து நேசன் - இந்து ஆர்கன்" நாவலர் மரபை முன்னெடுத்துச் சென்றன. சைவசித்தாந்தத் தத்துவப் பிரசாரப் போரில் "இந்து சாதனம்" முன்நின்றது.

தமிழகத்தில் சிதம்பரம் 'பிரம்மவித்யா' (1887). சென்னை "ஹிந்து ஜன பூஷணி", திருச்செங்கோடு 'விவேகதிவாகரன்' ஆகியன அத்வைத வேதாந்தப் பிரசாரப் போர் நிகழ்த்த; "நாகை நீலலோசனி" (1890). "ஞானாமிர்தம்" (1888), இரண்டும் சைவ சித்தாந்தம் பிரசாரப் போரை நிகழ்த்தின. அக்காலத்தில் யாழ்ப்பாணம், தமிழகத்திடையே சமூக - பண்பாட்டு உறவுகள், பரிமாற்றங்கள் மிக நெருக்கமாக இருந்தன.

இத்தகைய சமய வாதங்களுடன் நாத்திகவாதமும் யாழ்ப்பாணத்தில் தலைகாட்டியுள்ளது. 1880இல் சென்னையில் இருந்து வெளிவந்த 'தத்துவ விசாரணி' எனும் இதழின் வாயிலாக நாத்திகப் பிரசாரம் நிகழ்ந்தது. சார்லஸ் பிராட்லாவின் நாத்திகக் கருத்துக்கள் பிரசாரம் செய்யப்பட்டன. யாழ்ப்பாணத்திலும் இந்த முயற்சி அரும்பியுள்ளது. இதைக் கண்டனம் செய்து சைவ சமயச் செம்மல் ச. சபாரத்தின முதலியார், 'உதயபானு' எனும் சைவசமய இதழில் எழுதி வந்தார். இவ்வாறு இவர் எழுதியது 1896இல் "ஈச்சுர நிச்சயம்" எனும் நூலாக வெளிவந்தது. சார்லஸ் பிராட்லாவின் நாத்திக வாதம் இந்து சாதனத்திலும் கண்டிக்கப்பட்டது.

இந்தச் சூழலில் சிகாகோ சர்வமத சபையில் சுவாமி விவேகானந்தர் இந்து சமயத்தைப் பற்றி ஆற்றிய விளக்கவுரை, யாழ்ப்பாண இந்துக்களையும் கவர்ந்தது. புறப்பகையை வென்றெடுப்பதில், உட்குழுப் பூசலில் திளைப்பது தவிர்க்கப்பட வேண்டும் எனும் நோக்கு முன்நின்றது. சைவ சமய உணர்வுடன், இந்து சமய உணர்வையும் வளர்ப்பதில் வேதாந்த - சித்தாந்தப் பூசலுக்கு சற்றே விடை கொடுத்து, சுவாமிஜியின் சிகாகோ சாதனை காரணமாகத் தோன்றிய இந்து சமயப் பெருமிதத்தை வகித்துக் கொள்ள யாழ்ப்பாண இந்துக்கள் முன் வந்தனர்.

### பேராசிரியர் க. கைலாசபதி ஆய்வுரை

சுவாமிஜியின் வேதாந்தப் பிரசாரம், யாழ்ப்பாண சைவர்களிடையே எவ்வித மாற்றத்தை ஏற்பட வைத்தது என்பதைப் பற்றி நடுநிலைமையுடன் பேராசிரியர் கைலாசபதி ஆய்வு செய்துள்ளார். ஆங்கிலத்தில் வெளி வந்த ஆய்வுரையின் தமிழாக்கத்தின் ஒரு பகுதி, வருமாறு :

"நாவலர் போன்ற மறுமலர்ச்சியாளர்கள், இந்து சமய உணர்வை செழிக்கச் செய்யப் போராடினார்கள். கிறித்துவ சமயத்தின் மதமாற்றத்திற்கான எதிர்ப்பை உருவாக்குவதில் தற்காப்பு உத்தியைக் கையாண்டனர். கிறித்துவம், தகுதியற்றது என்று நிறுவப் போராடினர். ஆனால், விவேகானந்தரின் அணுகுமுறை வித்தியாசமானது. தமது குருநாதரின் போதனைகளுக்கு ஏற்ப அனைத்து மதங்களும் சமமானவைகளே என்பதை வலியுறுத்தினார். இதனால், இந்து மதம் பிறமதங்களுக்குத் தாழ்வானதன்று என்பது விளக்கமுற்றது. அதே சமயத்தில் இந்து சமயம் உலகம் தழுவியது என்பதும் ஐயத்திற்கிடமின்றி தெளிவாக்கப்பட்டது.

"இவ்வாறு விவேகானந்தரால் பிரசாரம் செய்யப்பெற்ற வேதாந்தம் அனைத்துப் பிரிவினரையும் சமயக் கோட்பாடுகளையும் சமமாகக் கருதியது. இதனால் ஒருவர் இருவித அங்கீகாரத்தையும் பெறமுடிந்தது. ஒருவர் சைவராகவும் அதே சமயத்தில் விரிந்த பொருளில் ஓர் இந்துவாகவும் அங்கீகாரம் பெறுவார். இவ்வாறே வைணவரும் இருவேறு அங்கீகாரம் பெறத்தக்கவர்.

"யாழ்ப்பாண இந்துக்களில் பெரும்பான்மையினர் சைவர்கள். சைவசமயப் பற்று மிகுந்தவர்கள். சங்கர வேதாந்தத்தின் மாயாவாதத்தைத் தகர்ப்பதில் மகிழ்ச்சி கொள்பவர்கள். ஆனால் மெல்ல மெல்ல வேதாந்ததை ஒப்புக் கொள்ளாமற் போனாலும் பொறுத்துக் கொள்ளத் தொடங்கினர். சுருக்கமாகச் சொல்ல வேண்டுமானால், சுவாமி விவேகானந்தரின் போதனைகளும் இராமகிருஷ்ணர் இயக்கத்தின் செய்தியும் இலங்கைத் தமிழ் இந்துக்களை வேதாந்தத்தை ஒப்புக் கொள்ளச் செய்யாவிட்டாலும் பெரும்பாலோரின் குறுகிய நோக்கையும், கொள்கைப் பிடிவாதத்தையும் தளரச் செய்தது". ("The Impact of Swami Vivekananda in Hinduism in Sri Lanka" - Prof K. Kailaspathy, Golden Jubilee of the Ramakrishna Mission, Sri Lanka centre, 1980, P.2.)

### இலங்கையில் வெற்றியுலாத் தொடக்கம்

சிகாகோ சர்வமத சபையில் கலந்து கொள்வதற்காக சென்ற பொழுது 1893 மே மாதத்தில் ஒருநாள் அவர் சென்ற



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கப்பல் கொழும்பு துறைமுகத்தில் நிறுத்தப்பட்து. இந்தச் சந்தர்ப்பத்தில் சுவாமி கொழும்பு நகரைச் சுற்றிப் பார்த்தார். ஆனால், அன்று அவரைச் சூழ்ந்து பார்க்க எவருமிலர். 1897 சனவரியில் அந்தக் காட்சி மாறி விட்டது.

இந்தியா தம்மை வெற்றி விழாக்கோலம் பூண்டு வரவேற்கும் என்பதை, இந்தியா திரும்புவதற்கு பல மாதங்களுக்கு முன்பாக தமது நண்பர் ஒருவரிடம் பின்வருமாறு கூறினார்.

"இந்தியா எனக்குச் செவி சாய்க்கத்தான் வேண்டும். அதன் அஸ்திரவாரத்தையே அசைக்கப் போகின்றேன். அதனுடைய தேசிய ரத்த நாளங்களிலே மின்சார அதிர்வைப் பாய்ச்சப் போகின்றேன். இந்தியா எம்மை எப்படி வரவேற்கப் போகின்றது என்பதைப் பொறுத்துப்பார். வேதாந்த உணர்வை, என் உயிர்ச் சக்தியுடன் இங்கு எவ்வளவில் வாரி வழங்கியுள்ளேன் என்பதை என் தாய்த் திருநாடான இந்தியாவிற்கு உண்மையிலேயே மதிப்பிடத்தெரியும். இந்தியா எம்மைவெற்றி விழாக் கோலம் பூண்டு வரவேற்கும்."

இவ்வாறு ஒரு பக்கம் உணர்ச்சியுடன் சுவாமி சாற்றிய போதிலும், மறுபக்கம் என்ன நடக்குமோ என்று சற்று சோர்வுடன் இருந்ததாகவும் குட்வின் குறிப்பிட்டுள்ளார். 1896 நவம்பர் 14இல் ஒலிபுல் அம்மையாருக்கு எழுதிய கடிதத்தில் குட்வின், சுவாமிஜியின் சோர்வை பின்வருமாறு கூறியுள்ளார்.

'இந்தியாவில் தாம் எவ்வாறு வரவேற்கப்படுவார் என்பதைப் பற்றி சுவாமி நிச்சயமற்றவுணர்வைக் கொண்டுள்ளார். பெருமளவில் புறக்கணிக்கப்பட்டு விடுவோமோ என்றும் நினைக்கின்றார். அப்படியானால், இந்தியாவில் சிறிது காலம் தங்கி மீண்டும் அமெரிக்கா, இங்கிலாத்திற்கு போவதுதான் உகந்ததாகும். போகும்பொழுது ஜப்பானிலும், சீனாவிலும், சொற்பொழிவுகளுக்கு ஏற்பாடு செய்ய வேண்டும்." (Swami Vivekananda His Life and Legacy, Swami Tapasyananda, P. 87)

சுவாமிஜியை வரவேற்க மக்கள் எழுச்சி எவ்வாறு திரண்டெழுந்து ஏற்றிப் போற்றிப் பக்திப் பரவசத்தால் ஆரவாரம் செய்தது என்பதை வரலாறு மிக விரிவாக பதிவு செய்து விட்டது. இதை முதன்முதலில் தொடங்கி வைத்த பெருமை இலங்கை இந்துக்களுக்கு வாய்த்து விட்டது.

## கொழும்பில் சுவாமிஜி

சுவாமிஜி சிகாகோ வீரராகத் திரும்பி ஆற்றிய சொற்பொழிவுகளைத் தொகுத்து வெளியிடப் பெற்ற நூலிற்கு "கொழும்பு முதல் அல்மோரா வரையில்" எனும் பெயரிட்டனர் இந்தப் பெயர் பொருத்தத்தைப் பார்க்கும் பொழுது கொழும்பு நகரம் பெற்ற முதற் சிறப்பையும் அறிகிறோம்.

சுவாமிஜி 1897 சனவரி 15ந் தேதியன்று, மாலையில் சேவியர் தம்பதிகள், குட்வின் புடைசூழ கொழும்பு துறைமுகத்தில் வீரக்கழல்களைப் பதிப்பித்தார். கொழும்பு நகர இந்துக்கள் சுவாமிஜியை வரவேற்க ஆயிரக் கணக்கில் திரண்டனர். சுவாமிஜியியை வரவேற்க சென்னையில் இருந்து அவருடைய சகோதரத் துறவி சுவாமி நிரஞ்சனானந்தா வரவேற்புக் குழுவின் சார்பில் வந்திருந்தார். கொழும்பு இந்து சமய மக்கள் வரவேற்புக்குழுவின் தலைவர் பொ. குமாரசுவாமியும், செயலாளர் ஏ. குலவீரசிங்கமும் வந்திருந்தனர்.

சுவாமிஜிக்கு வரவேற்பு குழுத்தலைவர், மல்லிகை மலர் மாலையை அணிவித்ததும், மக்கள் திரள் சுவாமிஜியின் திருவடிகளைத் தொட்டு வணங்க அலைஅலையாய் முன்னேறியது. மக்கள் உணர்ச்சி ஒலியும், கர ஒலியும் துறைமுகத்தையடுத்த கடல் அலையோசையை அடக்கி விட்டது. சுவாமிஜியை கறுவாக்காடு என்னுமிடத்தில் ஓர் கவின் மாளிகையில் எழுந்தருளச் செய்ய நீண்ட ஊர்வலம் தொடங்கியது. இரு குதிரைகள் பூட்டிய அணிசேர் இரதத்தில் ஞான சூரியனாக சுவாமிஜி அமர்ந்தார். வழி நெடுகத் தோரணங்கள், அலங்கார வளைவுகள், மக்களின் பக்திப் பரவச வாழ்த்தொலிகள் மாளிகையில் மலர் சொரிய சுவாமிஜி எழுந்தருளியதும், தமிழ்ப் பண்பாட்டிற்கேயுரிய இசை தவழ்ந்தது. தமிழ் பக்தி இலக்கியத்தில் ஆயிரம் ஆண்டுகளுக்கு முன்பு மலர்ந்து தெய்வீக மணம் பரப்பிக் கொண்டு வரும் தேவாரப் பண் இசை, சுவாமிஜியை வரவேற்றது. சுவாமிஜிக்கு இது ஓர் புதிய அனுபவம்; அற்புத அனுபவம். இதையடுத்து சமஸ்கிருத துதிப்பாடல் ஒன்று ஓதப்பட்டது.

வரவேற்புக் குழுத் தலைவர் பொ. குமாரசுவாமி சுவாமிஜியிடம் சமர்ப்பித்த வரவேற்புரையின் ஒரு பகுதி, வருமாறு:

"அனைத்து சமய நெறிகளையும் சமரசப் படுத்தும் இந்து சமயத்தின் இலட்சியமான உலகளாவிய சமயத்தைத் தாங்கள் ஐரோப்பிய, அமெரிக்க நாடுகளில் அறிவுறுத்தினீர்கள்... ஸ்ரீராமகிருஷ்ண பரமஹம்ச தேவரின் பேரருளினாலும், தங்களுடைய தன்னலமற்ற பற்றார்வக் கிளர்ச்சியாலும் மேலைநாடுகள், இந்தியாவின் ஆன்மிக ஞானத்தின் உயிரோட்டமுள்ள விலைமதிக்கவியலாத வரத்தைப் பெற்றுள்ளன. மேல்நாட்டு நாகரீக வெளித் தோற்றத்தில் மயக்கமுற்ற பெரும்பான்மையான நம் நாட்டு சகோதர மக்கள், தங்கள் முன்னோர் தேடிவைத்த புகழார்ந்த பாரம்பர்யத்தின் அருமையறிந்து உய்ந்தார்கள்."

சுவாமிஜி தமது ஏற்புரையில் உளம் நெகிழ்ந்து இந்து சமயப் பண்பாட்டின் சாரம்சத்தை தமக்களிக்கப் பெற்ற மாபெரும் வரவேற்பில் கண்டதாக பின்வருமாறு கூறினார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"ஓர் ஏழைச் சந்நியாசிக்கு அளிக்கப்பட்ட அரசர் மரியாதைக்குரிய வரவேற்பில் இந்துக்களின் ஆன்மிகம் வெளிப்பட்டது."

அடுத்த நாள் 16ந் திகதி சுவாமிஜி பொதுக்கூட்டத்தில் பேசுகையில், இந்தியா புண்ணிய பூமியென்பதையும், இந்தியாவின் உயிர்நாடி சமய வாழ்க்கை என்பதையும், ஒரே இறைவனை மக்கள் பல பெயரால் வணங்குகிறார்கள் என்பதையும் விளக்கினார்.

சுவாமிஜி இலங்கையில் பத்து நாட்கள் தமது வெற்றியுலாவை நிகழ்த்தினார். கொழும்பு, கண்டி, வவனியா, அனுராதபுரம், யாழ்ப்பாணம் ஆகிய நகரங்களில் சுவாமிஜிக்கு வரவேற்புரைகள் படித்தளிக்கப்பட்டன.

இலங்கையில் சில கிறிஸ்துவர்களும், சில பௌத்தர்களும் தமிழ் இந்துக்களின் மத்தியில் ஏற்பட்ட மகிழ்ச்சி ஆரவாரத்தைக் கண்டு பொறாமையுற்று தொல்லை கொடுத்தனர். அநுராதபுரத்தில் சுவாமிஜி பேசியது தமிழுடன், சிங்களத்திலும் மொழிபெயர்க்கப்பெற்றது. பௌத்தர்கள், சொற்பொழிவின் இடையே இடையூறு விளைவிக்கும் வகையில் பலவித ஒலிகளை எழுப்பினர். தமிழர்–சிங்களவர் இடையே மோதல் உருவாகும்போல் இருந்தது. சுவாமிஜி, தமிழர்களிடையே கட்டுப்பாட்டை வலியுறுத்தி அமைதியை நிலை நாட்டினார். பின்பு அங்கிருந்த பௌத்தர்களே வெட்கமுறும் வண்ணம் பகவான் புத்தரைப் பற்றி மிக உயர்வான உரையாற்றினார். அநுராதபுரத்தில் இருந்து யாழ்ப்பாணம் சென்றார், சுவாமிஜி.

**யாழ்ப்பாணத்தில் சுவாமிஜி**

அக்காலத்தில் ரயில் பயணத்திற்கு வாய்ப்பில்லாததால், அநுராதபுரத்தில் இருந்து 120 மைல் தொலைவில் உள்ள யாழ்ப்பாணத்திற்கு குதிரை பூட்டிய "கோச்" வண்டியிலே, படுமோசமான பாதையில், மிக்க சிரமத்துடன் சுவாமிஜி பயணித்தார். சுவாமியிஜியுடன் சேவியர் தம்பதிகள், குட்வின், சகோதரத் துறவி சுவாமி நிரஞ்சனானந்தா ஆகியோரும் வந்தனர். சனவரி 24இல் காலை பத்து மணி அளவில் சுவாமிஜி யாழ்ப்பாணம் வந்து சேர்ந்தார்.

திரு. சி. நாகலிங்கம் அவர்களைத் தலைவராகவும், திரு. அ. சபாபதிப்பிள்ளை அவர்களைச் செயலாளராகவும் கொண்ட வரவேற்புக் குழு அனைத்து ஏற்பாடுகளையும் செய்தது. சுவாமிக்கு பொதுமக்கள் அளித்த வரவேற்பை 'இந்து சாதனம்' (3.2.1897) பின்வருமாறு வருணித்தது.

பல்லாயிரவர் புடைசூழ, மேளவாத்திய கோஷங்கள் திசாமுகங்களை அதிரச் செய்ய, தீவர்த்திகளெல்லாம் வானசோதிகளை அதிரச் செய்ய இரு துரகங்கள் பூட்டிய வண்டிமீதமர்ந்து இந்துக் கல்லூரியிலியற்றப் பட்டிருந்த அலங்காரப் பந்தலுக்குச் சுவாமியவர்கள் எழுந்தருளியபோது பெரிய கடை முதல் கல்லூரி ஈறாகச் செய்யப்பட்டிருந்த வீதியலங்காரம் அம்மம்ம! எம்மாற் சொல்லத்தக்கதன்று, எங்கணுந் தீபதூபங்களுமாயே இருந்தது."

யாழ்ப்பாண மக்கள் சார்பில் அ. சபாபதிப்பிள்ளை, வரவேற்புரையை வாசித்தளித்தார். இதில் ஒரு பகுதி, வருமாறு :

"எமது சமய உண்மைகளைத் தங்கள் சுயநலமற்ற சேவை மூலம் பரப்பி வருவதற்கும், சர்வசமய மாநாட்டில் வேதங்களின் உட்பொருளை விளக்கியதற்கும் எமது மனமார்ந்த நன்றியைத் தெரிவிக்கின்றோம். தெய்வீகத் தன்மை வாய்ந்த இந்திய தத்துவ சாஸ்திரத்தை அமெரிக்கா, இங்கிலாந்து முதலிய தேசங்களிலே பரப்பி மேலைத்தேசங்களுக்கும், கீழைத்தேசங்களுக்குமிடையே நல்லுறவை ஏற்படுத்தியதற்கும் எமது மனமார்ந்த நன்றியைத் தெரிவிக்கின்றோம். சமய உண்மைகளில் நம்பிக்கை குறைந்து உலோகாயதக் கொள்கைகள் பரவி வரும் இக்காலத்தில் நமது பழம்பெரும் சமய உண்மைகளைப் பிரசாரம் செய்வதற்குத் தாங்கள் ஆரம்பித்திருக்கும் இயக்கத்திற்கும் நமது நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறோம்."

வரவேற்புரையை ஏற்று சுவாமிஜி பதிலளித்ததைப் பற்றி 'இந்து சாதனம்' சைவ சமய எழுச்சியுடன் பின் வருமாறு வருணித்தது.

"அவர் திருவாய் மலர்ந்தருளிய திருப் பிரசங்கங்களினது அலங்காரமே அலங்காரம் ! புத்தரை வாதில் வென்ற ஸ்ரீமத் மாணிக்கவாசக சுவாமியவர்களினது திருவவதாரமே அன்றிச் செக்கர் வானிறத்தானாகிய எம்பிரானே எமக்கு உபதேசஞ் செய்யுமாறு மானுடச் சட்டை பூண்டெழுந்தருளிய குருவடிவந்தானோ எம் முன்னே நிற்கும் வடிவமென்று ஐயுறக் கிடந்ததெனில் சுவாமி அவர்கள் மகத்துவம் எம்மாற் சொல்லுந்தகைத்தோ !"

25ந் தேதியன்று இரவு 7 மணி அளவில் யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரியில் சுவாமிஜி 'வேதாந்தம்!' எனும் தலைப்பில் ஒரு மணி 40 வினாடிகள் நேரம் பேசினார்.

**யோக சுவாமிகள் நினைவுக் குறிப்புகள்**

யாழ்ப்பாணத்தில் சைவ சமய மறுமலர்ச்சியைத் தோற்றுவித்த நாவலர் பெருமானுக்குப் பிறகு சைவப் பெருமக்களால் பெரிதும் கொண்டாடப் பெற்றவர் யோக சுவாமிகள் (1872–1964). சைவ சமயத்தைப் பேணுவதில் மிகுந்த கண்டிப்புடையவராயிருந்த அதே சமயத்தில் சமயங்கடந்து நின்று,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தத்துவப் பூசல்களுள் அகப்படாத தத்துவாதீதனாகவும் திகழ்ந்தவர் யோக சுவாமிகள்.

'வேதாந்த சித்தாந்த சமரச நன்னிலை பெற்ற வித்தகச் சித்தர் கணம் நாமே' என்றும் கூறியவர் யோக சுவாமி. 1925ஆம் ஆண்டளவில் யாழ்ப்பாணத்தைச் சார்ந்த பலரும் யோகசுவாமிகள் திருநாமத்தை பக்தி சிரத்தையுடன் கூறத் தொடங்கிவிட்டனர். யோகசுவாமிகளின் போதனைகள் 'நற்சிந்தனை' எனும் நூலில் தொகுக்கப் பெற்றுள்ளன.

யாழ்ப்பாணத்து ஞான மலராக ஆன்மிக மணம் வீசிய யோக சுவாமிகள், சிகாகோ வீரராக சுவாமிஜி யாழ்ப்பாணம் வந்த சமயத்தில் அவருடைய தரிசனத்தையும், சொற்பொழிவையும் கண்டு கேட்ட பேறு பெற்றவர்.

சுவாமிஜி ஏறி வந்த வண்டியை, யோக சுவாமிகள் இழுத்ததாக, பருத்தித்துறை ஸ்ரீசாரதா சேவாச்சிரமத்தின் சுவாமி சித்ரூபானந்தா ஒரு கட்டுரையில் குறிப்பிட்டுள்ளார். (ஆத்மீகமும் யாழ்ப்பாண மக்களும்) தமிழோசை லண்டன், 31–7–1992, ப. 15)

யோக சுவாமிகள் பற்றிய ஒரு நூலில், அவர் சுவாமிஜியைக் கண்டது, கேட்டதைப் பற்றிக் கூறியது பின் வருமாறு எழுதப்பட்டுள்ளது.

"சுவாமிகள் கிளி நொச்சியில் தொழில் புரியும் காலத்திலேயே சுவாமி விவேகானந்தரின் இலங்கை விஜயம் நிகழ்ந்தது (1897). அப்பெரியாருக்கு யாழ்ப்பாணத்தில் அளிக்கப்பட்ட வரவேற்பில் சுவாமிகளும் உற்சாகத்துடன் பங்கு பற்றினர். கோட்டையிலிருந்து இந்துக் கல்லூரி வரை சென்ற ஊர்வலத்திலும் பின்னர் கல்லூரியில் நடை பெற்ற பொதுச் கூட்டத்திலும் சுவாமிகள் கலந்து கொண்டனர் பின்னாட்களில் அவர் தம் அன்பர்களிடத்து "விவேகானந்தர் மேடையின் இரு பக்கங்களிடையேயும் சிங்கக்குட்டி போல் உலாவிக் கொண்டு பேசினார்" எனவும், "அவர் பேசினார் என்பதிலும் சிங்கம் போல் கர்சித்தார் என்பதே சரி" எனவும் கூறி மகிழ்வார். அவர் பேசிய முதல் வசனத்தைப் பல தடவைகளில் அன்பர்களுக்கு கூறியிருக்கிறார். "விடயம் பெரிது நேரமோ குறுகியது" (The subject is Vast, but time is short) என்பதே அவ்வாசகமாகும். (யாழ்ப்பாணம் யோக சுவாமிகள் வாழ்க்கையும், வழிகாட்டுதலும், முதற்பதிப்பு, 1991, ஆக்கம், 'சிவத் தொண்டர்', சிவதொண்டன் நிலையம், செங்கலடி, இலங்கை, ப. 17).

சுவாமிஜி மேடையில் உலாவிக் கொண்டே பேசும் பழக்கமுடிடயவர் என்பதை மேரி லூயிஸ் பார்க்கும் தமது நூலில் குறிப்பிட்டுள்ளார்.

### யாழ்ப்பாணத்தில் கிறிஸ்துவர்கள் தூண்டியப்பிரசாரம்

"சுவாமிகளின் பிரசாரத்தினால் தங்கள் ஏகபோக நிலைக்கு ஆபத்து ஏற்படுவதைக் கண்ட கிறிஸ்தவர்கள் சுவாமிகளைப் பலமாகத் தாக்கினர். வேதாந்தத்துக்கும் சிந்தாந்தத்துக்கும் உள்ள வித்தியாசத்தை மிகைபடக் கூறி இந்துக்களுக்குள் மித்திர பேதஞ் செய்ய எத்தனித்தனர்." இவ்வாறு "இலங்கையில் விவேகானந்தர்" எனும் நூலின் ஆசிரியர் ச. அம்பிகை பாகன் முன்னுரையில் குறிப்பிட்டுள்ளார்.

சுவாமிஜி இலங்கை வருவதற்கு முன்பே, சிகாகோ சர்வமத சபையில் சுவாமிஜி நிகழ்த்திய சொற்பொழிவுகள் இலங்கைப் பத்திரிகைகளில் வெளிவந்த காலத்திலேயே கிறிஸ்துவ சமய இதழ்கள் சுவாமிஜியை எதிர்த்து எழுதியதை முன்பு கண்டோம்.

சுவாமிஜியை வேதாந்தி எனச் சுட்டிக் காட்டி, சித்தாந்தம் பேசும் தமிழர்கள் வரவேற்கலாமா என 'மித்ர பேதம்' செய்ய முற்பட்ட பொழுது, சைவ சமயப் பிரசார முரசான 'இந்து சாதனம்' எழுதிய கட்டுரையின் முக்கியப் பகுதிகள் வருமாறு :

"ஆயிரஞ் சுணங்கன்கள் கூடிச் சந்திரனைப் பார்த்துக் குரைத்துக் குரைத்து ஊளையிட்டாலும் அதற்கு யாதும் குறைவுண்டாகுமா ? ஸ்ரீ விவேகானந்த சுவாமிகள் மீது எண்ணிறந்த கிறிஸ்தவர் சீறிச் சினந்து அவர்க்கும் அவர் பிரசங்கிக்கும் மார்க்கத்திற்கும் விரோதமாகப் போலிக் கண்டனங்கள் எழுதித் தங்கள் பத்திரிகைகளை நிரப்பி விடுவதால் அவர் மாட்சிக்கு இம்மியளவேனுந் தாழ்ச்சியுண்டாகுமா ? உண்டாகா ! உண்டாகா !!

"சுவாமியவர்கள் இங்கிலாந்து, அமெரிக்கா ஆதியாமிடங்களிலே எமது மார்க்கத்தைப் பிரசங்கித்து அங்குள்ளாரநேகரை எமது மத அனுசாரிகளாக்கினாரென்று நாம் கூற அதனை மறுத்து, அங்ஙனமன்று 'வினோதக் காட்சிப் பிரியராயுள்ளோர் சிலர் மாத்திரமே அவர் பிரசங்கத்தைக் கேட்டுப் போயின' ரென்று எம்மோடு வாதாடின கிறிஸ்தவர்கள், அவர் தமது ஆங்கில சீடரோடும் நம் மத்தியில் வந்துதித்து, துயின்றிருந்த எம்மை விழிக்கச் செய்து ஒரு பெருங்கிளர்ச்சியை எம் மதத்தினர்க்குள் உண்டாக்கிச் சென்றதைக் கண்ணுற்று மனம் பொறுக்கலாற்றாதவராய்க் கிறிஸ்து மதத்திற்கு இடையூறு நேரிட்டிருக்கின்றதே எனுமச்சங்காரணமாய் நம் பத்திரிகைகள் மூலம் ஆகச் சில வெற்றுரைகள் பகர்ந்து எம் நாட்டினரை இதுவரையும் வஞ்சித்தது போதாதென்றாக்கும் இன்னும் வஞ்சிக்கத் தலைப்பட்டுக் கொண்டனர்."

பத்தொன்பதாம் நூற்றாண்டில் மூண்டெழுந்த வேதாந்த சித்தாந்தத் தத்துவப் போராட்டம், இந்து



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சமயத்திற்குள் நிகழ்ந்த பல்வேறு போராட்டங்களில் ஒன்றாகும். கிறிஸ்துவத்தில் கத்தோலிக்க, பிராட்டஸ் டண்ட், யூனிட்டரியனிஸம் முதலான பல்வேறு கருத்துப் போர்களைப் போன்றும், இஸ்லாத்திலும் ஷியா, சன்னி, அகமதியா எனும் பிரிவினர்களிடையே நிகழ்ந்த தத்துவப் போராட்டங்கள் போன்றும், இந்து சமயத்திலும், வேதாந்த, சித்தாந்தத் தத்துவப் போராட்டம் எழுந்தது. இது, இந்து சமயத்தை அழிப்பதற்கன்று, 'அவரவர் தத்தமது வகையால், இந்து சமயத்திற்கு ஆக்கம் தேடுவதற்கும்தான். இந்தப் போராட்டத்தை இந்து சமய ஒற்றுமைக்கு ஊறு தேடுவதற்காக, பகிரங்கமாகவும், அந்தரங்கமாகவும், கிறிஸ்துவ மிஷனரிகள் பயன் படுத்தியதுண்டு.

சுவாமிஜிக்கு கொழும்பிலும், யாழ்ப்பாணத்திலும் படித்தளிக்கப் பெற்ற வரவேற்புரைகளில், "சகல சமய நெறிகளையும் சமரசப்படுத்தியதாய், ஆன்மாக்களது பக்குவத்துக்கேற்ற படிப்படியாகக் கொள்ளத்தக்க ஞானவ முதத்தையுடையதாய்" என்றும், "சர்வ சமய மாநாட்டில் வேதங்களில் உட்பொருளை விளக்கியதற்கும் எமது மனமார்ந்த நன்றியைத் தெரிவிக்கின்றோம்" என்றும் குறிப்பிட்டிருந்தன.

அழுத்தமான சைவ சித்தாந்த உணர்வை போர்க் குணமாகக் கொண்ட யாழ்ப்பாணத்துப் பெரும்பான்மையான சைவர்கள், புத்தெழுச்சி பெற்று மேலும் சமய வலிமை பெறுவதை கிறிஸ்துவ மிஷனரிகள் சிலர் விரும்பவில்லை. ஆகவே, வேதாந்த சித்தாந்த 'மோதல்களை' மீண்டும் நினைவு படுத்தி, அவற்றை முன் நிறுத்தி சுவாமிஜியின் வளர்ந்தோங்கி வந்த செல்வாக்கைத் தடுத்து நிறுத்த வீண் முயற்சி செய்தனர். சுவாமிஜி கிறிஸ்துவ சமயத்திற்கு எதிரி அல்லர்; கிறிஸ்துவ மிஷனரிகளின் தவறான பிரசார – செயற்பாடுகளுக்குத்தான் எதிரி என்பதை கருத்தில் கொள்ளாமல் யாழ்ப்பாணத்து கிறிஸ்துவர்கள் சிலரும், அமெரிக்காவில் கிறிஸ்துவ மிஷனரிகள் கிளப்பிவிட்ட திரிபுவாதத்தைப் பின்பற்றினர்.

இதற்காக, தமிழகத்தில் சிதம்பரத்தில் இருந்து வெளிவந்த 'பிரமவித்யா'வும், திருச்செங்கோட்டில் இருந்து வெளி வந்த "விவேகதிவாகர"னும், சைவசித்தாந்தப் பிரசாரப் போரிற்கு பதிலளித்து எழுதி வந்தது; தாக்கியும் எழுதின. இந்தத் 'தாக்கு'தலை யாழ்ப்பாண கிறிஸ்துவ மிஷனரிகள் தங்களுக்கு சாதகமாகப் பயன்படுத்திக் கொண்டனர். இதையும் உள்ளடக்கி, 'இந்து சாதனம்' மேலும் எழுதியதாவது :

"......... பத்திராதிபர் இந்துக்களாகிய எமக்கு இந்து மதம் போதிக்கத் துணிந்த துணிவே துணிவு ! வேதாந்தம் சித்தாந்தங்கட் கிடையேயுள்ள பேதாபேதங்களை ஏதோ நன்குணர்ந்தவர் போன்று நடிக்கும் நடிப்பே நடிப்பு ! தாம் கையாண்டிருக்கும் கிறிஸ்த மதத்தினது உண்மை பொய் தெரியாது மயங்குமிவர் பரசமய ஆராய்ச்சி செய்ய நிறைத்த மருளே மருள் ! "பிரம வித்தியா", "விவேக திவாகரன்" ஆகிய இந்தியப் பத்திரிகைகளில் அத்துவைத விஷயமாய் ஆங்காங்கு பலமுறைகளிலும் எழுதப்பட்டவற்றையெல்லாம் திரட்டி எடுத்துச் சென்று ... பிரசுரித்து விட்டு, தாம் ஏதோ அத்துவைத நூல்களை விசாரித்துக் கரை கண்டார் ஒருவர் போலக் கபட நாடகஞ் செய்யும் நாடகமே நாடகம் ! ....... எமக்குள்ளே பிரிவினையுண்டாக்கிச் சுவாமிகள் வரவாற் கிளர்ந்திருக்கும் மதாபிமானத்தைக் கெடுத்து விடுவதற்கோ ! ஏதுக்கிவர் இவ்வளவு பதை பதைக்கின்றார் ! இவர் வெற்றுரையால் எடுபட எமது சமயிகள் அத்தனை மூட சிரோமணிகளன்று."

"சுவாமிகள் வரவாற் கிளர்ந்திருக்கும் மதாபிமான"க் கண்ணோட்டத்தினால் வேதாந்த – சித்தாந்த நல்லுறவிற்குக் குரல் கொடுத்தது, 'இந்து சாதனம்'. சுவாமிஜியின் வருகையால் விளைந்த இந்தப் புதிய மாறுதலை 'இந்து நேசன்' பின்வருமாறு எதிரொலித்தது.

"வேதாந்த சித்தாந்தங்களை உண்மை ஞானிகள் ஒருபோதும் இரண்டெனார். சுத்தாத்துவிதமே சித்தாந்தம் என்பது எமக்கெல்லாம் ஒத்த துணிவு. ஆகவே வேதாந்த சித்தாங்கள் உண்மையளவில் ஒன்றேயாம். கிரியா விஷயங்களில் இவையிரண்டிற்கும் சிறிது பேதமுண்டேயாயினும் அதனால் உண்மை பேதிக்குமா ? மாயாவாதத்துக்கும் சித்தாந்தத்துக்கும் மிக்க பேதமுண்டு. இவ்வுண்மைகளை அறியாது பத்திராதிபர் தாமே மயங்குகின்றாரன்றிப் பேதைகளை மயக்கவும் எத்தனிக்கின்றார்."

## 'சிவ புண்ணியத் தெளிவு'

சுவாமிஜியின், சொற்பொழிவுகளில் சிந்தாந்தச் சாத்திர நூல்களுள் ஒன்றான 'சிவபுண்ணியத் தெளிவு' எனும் நூலில் ஓதப்பட்டிருக்கும் கருத்துக்கள் 'மிகுதியும் செறிந்து கிடத்தலைப் பாலரும் இனிது விளங்கிக் கொள்வர்" என்று 'இந்து சாதனம்' தனது கருத்துப்போரில் தொடர்ந்து வலியுறுத்தி, பின்வரும் பாடலையும் 'சிவ புண்ணியத் தெளி' வில் இருந்து எடுத்துக்காட்டியது.

சீவனை சிவத்தினொன்றாய்ச் சேர்க்கும்
சித்தாந்தோர்க்கும்
சீவனை பரத்தினொன்றாய்ச் சேர்க்கும்
வேதாந்தத்தோர்க்கும்
பாவனை இரண்டுமொன்றே பரம
ஞானத்தோர்க்கெல்லாம்
மேவிய கருமகாண்டம் விளம்பிடிற் பேதமாமே.

கி. பி. பதின்மூன்றாம் நூற்றாண்டைச் சார்ந்தாகக் கருதப்படும். இந்நூலை அருளியவர் உமாபதிசிவாசாரியர் ஆவார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஞானயோகம், கர்மயோகம், பக்தியோகம் என்னும் மூன்று நிலைகளில் இந்து சமயத்தத்துவங்கள் அனைத்திற்கும் விளக்கங்கள் காண்பதற்கு வாய்ப்புகள் பெருமளவில் இருக்கும் பொழுது, வேதாந்த – சித்தாந்தங்களிடையே ஒற்றுமை அம்சங்களைக் காண்பதே உகந்ததுமாகும். 'சிவ புண்ணியத் தெளிவு' சாத்திர நூலைக் கொண்டு 'இந்து சாதனம்', சுவாமிஜியின் வேதாந்தப் பிரசாரத்திற்கு ஆதரவளித்ததும், குறிப்பிடத்தக்க ஒரு விளக்கமாகும்.

**'உதய தாரகை' யின் பார்வையில்**

யாழ்ப்பாண கிறிஸ்துவ சமயத்தினர் மீது 'இந்து சாதனம்' தொடுத்த விமர்சனத்திற்குரிய காரணத்தை அறிவதற்கு, 'உதய தாரகை"யின் போக்கை அறிய வேண்டும். சுவாமிஜியின் யாழ்ப்பாண வருகையைப் பற்றி, 'உதய தாரகை' விரிவாகச் செய்தியை 1897 மாசி மாத 4ந் தேதி வியாழக்கிழமை இதழில் வெளியிட்டது. இதில் ஆங்காங்கே காழ்ப்புணர்ச்சியுடன் திரிபுவாதத்தைத் தெரிவித்து, உதய தாரகை. சில சான்றுகளைப் பார்ப்போம்.

"வேதாந்தம் தமிழ் நாடுகளுட் புகுந்த காலத்துச் சைவசித்தாந்த ஆதினத்தார் குமிறொலி செய்தெழும்பச் சித்தாந்திகளுக்கும் வேதாந்திகளுக்குமிடையில் பெரும் பூசலுண்டாயிற்று. இப்பூசலிடையறாது நடந்து கொண்டே வருகின்றது." அத்வைத தூஷணங்கள்", "பரிகாரங்கள்" "நிராகரணங்கள்" மெத்த ! மெத்த ! திருச்செங்கோட்டு விவேக திவாகரனாதியாம் பத்திரங்களிலுமிச்சமர் நடக்கின்றது. திராவிட தேயத்தவர்களில் மிகுதியானோர் சைவ சித்தாந்த பட்சத்தாராகவே விவேகானந்த சுவாமியின் அத்துவைத பிரகாரண மெவ்வள விலங்கீகாரம் பெறுமோ அறியோம்."

"விவேகானந்த சுவாமியின் அவிவேக சாலப் பிரசாரணம்" எனும் தலைப்பில் 'சத்திய நேசன்' என்பவர் எழுதிய கடிதத்தையும், வெளியிட்டது 'உதய தாரகை'. இதில் சுவாமிஜியை, 'இந்து சாதனம்' பாராட்டியதைப் பொறுத்துக் கொள்ள முடியாமல் பின்வரும் சில கருத்துக்கள் கூறப்பட்டுள்ளன.

"அமெரிக்க கிறிஸ்தவ மதம், மாணிக்கவாசக சுவாமி காலச் சைவமாயிருப்பின் சுவாமி அங்கு பிரசங்கிக்கவும் பின்னர் திரும்பி வரவும் விடுவரா ? கழுவேற்றிவிடுவாரே. சமய இட்டங்கொடுப்பதும், பரமத வேறுபாடின்றிச் சகலரிலும் அனுதாபப்படச் செய்வதும் கிறிஸ்து மதமேயென்பதை அனுபவமாத்திரையாய் பூரணமாயறிந்தும் இவ்வாறு போலி சாலம்விடல் அவர்க்கு விவேகமாகுமா ?"

"எட்டி எட்டிப் பார்ப்பாரும், ஏணி வைத்துப் பார்ப்பாரும் குட்டிச் சுவராலே குனிந்து நின்று பார்ப்பாரும் என்றாற்போல நம் யாழ்ப்பாணத்துள்ள சைவரும் பிறரும் விவேகானந்த சுவாமியை வலிந்தழைத்தும் எட்டிப் பார்த்தும் வணங்கிப் பார்த்தும் பெற்றுக் கொண்ட நற்பலன்தானென்ன ? விவேகாந்த சுவாமி போதிக்கின்ற மதத்துக்கும் அவரதாசாரத்துக்கும் யாழ்ப்பாணத்துள்ள சைவர் அனுசரிக்கின்ற மார்க்க ஒழுக்கங்களுக்கும் ஏதும் ஒற்றுமை பற்றுமா? முத்திறத்தார்க்கே விசேஷ சலாக்கியமும் பாக்கியமுமாகச் சமைத்துள்ள ஆலயங்களும் நூல்களும் எத்திறத்தார்க்கும் இயைதற்குகந்த விதி உபதேசத்தால் மாற்றினால் வாய்ப்புத்தான்."

உதய தாரகை, இந்து நேசன் இரண்டும் நிகழ்த்திய கருத்துப்போர், யாழ்ப்பாண கிறிஸ்துவ சமய, சைவ சமய வரலாற்றின் போக்குகளை அறிய வாய்ப்பளித்தது. ஆறுமுகநாவலர், வேதாந்தத்தை எதிர்த்தது போலவே, கிறிஸ்துவ சமயத்தையும் எதிர்த்தார். அவருக்குப்பின் அவருடைய மரபின் வழிநின்றோர், வேதாந்த சமய எதிர்ப்பில் முனைப்பு காட்டாமல், சுவாமிஜி வேதாந்த சமய அணுகுமுறையைப் புரிந்துக் கொண்டனர். கிறிஸ்துவ சமய எதிர்ப்பையும், வேதாந்த சமய எதிர்ப்பையும் இரட்டைக்குழல் துப்பாக்கியாகக் கொள்ளாதது; சுவாமிஜியின் காரணமாக ஏற்பட்ட மாற்றம், இதுவென்றும் கூறலாம்.

சுவாமிஜிக்கு முன்பு கூட ஆங்கிலம் படித்த, சைவசமய அறிஞர்கள், வேதாந்த, சித்தாந்த சமரச நோக்குடன் விளங்கினர். சேர் முத்துகுமாரசுவாமி (1834–1879). பொன்னம்பலம் ராமனாதன் ஆகியோர் வேதாந்த, சித்தாந்த சமரச நோக்குடையவர்களாகத் திகழ்ந்தனர். இவ்வகையில் அவர்கள் தாயுமான சுவாமிகள் (1706–1744) சமரச நெறி வழியே நின்றனர் என்றும் கருதலாம்.

சேர் முத்துகுமார சுவாமியின் சமரச நோக்கைப் பற்றி பேராசிரியர் கைலாசபதி எழுதியதாவது !

"தாயுமானவர் பாடல்களை ஆங்கிலத்தில் மொழி பெயர்த்த முத்துகுமாரசுவாமி அவர்கள் அந்த நூலிற்குக் கொடுத்தத் தலைப்பு குறிப்பிடத்தக்கது. "Taumanavar of Hindu - Philosophic Poems of the Vedanta - Siddhantic School !" சித்தாந்தத்தில் இருந்து வேதாந்தத்திற்குச் சென்ற பிறகு முத்து குமாரசுவாமி 1874 இல் பௌத்த சமய நூலொன்றை பாளிமொழியில் இருந்து ஆங்கிலத்தில் மொழிபெயர்ப்பு செய்தார். அந்த மொழிபெயர்ப்பு நூலின் பெயர் : 'Sutta Nipata or Dialogues and Discourses of Gautama Buddha" ........... பொதுவாக மற்ற மதங்களிடத்திலும் குறிப்பாக இந்து சமயத்தினரிடமும் அவர் மேற்கொண்ட அணுகுமுறை, அவர் காலத்தில் இருந்த படித்தோரிடையேயும் விளங்கியது."

இவ்வாறு பேராசிரியர் கைலாசபதி விளக்கமளித்து விட்டு, "விவேகானந்தரின் உயிர்த்துடிப்பானப் பேச்சுகளுக்கு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முதலில் ஆதரவளித்தவர்கள் ஆங்கிலம் படித்த மேல்தட்டுவர்க்கம் முக்கியமாகத் திகழ்ந்தது'' என்பதையும் சுட்டிக் காட்டியுள்ளார்.

சேர். பொன்னம்பலம் ராமனாதன் அமெரிக்காவில் சொற்பொழிவாற்றிய பொழுது, சுவாமி விவேகானந்தர் நெறியிலே நின்றார் என்று கூறப்படுகின்றது. சுவாமிஜி மேலை நாடுகளில் செய்த இந்து சமயப் பணியின் அற்புத விளைவுகளை நேரில் கண்டு, அவ்வழியைப் பின்பற்ற வேண்டும் என்றும் பொன்னம்பலம் ராமநாதன் விரும்பியதாகவும் தெரிகின்றது.

இலங்கையில் சுவாமி விவேகானந்தர் வழியைப் பின்பற்றி இராமகிருஷ்ணர் இயக்கம் செழித்திடப்பாடுபட்டவர் சுவாமி விபுலானந்தர் (1892-1947) என்பதும் இங்கு நினைவு கூர்தற்குரியது. இதன் விவரத்தை ''சுவாமி விபுலானந்தர்'' எனும் நூலில் (ஆசிரியர், பெ. சு. மணி, சுவாமி விபுலானந்தர். நூற்றாண்டு விழா வெளியீடு, 1992) அறியலாம்.

சுவாமிஜியின் இலங்கை விஜயத்தின் விளைவாக நிகழ்ந்த அற்புதங்களில் ஒன்று, சுவாமிஜியின் சொற்பொழிவு ஒன்று நிகழ்ந்த சில மாதங்களக்குள்ளேயே (1897) அது தமிழாக்கம் செய்யப்பெற்று கொக்கு வெள்ளை என்னும் ஊரில் வெளியிடப்பட்டதாகும். இந்தச் சாதனையை நிகழ்த்தியவர் ஏ. முத்துத்தம்பிபிள்ளை (1858 - 1917) என்பவராவர் அவர் வெளியிட்ட நூலின் பெயர், 'சுவாமி விவேகானந்தர் பிரசங்கம்''. கொழும்பு நகரில் சுவாமிஜி, 'தியோசபி' பற்றிய ஆற்றியச் சொற்பொழிவின் தமிழாக்கம், இந்த நூலாகும். இந்த நூலிற்கு மற்றொரு வரலாற்றுச் சிறப்புண்டு; அதாவது சுவாமிஜியின் முதல் மொழிபெயர்ப்பாகவும், தமிழாக்கமாகவும் வெளிவந்த நூல், இந்த நூல்.

## இலங்கை அனுபவம் பற்றி சுவாமிஜி

1900 ஆம் ஆண்டில் சுவாமிஜி இரண்டாவது முறையாக மேலைநாடுகளிற் பயணம் செய்தபொழுது, தமது நினைவுக் குறிப்புக்களைப் பற்றி சகோதரத் துறவியும், கல்கத்தா 'உத்போதன்' எனும் வங்கமொழி இதழின் ஆசிரியருமான சுவாமி திரிகுணாதீதா அவர்களுக்கு வங்க மொழியில் எழுதியனுப்பினார் : 'உத்போத'னில் வெளி வந்த நினைவுக்குறிப்புகளின் ஆங்கில மொழியாக்கத்திற்கு "Memoris of European Travel" எனப் பெயரிடப்பட்டது. இதில் சுவாமிஜி தமது இலங்கை அனுபவம் பற்றிக் குறிப்பிட்டுள்ளார். இலங்கை இந்துக்களைக் குறித்து சுவாமிஜி எழுதியதாவது :

''இங்கு எல்லா இந்து வகுப்பினரும் ஒன்று கலந்து ஒரே இனமாய் வாழ்கின்றனர். இவர்கள் பஞ்சாபிய ஜாட்டுகளைப்போல எந்த ஜாதிப்பெண்ணையும் (ஐரோப்பியப் பெண் உட்பட) மணந்து கொள்ளலாம். ஒருவன் கோயிலுக்குச் சென்று புனிதமான முப்பட்டைத் திருநீற்றை நெற்றியில் அணிந்து, 'சிவசிவா' என்று கூறினால் உடனே இந்துவாக மாறிவிடுகிறான். கணவன் இந்துவாகவும் மனைவி கிறிஸ்துவ மதத்தினளாகவும் இருக்கலாம். ஒரு கிறிஸ்தவன் நெற்றியில் வெண்ணீற்றைப் பூசி, 'நம பார்வதி பதயே !' என்றதும் இந்துவாக மாறிவிடுகிறான். இதுதான் கிறிஸ்தவப் பாதிரிகளுக்கு மிகுந்த கோபமூட்டுகிறது. இலங்கைக்கு நீங்கள் வந்ததிலிருந்து அநேக கிறிஸ்தவர்கள் நெற்றியில் நீறணிந்து 'சிவனே போற்றி' என்று கூறித் தங்கள் பழைய இந்து மதத்திற்குச் சென்று விட்டார்கள்.

''இங்கு அத்துவைதமும், வீர சைவமும் அனுஷ்டிக்கப்படுகின்றன. இந்து என்ற பெயருக்குப் பதில் சைவன் எனக் கூறவேண்டும். ஸ்ரீ சைதன்னிய தேவர் வங்காளத்திலே பரவச் செய்த இறைவனின் திவ்விய நாம சங்கீர்த்தனமும் நடனமும் ஆதியிலே தென்னாட்டிலே தமிழர்களிடையே பிறந்தன. இலங்கையில் வழங்கும் தமிழ் சுத்தமானத் தமிழாகும். மதமும் கலப்பற்ற தமிழ் மதமேயாகும். பல்லாயிரக்கணக்கான மக்கள் பரவசமாய் ஒருங்கே மறைநூல்களை ஓதுதலும், சிவனைப் பரவி பாடுதலும் ஆயிரக் கணக்கான தாள வாத்தியங்களின் முழக்கமும் இனிய ஓசையும் சிவந்த கண்களும் உயர்ந்த ஆகிருதியும் கொண்ட தமிழர்கள் உடல் முழுவதும் நீறுபூசி, கழுத்திலே உருத்திராக்க மாலைகளணிந்து மெய்ம் மறந்து ஆடுவதும் ஆகிய இவற்றை நேரில் பாராமல் ஒருவரால் புரிந்துக் கொள்ள இயலாது.''

சுவாமிஜி, மிகச் சரியாகவே இலங்கை இந்துக்களைப் புரிந்துக் கொண்டார் என்பதை மேலே காண்கின்றோம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# Foot Prints On Our Shores

PROF. C. SURIYAKUMARAN
*Visiting Professor: London School of Economics and Political Science*

In responding to the request for a modest contribution from me, such as it must be, to the Commemoration Volume being produced by the Vivekananda Society of Sri Lanka to mark the completion of the year long celebrations and observances on Swami Vivekananda's mission of love to Sri Lanka in 1987, I have chosen not to take the tempting role of repeating a calendar of details, from his arrival at Colombo by Boat, and his journeys in this Island, up to his final return home to India.

I have chosen rather to think, together with many leaders who must be more profound and versed in these matters, of his visit by itself, and of its significance in the time that he chose to come.

Swami Vivekananda arrived, of course, in the halo of his glory at the famous Parliament of World Religions held at Chicago in 1893, at which he left behind not only the loftiness of a thinking that the west had never seriously known up to then, but as well the dynamism and spiritualism of a man, the like of whom that assembly never anticipated until he came upon them.

It needed therefore nor advertisement, not advance alarums, for the people of Ceylon as it was known then, to receive Swami Vivekananda on that memorable occasion at the Jetty of Colombo, in the way that they did. What was perhaps significant was that by some divine coincidence or otherwise, Swami Vivekananda's arrival coincided with a deep thirst in the Country for strength and succour, amidst the de-culturisation, alienation and patronage that the foreign Colonial Power had shown in its estimation of the local People, a trait made more acute perhaps, by even some of our indigenous so-called educated elites espousing Western modes, and being either openly contemptuous of, or patronisingly indulgent with, the ancient and eternal cultural and spiritual orientations, to which the People of this Country, over millennia, had been heirs.

It was in this context, and in that redoubtable presence of an undisputed spiritual leader - undisputed now with the West, as much as revered in the East - that Swami Vivekananda, upon his arrival, signified a sea change.

That, more than any other single phenomenon, perhaps explained the undoubted enthusiasm, even today, for a person and event which occurred so long ago.

But there was also another significance of Swami Vivekananda, when he came here, which it seems most of our brethren, while perhaps aware in their subconscious, have not adequately noted, or recognised. This was the context of our fellow Buddhist clergy and laity, 'fellow religionists with Hindus', who had indeed been at the receiving end of enormous buffetings at the hands of Colonial and de-cultured indigenous leaders, threatening their very credibility and their future. The later renaissance and events, of both Buddhist and Hindu leaders in the country were indeed born of these syndromes and sense of crisis, for their identity, integrity and continuity.

It may also not be often realised, amidst our other contemporary distractions,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

not only that the Tamils led once in a Buddhist heritage and Buddhist thinking, both in India and in this Country, but that even up to today, the inter-twinings of the Hindu-Buddhist heritage in culture, religious observances and voluntary inter-change have been continuous, deeply kindred, immersed in common traditions, and inalienable to each other.

When the whole country such as it was then, therefore, rose to a man, either to welcome Swami Vivekananda directly where they could, or to recognise and to look up to him where they could not meet him, it was also these strands of bond and kinship that filled that event with the grandeur and the significance that it had.

It was in such a background then, that it was left to Swami Vivekananda to rise to the occasion, to become part of the people of the Country, and to leave behind him his imprints, not simply on the sands that he trod, but on the sands of time and in the memories and institutions that he procreated by his simple, brief visit.

Shri Ramakrishna is the name by which the noble works of Vivekananda are enshrined in the institutions and services that the Mission, under the same name, developed over the long decades in the country. But it was Swami Vivekananda-typically the original 'rebellious disciple' of Shri Ramakrishna whom the latter embraced into his fold by accepting his rebellion ! - who inspired the work of the Ramakrishna Mission, here and in many lands.

These continue. And Swami Vivekananda continues to be their inspiration - in the name of Shri Ramakrishna - in a happy blending and an example for us as for others, contemporarily or in the world to come.

At the dawn of a new Century and a new Millennium that is before us, the lives and works of such as Shri Ramakrishna and Swami Vivekananda must undoubtedly be reckoned amongst our foundation for that future. Swami Vivekananda, Mystic and Swami, was the Karma Yogi par excellence - his feet on his native Soil, his heart across the world, and his head in the Infinite - a model, a difficult one indeed to say the least, for others who may chose to serve their country, or those of others.

It is perhaps fitting, beyond the observances that have now been completed this past year, that this spirituality, expressed in worldly service for others without reward, he pursued in the Society that here bears his name, and with the Light of the Mission that enshrines the legacy of Shri Ramakrishna.

The Youth of this country, the Elders of this country and the Leaders of this country, stand in need of these benign endeavours. The first, with effort, will respond; the second will be thankful ; the third holds the key to them both !



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வீரனாக எழுந்து நில் !

சுவாமி கமலாத்மானந்தர்



சுவாமி விவேகானந்தர் தமிழ்நாட்டில் தமது புகழ் பெற்ற 11 சொற்பொழிவுகளை நிகழ்த்தியிருக்கிறார். அவற்றில் அவர் கும்பகோணத்தில் நிகழ்த்திய 'வேதாந்தம் உலகிற்கு வழங்கிய செய்தி' என்ற சொற்பொழிவு நமது கவனத்தை ஈர்க்கிறது.

அந்தச் சொற்பொழிவில்தான் அவர், "Arise, awake and stop not till the goal is reached" எழுந்து கொள்ளுங்கள், விழித்துக் கொள்ளுங்கள், இலட்சியத்தை அடையும் வரையில் நில்லாமல் செல்லுங்கள் !" என்று குறிப்பிட்டார்.

நம்மில் பலர் தமோ குணத்தில் ஆழ்ந்திருக்கிறோம். இந்தத் தமோ குணத்தை உதறித் தள்ளிவிட்டு எழுந்து வரும்படி விவேகானந்தர் நம்மை அறைகூவி அழைக்கிறார்.

நம்மில் பலர் சோர்ந்து போய் செயலற்று சும்மா அமர்ந்திருக்கிறோம். விவேகானந்தர் நம்மை வீறு கொண்டெழுந்து சாதனை மயமான வீரச் செயலில் ஈடுபடும்படி தூண்டுகிறார்.

நம்மில் பலர் உறக்க நிலையில், அறியாமை நிலையில் இருக்கிறோம். விவேகானந்தர் நம்மை விழித்தெழும்படியும், அறியாமையிலிருந்து விடுபடும்படியும் அறைகூவல் விடுக்கிறார்.

வாழ்க்கையில் நாம் ஒவ்வொருவரும், 'நான் இந்த இலட்சியத்தை அடைந்தே தீருவேன்' என்று ஏதேனும் ஓர் உயர்ந்த குறிக்கோளை – உன்னதமான இலட்சியத்தைக் கட்டாயம் கொண்டிருக்க வேண்டும்.

நம்மில் பலரும் உயர்ந்த இலட்சியம் என்று எதுவும் இல்லாமல் பெயரளவில் ஏதோ வாழ்ந்து கொண்டிருக்கிறோம்; ஏதோ காலத்தைக் கழித்துக் கொண்டிருக்கிறோம்; வாழ்க்கையை வீணாக்கிக் கொண்டிருக்கிறோம்; வாழ்க்கையை விரயமாக்கிக் கொண்டிருக்கிறோம்.

இப்படிப்பட்ட வாழ்க்கை அர்த்தமற்றதாக, உயிர்ப்பு இல்லாததாக, சுவை இல்லாததாக. புல் பூண்டு வாழ்க்கையாக, Vegetable வாழ்க்கையாக இருக்கும்.

இவ்விதம் நாம் பயனற்ற வாழ்க்கை வாழ்வதைக் கண்டு சுவாமி விவேகானந்தர் மனம் வெதும்பியிருக்கிறார்.

அவர் கூறுகிறார் :

"நமது நாட்டின் பொன்னான எதிர்காலமே உங்களைத்தான் சார்ந்திருக்கிறது. நாட்டின் வருங்கால நம்பிக்கைகள் உங்களையே எதிர்நோக்கியுள்ளன. எனவே செயலற்று வாழ்க்கையை வீணாகக் கழித்துக் கொண்டிருக்கிற உங்களைப் பார்க்கும்போது என் மனம் சொல்ல முடியாத வேதனைப்படுகிறது. உழைப்பில் – உயரிய உழைப்பில் – ஈடுபடுவீர்களாக ! இதில் தாமதம் சிறிதும் வேண்டாம்."

"துரதிருஷ்டவசமாக மக்களில் மிகப் பெரும்பாலானவர்கள், எந்தவிதமான ஓர் உயர்ந்த இலட்சியமும் இல்லாமல் இருளடைந்த வாழ்க்கையில் தட்டுத்தடுமாறிச் சென்று கொண்டிருக்கிறார்கள். உயர்ந்த இலட்சியம் கொண்ட மனிதன் ஒருவன் ஆயிரம் தவறுகள் செய்தால், இலட்சியம் ஒன்றும் இல்லாமல் வாழ்பவன் ஐம்பதாயிரம் தவறுகளைச் செய்வான் என்று நான் உறுதியாகச் சொல்வேன். எனவே உயர்ந்த ஓர் லட்சியத்தைக் கொண்டிருப்பது மேலானது.

"ஒரு கருத்தை எடுத்துக் கொள். அந்த ஒரு கருத்தையே உனது வாழ்க்கை மயமாக்கு. அதையே கனவு காண். அந்தக் கருத்தை ஒட்டியே வாழ்ந்து வா. மூளை, தசை, நரம்புகள், உன் உடலின் ஒவ்வொரு பாகத்திலும் அந்த ஒரு கருத்தே நிறைந்திருக்கட்டும். அந்த நிலையில் மற்ற எல்லாக் கருத்துக்களையும் தவிர்த்துவிடு. வெற்றிக்கு இதுதான் வழி. நாம் உண்மையிலேயே பாக்கியவான்களாக விரும்பினால் –



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மற்றவர்களையும் பாக்கியவான்களாக்க விரும்பினால் – நம்முள் நாம் மேலும் ஆழ்ந்து சென்றாக வேண்டும்.

"வெற்றி பெறுவதற்கு நிறைந்த விடாமுயற்சியும், பெரும் மனவுறுதியையும் நீங்கள் கொண்டிருக்க வேண்டும். விடாமுயற்சி பெற்றவன், 'சமுத்திரத்தையே குடித்து விடுவேன்', 'எனது சங்கல்பத்தால் மலைகள் நொறுங்கி விழுந்தாக வேண்டும்' என்று சொல்கிறான். அத்தகைய ஆற்றலை, அத்தகைய மனஉறுதியை நீ பெற்றிரு. கடுமையாக உழை, உனது குறிக்கோளை நீ அடைவாய்.

"வா, வந்து ஏதாயினும் வீரச்செயலைச் செய்."

"அளவற்ற ஆற்றல், பெரும் ஊக்கம், அளவு கடந்த அஞ்சாமை, அளவில்லாத பொறுமை – இவையே நமக்குத் தேவை. இவை இருந்தால் மட்டுமே மகத்தான காரியங்களை நம்மால் சாதிக்க முடியும்.

"ஒரு நல்ல இலட்சியத்துடன் முறையான வழியைக் கைக்கொண்டு தைரியத்துடன் வீரனாக விளங்கு."

"எழுந்திருங்கள் ! ஆண்மையுடன் பிறருக்குத் தொண்டு புரிவதில் ஈடுபடுங்கள்."

"வாழ்க்கை என்னும் போர்க்களத்தில் அஞ்சாமல் எதிர்த்து நிற்கும் வீரன் ஒருவனுடைய மனநிலையே நமக்கு இப்போது வேண்டும்."

"மேலை நாட்டு விஞ்ஞானத்தோடு இணைந்த வேதாந்தமும், பிரம்மச்சரியமும், வாழ்க்கையின் அடிப்படை இலட்சியங்களாக நமக்குத் தேவைப்படுகின்றன."

"தியாகமும் தொண்டும் தான் இந்தியாவின் இலட்சியங்கள்" என்கிறார் சுவாமி விவேகானந்தர்.

"அர்ஜுனா, பேடியின் இயல்பை அடையாதே ! அது உனக்குச் சிறிதும் பொருந்தாது. அற்பமான மனத்தளர்ச்சியை விட்டு எழுந்திரு" என்ற பகவத் கீதையின் (2–3) கருத்து விவேகானந்தருக்கு மிகவும் பிடித்த ஒரு கருத்தாகும்.

"தன்னைத் தன்னாலேயே உயர்த்திக் கொள்ள வேண்டும்; தன்னைத் தாழ்த்திக் கொள்வது கூடாது. ஏனென்றால் நிச்சயமாக தானே தனக்கு நண்பன்; தானே தனக்குப் பகைவன்" என்று பகவத் கீதை (6–5) கூறுகிறது.

இறைவன் நம்மில் எவரையும் வீணாகப் படைக்கவில்லை. நம் ஒவ்வொருவருடைய வாழ்க்கையும் அர்த்தமுள்ள வாழ்க்கையாக அமைய வேண்டும் என்றே இறைவன் விரும்புகிறான். அவ்விதம் வாழ்வதற்கு உரிய ஆற்றலையும் அவன் நமக்கு வழங்கியே இருக்கிறான். அந்த ஆற்றல் என்ன என்பதை நம்மை நாமே ஆராய்ந்து பார்த்து புரிந்து கொள்ளவேண்டும். அதை நாம் புரிந்து கொண்டால் உலகில் நமது பணி என்ன என்பது நமக்குத் தெளிவாகி விடும். பிறகு நமது வாழ்க்கை சரியான அந்த இலக்கை நோக்கி விரைந்து செல்லும்.

நம் ஒவ்வொருவரிடம் குறிப்பிடத்தக்க ஏதேனும் ஒரு சிறப்பியல்பு இருக்கும். நம் ஒவ்வொருவரிடமும் குறிப்பிடத்தக்க ஏதேனும் ஒரு திறமை இருக்கும்.

இறைவன் நமக்கு வரப்பிரசாதமாக வழங்கிய, நமக்குள் புதைந்திருக்கும் அந்த ஆற்றல் – அந்தச் சிறப்பியல்பு – அந்தத் திறமை என்ன – என்பதை நாம் முதலில் கண்டு பிடிக்க வேண்டும்.

பிறகு அதை வெளிப்படுத்தும் முயற்சியில் அதாவது, பணியில், நமது முழுக் கவனத்தையும், முழுச் சிரத்தையையும் செலுத்த வேண்டும். அந்தப் பணியில் அக்கறையும், நியாயமான பயபக்தியும் நமக்கு இருக்க வேண்டும்.

இப்படி நாம் வாழ்ந்தால், "பசி நோக்கார், கண் துஞ்சார், கருமமே கண்ணாயினார்" என்ற நிலையில் நாம் இருப்போம்; 'செய்யும் தொழிலே தெய்வம்' என்று இருப்போம்; நாம் பணி புரியும் இடமே நமக்குக் கோவிலாக இருக்கும்.

"Arise, awake and stop not till goal is reached - எழுந்து கொள்ளுங்கள், விழித்துக் கொள்ளுங்கள், இலட்சியத்தை அடையும் வரையில் நில்லாமல் செல்லுங்கள்" என்ற விவேகானந்தரின் அறிவுரையை இன்றைய இளைஞர்கள் தங்கள் வாழ்க்கையை வழி நடத்திச் செல்லும் மூலமந்திரமாகவும், தாரகமந்திரமாகவும், மகாவாக்கியமாகவும் கொள்ள வேண்டும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# Swami Vivekananda's Visit To Ceylon

**By. M. Nagarathinam**
*Chairman of Committees-Vivekananda Society Colombo.*

Swami Vivekananda after his memorable mission of disseminating the devine philosophy of India in America and the West on his way home landed at Colombo on the 15th day of January 1897 with his Western disciples.

Ceylon was indeed privileged, to be the first Eastern Country to accord a hearty welcome to Swami, He was garlanded by the late. Hon. P. Cumaraswamy and Hon. P. Arunachalam the legislative councillors in the presence of a vast crowd. A carriage drawn by two horses took Swami in procession through Barnes Place to a hall where an address of welcome was presented to him by the Hindu community of Colombo.

On the next day evening Swami made a public lecture under the heading "Punya Boomi" before a mammoth crowd in the floral hall at Colombo. In the course of his lecture Swami pronounced "if there is a land called "Punya Boomi" it is mother India; If you are a real lover of Siva you must see him in every being and in every thing. All knee bending towards Kabba or kneeling in a Christian Church are kneeling to him whether they know or not, to whatever form or name they are offered all those flowers are laid at his feet for he is the one lord of all, one soul of all souls. On the 17th Sunday Morning Swami gave dharshan to all devotees and in the evening visited the Ponnambalam Vaneesara Swami Temple.

On the 19th, Swami left for Kandy by train where he was given a rousing welcome, thereafter Swami left for Anuradhapura where he delivered a speech in front of the Bodhi Tree under the heading "Worship".

The following morning he proceeded to Jaffna, The enthusiasm of the Jaffna people were so high that the Swami was met at Elephant pass and was taken in procession in a horse carriage, along the road decorated with Thoranams, Poorna Kumbas and Traditional Oil Lamps to Vannarpannai where a welcome address was presented to him. It read "We take this opportunity to express our deep gratitude for carrying the light of truth as revealed in the Vedas to the Parliament of Religions, in disseminating the truth of philosophy of India in America Europe and England and thereby bring the West to closer touch with the East.

In the following morning Swami delivered his historic speech on Vedantism at Jaffna Hindu College hall where he observed "We cannot understand God without knowing the soul, the external workings do not teach us anything about the beyond about the infinite. It is only the internal that can do so. Therefore by analysis of human soul alone we can understand God. With love or Bakthi worshipping God, by loving all beings as a temple of god, will come knowledge, ignorance will disappear, the bonds will break, and the soul will be free"

The Atman is not the mind nor the body, it goes through births and deaths accompanied by the mind (the Sukmashareera) When the time comes it has attained all knowledge, and manifested itself to perfection; this going from birth to birth ceases for it. One can work out ones good karma in heaven, or bad karma in hell, but one must be born as a human being on earth for one to attain to freedom of ones soul.

Speaking of god the Swami said "In our scriptures there are two ideas of god; the one the personal and the other the impersonal. Personal god is creator preserver and destructor of everything and who is separate from the soul. The liberation consists in the soul coming near to him and living with him. What are our relations with the impersonal god? We are he ; He and we are one. Everyone is the manifestation of that impersonal, the basis of all beings. The liberation comes in knowing our unity with this wonderful impersonality.

Swami's 11 days visit to Ceylon kindled a spiritual fire in the hearts of the young and old alike which Subsequently grew to be a spiritual beacon under the Ramakrishna Mission Swamis.

To, commemorate the centenary of Swami Vivekananda's visit to Ceylon a 9 foot bronze statue was unveiled at the Vivekananda Society premises Kotahena on 15th January 1997 by Srimath Swami Renganathanandaji Maharaj, Vice President of Ramakrishna Mission Calcutta.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# சைவ மண்ணில் ஒரு வேதாந்தி

கலாகீர்த்தி, டாக்டர். பொன். பூலோகசிங்கம்.

சைவ சமய நூல்களைத் தேடிப் பிடித்து பதிப்பித்து, அவற்றிற்கு உரைகண்டு, அவற்றிலே கூறப்பெற்ற சமயவுண்மைகளை, எளிமையுடன், எழுத்தாலும் பேச்சாலும், அறிமுகஞ் செய்து, சைவதூஷணங்களைப் பரிகரித்து, சைவத்திற் புகுந்துவிட்ட புல்லுருவிகளைக் களைந்து, சைவசமய வளர்ச்சிக்கு வேண்டிய நிறுவனங்களின் தோற்றத்திற்குக் காலாகி, ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலர் (1822–1879) சைவ சமயத்தினைப் புறச் சமயிகளின் மூர்க்கமான பிரசாரத்தின் முன்னே, தமிழ் மண்ணிலே நிலைநிறுத்த வேண்டியிருந்தது. அடை காக்கும் கோழி தன் குஞ்சுகளை எவ்வளவு ஆவேசத்துடன் பாதுகாக்க முற்படுமோ அவ்விதமே நாவலர்பெருமான் அந்நிய மதப்பரம்பலின் முன்னே சைவத்தினைப் பாதுகாக்க முற்பட்டார். அதனால் அவர் வழி கடினமானதாகவும் ஆட்சேபத்திற்கு இடம் தரத்தக்கதாகவும் அமையவேண்டியதாய் இருந்தது. சுய சிந்தனைக்கு இடமளித்த நாவலர் பெருமானுக்குச் சமயப் போக்கிலே காலமோ சமயமோ இருக்கவில்லை. கிறித்தவப் பணி அவருக்கு முன் மாதிரியாக அமைந்தது. அதனாலேயே அவர் சைவ பாரம்பரியத்தினைக் கட்டிக் காக்க முடிந்தது.

சிவாகமங்களே சைவசமயத்தின் மூலாதாரமாக அமைந்ததால், நாவலர் பெருமான் சிவாகமவுணர்ச்சி மிக்கவராய், அதன் தலைசிறந்த பிரசாரகராய் விளங்கினார். வேதத்தினை அவர் சைவசமயத்தின் பிரமாணமாகக் கொள்ளவில்லை. வேத வழக்கு வேறு சைவவழக்கு வேறு என்பதை அவர் பெரியபுராண சூசனத்திலே தெளிவாக உணர்த்தியுள்ளார்.

சைவசமயிகளுக்கு ஏற்பட்டிருந்த மயக்கங்களைப் போக்கி, அவர்களிடையே சைவசமய அறிவும் தெளிவும் ஏற்படச் செய்து, ஈழத்திலே சைவசமயத்தினைத் துலாம்பரமாக நிலைநிறுத்திக் காட்டியவர் நாவலர் பெருமான். 1846ஆம் ஆண்டு முதல் 1879ஆம் ஆண்டுவரை, மூன்று தசாப் தங்களுக்குச் சற்று மேலாக, அவர் புரிந்த சைவப் பிரசாரணத்தினால் ஈழத்தின் மண்ணிலே சைவபாரம்பரியம் நின்று நிலைக்கலாயிற்று.

நாவலர் பெருமான் 1879ஆம் ஆண்டு ஆடியிலே சிவபரிபூரணம் எய்தினார். அக்காலை (சேர்.) பொன்னம்பலம் இராமநாதன், The Champion reformer of the Hindus, என்று அவர்களைச் சட்டசபையிலே விதந்து போற்றினார்.

நாவலர் பெருமான் நிலைநிறுத்திய சைவபாரம்பரியத்தின் நிலைக்களமான மண்ணிலே 1897ஆம் ஆண்டு ஜனவரி மாதம் 24ஆம் திகதி சுவாமி விவேகானந்தர் கால் வைத்தார். அவர் கொழும்பிலிருந்து கண்டி, மாத்தளை, அநுராதபுரம், வவுனியா ஊடாக யாழ்ப்பாணம் போய்ச் சேர்ந்தார்.

நாவலர் பரம்பரையில் அன்று ஈழத்திலே சிறப்பிடம் வகித்துக் கொண்டிருந்தவர்கள் சித. மு. பசுபதிச் செட்டியார் (1856–1906), வித்துவசிரோமணி ச. பொன்னம்பலபிள்ளை (1837–1897), மனேஜர் த. கைலாசபிள்ளை (1855–1919), மா. வைத்தியலிங்க பிள்ளை, (–1902) மாதகல் சு. ஏரம்பையர் (1848–1914), சுன்னாகம் அ. குமாரசுவாமிப் புலவர் (1854–1922) முதலியோராவர். நிருவாண தீட்சை பெற்றுச் சிவபூசை எழுந்தருளச் செய்து விதிப்படி நைட்டிகமாக இருந்த பசுபதிச் செட்டியார், நாவலர் பெருமானின் எண்ணங்களை கருத்துக்களை செயற்படுத்த முன்னின்று உழைத்தவர். சைவ (சமய) பரிபாலன சபை, இந்து உயர்தர படசாலை, திருக்கேதீச்சரப் புனருத்தாரணம் என்பனவற்றிலே அவர் புரிந்த பணிகளைச் சைவ உலகம் போற்றி நிற்கின்றது. வித்துவசிரோமணி பொன்னம்பலபிள்ளை தம் தாய் மாமனார் நாவலரவர்களைப் போன்று கைம்மாறு வேண்டாது கல்வி கற்பித்து நாவலர் மரபிற்குச் சிறப்புத் தேடித் தந்தவர். நாவலரவர்களின் பெறாமகன் த. கைலாசபிள்ளை, நாவலர் பெருமையைக் குறைத்து மதிப்பிடும் முயற்சிகளை வன்மையாக எதிர்த்தும் நாவலர் மரபைப் பேணும் முறையை வளர்த்தும் செயற்பட்டவர். வண்ணைச் சைவப்பிரகாச வித்தியாசாலையிலே 1867 முதல் 1902 வரை முதலுபாத்தியாயராகத் திகழ்ந்து சைவக் கல்வி மரபிற்கு உயர்ச்சியும் ஊக்கமும் தந்தவர் மா. வைத்தியலிங்கம்பிள்ளை. நிருவாண தீட்சை பெற்று சிவபூசை எழுந்தருளப் பண்ணிக் கொண்டு, அதனைக் கிரமமாகச் செய்து வந்த மாதகல் ஏரம்பையர் கீரிமலை வித்தியாசாலையிலும் குருவகுப்பிலும் சிவப்பிரசங்களிலும் பேரெடுத்தவர் நாவலரவர்களின் காலத்திற்குப் பின்பு வண்ணை சைவப்பிரகாச வித்தியாசாலையை உயர்ந்த கல்விப்பீடமாக உயர்த்திய பெருமையில் சுன்னாகம் குமாரசுவாமிப் புலவருக்கு முக்கிய பங்குண்டு.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சைவ(சமய) பரிபாலனசபை 1888இலே தோற்றம் பெற்றுத் தன் பெயருக்கேற்ப சைவபரிபாலனத்திற்கு வேண்டிய வழிதுறைகளை ஆராய்ந்து அவ்வழியிலே சிறப்பாகப் பணிசெய்து கொண்டிருந்தது. தனி மனித சக்தியாக முன்னர் ஒருவர் செலுத்திய தாக்கத்தினை நிறுவனரீதியிலே சைவ பரிபாலனசபை தொடர்ந்து செலுத்தக் கூடியதாக இருந்தது.

சைவசமயிகளின் கருத்துகளையும் விடயங்களையும் பொதுமக்களுக்கு வெளியிட முன்பு இலங்கை நேசன் (1875) ஈழத்திலே பிரசுரமாகியது. (சைவ) உதயபானு (1880), சைவாபிமானி (1884), இந்து சாதனம் அல்லது The Hindu organ (1889) என்பன நாவலரவர்களுக்குப் பின் பத்தொன்பதாம் நூற்றாண்டின் கடைசித் தசாப்தங்களிலே வெளிவந்து கொண்டிருந்தன.

வண்ணைச் சைவப்பிரகாச வித்தியாசாலை (1848) போன்ற வித்தியாசாலைகள் மட்டுமன்றி இந்து உயர்தர பாடசாலை (Native town high School, 1887) பின்பு யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி (1889), சுழிபுரம் விக்டோரியா கல்லூரி போன்றவை சைவப் பிள்ளைகளின் மதாநுசாரச் சூழலில் இடைநிலைக் கல்வித் தாபனங்களாகத் தோன்றி அருஞ்சேவை ஆற்றிக் கொண்டிருந்தன.

அநாதரவான நிலையிலிருந்து சைவசமயிகள் தம் மதாநுசாரங்களையும் பாரம்பரியங்களையும் போற்றிப் பேணித் தம் மண்ணிலே கிளைவிட்டு நிற்கத் தொடங்கிய கட்டத்திலே சுவாமி விவேகானந்தர் "கோர்ச்" மூலம் யாழ்ப்பாணம் 1897 ஜனவரியிலே போய்ச் சேர்ந்தார். நாவலர் மரபு ஆகமங்களுக்கு முதன்மை அளித்து, வேதங்களைப் பொதுநூல்கள் என ஒதுக்கிவிட்ட மரபு. அந்த மரபின் செல்வாக்கு உயிர்ப்புடன் நிலவிய மண்ணிலே அகில உலக ஒற்றுமைக்கு அடிப்படையாக வேதாந்தத்தினைப் பிரசாரம் செய்த சுவாமி விவேகானந்தர் போய் இறங்கினார். சைவ மண்ணிலே அவருக்குப் பெரு வரவேற்புக் காத்திருந்தது.

யாழ்ப்பாணத்திலே இந்து சாதனம் (The Hnidu Organ) அதற்குரியசூழலை ஏற்கனவே உருவாக்கியிருந்தது. சுவாமி விவேகானந்தர் வெளிநாடுகளிலே ஆற்றிய பேச்சுகளையும் அப்பொழுது அவர் பெருமைப்படுத்தப் பெற்ற வாழ்வினையும் அது தெளிவாக எடுத்துக் கூறிக் கொண்டே வந்தது. அத்தோடு புறச்சமயிகள் அவருக்கு எதிராக எடுத்த நிலையையும் அது வெகுவாகக் கண்டித்து வந்தது. இந்திய பாரம்பரியத்தின் பெருமைகளை எடுத்துக் காட்டிய தலைமகனைப் புறச்சமயிகள் இழித்துக் கூறியதால் இந்து சாதனம் அவர்களை விட்டு வைக்கவில்லை. யாழ்ப்பாண கிறித்தவப் பத்திரிகை உதயதாரகை சுவாமி விவேகானந்தருக்கு எதிராக அன்றெழுதிய கண்டனங்கள், எதிர்முகமாக உதவின; சுதேசிய மதாநுசாரிகள் அவரைக் கனம்பண்ணிக் கௌரவிக்கச் செய்தன. யாழ்ப்பாண மக்களுக்குச் சுவாமி விவேகானந்தர் கீழைத்தேச நாகரித்தின் பிரதிநிதியாக உயர்ந்து நின்றார்.

சுவாமி விவேகானந்தர் சமய தத்துவசுழற்சியிலே சிக்கி விடவில்லை. அவர் தத்துவம் இந்திய சிந்தனைகளின் ஒருமைப்பாடும் தொன்மையும் அவையுணர்த்தும் தேசியமுமாகச் சிறப்புற்றது. தத்துவ விசாரம் அவருக்கு வேண்டியதாக இருக்கவில்லை. இந்திய தேசியத்தினைத் தட்டியெழுப்பும் கருவியாகச் சனாதன தர்மத்தினை அவர் கண்டு கொண்டார்.

எல்லாச் சமயங்களும் கடவுளை அடையும் மார்க்கங்களே என்றும், ஒன்றோடு ஒன்றை முரணாவைத்து நோக்க வேண்டிய அவசியமில்லை என்பதையும் சுவாமி விவேகானந்தர் தெளிவாக வற்புறுத்தினார். இதனால் சமயங்களிடையே பகைமையுணர்விற்கு இடமில்லை என்பது அவர் கருத்து. எல்லாச் சமயங்களும் அடிப்படையாகக் கொள்வது "மக்கள் சேவையே மகேசன் சேவை" என்னும் தாரகமந்திரமாகும். மக்களின் ஏழ்மையை அகற்றி அவர்களிடையே தன்னம்பிக்கையையும் விழிப்புணர்ச்சியையும் தூண்டுதல் இன்றியமையாதது என்பது சுவாமிகளின் கருத்து.

சுவாமி விவேகானந்தரின் போதனைகள் ஆங்கிலக் கல்வி பெற்ற புத்தி ஜீவிகளிடையே குறிப்பிடத்தக்க தாக்கத்தினை ஏற்படுத்தத்தவறவில்லை. தம்மைத் தனிமைப் படுத்திக் கொள்ளும் பழக்கவழக்கங்களை விடுத்து ஏனையவோடு இணைந்து போகும் நோக்கினை சுவாமிகள் வற்புறுத்தியபோது அதனை ஆதரிக்கும் மனோபாவம் அவர்களுக்கு ஏற்பட்டது. சமயத்திலும் சமயப் பழக்க வழக்கங்களிலும் நெறிபிறழா விதிமுறைகளை விடுத்து பின்பற்ற இலகுவான நெறிமுறைகளை தழுவும் கருத்தினை ஏற்பதற்கும் சுவாமிகளின் போதனைகள் காலாயின.

சைவசித்தாந்தத்தின் சுருக்கத்தினை ஆங்கிலத்தில் எழுதிய முத்து குமாரசுவாமியவர்கள் பின்பு வேதாந்த சித்தாந்த அமைதி கொண்ட தாயுமான சுவாமிகளின் பாடல்களை ஆங்கிலத்தில் வழங்கினார். ஆறுமுக நாவலரின் பணிகளைச் சட்ட சபையிலே ஞாபகமூட்டிய பொன்னம்பலம் இராமநாதன் பின்பு பகவத் கீதையைத் தமிழிலே வழங்கினார்.

மரபு வழிநின்ற சைவ அறிஞர் வேதாந்தத்தினை ஏற்றுக் கொள்ளாவிட்டாலும் அதனை மாயாவிதம் என நிராகரிக்கும் மனோபாவத்தினை ஆறப்போட்டுக் கொண்டனர். இந்நூற்றாண்டிலே வேதாந்த மரபொன்று யாழ்ப்பாணத்திலே கால் கொள்ளும் சூழல் அதனால் உருவானது. ஆயினும் அம்மரபு சைவமண்ணிலே நின்று நீடிக்க முடியவில்லை.

பொதுவாகக் கூறின், சுவாமி விவேகானந்தருடைய போதனைகள் சைவரை வேதாந்தத்தினை அங்கீகரிக்க செய்யாவிடினும், அவர் தம் தீவிர தரத்தினைக் குறைக்கவும் நோக்கினை விரிவுபடுத்தவும் உதவியது எனலாம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சுவாமி விவேகானந்தரின்



# உலகப் பொதுமறைக் கருத்துக்கள்

செல்வி. க. தங்கேஸ்வரி, பி. ஏ. (தொல்) சிறப்பு.

"அனைத்து உள்ளங்களும்" ஏற்றுக் கொள்ளக் கூடிய ஒரு சமயத்தைக் காண விரும்புகிறேன். அது உண்மைத் தத்துவங்களாக, சமமான உணர்வுடையதாக சமமான அனுபூதியுடையதாக சமமான செயலூக்கம் உடையதாக அமைய வேண்டும். கடவுள் அருள் இத்தகைய சிந்தனையையுடைய மனிதர்களை உருவாக்கட்டும். அவர்கள் உள்ளங்களில், தத்துவம், அனுபூதி உணர்வு, உழைப்பு என்பவை மூலக் கூறுகளாக அமையப்பட்டும் :- இதுவே "எனது பரிபூரண மனிதன் பற்றிய லட்சியம்"

இவ்வாறு ஒரு முறை சுவாமி விவேகானந்தர் உரைத்தார்.

இத்தகைய ஒரு எண்ணம் சுவாமிகளின் இதயத்தில் தோன்றுவதற்குக் காரணம் எதுவாக இருக்கலாம் ? அவை–

(அ) சமயங்களுக்குள்ளே இருக்கும் அடிப்படை ஒற்றுமை.

(ஆ) அனுஷ்டான பேதங்களால் ஏற்படும் வன்முறைகள், யுத்தங்கள்.

(இ) மத பேதங்களால், சிதைந்து போகும் மனித நேயம்.

இவை மட்டுமல்ல, அனுஷ்டானங்கள் வெவ்வேறாக இருந்தாலும் அடிப்படையான தத்துவங்கள் ஒன்றாக இருந்தால், மத பேதங்களுக்கு இடமிருக்காது என அவர் கருதினார். இப்போதும் மதங்களுக்கிடையேயான அடிப்படைத் தத்துவங்கள் ஒன்றுதான். ஆனால் அதைப் புரிந்து கொள்ளும் மனப்பக்குவம் இன்னும் மனிதர்களிடம் ஏற்படவில்லை. அந்தப் புரிந்துணர்வை மக்களிடம் ஏற்படுத்தினால், உலகத்துக்குப் பொதுவான ஒரு சமயம் உதயமாகலாம் என அவர் நம்பினார். அதன் காரணமாகவே அவர் இத்தகைய சிந்தனைகளை வெளியிட்டார் எனலாம்.

வேதாந்தக் கொள்கைகள் :-

சுவாமிஜி ஏனைய சமயங்களை மதிக்கவும் அவற்றிடையே ஒரு பொதுத்தன்மையைக் காணவும் காரணமாக அமைந்தது, வேதாந்தக் கொள்கைகள் பற்றிய அவரது தெளிவாகும். வேதாந்தக் கொள்கைகள் பௌதீக அடிப்படையில் அமைந்தவை. இவை அனைவராலும் ஏற்றுக் கொள்ளக் கூடியவை என்பதற்குப் பின்வரும் காரணங்களை அவர் கூறுகிறார்.

★ இந்து மதம் தவிர்ந்த ஏனைய மதங்கள் யாவும், அவற்றை நிறுவியவர்கள் பெயரால், அவர்களுடைய வாழ்க்கையோடு சம்பந்தப்பட்டவைகளாக அமைந்துள்ளன.

★ மக்களை ஒன்றுபடுத்தி ஒரு சமயத்தின் கீழ் கொண்டு வருவதானால், அச்சமயம் அனுஷ்டானங்களை அடிப்படையாகக் கொள்ளாது, கொள்கைகள், கோட்பாடுகளை அடிப்படையாகக் கொள்ள வேண்டும்.

★ வேதாந்தம் என்பது இந்து சமயமல்ல. அது ஒரு தத்துவம் அது உலகெலாம் ஒப்புக் கொள்ளக் கூடிய கொள்கைகளை அடிப்படையாகக் கொண்டுள்ளது. அக் கொள்கைகள் தற்கால ஆய்வாளர்கள் காணும் விஞ்ஞான தத்துவங்ளை ஒத்திருக்கின்றன.

*(தமிழகத்தின் சுவாமி விவேகானந்தர் பெ. சு. மணி – பக்:19)*

மக்களை ஒரு மதத்தின் மூலம், ஒன்றுபடுத்துவதானால் அம்மதம், தத்துவங்களை ஆதாரமாகக் கொண்டு அமைய வேண்டும் தனிப்பட்ட மனித வாழ்வை அடிப்படையாகக் கொள்ளக் கூடாது. பெரியோரைப் போற்றலாம், அவதார புருஷர்களை இஷ்ட தெய்வமாகக் கொள்ளலாம். ஆனால் உண்மையான அடிப்படைத் தத்துவங்களை விட்டு விலகக் கூடாது.

புறவுலக ஆராய்ச்சி செய்து தற்கால விஞ்ஞானம் கூறும் உண்மைகள், வேதாந்த உண்மைகளை முற்றும் ஒத்திருக்கின்றன. வேதாந்தம் எல்லோருக்கும் ஏற்றதாக இருப்பதற்குக் காரணம் அது புத்தி பூர்வமாக இருப்பதாகும். வேதாந்தம் கூறும் இரு தத்துவங்கள் வருமாறு :-

★ மதங்கள் அனைத்தும் அடிப்படையில் ஒன்று.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

★ உலகில் உள்ள அனைத்துப் பொருட்களும், ஒரு மூலப் பொருளின் வெவ்வேறு தோற்றமே.

இதனையே இந்தியாவில் தோன்றிய மகாபுருஷர்கள் "உண்மை ஒன்றே. மக்கள் அதைப் பலவாறாகப் பார்க்கிறார்கள் என்று கூறியுள்ளார். இந்த வேதாந்தக் கொள்கைகளின் சாரம் உப நிடதங்களில் அடக்கமாகி உள்ளன.

## உபநிடத விளக்கம்

மேல் நாட்டவர்கள் அறிவுக்குப் பொறுத்தமானவற்றை மட்டுமே ஏற்றுக் கொள்வார்கள். தத்துவ வாதங்களையும், ஒழுக்க நெறிகளையும், தகுந்த காரணத்தோடு தான் ஏற்றுக் கொள்வார்கள்.

ஒரு மகான் எவ்வளவு பெருமைக்குரியவராக இருந்தாலும் அவர் சொல்கிறார் என்பதற்காக, அவர் கூற்றை அப்படியே ஏற்றுக் கொள்ள மாட்டார்கள். அவர் கூற்று தர்க்க ரீதியாக உண்மையின் அடிப்படையில் அமைந்தால் மட்டுமே ஏற்றுக் கொள்வார்கள். ஏன் எதற்காக என்ற கேள்விகளின் மூலமே உண்மையைத் தரிசிக்க முடியும் எனவே, உலகில் உள்ள எல்லாப் பொருட்களும், ஒரு மூலப் பொருளின் வெவ்வேறு தோற்றமே என்பதை விளங்கிக் கொள்வதற்கும், அனுபவவாயிலாக உணர்வதற்கும், வேதாந்ததமே ஏற்றதாக உள்ளது.

தன்னம்பிக்கையைத் தட்டி எழுப்பி, ஆன்மீகத்தின் மகிமையை உணரச் செய்வதற்கு அத்வைத வேதாந்தக் கோட்பாடுகள் அவசியமாகின்றன. அது எந்த மதப் பிரிவையும் சாராதது. வேதாந்தத்தைப் புரிந்து கொண்ட எல்லா தத்துவஞானிகளும் ஆன்மாவின் தூய்மையையும் ஆன்மீகத்தின் சக்தியையும் பூரணத்துவத்தையும் விளக்கமாக எடுத்துக் கூறியுள்ளார்கள்.

சாதாரண மனிதர்களுக்கு இந்த உண்மையைப் புரிந்து கொள்ள முடியாதபடி மனத்தின் அழுக்குகள் – காம, குரோத லோபமோக மத, மாற்சரியம் என்னும் திரைகள் அதை மறைத்திருக்கின்றன. மக்களில் எவ்வித பேதமுமின்றி, உயர்ந்தவர், தாழ்ந்தவர், வலியார், மெலியார், அறிஞன், மூடன் என்ற பேதமின்றி அனைவருள்ளும் நிறைந்திருப்பது ஆத்ம சொரூபம். தியான பயிற்சி மூலம் அதை உணரவும், மக்களை வழி நடத்தவும் முடியும். இவ்வாறு புனித நிலை அடைந்த மகான்கள் பலர் சாதி வேறுபாடின்றி அனுபூதிமான்களாக விளங்கியதை வரலாற்றில் நாம் பார்க்கிறோம்.

"பகவத் கீதை" யில் வரும் இரண்டு சுலோகங்கள் இதை நமக்குத் தெளிவு படுத்துகின்றன.

★ எல்லா உயிர்களிடத்திலும் பரமாத்மன் ஒரே மாதிரியாக இருப்பதைக் காண்பவனும் –

அழியும் பொருட்களிலும் அழியாத பரம் பொருள் இருப்பதை காண்பவனும் தான்.

உண்மையை உள்ளபடி காண்கிறான்.

வேதங்களின் சாரம் உப நிஷத்துக்களில் பொதிந்துள்ளது. இவைகள் அழிவற்ற உண்மைகள், இயற்கை நியதியோடு இயைந்த உண்மைகள்.

## விக்கிரக ஆராதனை :-

விக்கிரக ஆராதனை செய்வது தவறானது என்பது சில மதங்களின் கொள்கையாகும். ஆழ்ந்து சிந்தித்தால் அதில் எவ்விதத் தவறும் இல்லை என்பது தெரியவரும். இறைவனை எந்த வடிவிலும் காணலாம். உருவத்திலும், உருவம் இல்லாமலும், அரு உருவமாகவும் காணலாம். இதற்கு ஒரு கட்டுப்பாடு இல்லை. மேலும் மனதை ஒரு முகப்படுத்துவதற்கு ஏதாவது ஒரு உருவம் அவசியமாகிறது.

சுவாமி விவேகானந்தரும் ஆரம்பத்தில் விக்கிரக வழிபாடு தவறானது என்றே கருதினார். ஆனால் ஸ்ரீராமகிருஷ்ண பரம ஹம்சரின் தொடர்பு ஏற்பட்டபின் அக் கொள்கையை மாற்றிக் கொண்டார். அவதார புருஷரான ஸ்ரீபரமஹம்சர் தாமே விக்கிரக வழிபாட்டில் எவ்வளவு ஈடுபாடு கொண்டிருந்தார் என்பதை அறிந்த பின் அதன் முக்கியத்துவத்தைப் புரிந்து கொண்டார்.

இப்பூவுலக வாசிகளின் வாழ்வு பிரபஞ்சத்தில் உள்ள கிரகங்களுடன் சம்பந்தப்பட்டிருப்பதை நாம் அறிவோம். சூரியன் இல்லாவிட்டால் உலகமே இல்லை. நாம் உண்ணும் உணவு, நாம் பெறும் சக்தி, நீர், நெருப்பு முதலிய சகலமும் சூரியனிலிருந்தே நமக்குக் கிடைக்கின்றன.

இவ்வாறே இவ்வுலகில் உள்ள சகல மூலப் பொருட்களும் ஐந்து முக்கிய கூறுகளில் அடங்குகின்றன. நீர், நெருப்பு, காற்று, ஆகாயம், பூமி ஆகிய அந்த ஐந்து பொருட்களையும் உருவகப் படுத்தி வணங்குவதில் என்ன தவறு? ஒரு நாமம் ஓருருவம் இல்லாத இறைவனை ஆயிரம் திருநாமம் கொண்டு போற்றுவதிலும், பக்தனுக்கு பிடித்த உருவத்தில் வழிபடுவதிலும் என்ன தவறு ? பிரம்மா, விஷ்ணு, சிவன், சக்தி, முருகன், கணபதி, லட்சுமி, சரஸ்வதி என்பதெல்லாம் ஒரே பொருளின் பல்வேறு உருவங்களே என்பதை விளங்கிக் கொண்டால், உருவ வழிபாடு எவ்வகையிலும் தவறாகாது என்பதை உணர்ந்து கொள்ளலாம். மேலும் வேதாந்தக் கொள்கைகளைப் புரிந்து கொண்டால் ஒவ்வொருவரது மனப் பக்குவத்திற்கேற்ப வழிபாடுகள் அமைகின்றன என்பதைப் புரிந்து கொள்ளலாம். அங்கிங்கெனாதபடி எங்கும் பிரகாசமாக ஆனந்த பூர்த்தியாகி நிற்கும் இறைவன் வெளியில் இல்லை அவன் நமக்குள்ளேயே இருக்கிறான். நாமே இறைவன்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

'தத்துவமஸி' (நீயே அது) அஹம்பிரஹ்மாஸ்மி (நான் பிரமனாக இருக்கிறேன்) என்ற வேதாந்தக் கோட்பாடுகள், பைபிளில் சொல்லப்படும், ''இறைவனது ராஜ்ஜியம் உனக்குள்ளே இருக்கிறது' நானும் எனது தேவனும் ஒருவரே முதலிய கோட்பாடுகளுடன் ஒத்துப் போவதைக் காணலாம்.

இவ்வாறு எங்கும் நிறைந்த பரம்பொருளாக இறைவனைக் கண்ட அதே இந்து சமயத்தில்தான் உருவ வழிபாடும் உள்ளது என்றால் அதற்கொரு அர்த்தம் இருக்கிறது என்பதைப் புரிந்து கொள்ள வேண்டும்.

மக்களின் மனப்பக்குவம் வெவ்வேறு நிலைகளில் உள்ளது. யாருக்கு, எத்தகைய ஆராதனை முறை அவசியமோ அதை அவர் தேர்ந்தெடுத்துக் கொள்ளலாம். தாய் ஒருத்தி தன் குழந்தைகளின் ஜீரண சக்திக்கேற்ப, வெவ்வேறு ஆகாரவகைகளைக் கொடுப்பது போல, வெவ்வேறு ஆராதனை முறைகள், பாமர மக்களுக்குப் பயன்படுத்தப்படுகின்றன என்பது சுவாமி விவேகானந்தரின் கூற்று.

ஒரு விக்கிரத்தை நாம் வழிபடும்போது என்ன நடக்கிறது? கண் விக்கிரகத்தைப் பார்க்கிறதே தவிர பிரார்த்தனை மனதிலேதான் நடக்கிறது. நமது உள்ளத்தில் நிறைந்திருக்கும் இறைவனையே நாம் வழிபடுகிறோம். ஒரு நாட்டின் இறைமைக்கு அதன் கொடி ஒரு குறியீடு ஆவது போல, ஒரு நாட்டின் மன்னனின் உருவம், வெறும் படத்தில் இருந்தாலும், அது அந்த மன்னனை நினைவூட்டுவது போல் விக்கிரகங்கள் இறைவனை நமக்கு நினைவூட்டும் குறியீடுகளாக அமைகின்றன.

## லௌகிக வாழ்க்கையில் கர்மாவே சிறந்த மார்க்கம்

ஒரு காலத்தில் யாகங்களும், கடும் தவங்களும் வழிபாட்டு முறைகளாக அமைந்திருந்தன. கிருத, திரேத, துவாபர யுகங்கள் முடிந்து இன்று கலியுகம் நடப்பதாகச் சொல்லப்படுகிறது. இந்தக் கலியுகத்தில் கர்மா (அனுஷ்டானங்களே) சிறந்த வழிபாட்டு முறையாக அமைகிறது. சுவாமி விவேகானந்தர் பின்வருமாறு கூறுகிறார்.

''யாகங்களும், கடுந் தவங்களும் இக்காலத்துக்கு ஏற்றவையல்ல. வாழ்நாள் மிகவும் குறுகியது. பெரும் காரியம் ஒன்றின் பொருட்டு அதனைத் தியாகம் செய்துவிட்டு, பணிபுரிவீர்களாக ! உயிரே போவதானாலும் கூட, உங்கள் பணி நேர்மையாக இருக்கட்டும். இதற்காக, அறிவாற்றல் மிக்க, தூய்மைமிக்க, ஒரு நூறு இளைஞர்கள் முன் வருவார்களானால் இந்த உலகையே மாற்றி அமைக்கலாம். இன்று எமது சமுதாயம் உள்ள நிலையில், அத்தகைய கடமை உணர்ச்சிமிக்க வீர இளைஞர்களும், அவர்களது சேவையுமே இந்த நாட்டுக்குத் தேவைப்படுகின்றது.'

நம்மிடத்து உள்ளதை, பிறருக்கு எடுத்து வழங்கும் சீரிய செயலை மேற் கொள்ள வேண்டும். இச்செயல், இக்காலத்துக்கேற்ற சேவையும், தர்மமுமாகிறது.

தானங்களுள் உயர்ந்தது ஆத்மதானம்; அதற்கு அடுத்தது அபரவித்தையைக் கொடுக்கும் வித்தியாதானம் அதற்கு அடுத்தது தக்க தருணத்தில் ஒரு உயிரைக் காப்பாற்றும் ஜீவதானம்; அதற்கு அடுத்ததாகவும் இறுதியானதாகவுமே அன்னதானம் அமைகிறது என்பது சுவாமிஜியின் கூற்று.

எனவே ஆத்மதானமே, எல்லாத் தானங்களிலும், மிகச் சிறந்த தானம் ஆகிறது.

சமய சமரசத்தின் அடி நாதமாக ஆதார சுருதியாக சுவாமிஜி கண்டது மனித நேயமே. அதனால் மனித குல சேவையை விடச் சிறந்த பிரார்த்தனை வேறு இல்லை என, மிக அழுத்தம் திருத்தமாக, ஆணித்தரமாக அவர் கூறுகிறார்.

நமது பிரார்த்தனையில், இறைவனை நம் அனைவருக்கும் தந்தையாகக் காண்கிறோம். அவ்வாறாயின் தினசரி வாழ்க்கையில் நாம்காணும் ஒவ்வொரு மனிதனையும் நமது சகோதரனாக நடத்தாமல் போனால், இறைவனைத் தந்தையாகக் கொள்வதில் என்ன அர்த்தம் இருக்கிறது என்று சுவாமிஜி கேட்பதில் நிறைய அர்த்தம் இருக்கிறது.

தொகுத்து நோக்கினால் சுவாமி விவேகானந்தரின் உலகப் பொதுமறைக் கொள்கை பின்வருமாறு அமைகிறது.

1. அனைத்து சமயங்களும் உண்மை. அவை அனைத்தும் ஒரே இறைவனையே காண்கின்றன.

2. இந்த ஏகத்துவத்தைப் புரிந்து கொண்டால், மத மாற்றத்துக்கும், மத பேதங்களுக்கும் அவசியம் இல்லை.

3. வேதாந்தக் கொள்கைகளின் அடிப்படையில் தத்துவங்களை மட்டும் கொண்ட ஒரு உலகப் பொது சமயத்தை உருவாக்க முடியுமானால், சமய வெறியினால் ஏற்படும் தீய விளைவுகளைத் தவிர்க்கலாம்.

4. இறைவன் எங்கும் நிறைந்த பரம்பொருள், ஒவ்வொரு மனிதனும் ஆத்ம சொரூபி. எனவே இறைவனும் மனிதனுள் இருக்கும் ஆத்மனும் ஒன்றே.

5. இறைவனைத் தந்தையாகக் கொண்டால் உலகில் உள்ள அனைவரும் சகோதரர்களாகின்றனர். மனித நேயமே இந்தச் சகோதரத்துவத்தை வளர்க்க முடியும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இளைஞரும் விவேகானந்தரும்

பத்மா சோமகாந்தன்



(1996ம் ஆண்டு இலங்கை இராமகிருஷ்ண மிஷன் நடாத்திய சுவாமி விவேகானந்தரின் சிகாகோ சொற்பொழிவு நூற்றாண்டு விழாவைபவத்தில் அகில இலங்கை இந்து மாமன்றம் நடாத்திய ஆய்வுக்கட்டுரைப் போட்டியில் முதலாம் இடத்தைப் பெற்று தங்கப்பதக்கத்தையும் பாராட்டையும் பெற்ற திருமதி. பத்மா சோமகாந்தன் எழுதிய "உலகளாவிய நிலையில் சுவாமி விவேகானந்தரின் கோட்பாடுகள்" என்னும் கட்டுரையிலிருந்து ஒரு பகுதி.)

பழமையும் சக்தியும் மிக்க பிரமாண்டமான நாடு இடிந்து ஒடிந்து பாழாகக் கிடப்பது போல தன் நாட்டின் சீர்க்குலைவுகண்டு துடித்தெழுந்த தீரம் மிக்க இவ்வீரர் நவீன இந்தியாவைக் கட்டியெழுப்புவதற்கு உற்சாகத்துடன் உழைக்க மக்களைத் தட்டியெழுப்பினார்.

"என் அருமைக் குழந்தைகளே ! சமய வாழ்வின் உட்பொருள் கொள்கைகளில் இல்லை. நடைமுறையில் தான் உள்ளது. நல்லவனாக இரு; நல்லதைச் செய். தூய்மையுடன் இரு ; தன்னலமற்று இரு." பன்னூற்றுக்கணக்கான குழந்தைகளுக்கான அவருடைய கோட்பாடுகளில் மிக எளியதும் இலகுவானதுமான சிறிய சில வரிகள் இங்கே தரப்பட்டுள்ளன. இவை இந்தியக் குழந்தைகளுக்கு மாத்திரம்தான் உரியனவா? இல்லவே இல்லை ! இங்கிலாந்து, ரஷ்யா, அவுஸ்திரேலியா, கனடா, மொறிசியஸ் ஏன் உலகின் எங்கெங்கெல்லாம் மனிதக் குழந்தைகள் வாழ்கின்றனரோ அவர்கள் யாவருக்குமே பொருத்தமான ஏற்ற நடைமுறைப்படுத்தக்கூடிய மென்மையான இலகுவான பண்புகள் அல்லவா?

நல்லவனாக, தூய்மையுடன், தன்னலமற்ற சிந்தையுடன் மக்களுக்காகத் தொண்டாற்றிய காந்திமகானின் சரித்திரம், தனது பதவிக்கோ பட்டத்திற்கோ முக்கியம் கொடுக்காமல், பல்வேறு பிரச்சினைகள் முட்டிவந்த போதும் உள்ளத் தூய்மையுடன் தன்னையே தியாகம் செய்து நாட்டின் நலனைப் பேணிய தூயவனின் சரித்திரம் உள்ளமெல்லாம் நிறைகின்றது.

"நீ எதை நினைக்கிறாயோ, அதுவாகவே ஆகிறாய் நீ உன்னைப் பலவீனன் என நினைத்தால் பலவீனனாகவே ஆகிவிடுவாய். நீ உன்னை வலிமையுடையவன் என நினைத்தால் வலிமை படைத்தவனாகவே ஆகிவிடுவாய்"

என சிறுவர்களின் சிந்தனைக்கும் வளமும் வலிமையும் ஊட்டுகின்றார். பலவீனத்திற்குப் பரிகாரம் ஓயாமல் பலவீனத்தைப் பற்றியே நொந்துகொண்டிருப்பதல்ல. வலிமையைப் பற்றி ஊக்கத்துடன் சிந்திக்க வேண்டுமென்கிறார்.

வலிமையின்மைக்குக் காரணம் அச்சமே.
"உச்சிமீது வானிடிந்து வீழுகின்ற போதிலும்
அச்சமில்லை அச்சமில்லை அச்சமென்பதில்லையே"
என மக்களின் உள்ளத்திற்கு வலிமையூட்டினார் பாரதி.

"குழந்தாய் ! நான் வேண்டுவதென்ன? பயம் என்பதையே அறியாத இரும்பினாலான உள்ளமும் இதயமுமே," உண்மையில் நீங்கள் என் குழந்தைகளானால் எதற்கும் அஞ்சமாட்டீர்கள். எதைக் கண்டும் தயங்கி நிற்கமாட்டீர்கள். சிங்கக்குட்டிகளை தந்திருப்பீர்கள். இந்தியாவை மட்டுமன்றி, உலக முழுவதையும் நாம் எழுப்பியாக வேண்டும் என உறக்க நிலையில் தயங்கிநிற்கும் குழந்தைகளை – உலகக் குழந்தைகளையுமே உசாராக்கும்படி அறைகூவல் விடுக்கின்றார்.

"என்மகனே ! உறுதியாக நில், பிறர் உதவியை எதிர்பாராதே. வேறு மனிதர்களின் உதவியைக் காட்டிலும் ஆண்டவனுடைய உதவி எவ்வளவோ பெரியதல்லவா? இறைவனை நம்பு. நேர் வழியில் செல்" என உறுதியுடனும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கட்டுப்பாட்டுடனும் பக்தியுடனும் குழந்தைகள் வளரத் தூண்டுகிறார்.

''எந்தக்கல்வி மாணவரிடத்தே பண்பாட்டை உருவாக்க வல்லதோ, மன ஆற்றலை வளர்க்க வல்லதோ, அறிவுத்திறனை விரிவடையச் செய்யக் கூடியதோ அத்தகைய கல்வி தான் நமக்கு இப்போது தேவை. மனிதன் தன்னைத் தானே தாங்குபவனாக, தன் சொந்தக் கால்களில் தலை நிமிர்ந்து நிற்பவனாகச் செய்யவல்ல கல்வியே நமக்கு வேண்டப்படுவது''

''பாமரமக்களின் அன்றாட வாழ்க்கைப் போராட்டங்களைப் போக்காத, வளமான பண்பாட்டை வளர்க்காத, கொடைப்பண்பினை வளர்க்காத சிங்கக் குட்டியென வீரத்தை ஊட்டாத கல்வி கல்வி ஆகுமா? ''எனக் கேட்டு கல்வி மூலம் வீரத்தையும் மனவீரியத்தையும் ஏற்படுத்த விழைந்தார்.

ஒரு தடவை சுவாமிகள் காசியில் ஒரு தனிவழிப் பாதையில் சென்று கொண்டிருந்தார். அங்கிருந்த இயல்பாகவே முரட்டுத்தனம் மிக்க குரங்குகள் அவருக்குப் பின்னாலே கிரீச்சிட்டுப் பெருஞ் சப்தமிட்டபடி ஓடோடித் திரிந்து அவரது கால்களைப் பற்றின. அவை நெருங்க நெருங்க சுவாமிகள் ஓடினார்கள். அவர் ஓட ஓட அவையும் உற்சாகத்துடன் துரத்தியபடி சென்று அவரது கால்களைக் கடித்தன. அவற்றிடமிருந்து தப்பவோ வழிதெரியாதிருந்தபோது, அறிமுகமில்லாத ஒருவர் எதிரே வந்து, சுவாமிகளை நோக்கி, 'குரங்குகளை எதிர்த்துநில்' என்று கூவினார். அப்படியே சுவாமிகளும் குரங்குகளை எதிர்த்து நிற்கவும் அவை பின்வாங்கின. இதை தன் வாழ்வு முழுவதற்குமே ஒரு நல்ல படிப்பினையாக அவர் ஏற்றுக்கொண்டதோடு அஞ்சாமல் துன்பங்களையும் துயர்களையும் எதிர்த்துப் போராட உலக மக்களுக்கே அறைகூவல் விடுத்தார்.

''உலக இன்பங்களின் மயங்கி வெறும் கோழைகளாக மாறாமல், துன்பங்களையெல்லாம் எதிர்த்துப் போராடி அங்கெல்லாம் கூட இறைவனின் ஆதரவு உண்டு'' என்று இடரினால் இயக்கமின்றி துன்பித்துச் சோர்ந்து துவளும் உலக மக்களுக்கு அஞ்சாமையை அறிவுறுத்தினார்.

சுவாமிகளுடைய போதனை, சிந்தனை, செயல் யாவும் இந்து என்ற வட்டத்துள் மட்டும் அடங்காமல், கிறீஸ்தவம், ஜைனம், இஸ்லாம், பௌத்தம் என்ற எம்மதத்தைத் தழுவியோருக்கும், மனிதப் பிறவிஎடுத்த எல்லோருக்குமே பொருந்துவனவாக, மேற்கொள்ளக் கூடியனவாக அமைந்திருப்பதே அவருடைய ஆற்றலின் தெய்வீகம் எனலாம். அவருடைய மூச்சு, அவருடைய பேச்சு அவருடைய அசைவு அவருடைய ஆற்றல், அவருடைய எண்ணம் எல்லாமே உலகின் மனிதகுல மேம்பாட்டையே நோக்கியிருந்தன. தனது இனம், தமது மொழி, தனது நாடு என்ற குறுகிய கண்ணோட்டமின்றி, உலக முழுதும் உள்ள மக்கள் உய்ய வேண்டுமென்ற விரிந்த பரந்த அடிப்படையில் இந்து சமய தத்துவங்களின் நுழைவாயில்களை எடுத்து விளக்கினார். பிரம்மத்தைக் கண்டு அனுபவித்த யோகிகள், ஞானிகள் மத்தியில் தவழ்ந்தஉபதேசங்களையும் சுலோகங்களையும், கல்விவாசனையற்ற சாதாரண அன்றாடங் காய்ச்சிகளும் உணர்ந்து தெளிந்து விளங்கிக் கொள்ளக் கூடிய முறையில் எளிமைப்படுத்தி அவர்களுடைய உள்ளங்களிலும் பதியுமாறு செய்த ஏழைபங்காளனன்றோ நம் சுவாமிகள் !

சிந்தனைக் கருவூலங்கள், உயர்ந்த தத்துவங்கள் இந்தியாவின் பொக்கிஷங்கள் என்று படித்துப் படித்துக்கூறி, அவற்றை தாமே கற்று உணர்ந்து களிப்புற்று அனுபவித்ததோடு, கருத்துரையும் விரிவுரையும் கூறிச் சென்ற அநுபூதிமான்கள் பலர். அவர்கள் பாதையில் மாத்திரம் தானும் செயற்படாமல், தன் குருவின் மூலம் தான் கற்ற உண்மைகளை கேட்டறிந்து பெற்றவற்றை 'நான் பெற்ற இன்பம் பெறுக இவ்வையகம்' என்ற நிலைப்பாட்டில் உயர்ந்த சிந்தனைகளை சாதாரண பாமர மக்களுடைய அனுபவத்திற்கு ஏற்ற விதத்தில் அறிமுகப்படுத்தினார்.

''அஞ்சி அஞ்சிச் சாவார் இவர் அஞ்சாத பொருளில்லை அவனியிலே'' என்ற புரட்சிக் கவிஞன் பாரதி படம் பிடித்துக் காட்டிய பாரத மக்களை மட்டுமல்ல, அனைவரையுமே 'அச்சந் தவிர்', 'ஆண்மை மறவேல்' என இடித்து முழங்கிய மதமேகமே சுவாமிகள்.

பகவான் ஸ்ரீ இராமகிருஷ்ணர் தனக்குரிய செய்தியை ஒவ்வொரு இந்திய மகனின் செவிகளில் மட்டுமல்ல உலகில் வாழும் மனித இனம் ஒவ்வொன்றினதும் செவிகளில் உரத்துக் கூவி விழிப்படையச் செய்தார்.

இந்தச் சரீரம் நமக்குக் கிடைத்தது நாம் கடவுளை வணங்கி முத்தியின்பம் பெறும் பொருட்டேயாம்'' ஆறுமுகநாவலர் அவர்கள் மானிடப் பிறவியின் நோக்கத்தை எடுத்து விளக்குகிறார்.

மனித உடலைக்கொண்ட இளைஞர்களே நாட்டின் ஜீவநாடி; தேசத்தின் முதுகெலும்பு என முழுங்குகிறார் சுவாமிவிவேகானந்தர் பொருளாதாரத்தில் இற்று நொடிந்து, அறியாமையில் மூழ்கி அமிழ்ந்திருக்கும் தன் நாட்டுநிலையை மனதில் இருத்தி, உற்சாகமும் துடிப்பும் கொண்ட இருநூறு ஆண்களும் இருநூறு பெண்களையும் தன்னிடம் ஒப்படைந்தால் தான் அந்தத் தேசத்தையே வானோர்கள் வதியும் நாடாக, இன்பப் பூஞ்சோலையாக மாற்றிவிடமுடியுமெனின் இலட்சாதி இலட்சம் மக்களைக் கொண்ட நாடுகள் ஏன் தூங்குகின்றன?



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

துயருறுகின்றன? சோருகின்றன? என துடிப்போடு வினவுகின்றார். மனித சக்தியும், தியாகமும் உழைப்புமே ஆன்மீக சக்திக்கு, ஆன்மீக மேம்பாட்டிற்கு அத்திவாரம் என எடுத்து விளக்கினார்.

"இளையோர்களே ! உங்களை என்றும் கொடுப்போன் நிலையில் இருத்துவீர்களாக! பிறர்க்கு என்றும் உதவுங்கள் ! உலகிற்கு தொண்டாற்றுங்கள் ! உங்களிடம் இருப்பது அற்பமே ஆயினும் அதையும் வழங்கிவிடுங்கள் அங்ஙனம் வழங்குகையில் நிபந்தனைகள் இடவேண்டாம். இறைவன் நமக்கு. வழங்கியிருப்பதைப் போன்று நாமும் எவ்விதமான கைம்மாறும் கருதாமல் வழங்குவோம்" சு.அ. பக்.33

"அவ்வப்போது உலகத்தினிடமிருந்து உங்களுக்குப் பலமான அடி கிடைக்கலாம். அதற்காக மனம் குலையக்கூடாது. கண நேரத்தில் அது சரியாகிவிடும். எல்லாமே சரியாகிப் போகும்" சு.அ. பக்.14

"உழைப்பே வடிவெடுத்த, சிங்கத்தின் இதயம் படைத்த ஆண்களையே திருமகள் நாடிச் செல்கிறாள். முன்னோக்கிச் செல் அளவற்ற ஆற்றல், பெரும் ஊக்கம், அளவு கடந்த அஞ்சாமை அளவில்லாத பொறுமை—இவையே நமக்குத் தேவை. இவை இருந்தால் மட்டுமே மகத்தான காரியங்களை நம்மால் சாதிக்க முடியும்"

என இளைஞர்களுடைய ஆற்றலின் மகத்தான சக்தியை சுட்டிக் காட்டுகின்றார்.

"சகோதரா ! நம்பிக்கையை இழந்து விடாதே. பாதை கத்தி முனையில் நடப்பதைப் போல் மிகவும் கடினமானதுதான். எனினும் எழுந்திரு, விழித்துக்கொள், மனம் தளராதே, நீ அடைய வேண்டிய உனது இலட்சியமாகிய குறிக்கோளைக் கண்டுபிடி."

உலக ஓட்டத்தில் இளைஞருடைய பங்கு மிகப்பொறுப்புவாய்ந்ததும் முக்கியமானதும் என்பதைச் சுட்டிக்காட்டி நவீன உலகைப் படைக்க சீலமும் சிறப்புக் கொண்ட புத்துலகைக் காண வரும்படி இளைஞர்களைக் கூவி அழைக்கிறார்.

"அறியாமை மிக்க, உயிரற்ற புல்பூண்டு வாழ்க்கையைக் காட்டிலும், மரணமே மேலானது, தோல்வியைத் தழுவி உயிர் வாழ்வதை விடப் போர்க்களத்தில் மாய்வதே மேல்" என வீரத்துடன் தோள்களைத் தட்டுகிறார்.

இளைஞர்கள் உறுதியுடன் தியாகநோக்குடன் எதையும் சாதிக்க முன்வந்தால் பாம்பின் விஷம் கூடச் சக்தியற்றதாகிவிடுமென்று இளைஞர்களின் ஆற்றலைக் குறித்துக் கருத்துத் தெரிவிக்கிறார்.

"எது வந்தாலும் போராடி முடி. தங்கள் நிலையிலிருந்து நட்சத்திரங்கள் பிறழட்டும். முழு உலகம் நமக்கு எதிராக எழுந்து எதிர்த்து நிற்கட்டும். மரணம் என்றால் வேறு உடை மாற்றுவதுதான் போராடு கோழையாவதனால் நீ எந்த ஒரு பயனையும் பெறமாட்டாய். ஓர் அடி நீ பின் வாங்குவதனால் எந்த ஒரு துரதிருஷ்டத்தையும் தவிர்த்துவிட முடியாது, உலகிலுள்ள அத்தனை கடவுள்களையும் நீ கூவியழைத்துப் பார்த்தாகிவிட்டது. துன்பம் அதனால் ஓய்ந்து விட்டதா? நீ வெற்றி பெற்ற போது கடவுளர் உனக்கு உதவ முன் வந்தார்கள். அதனால் என்ன பயன்?. போராடி முடி. நீ எல்லையற்றவன் ; மரணமற்றவன் ; பிறப்பற்றவன். எல்லையற்ற ஆத்மா ஆதலால், நீ அடிமையாக இருப்பது உனக்குப் பொருந்தாது. எழுந்திரு ! விழித்துக் கொள் ! எழுந்து நின்று போராடு !"

'தனி மரம் தோப்பாகாது' என்பது போல இளைஞர்கள் யாவரும் ஒன்றிணைய வேண்டும். பாழ் மண்டபமாகக் காட்சிதரும் தாயகத்தைப் புதுமெருகேற்றிச் சிறப்பிக்க வேண்டும். இந்த பணியிலே தன்னோடு சேர்ந்து நின்று ஒத்துழைக்க இளைஞர்களின் வலிமையைத் தட்டியெழுப்பி உழைக்குமாறு வேண்டுகின்றார்.

"இடிப்பாரில்லா ஏமராமன்னன் கெடுப்பாரில்லானும் கெடும்" என்பதற்கிணங்க நல்ல சக்திப் பெருக்கிற்கு ஆற்றலின் ஊற்றுக்கு வழிகாட்டுவது அவசியம். காலத்தின் தேவையை உணர்ந்து திறமையைப் அர்ப்பணிக்க முன்வரும் இளம் சமுதாயத்திற்கு நல்ல வழியைக் காண்பிக்கின்றார்.

சிதறுண்டு நிற்கும் எண்ணங்களை ஒருமைப்படுத்தி சிந்தனை ஒழுக்கை நிதானப்படுத்துகின்றார்.

"ஏழைகளுக்காக, யாருடைய இதயத்தில் இரத்தம் கசிகிறதோ அவரையே நான் மகாத்மா என்பேன். மற்றவர் துராத்மாவே" என ஏழைகள் மீது இரங்கி இளைஞர்களையும் இரங்கி உதவுமாறு தூண்டினார்.

"நீங்கள் ஒரு குகையில் வாழ்ந்தாலும் உங்கள் எண்ணங்கள் பாறைச் சுவர்களை ஊடுருவி நூற்றுக்கணக்கான ஆண்டுகள் உலகம் முழுதும் அதிர்ந்து கொண்டிருக்கும் சில மூளைகளை எட்டித்தன் வேலையைச் செய்யும். சிந்தனைக்கு, மனப்பூர்வமான தன்மைக்கு, லட்சியத் தூய்மைக்கு இவ்வளவு சக்தி உண்டு" என்றும் மாறாத இளமையின் அற்புதமான உருவத்தில் நின்று அறிவுறுத்தினார்.




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இந்து சமயத்திற்கு சுவாமி விவேகானந்தர்

## அளித்த விளக்கம்

என். கிருஷ்ணமூர்த்தி
*விவேகானந்த கேந்திரம்,*
*கன்னியாகுமரி.*



முன்னுரை:

இந்து சமயம் சுவாமி விவேகானந்தர் அவதரிப்பதற்கு முன் சிக்கல்கள் நிறைந்ததாய் புரிந்துகொள்வதற்குக் கடினமானதாய் இருந்தது. சாதியாலும், வாழ்க்கையோடு ஒட்டிப் போகாத வீண் வறட்டு வாதங்களினாலும் களங்கமுற்றிருந்தது. வரலாற்றின் பாதையில் இதுபோன்ற சிடுக்குகளும், சிக்கல்களும் வரும்போதெல்லாம் மாமனிதர்கள் தோன்றி சனாதனதருமத்தைத் தெளிவுபடுத்தி மக்கள் முன் வைப்பர். வேத வியாசர் வேதங்களைத் தொகுத்து எழுதிய போது இப்பணியைத் தான் செய்தார். வியாசருக்குப் பின்னும் சமயத்தின் ஆராய்ச்சியாளர்களும், சிந்தனையாளர்களும், தீர்க்கதரிசிகளும் பெரும் எண்ணிக்கையில் தோன்றினார். இறை தரிசனக் காட்சிகளை பக்திப் பாடல்களாகவும், தத்துவ தரிசனங்களாகவும் நமக்கு அளித்து சென்றனர். தனித்தனி தீர்க்கதரிசிகளின் ஆன்மீகப் பரிசோதனைகளை ஒன்றிணைத்து சமயத்தின் உள் ஒற்றுமையை எடுத்துக் காட்ட ஒரு அவதார புருஷர் தேவைப்பட்டார். கிருஷ்ணரின் மூலம் காலம் அந்தக் தேவையை நிறைவேற்றிக் கொண்டது. கிருஷ்ணரின் பகவத்கீதை இந்து சமயத்தில் அவர் காலத்துக்கு முன் தோன்றிய அத்தனை ஞான அனுபவங்களின் திரட்சியாகவும் மலர்ந்தது. கிருஷ்ணருக்குப் பின்னும் தெய்வ புருஷர்கள் நம் மண்ணில் இடைவிடாது தோன்றிக் கொண்டே இருந்தனர். அப்படிப்பட்டவர்களின் கருத்துக்களை, பக்திப் பாடல்களை ஒருங்கிணைத்து ஷண் மதம் என்ற வழிபாட்டுக்கொள்கையை ஆதிசங்கரர் நமக்கு அளித்தார். அவருக்கு முன் இந் நாட்டில் அவதரித்த ஞானவான்களின் நல் உபதேசங்களை தொகுத்தும், விளக்கியும் உரை நூல்களையும் பிர கரண நூல்களையும், துதிப் பாடல்களையும் ஆதிசங்கரர் அருளினார். அவ்வரிசையில் ராமகிருஷ்ணர் விவேகானந்தர் என்னும் இரட்டையர் நம்நாட்டில் தோன்றிய இறைக்கொள்கைகள் அத்தனையும் ஒருங்கிணைத்து சிதறுண்ட மலர்களை மாலையாய் கோர்த்தனர். ராமகிருஷ்ணர் விவேகானந்தர் வாழ்க்கையை நாம் ஆராய்ந்து அவர்களின் உபதேசங்களைக் கற்றறிந்தோமானால் பாரதத்தின், ஆசியா கண்டத்தின், உலகம் முழுவதின், தார்மீக சமய ஆன்மீக போதனைகளை நாம் சுலபமாகப் புரிந்து கொண்டுவிடலாம். இக் காரணத்தால் தான் ரவீந்திரநாத தாகூர் " நீங்கள் நம் பண்பாட்டைப்புரிந்துகொள்ளவேண்டுமானால் சுவாமி விவேகானந்தரின் நூல்களைப் படியுங்கள். அதில் அனைத்துமே ஆக்கப்பூர்வமானது. மனிதனை அழிவை நோக்கி தள்ளும் எதுவும் அவர் போதனைகளில் இல்லை" என்று கூறினார். சமயம், மனிதநேயம் தேசபக்தி இந்த மூன்று துறைக்கும் சுவாமிஜி ஆற்றிய பெரும் தொண்டை தாகூர் எவ்வளவு அருமையாகக் கூறிவிட்டார். சகோதரி நிவேதிதையோ "சுவாமி விவேகானந்தர் தோன்றியிராவிட்டால் இந்துசமயத்தின் அற்புதமான கொள்கைகள் இன்று பண்டிதர்களின் கைச்சொத்தாகவே நின்றிருக்கும். பாமரமக்களின் அனுபவமாக மாறி இருக்காது" என்று பேசுகிறார்.

பாரதத்தின் தொன்மையான நாகரீகத்தை அதன் ஒளி பொருந்திய எதிர்காலத்தோடு இணைக்கின்ற பணியை விவேகானந்தர் ஆற்றினார். ஆகவே தான் ராஜாஜி "சுவாமி விவேகானந்தர் பிறந்திராவிட்டால் நாம் நம் சமயத்தை இழந்திருப்போம் : சுதந்திரத்தைப் பெற்றிருக்கமாட்டோம்" என்று கூறினார். உலக வரலாற்றில் பாரதம் சுதந்திரம் பெற்றது என்பது ஒரு தனி நாட்டின் எழுச்சியை மட்டும் குறிக்கும் விஷயம் அல்ல. பாரதத்தைப் பின்பற்றி எண்பது நாடுகளும், நூற்றுக்கணக்கான கோடி மக்களும் அரசியல் விடுதலை பெற்றனர். காலனி ஆதிக்கத்தை எதிர்த்து, சுரண்டலைத் தவிர்த்து, பன்முக சுதந்திரம் பெறும்விருப்பம் பலருக்கும் உண்டாயிற்று. ஆகவே, விவேகானந்தர் இந்து சமயத்திற்கும் நம் நாட்டிற்கும் தந்த விளக்கம் உலகளாவிய நன்மைகளைத் தந்தது.

சில மனிதர்களுக்கு சில விஷயங்களை சுவாமிஜி மென்மையாகத் தொட்டு மலர்த்தினார். வேறு சில விஷயங்களை சாட்டையால் அடிப்பது போல் வலுவாகத் தாக்கி உணர்த்தி எழுப்பினார். மலரின் மொட்டுக்களை விரியச் செய்யும் மென் பனித்துளி போல், கவிதையாய், அன்பாய், தொண்டாய் சுவாமிஜி ஆசிரியப் பணியை ஆற்றினார். "இந்து சமுதாயத்தின் மேல் ஒரு குண்டைப் போல வெடித்துச் சிதறுவேன்" என்று அவர் கூறியதற்கிணங்க நம் சமுதாயத்தின் சுரண்டல்காரர்கள், மேல்தட்டினர், மேற்கத்திய நாகரீகத்தின் மோகத்தில் ஊறி தன்னிலை இழந்தவர் ஆகியோரை அவர் வலுவாகத் தாக்கினார். சுவாமி விவேகானந்தர் ஆற்றிய பணியில் தலையாயது வேதாந்தத்திற்கு அவர் தந்த விளக்கம் தான். உலகம் முழுவதும் கடவுள் மயம், பிரக்ஞை மயம், ஆன்ம மயம் என்று ஈசாவாஸ்ய உபநிஷதத்தை அவர் மேற்கோள் காட்டிக் கூறிய கருத்து இன்றைய விஞ்ஞானத்தின் புதிய கண்டுபிடிப்புகளோடு ஒத்துப்போகிறது. இயற்கையின் ஒவ்வொரு அம்சமும் புனிதமானது. ஆகவே, மனிதன் புனிதமானவன்; இயற்கை போற்றுதற்குரியது என்னும் சிந்தனைகள் உலக அரங்கில் மேலெழ சுவாமிஜி பாதை போட்டுக் கொடுத்தார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பரம்பொருள் ஒன்றெனினும் அதன் திருநாமங்கள் பல என்பது வேதக்கருத்து. சுவாமிஜியின் சிக்காகோ பேருரையின் சாரமே இக்கருத்து தான். இக்கருத்தை நடைமுறைச் சாத்தியமான வாழ்க்கை நெறியாக தம் குரு ஸ்ரீராமகிருஷ்ணரிடத்தில் சுவாமிஜி கண்டிருந்தார். கடவுளின் பெயரால் போரிடும் மனிதர்களைத் தடுத்துநிறுத்த ஒரு பெரிய ஆன்மீக சக்தி மனிதகுலத்திற்கு தேவைப்படுகிறது. மனித ஒற்றுமைக்கான கொள்கை விளக்கத்தை ஆன்மீகத்தால் ஒன்றுபடும் உலக வரை படத்தை சுவாமி விவேகானந்தர் சிக்காகோ பேரவையினர் முன் வைத்தார்.

மனிதன் தெய்வமாகலாம். மனிதன் தெய்வத்தின் அம்சம் என்ற சிந்தனைகள் சாம வேதத்தின் மையக்கருத்துகளாகும். தொண்டின் மூலம் மனிதன் பிறரை நேசிக்கவும் சுவாமிஜி கற்றுத் தந்தார்; தனக்குள் இருக்கும் தெய்வ சக்தியை வெளிப்படுத்தவும் தொண்டு ஒரு நல்வழி ஆகும் என்று அவர் கண்டு சொன்னார். இப்படி வேதாந்ததிற்கு சுவாமிஜி தந்த விளக்கம் விஞ்ஞானத்தோடு ஒத்துப்போவதாகவும், வரலாற்றில் மனிதன் இழைத்துவிட்ட தவறுகளைச் சரிப்படுத்துவதாகவும், மனோதத்துவ ஆராய்ச்சிகளை எதிர்கொள்வதாகவும் அமைந்துள்ளது.

நடைமுறைப்பண்பாட்டில் மேற்சொன்ன மூன்று கருத்துக்களும் பண்டிதர்களின் சொத்தாகவோ, ஞானிகளின் லட்சியமாகவோ இருந்தால் போதாது. அவை நம் நாட்டு மக்களின் வாழ்க்கையில் இறங்கி பரந்த பண்பாடாக ஆகியிருப்பதை விவேகானந்தர் கண்டார். உலகம் அனைத்தும் கடவுள் மயம் என்பதால் நம் மக்களுக்கு காணுகின்ற மலையெல்லாம் கைலாயம் ஆயிற்று. விவேகானந்தர் உலகைச் சுற்றி வந்தபோது சிவலிங்க வழிபாடு எங்கும் பரவியிருப்பதைக் கண்டார். இமயமலையே சிவன் உறையும் இடம் என்பதால் ஒவ்வொரு சிவலிங்கமும் பக்தனுக்கு சிவன் உறையும் கைலாயத்தையே நினைவூட்டுகிறது என்று பேசினார். எல்லா நதிகளும் இறைவனோடு தொடர்புடையவை. எல்லா மரங்களும் தலவிருட்சமாக நம் கோவில்களில் அமையும். எல்லா மிருகங்களும் வாகனங்களாக இறைவனையே தாங்கி நிற்கும். இப்படி இயற்கையை தெய்வமாகக் கண்டு வழிபடுவது ஞானியரின் நூல்களிலிருந்து இறங்கி பாமரரின் தினப்படி வாழ்க்கைக்குள் புகுந்து கொண்ட அற்புதத்தை விவேகானந்தர் கண்ணாரக் கண்டார்.

தெய்வம் ஒன்று திருநாமங்கள் பல என்ற சிந்தனை நம் பண்பாட்டில் நடைமுறைக்கு வந்திருப்பதை சுவாமிஜி சிவாலயங்களில் கண்டார். நன்கு வடிவமைக்கப்பட்ட சிவாலயங்களில் (உதாரணமாக ராமேஸ்வரம், மதுரை, காஞ்சிபுரம், சிதம்பரம்) சிவன், பார்வதி, விஷ்ணு, சூரியன், முருகன் ஆகிய அனைத்துத் தெய்வங்களும் வணங்கப்படும். தல விருட்சமும், திருநீர் நிலையும், வாகனமும் சிவ வடிவங்களே. கடவுள் ஒருவர் திருநாமங்கள் பல என்ற வேத தத்துவத்திற்கு விளக்கம் அளிப்பவை நம் திருக்கோவில்களே. இத்தகைய ஆலயங்களில் சென்று வழிபடும் பக்தர்கள் இப்பேருண்மையை மனத்தில் ஏந்தி சமரச உணர்வுடன் வெளி வருகின்றனர்.

சாம வேதத்தின் மையக்கருத்தான "மனிதனுக்குள் தெய்வ சக்தி" என்ற கருத்து நடைமுறையில் சுவாமி விவேகானந்தரின் பார்வையில் நன்கு தெரிந்தது. படிப்பறிவில்லாத கிராமத்துப்பாட்டியும் கூட கோவிலில் இறைவனை வணங்கிவிட்டு தன்னைத்தானே வலம் வந்து வணங்குகிறாள். இப்படி வேதத்தின் மூன்று முக்கிய கருத்துக்கள் நம்நாட்டில் நடைமுறைப் பண்பாடாகத் தழைத்திருப்பதை சுவாமி விவேகானந்தர் கண்டார். ஆகவே, அவர் லட்சக் கணக்கில் முனிவர்களையும், தீர்க்கதரிசிகளையும் உற்பத்தி செய்யும் பண்பாடாக நம் கலாச்சாரத்தை விவரித்தார். இலங்கையில் ஒரு சொற்பொழிவில் சுவாமிஜி "ஒரு மேலைநாட்டுப் பேராசிரியரை விட ஒரு சாதாரண இந்திய விவசாயி அதிக சமய அறிவும், சமய உணர்வும் கொண்டிருக்கிறான்" என்று பேசினார்.

அறம், பொருள், இன்பம், வீடு என்ற நான்கு லட்சியங்கள் மனித வாழ்க்கையை மேம்படுத்துவன. வரலாற்று ரீதியான சுவாமிஜி நம் சமயமும் பண்பாடும் இக உலக வாழ்க்கைக்கும், புறவாழ்க்கைக்கும் சமமான முக்கியத்துவம் கொடுத்தன என்கிறார். அளவுக்கு மீறி, துறவை வற்புறுத்துவதை சுவாமிஜி விரும்பவில்லை. இவ்வுலகக் கடமைகளை நிறைவேற்றாமல் முக்தியைப் பெற முடியாது என்பது சுவாமிஜியின் வாதம்.

ஒவ்வொரு சமயத்திலும் தத்துவம், புராணம், சடங்கு என்னும் மூன்று கூறுகள் இருக்கின்றன. அறிவிற் சிறந்தோர் தத்துவங்களைப் பயின்று ஞான வழியில் செல்லுவர். நடுத்தர மக்கள் புராணங்களைப் பயின்று அவற்றில் காட்டியுள்ள நல்லறங்களை வாழ்க்கையில் பின்பற்றுவர். பாமரரோ சடங்குகளையோ, விரதங்களையோ பின்பற்றி திருக்கோவில் வழிபாடு தீர்த்த யாத்திரை இவற்றின் மூலம் வாழ்க்கையைக் கட்டுப்படுத்தி உயர்வார் என்கிறார்.

சுவாமி விவேகானந்தருடைய தலையாய சமய விளக்கம் 'மக்கள் சேவையே மகேசன் சேவை' என்ற தத்துவமே ஆகும். பிறருக்கு தொண்டுபுரிகிற போது நமக்குள் அன்பும், திறனும், சுயநல மறுப்பும் ஆகிய நற்குணங்கள் வளர்கின்றன. இவையே இறை உணர்வின் துவக்கநிலை என்பது சுவாமிஜியின் கருத்தாகும்.

இப்படிப்பட்ட தொண்டர்கள் உடலிலும், மனத்திலும் பெரும் பலமும் சக்தியும் கொண்டு திகழ வேண்டும் என்பது விவேகானந்தரின் விருப்பமாகும். "பலமே வாழ்வு. பலமின்மையே மரணம். அகன்று விரிந்து பெருகுவதே வாழ்க்கை. சுருங்கித் தேய்வதே மரணம்" என்கிறார். "சுயநல மறுப்பிலிருந்து பெரும் பலம் மனிதனுக்குள் பிறக்கும் என்பது அனுபவத்தில் காணும் உண்மை" என்கிறார் விவேகானந்தர்.

இப்படி மனித நேயத்தையும் தேசப்பற்றையும், தெய்வ பக்தியையும் ஒருங்கிணைத்து சமயத்திற்கு விவேகானந்தர் அளித்த ஒப்பற்ற விளக்கம் மனித குலத்திற்கே என்றென்றும் வழிகாட்டிக் கொண்டிருக்கும். அவருடைய நினைவைப் போற்றுவது, அவருடைய கருத்துக்களுக்கு வாழ்க்கையில் இடம் அளிப்பது, கருணையும் சக்தியும் ஒன்றிணைந்த வாழ்க்கையை அமைத்துக் கொள்வது, இவையே சுவாமிஜிக்கு நாம் செலுத்தும் அஞ்சலி ஆகும்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# விவேகானந்த பஞ்சகம்



விவேகானந்தன் இதழின்
முதல் ஆசிரியரான
சுவாமி விபுலானந்தர்
அருளியது.

வாழியநின் றிருநாமம் ! வாழியவிந் நாடு
வையகமே சிறந்ததென வானகத்ரோர் வழுத்த
ஆழியிறை யுலகிருந்தோ அரனுலக மிருந்தோ
அருமுனிவ ருலகிருந்தோ அவனிமிசை யடைந்தாய் ?

அடைந்ததுவும் அருட்டிறத்தின்
சிறப்பையுரைப் பதற்கோ ?
ஆண்மையிது வெனக் காட்டிக்
கீழ்மையகற் றுதற்கோ
முடிந்தமுடி பாகியவே
தாந்தத்தின் பொருளை
மொழிந்தவித்தை தனையகற்றி
முத்திநிலை தரற்கோ ?

நிலையிழந்த பாரதத்தின் குறையனைத்து நீக்கி
நிலைநிறுத்தும் பொருட்டோவிந் நிலவுலகின் மாந்தர்
கலைமொழிந்த பொருளனைத்துங் கடந்து நின்ற வுண்மைக்
கந்தழியைச் சார்வதற்கோ வந்தனைசீர்க் குருவே !

சீர்மருவு காசினியில் ஞானவொளி பரப்பத்
தேயத்துட் பாரதமே சிறந்தென விசைப்ப
ஈரிருபா னாண்டுறைந்தா யெமது தவக் குறையோ
இளவயதி லெமைவிடுத்தா யளவிலருட் கடலே !
அருட்செல்வஞ் செல்வமென அருந்தமிழ் வள்ளுவனார்
அறைந்த மொழிப் பொருளுணர்ந்தோய் !
அருந்துறவோர்க் கரசே !
பொருட்செல்வம் மனைசுற்றம் புகழ்துறந்த நினக்குப்
புவியனைத்துஞ் சுற்றமே; புகழனைத்து நினதே.
வாழியநின் றிருநாமம் ! வாழிய விந் நாடு !



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இந்து உன்னால் மகிமை பெற்றது

சோ. பத்மநாதன்.

ராகம் : பிருந்தாவன சாரங்கா தாளம் ; ஆதி

பல்லவி

பாதம் பதித்த இடம் புனித முற்றது – இந்துப்
பள்ளித்தலம் உன்னால் மகிமை பெற்றது
(பாதம்)

அனுபல்லவி

வேத முரசறைந்து மீண்டும் வந்தனை – அந்த
மேலை உலகளந்து ஈண்டு வந்தனை
(பாதம்)

சரணங்கள்

இந்து நெறியால் உலகுய்யும் என்றனை
எழுமின், விழிமின், முன்செல்க என்றனை
தொண்டர் அணியில் வந்து சேரும் என்றனை
தூய பணிகள் உள வாரும் என்றனை
(பாதம்)

சாதிப் பிரிவினைகள் போக முன் வந்தாய்–வெற்றுச்
சடங்குச் சலசலப்பு சாய முன் வந்தாய்
ஏழை எளிய மக்கள் வாழ முன் வந்தாய் – சிங்க
ஏறென்றிளைஞர் குலம் நிமிர முன் வந்தாய்
(பாதம்)

# விவேகானந்தரும் வாலிபரும்

காரை. எம். பி. அருளானந்தன்

கோடானு கோடிமக்கள் வறுமை தீமை
குருடாக்கும் அறியாமை இவற்றில் மூழ்கி
வாடாமல் வாடுகின்ற இழிவைப் போக்க
வாலிபனே ! வா ! என்றார் விவேகானந்தர்
தேடாமல் உன் ஆற்றல் தேயுமானால்
தேம்பி அழும் காலமுனைத் தேடிவரும்
நாடாமல் நலிவுகாணும் இளைஞனே
நல்லவனாய் நீமாற நன்மை செய்வாய் !

நன்றி : யாழ் / உதயன் பத்திரிகை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# விவேகானந்தன்



இதழ் 3

# நகையும்

# சிற்பொழிவுகளும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

- 1893 செப். 11 – வரவேற்புக்கு மறுமொழி
- 1893 செப். 15 – நாம் ஏன் ஒத்துப் போவதில்லை?
- 1893 செப். 19 – இந்து சமயம்
- 1893 செப். 20 – சமயம் இந்தியாவின் அவசரத் தேவையன்று
- 1893 செப். 26 – புத்த சமயம் இந்து சமயத்தின் நிறைவு
- 1893 செப். 27 – நிறைவு நாள் உரை




## வரவேற்புக்கு மறுமொழி

*(1893 செப்டம்பர் 11ஆம் நாள் சிகாகோ நகரத்தில் கூடிய அனைத்துலகச் சமயப் பெருமன்றத்தில் நிகழ்த்திய உரை)*

அமெரிக்க நாட்டுச் சகோதரிகளே ! சகோதரர்களே!

இன்பமும் இதமும் கனிந்த உங்கள் வரவேற்புக்கு மறுமொழி கூற, இப்பொழுது உங்கள் முன் நிற்கிறேன். என் இதயத்தில் மகிழ்ச்சி பொங்குகிறது. அதனை வெளியிட வார்த்தைகள் இல்லை. உலகத்தின் மிகப் பழமை வாய்ந்த துறவியர் பரம்பரையின் பெயரால் உங்களுக்கு நன்றி கூறுகிறேன். அனைத்துச் சமயங்களின் அன்னையின் பெயரால் நன்றி கூறுகிறேன். பல்வேறு இனங்களையும் பிரிவுகளையும் சார்ந்த கோடிக்கணக்கான இந்துப் பெருமக்கள் பெயரால் நன்றி கூறுகிறேன்.

இம்மேடையில் அமர்ந்துள்ள பேச்சாளர்களில் சிலர் கீழ்த்திசை நாடுகளிலிருந்து வந்துள்ள பிரதிநிதிகளைப் பற்றிக் குறிப்பிடும்போது, 'வேற்றுச் சமய நெறிகளை வெறுக்காத பண்பினைப் பல நாடுகளுக்கு எடுத்துச் சென்ற பெருமை தொலைவிலுள்ள நாடுகளிலிருந்து வந்துள்ள இவர்களைத்தான் சாரும்' என்று உங்களுக்குக் கூறினார்கள். அவர்களுக்கும் என் நன்றி. பிற சமயக் கொள்கைகளை வெறுக்காது மதித்தல், அவற்றை எல்லோரும் ஏற்றுக் கொள்ளுதல் ஆகிய இரு பண்புகளை உலகத்துக்குப் புகட்டிய சமயத்துக்குரியவன் என்பது குறித்து நான் பெருமை அடைகிறேன். எதையும் வெறுக்காது மதிக்க வேண்டும் என்கிற கொள்கையை நாங்கள் நம்புவதோடு, எல்லாச் சமயங்களும் உண்மையானவையே என்று ஒப்புக் கொள்கிறோம்.

உலகிலுள்ள அனைத்து நாடுகளாலும் அனைத்துச் சமயங்களாலும் கொடுமைப்படுத்தப் பட்டவர்களுக்கும், நாட்டை விட்டு விரட்டியடிக்கப்பட்டவர்களுக்கும் புகலிடமளித்த நாட்டைச் சேர்ந்தவன் என்பதில் பெருமைப்படுகிறேன். உரோமானியரின் கொடுமையால், தங்கள் புனிதத் திருக்கோயில் சிதைந்து சீரழிந்து அதே வருடமே தென்னிந்தியாவுக்கு வந்து எங்களிடம் தஞ்சமடைந்த அந்தக் கலப்பற்ற இஸ்ரேல் மரபினர்களில் எஞ்சி நின்றவர்களை இதயமாரத் தழுவிக் கொண்டவர்கள் நாங்கள் என்று கூறிக் கொள்வதில் பெருமைப்படுகிறேன். சிறந்த சொராஸ்திரிய சமயத்தினரில் எஞ்சியிருந்தோருக்கு அடைக்கலமளித்து, இன்னும் பேணிக்காத்து வருகிற சமயத்துக்கு உரியவன் என்று பெருமை கொள்கிறேன்.

என் அருமைச் சகோதரர்களே ! எனது பிள்ளைப் பருவத்திலிருந்தே நான் பாடிப்பயின்று வருவதும், கோடிக்கணக்கான மக்களால் நாள்தோறும் இன்றும் தொடர்ந்து ஓதப்பட்டு வருவதுமான கீதத்தின் ஒரு சில வரிகளை இங்கு, உங்கள் முன் குறிப்பிட விரும்புகிறேன்.

எங்கெங்கோ தோன்றுகின்ற ஓடையெல்லாம்
இறுதியிலே கடலில் சென்று
சங்கமாம் பான்மையினைப் போன்றுலகோர்
பின்பற்றும் தன்மை யாலே
துங்குமிகு நெறிபலவாய் நேராயும்
வளைவாயும் தோன்றி னாலும்
அங்குஅவைதாம் எம்பெரும ! ஈற்றில் உனை
அடைகின்ற ஆறே யன்றோ !

இதுவரை நடந்துள்ள மாநாடுகளில், மிக மிகச் சிறந்ததாகக் கருதக்கூடிய இப்பேரவை, கீதையில் உபதேசிக்கப்பட்டுள்ள பின்வரும் அற்புதமான ஓர் உண்மையை


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உலகத்துக்குப் பிரகடனம் செய்துள்ளது என்பதைக் குறிப்பிட விரும்புகிறேன். "யார் எவ்வழியைப் பின்பற்றி என்னையடைய முயன்றாலும், நான் அவர்களை அடைவேன். பலரும் பல வழிகளில் முயல்கிறார்கள், எல்லா வழிகளும் இறுதியில் என்னையே அடைகின்றன."

அளவுக்கு மீறிய மதப்பற்று, மூடபக்தி இவற்றிலிருந்து தோன்றிய மதவெறி, இவை இந்த அழகிய உலகை நெடுநாளாக இறுகப் பற்றியுள்ளன; வன்முறையை நிரப்பியுள்ளன; அடுத்தடுத்து உலகை உதிரப் பெருக்கில் மூழ்கடித்து நாகரித்தை அழித்து, எத்தனையோ சமுதாயங்களை நம்பிக்கை இழக்கச் செய்துவிட்டன. அந்தப் பயங்கரப் பைசாசக் கொடூரச் செயல்கள் தோன்றாதிருப்பின் மனித சமுதாயம் இன்றிருப்பதை விடப் பன்மடங்கு உயர்நிலை எய்திருக்கும்!

ஆனால், அவற்றுக்கு அழிவு காலம் நெருங்கி விட்டது. இன்று காலையில் இந்தப் பேரவையின் தொடக்கத்தைக் குறிப்பிட ஒலித்த மங்கல மணி, எல்லா மத வெறிகளுக்கும், வாளாலும் எழுதுகோலாலும் நடைபெறுகின்ற கொடுமைகளுக்கும், ஒரே குறிக்கோளை அடையப் பல்வேறு வழிகளில் சென்று கொண்டிருக்கும் மக்களிடையே நிலவும் இரக்கமற்ற உணர்ச்சிகளுக்கும் சாவு மணியாகட்டும் என்று நான் ஆர்வமுடன் வேண்டுகிறேன்.

## நாம் ஏன் ஒத்துப் போவதில்லை ?

*(1893 செப்டம்பர் 15ஆம் நாள்)*

ஒரு சிறுகதை சொல்லப் போகிறேன். "நாம் ஒருவரையொருவர் வசை பாடுவதை நிறுத்த வேண்டும்" என்று இப்பொழுது பேசி முடித்த நாவன்மை படைத்த பேச்சாளர் கூறியதைக் கேட்டீர்கள். நமக்குள் இவ்வளவு மாறுபாடு இருப்பதைப் பற்றி அவர் வருத்தப்பட்டார். இந்த மாறுபாடுகளுக்குக் காரணம் என்ன என்பதை விளக்க, ஒரு கதை சொல்ல வேண்டுமென்று நினைக்கிறேன்.

தவளை ஒன்று, ஒரு கிணற்றில், பல நாட்களாக வசித்து வந்தது. அந்தக் கிணற்றிலேயே பிறந்து, அங்கேயே வளர்ந்தது அந்தச் சின்னஞ் சிறிய தவளை. அந்தத் தவளை கண்களை இழந்து விட்டதா, இல்லையா என்று சொல்வதற்கு நல்ல வேளையாக, அங்கே பரிணாமவாதிகள் யாரும் இல்லை. ஆனால், நம் கதையைப் பொறுத்தவரையில், அதற்குக் கண்கள் இருந்தன என்றே வைத்துக் கொள்வோம். அந்தத் தவளை நாள்தோறும் நீரிலிருந்து புழு பூச்சிகளையும் கிருமிகளையும் வெகு சுறுசுறுப்பாக அகற்றிச் சுத்தப்படுத்தியது. அந்தச் சுறுசுறுப்பு, நம் தற்காலக் கிருமி ஆராய்ச்சியாளர்களுக்கு இருந்தால் அது அவர்களுக்குப் பெருமை தரும் விஷயமாகும். அவ்வாறே வாழ்ந்ததால் அத்தவளை சிறிது பருத்தும் விட்டது.

ஒரு நாள் கடலில் வாழ்ந்து வந்த தவளையொன்று அங்கு வந்து, அந்தக் கிணற்றில் விழுந்து விட்டது.

"நீ எங்கிருந்து வருகிறாய் ?"

"கடலிலிருந்து"

"கடலா ? அது எவ்வளவு பெரியது ? எனது கிணற்றளவு பெரிதாயிருக்குமா ?" என்று கூறி, ஒரு பக்கத்திலிருந்து, எதிர்ப்பக்கத்திற்குத் தாவிக் குதித்தது கிணற்றுக் தவளை.

'நண்பா ! இந்தச் சின்னக் கிணற்றோடு எப்படிக் கடலை ஒப்பிட முடியும் ?' என்று கேட்டது கடல் தவளை.

கிணற்றுத் தவளை மறுபடியும் ஒரு தாண்டு தாண்டி, "நீ சொல்லும் கடல் இவ்வளவு பெரிதாயிருக்குமா ?" என்று கேட்டது.

"சேச்சே ! என்ன முட்டாள்தனம் ! கடலை உன் கிணற்றோடு ஒப்பிடுவதா ?"

'சரி, சரி என் கிணற்றைவிட எதுவும் பெரிதாக இருக்க முடியாது. கண்டிப்பாக, இதைவிடப் பெரிதாக இருக்க முடியாது. இவன் சொல்வது அப்பட்டமான பொய்; இவனை வெளியே விரட்டு !' என்று கூறிவிட்டது அந்தக் கிணற்றுத் தவளை.

இத்தனை காலமாக இருந்துள்ள கஷ்டம் இதுதான்.

நான் ஓர் இந்து. நான் என் சிறிய கிணற்றுக்குள் இருந்து கொண்டு, உலகம் முழுவதும் என் சிறு கிணறுதான் என்று நினைக்கிறேன். கிறிஸ்தவன் தன் சமயமாகிய சிறு கிணற்றுக்குள் உட்கார்ந்து கொண்டு, உலகம் முழுவதும் தன் கிணறுதான் என்று நினைக்கிறான். அவ்வாறே முகம்மதியனும் தன் சமயமாகிய சிறு கிணற்றில் உட்கார்ந்து கொண்டு, அது தான்முழு உலகம் என்று நினைக்கிறான். நம்முடைய இச்சிறிய உலகின் வேலிகளைத் தகர்த்தெறிய, அமெரிக்கர்களாகிய நீங்கள் எடுத்துக் கொண்டிருக்கும் பெரிய முயற்சிக்காக நான் உங்களுக்கு நன்றி செலுத்த வேண்டும். வருங்காலத்தில், உங்கள் விருப்பம் நிறைவேற இறைவன் அருள் புரிவான் என்று நம்புகிறேன்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## இந்து சமயம்

*(1893 செப்டம்பர் 19ஆம் நாள் சமயப் பெருமன்றத்தில் வாசிக்கப்பட்ட உரை).*

வரலாற்றுக்கு முற்பட்ட காலத்திலேயே தோன்றி, இன்றும் உலகத்தில் நிலைத்து நிற்கும் சமயங்கள் மூன்று. அவை இந்து சமயம், சொராஸ்திரிய சமயம், யூத சமயம் ஆகும். அவை அனைத்தும் பல கடுமையான அதிர்ச்சிகளுக்கு உட்பட்டும், இன்றும் நிலைத்திருந்து, தங்கள் உள்வலிமையை நிரூபிக்கின்றன.

ஆனால் யூத சமயம் கிறிஸ்தவ சமயத்தை ஈர்த்துத் தன்னுடன் இணைத்துக் கொள்ளத் தவறியது மட்டுமன்றி, அனைத்தையும் வெற்றி கொண்டதும் தான் ஈன்றதுமான கிறிஸ்தவ சமயத்தால் பிறந்த இடத்திலிருந்தே விரட்டி அடிக்கப்பட்டு விட்டது. தங்கள் பெருஞ் சிறப்புக்குரிய சமயத்தைப் பற்றி நினைவுபடுத்த ஒரு சில பார்சிக்காரர்கள் மட்டுமே இன்று வாழ்ந்து வருகிறார்கள்.

இந்திய மண்ணில், ஒன்றன்பின் ஒன்றாக, பல கிளைச் சமயங்கள் தோன்றின. அவை வைதிக சமயத்தின் அடித்தளத்தையே உலுக்கியது போலத் தோன்றின. ஆனால் பயங்கரமான நில நடுக்கம் ஏற்பட்டால், எப்படிக் கடலானது சிறிது நேரம் பின்னோக்கிச் சென்று, பின்னர் ஆயிரம் மடங்கு சீற்றத்தோடு மீண்டும் பெருகி வந்து அனைத்தையும் வளைத்துக் கொள்கிறதோ, அதே மாதிரி, மக்களிடையே ஏற்பட்ட கொந்தளிப்பு அடங்கியதும், அந்தக் கிளைச் சமயங்கள் எல்லாம் ஒன்றாகி, மிகப் பெரிய தாய்ச் சமயத்தோடு இரண்டறக் கலந்து விட்டன.

அறிவியலின் தற்காலக் கண்டு பிடிப்புகள் கூட, எந்த வேதாந்தத்தின் எதிரொலிகள் போன்று உள்ளனவோ, அந்த வேதாந்தத் தத்துவத்தின் மிக உயர்ந்த ஆன்ம ஞானக் கொள்கைகள், பல்வேறு புராணக் கதைகளைக் கொண்ட உருவ வழிபாடு என்னும் கீழான கருத்துக்கள், பௌத்தர்களுடைய சூன்ய வாதம், சமணர்களின் நாத்திகவாதம், ஆகிய அனைத்துக் கொள்கைகளுக்கும் இந்து சமயத்தில் இடம் உள்ளது.

''அப்படியானால் ஒன்றுக் கொன்று மிகவும் வேறுபட்டு நிற்கும் இவை அனைத்தும் ஒன்று சேரும் பொதுமையம்தான் எங்கே இருக்கிறது?'' என்ற வினா எழுகிறது. பார்ப்பதற்கு பயனற்ற மாறுபாடுகளாகத் தோன்றும் இவை அனைத்தும் இணைந்து நிற்கும் அடித்தளம் தான் எங்கிருக்கிறது ? இந்த வினாவுக்குத்தான் நான் இப்பொழுது விடை அளிக்க முயலப் போகிறேன்.

கடவுளால் வெளிப்படுத்தப்பட்ட வேதத்திலிருந்து இந்துக்கள் தங்கள் சமயத்தைப் பெற்றுள்ளனர். வேதத்திற்குத் துவக்கமும் இல்லை முடிவும் இல்லை என்பது அவர்கள் கூற்று. ஒரு நூலுக்குத் துவக்கமோ முடிவோ இல்லாதிருக்குமா? அது அபத்தம் என்று இந்தச் சபையிலுள்ள உங்களுக்குத் தோன்றும். ஆனால் வேதங்கள் என்று குறிப்பிடப்படுவது நூல்கள் அன்று. வெவ்வேறு காலங்களில் திரட்டி வைக்கப்பட்ட ஆன்மிக விதிகளின் கருவூலமே வேதம். புவி ஈர்ப்பு விதி, அது கண்டறியப்படுமுன்னரே இருந்தது. மனித இனம் இதை மறந்துவிட்டாலும் அது இருக்கும். அதேமாதிரித்தான் ஆன்மிக உலகத்து விதிகளும் உள்ளன, ஓர் ஆன்மாவுக்கும், இன்னொரு ஆன்மாவுக்கும், இன்னும் தனிப்பட்ட ஆன்மாக்களுக்கும் அனைத்து ஆன்மாக்களின் தந்தைக்கும் இடையே உள்ள தார்மிக, ஆன்மிக, நீதிநெறி உறவுகள், அவை கண்டு பிடிக்கப்படுவதற்கு முன்னரும் இருந்தன. நாம் அவற்றை மறந்தாலும் இருக்கும்.

இந்த விதிகளைக் கண்டறிந்தவர்கள் ரிஷிகள் எனப்படுவர். பூரணத்துவம் அடைந்தவர்கள் என்று அவர்களை நாங்கள் போற்றுகிறோம். அவர்களில் மிகமிகச் சிறந்தவர்களில் சிலர் மங்கையர் என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

இந்த விதிகள், அவை விதிகளாதலால், முடிவில்லாமல் இருக்கலாம். ஆனால் தொடக்கம் இருந்திருக்க வேண்டுமே என்று கூறலாம். படைப்பு, தொடக்கமும் முடிவும் இல்லாததே என்று வேதங்கள் போதிக்கின்றன. பிரபஞ்ச சக்தியின் மொத்த அளவு என்றும் ஒரே அளவில்தான் இருக்கிறது என்று விஞ்ஞானம் உறுதிப்படுத்தியிருக்கிறதாகச் சொல்லப்படுகிறது. அப்படியானால், பிரபஞ்சத்தில் ஒன்றுமே இருந்திராத ஒரு காலம் இருந்ததானால், இப்பொழுது காணப்படும் சக்தி அனைத்தும் எங்கிருந்தது? அது கடவுளிடம் ஒடுக்க நிலையில் இருந்தது என்று சிலர் கூறுகிறார்கள். அப்படியானால் கடவுள், சில காலம் ஒடுக்க நிலையிலும் சில காலம் இயக்க நிலையிலும் இருக்கிறார் என்றாகிறது. அதாவது, கடவுள் மாறக்கூடிய தன்மையர் என்றாகிறது. மாறக்கூடிய பொருள்கள் யாவும் கூட்டுப்பொருட்கள். கூட்டுப்பொருள்கள் மாறுதலை அடைய வேண்டும். அதாவது அழிய வேண்டும். எனவே, கடவுள் இறந்து விடுவார் என்றாகிறது. இது அபத்தம். ஆகையால் படைப்பு இல்லாதிருந்த காலம் என்றும் இருந்ததில்லை.

இதை ஓர் உவமையால் விளக்கலாம் என்று நினைக்கிறேன். படைப்புத் தொழிலும் படைப்பவனும், தொடக்கமும் முடிவும் இல்லாது சமதூரத்தில் ஓடுகின்ற இரண்டு இணைகோடுகள். கடவுள் எப்பொழுதும் செயல்பட்டுக் கொண்டிருக்கும் பரம்பொருள். அதன் சக்தியால், ஒழுங்கற்ற



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நிலையிலிருந்து பல ஒழுங்கு முறைகள் ஒன்றன்பின் ஒன்றாகத் தோன்றி, சிறிது காலம் அப்படியே இருந்து, பின் அழிகின்றன. இதைத்தான் அந்தணச் சிறுவன் தினம் ஓதுகிறான்; 'சூரியனையும் சந்திரனையும், பழைய கல்பங்களில் இருந்த சூரியர்களையும் சந்திரர்களையும் போன்றே இறைவன் படைத்தான்.

இங்கு நான் நிற்கிறேன். என் கண்களை மூடிக்கொண்டு, 'நான், நான், நான்' என்று என்னைப் பற்றி நினைத்தால் என்னுள் என்ன தோன்றுகிறது ? உடலைப் பற்றிய எண்ணம் தான் தோன்றுகிறது. அப்படியானால் சடப் பொருள்களின் மொத்த உருவம் தானா நான். 'இல்லை' என்கின்ற வேதங்கள். நான் உடலில் உறைகின்ற ஆன்மா; நான் உடல் அன்று. உடல் அழிந்து விடும். ஆனால் நான் அழிய மாட்டேன். நான் இந்த உடலில் இருக்கிறேன். இது வீழ்ந்துவிடும், ஆனால் நான் வாழ்ந்து கொண்டே இருப்பேன். நான் முன்னமும் வாழ்ந்து கொண்டுதான் இருந்தேன். ஆன்மா படைக்கப்பட்டதன்று. படைக்கப்பட்டதாயின் அது பல பொருள்களின் சேர்க்கையாகும். அப்படியானால் வருங்காலத்தில் அது கண்டிப்பாக அழிந்து போகவேண்டும். ஆன்மா படைக்கப்பட்ட தாயின் அது இறக்க வேண்டும்.

சிலர் பிறக்கும்போதே இன்பத்தில் பிறந்து, உடல் வளத்தோடும், வனப்போடும், மனவலிமையோடும், வசதிகள் அனைத்தும் பெற்று வாழ்கிறார்கள். மற்றும் சிலர் துயரநிலையில் பிறக்கிறார்கள். சிலர் முடமாகவும் நொண்டியாகவும் பிறக்கிறார்கள். சிலர் முட்டாள்களாகவே பிறந்து, வாழ்க்கை முழுவதும் இழுபறி நிலையிலேயே உழன்று, காலம் கடத்துகிறார்கள்.

அவர்கள் அனைவரும் படைக்கப்பட்டவர்கள் என்றால், நேர்மையும் கருணையுமுள்ள கடவுள், ஒருவரை இன்பத்தில் திளைப்பவராகவும் இன்னொருவரைத் துன்பத்தில் உழல்பவராகவும் ஏன் படைக்க வேண்டும் ? அவர் ஏன் அத்தனை வேறுபாடு காட்டவேண்டும் ? இந்தப் பிறவியில் துன்பப்படுகிறவர்கள் அடுத்த பிறவியில் இன்பம் அடைவார்கள் என்று கூறுவது பொருந்தாது. நேர்மையும், கருணையும் கொண்ட அந்தக் கடவுளின் ஆட்சியில் ஏன் ஒருவர் துயருற வேண்டும் ?

ஆகவே, கடவுள் என்கிற படைப்பாளர் இருக்கிறார் என்று கொள்வது இந்த முரண்பாட்டைத் தெளிவுபடுத்தவில்லை. எல்லா வல்லமையும் உள்ள ஒருவர் கொடிய கட்டளைகள் இடுகிறார் என்பதைத்தான் இது எடுத்துக் காட்டுகிறது. அப்படியானால், ஒருவன் இன்புறுதற்கோ துன்புறுதற்கோ உரிய காரணங்கள், அவன் பிறப்பதற்கு முன்னே இருந்திருக்க வேண்டும். அவையே அவனது முற்பிறப்பின் வினைகள். ஒருவனுடைய உடல், உள்ளம் ஆகியவற்றின் தன்மைகள் அவனுடைய பரம்பரையிலிருந்து வருவது என்று காரணம் காட்டப்படுகிறதல்லவா ?

வாழ்க்கையில் இரண்டு இணைகோடுகள் உள்ளன. ஒன்று மனத்தைப் பற்றியது. இன்னொன்று சடப்பொருளைப் பற்றியது. சடப்பொருளும் அதன் மாற்றங்களும் மட்டுமே நம்முடைய நிலைக்குக் காரணமென்றால் ஆன்மா என்ற ஒன்று இருக்கிறது என்று கொள்ள வேண்டிய அவசியம் இல்லை. ஆனால் சடத்திலிருந்து எண்ணம் தோன்றியது என்று நிரூபிக்க முடியாது. தத்துவப்படி ஒரே ஒரு பொருள்தான் இருக்க முடியுமானால் ஆன்மா ஒன்றே ஒன்றுதான் இருக்க வேண்டும் என்று ஏற்படுகிறது. அதே மாதிரி சடப்பொருளும் ஒன்றே ஒன்று தான் இருக்கவேண்டும். ஆனால் அவை எதுவும் இங்கு அவசியமில்லை.

பரம்பரையின் மூலம் உடல்கள் சில தன்மைகளைப் பெறுகின்றன என்பதை நாம் மறுக்க முடியாது. ஒரு தனிப்பட்ட உடலில், ஒரு தனிப்பட்ட மனம், ஒரு தனிப்பட்ட முறையில் தான் இயங்க முடியும் என்பதை மட்டும்தான் இது காட்டுகிறது. கடந்தகால விளைவுகளின் காரணமாக, ஆன்மாவுக்குச் சில தனிப்பட்ட வாசனைகள் ஏற்படுகின்றன. தனிப்பட்ட வாசனைகளுடன் கூடிய ஆன்மா குண ஒற்றுமை விதிமுறைக்கிணங்க (Law of affinity) எந்த உடலில் பிறந்தால் அந்த வாசனைகளை வெளிப்படுத்த முடியுமோ, அந்த உடலில் பிறக்கிறது. இது அறிவியலுக்கு ஒத்தது. ஏனெனில் அறிவியல் எதையும் பழக்கத்தைக் கொண்டே விளக்க விரும்புகிறது. பழக்கமோ எதையும் திரும்பத் திரும்பத் செய்வதால்தான் உண்டாகிறது. ஆகவே, புதிதாகப் பிறந்த ஓர் ஆன்மாவின் தன்மைகளை விளக்குவதற்க, அது அந்தச் செயலைத் திரும்பத் திரும்பத் செய்திருக்கவேண்டும் என்று வருகிறது. அத்தன்மைகள் இப்பிறவியில் பெறப்பட்டவை அல்லனவாதலால், அவை முந்தைய பிறப்புகளிலிருந்து வந்திருக்க வேண்டும்.

இன்னொரு கருத்தும் இருக்கிறது. இவையெல்லாம் சரியென்றே வைத்துக் கொள்வோம். அப்படியானால் ஏன் எனக்குப் போன பிறப்பின் செயல்கள் ஒன்றும் நினைவில் இல்லை ? இதை எளிதில் விளக்க முடியும்.

இப்போது நான் ஆங்கிலம் பேசிக் கொண்டிருக்கிறேன். அது என் தாய் மொழியன்று. உண்மையில் என் தாய் மொழிச் சொற்கள் ஒன்றும் என் அறிவுத் தளத்தில் இப்பொழுது இல்லை. ஆனால் அச்சொற்களைப் பேச முயல்வேனானால் அவை உடனே விரைந்து வந்துவிடும். மனக்கடலின் மேற்பரப்பு மட்டுமே அறிவுத்தளம் என்றும்,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆழத்திலே தான்அனுபவங்கள் அனைத்தும் திரண்டு கிடக்கின்றன என்றும் அது காட்டுகிறது. முயலுங்கள், கஷ்டப்படுங்கள் அவை வெளிப்படும். பழம்பிறப்பு உங்களுக்குப் புலனாகும்.

இது நேரான, நிரூபிக்கப்பட்ட சான்று. நிரூப்பிக்கப்படுவது தான் ஒரு கொள்கை சரியென்பதற்குச் சான்று. உலகத்துக்கு ரிஷிகள் விடுக்கும் அறைகூவல் இதுவே; 'நினைவுக் கடலின் ஆழத்தைக் கிளறிவிடும் இரகசியத்தை நாங்கள் கண்டு பிடித்துள்ளோம். முயலுங்கள், முயன்றால் நீங்கள் நிச்சயமாகப் பழம்பிறப்பின் நினைவுகளை முழுமையாகப் பெறுவீர்கள் !'

எனவே, தான் ஒரு ஆன்மா என்பதை இந்து நம்புகிறான். அதனை பிளக்காது, நெருப்பு எரிக்காது, நீர் கரைக்காது, காற்று உலர்த்தாது. ஒவ்வொரு ஆன்மாவும் சுற்றெல்லையில்லாத ஒரு வட்டம். அதன் மையம் உடலில் பொருந்தியுள்ளது. இந்த மையம் ஓர் உடலிலிருந்து மற்றோர் உடலுக்கு மாறிச் செல்வதே மரணம் என்ற உண்மையை இந்து நம்புகிறான். சடப்பொருளின் நிலைகளுக்கு ஆன்மா கட்டுப்பாடற்றது, வரம்பற்றது, புனிதமானது, தூய்மையானது, முழுமையானது. ஆனால் ஏதோ காரணத்தினால் அது சடத்துடன் இணைந்து விட்டது. அது தன்னை ஒரு சடமாகவே கருதுகிறது.

சுதந்திரமானதும், நிறைவானதும், தூய்மையானதுமான அவ்வான்மா ஏன்இவ்வாறு சடத்திற்கு அடிமையாக இருக்கவேண்டும் என்பது அடுத்த கேள்வி, முழுமையான ஆன்மா, தான் முழுமையற்றது என்ற நம்பிக்கையில் எவ்வாறு மயங்கி விடமுடியும் ? "இத்தகைய வினாவுக்கு இங்கு இடமில்லை" என்று கூறி, இந்துக்கள் இதைத்தட்டிக் கழிப்பதாகச் சொல்லப்படுகிறது. சில சிந்தனையாளர்கள், இதற்கு இப்படி விடைகாண விரும்புகிறார்கள். பாதி முழுமைபெற்ற ஒன்று அல்லது அதற்கு மேற்பட்ட சில இருப்பதாகக் கூறி, மீதி விஷயங்களைப் பெரிய விஞ்ஞானச் சொற்களைக் கொண்டு மழுப்புகிறார்கள்.

பெயர் இடுவது விளக்கமாகி விடாது. வினா அப்படியேதான் இருக்கும். எப்படிப் பாதி, முழுமையாக ஆக முடியும் ? தூய்மையும் நிறைவும் உள்ள பொருள் தன் இயல்பை எப்படி அணுவளவேனும் மாற்றிக் கொள்ள முடியும் ?

ஆனால் இந்து நேர்மையானவன். அவன் குதர்க்கவாதம் செய்து தப்பித்துக் கொள்ள விரும்பவில்லை. கேள்விக்கு ஆண்மையுடன் பதில் சொல்லும் துணிவு அவனுக்குண்டு. அவன் பதில் இதுதான்: "எனக்குத் தெரியாது, பூரணமான ஆன்மா தான் பூரணமற்றது என்றும், சடத்துடன் இணைக்கப்பட்டு, அதனால் பாதிக்கப்படுகிறது என்று ஏன் தன்னைப் பற்றி நினைக்க ஆரம்பித்தது என்று எனக்குத் தெரியாது."

ஆனால் உண்மை என்னவோ, அதுதான். ஒவ்வொருவரும் தன்னை உடலாக நினைத்துக் கொண்டிருப்பது உண்மைதான். தான் உடல் என எண்ணிக் கொள்வது ஏன் என எந்த இந்துவும் விளக்க முயல்வதில்லை. அது கடவுளின் சித்தம் எனப் பதில் அளிப்பது விளக்கமாகாது. 'எனக்குத் தெரியாது' என்று இந்து கூறுகிறானே. அதற்குமேல் ஒன்றும் இல்லை.

ஆகவே, மனித ஆன்மா நிலையானது. அழிவற்றது, நிறைவானது, எல்லையற்றது. மரணம் என்பது ஓர் உடலினின்றும் மற்றோர் உடலுக்கு இடம் பெயர்தலேயாகும். கடந்த கால வினைகளால் நிகழ்காலம் தீர்மானிக்கப்படுகிறது. நிகழ்காலத்தால் எதிர்காலம் தீர்மானிக்கப்படுகிறது. பிறப்புக்குப் பிறப்பு, இறப்புக்கு இறப்பு, ஆன்மா மேல் நிலைக்கு உயர்ந்தோ அல்லது கீழ் நிலைக்குத் தாழ்ந்தோ சென்று கொண்டிருக்கும்.

ஆனால் இங்கு மற்றொரு வினா எழுகிறது. சூறாவளியில் சிக்கி, ஒரு கணம் கடல் அலையின் நுரைநிறைந்த உச்சிக்குத் தள்ளப்பட்டு, அடுத்த கணமே, 'ஆ' வென்று வாயைப் பிளந்து கொண்டிருக்கும் பள்ளத்தில் வீழ்த்தப்பட்டு, நல்வினை தீவினைகளின் ஆதிக்கத்தின் கீழ் உருண்டு உழன்று கொண்டிருக்கும் ஒரு சிறு படகா மனிதன்? கடுஞ்சீற்றமும், படுவேகமும், தணியாத தன்மையும் கொண்ட காரண காரியம் என்னும் நீரோட்டத்தில் அகப்பட்டுக்கொண்டு, அழிந்து போகும் சக்தியற்ற, உதவியற்ற பொருளா மனிதன்? இல்லை விதவையின் கண்ணீரைக்கண்டும், அனாதையின் கம்பலையைக் கேட்டும் சற்றும் நிற்காது, தான் செல்லும் வழியிலுள்ள அனைத்தையும் நசுக்கிக் கொண்டு உருண்டு ஓடும் காலம் என்னும் சக்கரத்தின் அடியில் எறியப்பட்ட விட்டில் பூச்சியைப் போன்றவனா மனிதன் ?

இதனை நினைக்கும்போது நெஞ்சு தளர்வுறுகிறது. ஆனால் இதுதான் இயற்கையின் நியதி. "நம்பிக்கையே கிடையாதா? தப்பிக்க வழியே கிடையாதா?" நம்பிக்கை இழந்த இதயத்தின் அடித்தளத்திலிருந்து எழுந்த குரல் இதுதான். அக்குரல் அருளாளரின் அரியாசனத்தை அடைந்ததும், நம்பிக்கையும் ஆறுதலும் அளிக்கும் சொற்கள் வெளித் தோன்றின. அவை ஒரு வேதகாலத்து முனிவரைக் கிளர்ந்தெழச் செய்ய, அவர் உலகின் முன்னே எழுந்து நின்று, எக்காளத் தொனியுடன், பின்வரும் நற்செய்தியை முழக்கினார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"ஓ ! அழியாத பேரின்பத்தின் குழந்தைகளே! கேளுங்கள். உயர் கோளங்களில் வாழும் நீங்களும் கேளுங்கள். அனைத்து இருளையும் அனைத்து மாயையும் கடந்த அந்த ஆதி முழு முதலை நான் கண்டு விட்டேன். அவரை அறிந்தால் தான் நீங்கள் மீண்டும் இறப்பிலிருந்து காப்பாற்றப்படுவீர்கள்."

"அழியாத பேரின்பத்தின் குழந்தைகளே !" ஆ, ஆ ! எவ்வளவு இனிமையான, எவ்வளவு நம்பிக்கை ஊட்டும் பெயர்! அருமைச் சகோதரர்களே ! அந்த இனிய பெயரால் உங்களை நான் அழைக்க அனுமதி தாருங்கள். அழியாத பேரின்பத்தின் வாரிசுகளே ! இந்து உங்களை பாவிகள் என்று அழைக்க மறுக்கிறான். நீங்கள் ஆண்டவனின் குழந்தைகள், அழியாத பேரின்பத்தின் பங்குதாரர்கள், தூய்மையானவர்கள், பூரணர்கள்! வையத்துள் வாழும் தெய்வங்களே ! நீங்கள் பாவிகளா ? மனிதர்களை அப்படிச் சொல்வது பாவம். மனித இயல்புக்கே அது அழியாத களங்கமாகும். சிங்கங்களே ! வீறு கொண்டு எழுங்கள். நீங்கள் அனைவரும் ஆடுகள் என்கிற மாயையை உதறித் தள்ளுங்கள். நீங்கள் அழிவுறாத ஆன்மாக்கள் ! சுதந்திரமான, இறையருள் பெற்ற, முடிவற்ற ஆன்மாக்கள் ! நீங்கள் சடப்பொருள் அல்ல. சடப்பொருள் உங்கள் பணியாள்; நீங்கள் சடப்பொருளின் பணியாளர் அல்ல.

இரக்கமற்ற விதிகளின் ஒரு பயங்கரத் தொகுதியை வேதங்கள் எடுத்துக் கூறவில்லை; காரண காரியம் என்னும் எல்லையற்ற சிறைச்சாலையை அறிவிக்கவில்லை. ஆனால் இவ்விதிகளுக்கெல்லாம் அப்பால், சடம் விசை ஆகிய இவற்றின் ஒவ்வொரு சிறுதுகளின் உள்ளும் புறமும் ஒருவன் இருக்கிறான் என்றுதான் கூறுகின்றன. "அவன் கட்டளையால் தான் காற்று வீசுகிறது, நெருப்பு எரிகிறது, வானம் பொழிகிறது, உலகில் மரணம் நடைபோடுகிறது."

அவன் இயல்புதான் என்ன ?

அவன் எங்கும் நிறைந்தவன், புனிதமானவன், உருவற்றவன், எல்லாம் வல்லவன், பேரருளாளன்.

"அப்பனும் நீ, அன்னையும் நீ, அன்புடைய நண்பனும் நீ, ஆற்றல் அனைத்தின் தோற்றமும் நீ. அண்ணலே ! எமக்கு வலிமை தந்தருள்வாயாக ! புவனத்தின் சுமையைத் தாங்குபவனே நீ, இல்வாழ்க்கையின் சுமையைத் தாங்க நீ எனக்கு அருள் செய்வாயாக!" வேத காலத்து ரிஷிகள் இப்படிப் பாடினார்கள்.

அவனை எப்படி வணங்குவது ! அன்புவழியே அவனை வணங்கும் வழி. இம்மையிலும் மறுமையிலும் உள்ள எதையும் விட அதிக அன்புக்குரியவன் என்று அவனை வழிபடவேண்டும். வேதங்கள் முழங்குவதும் இந்த அன்பு நெறியையே. கடவுள் அவதாரம் என்று இந்துக்கள் நம்பிப்போற்றும் ஸ்ரீகிருஷ்ணர் அதை எப்படி வளர்த்தார், மக்களுக்குப் போதித்தார் என்று பார்ப்போம்.

மனிதன்இவ்வுலகில் தாமரை இலையைப் போல வாழ வேண்டும் என்று ஸ்ரீகிருஷ்ணர் சொன்னார். தாமரை தண்ணீரில் வளர்கிறது.

ஆனால் தண்ணீரால் நனைவதில்லை. அதே மாதிரி மனிதன் வாழ வேண்டும். இதயம் இறைவன் பால் இருக்க கைகள் வேலையைச் செய்து கொண்டிருக்க வேண்டும்.

இம்மைப் பயனோ, மறுமைப் பயனோ கருதி, இறைவனிடம் அன்பு செலுத்தினாலும், அவனிடம் அன்புக்காகவே அன்பு செலுத்துவதுதான் மிகவும் சிறந்தது. பிரார்த்தனை கூறுகிறது : "பெருமானே ! எனக்குச் செல்வமோ, செல்வர்களோ, கல்வியோ வேண்டாம். அதுதான் உன் சித்தமானால் நான் மீண்டும் மீண்டும் பிறக்கத் தயாராக இருக்கிறேன். ஆனால் நான் பலன் கருதாது உன் மீது அன்பு கொள்ளவும், தன்னலமின்றி அன்புக்காகவே அன்பு செய்யவும் எனக்கு அருள் செய்" என்று.

ஸ்ரீகிருஷ்ணரின் சீடர்களில் ஒருவர், இந்தியச் சக்கரவர்த்தியாக விளங்கிய யுதிஷ்டிரர் அவர் பகைவர்களால் நாட்டினின்றும் விரட்டப்பட்டு, தம் மனைவியோடு இமாலயப் பிரதேசத்தில் ஒரு காட்டில் வசிக்க நேர்ந்தது. ஒரு நாள் அரசி, அரசனைப் பார்த்து, "மனிதருக்குள் மாசு மறுவற்று விளங்கும் நீர் ஏன் இத்தகையத் துன்பத்தில் துவள வேண்டும் ?" என்று கேட்டாள். உடனே யுதிஷ்டிரர் சொன்னார், 'அரசியே ! இதோ, இந்த இமயமலை எவ்வளவு எழிலோடும் மாட்சியோடும் காட்சியளிக்கிறது பார்த்தாயா ? இதன் மீது நான் அன்பு கொண்டிருக்கிறேன். இது எனக்கு ஒன்றும் தருவதில்லை. ஆனால் அழகும் கம்பீரமும் நிறைந்த காட்சிகளில் என் உள்ளத்தைப் பறிகொடுப்பது என் இயல்பு. அதனால் நான் அதனை விரும்புகிறேன். அதைப் போலவே கடவுளிடம் நான் காதல் கொண்டிருக்கிறேன். அவரே அனைத்து அழகுக்கும் கம்பீரத்துக்கும் மூல காரணம். என் அன்புக்குரிய ஒரே ஒருவர் அவரே ஆவார், அவரிடம் ஈடுபாடு கொள்வது எனக்கு இயல்பானது. ஆதலால் நான் அவரை விரும்புகிறேன். நான் வேறெதுவும் வேண்டவில்லை. அவர் விருப்பம்போல் அவர் என்னை எங்குவேண்டுமானாலும் விடட்டும். அன்புக்காகவே நான் அவரிடம் அன்பு செலுத்துகிறேன். நான் அன்பை விலை பேசுகிறவன் அல்ல" என்று.

ஆன்மா தெய்வத் தன்மை வாய்ந்தது. அது சடப்பொருளின் கட்டுக்கள் அகப்பட்டுக்கொண்டிருக்கிறது என்று வேதங்கள் கூறுகின்றன. பூரணத்துவம் பெற்றவுடன் இந்தக் கட்டுச் சிதறிவிடும். அதனால்தான் அந்த நிலையை மோட்சம், அதாவது விடுதலை, நிறைவுறாத நிலையினின்றும் விடுதலை,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மரணத்தினின்றும் துன்பத்தினின்றும் விடுதலை என்று கூறுகிறார்கள்.

கடவுளின் கருணையால்தான் இக்கட்டு அவிழும். தூய்மையுள்ளவர்களுக்குத்தான் அந்தக் கருணை கிட்டும். அவனது கருணையைப் பெறுவதற்குத் தூய்மை அவசியம் என்றாகிறது. அந்தக் கருணை எப்படிச் செயல்படுகிறது ?

தூய்மையான உள்ளத்துக்கு அவன் காட்சி அளிக்கிறான். தூய்மையானவர்களும் மாசற்றவர்களும் இம்மையிலேயே கடவுளைக் காண்கின்றனர். அப்போதுதான் இதயக் கோணல்கள் நிமிர்ந்து நேராகின்றன. சந்தேகங்கள் அறவே அகல்கின்றன. காரண காரியம் என்ற பயங்கர விதி அவர்களை அணுகுவதில்லை.

இதுதான் இந்து சமயத்தின் மையமும், அதன் முக்கியமன அடிப்படைக் கருத்துமாகும்.

இந்து, வார்த்தைகளிலும் கொள்கைகளிலும் வாழ விரும்பவில்லை. சாதாரணப் புலன் நுகர்ச்சி வாழ்வுக்கு அப்பாற்பட்ட வாழ்வு உண்டு என்றால் அதை அவன் நேருக்கு நேர் காண விரும்புகிறான். சடப்பொருள் அல்லாத ஆன்மா அவனுள் இருக்குமாயின், அருளே வடிவான எங்கும் நிறைந்த ஆன்மா ஒன்று இருக்குமாயின், அதனிடம், நேரே செல்ல விரும்புகிறான். அவன் அதனைக் காணவேண்டும்; அதுதான் அவனது எல்லா சந்தேகங்களையும் அகற்றும், ஆன்மா இருக்கிறது, கடவுள் இருக்கிறார் என்பதற்கு ஓர் இந்து ஞானி கொடுக்கக் கூடிய சிறந்த சான்று, "நான் ஆன்மாவைக் கண்டு விட்டேன், நான் கடவுளைக் கண்டு விட்டேன்" என்று அவர் கூறுவதாகும். பூரணத்துவத்திற்கு அதுதான் ஒரே சான்று. ஒரு குறிப்பிட்ட கோட்பாட்டையோ அல்லது கொள்கையையோ நம்புவதற்காக, போராட்டங்களிலும் முயற்சிகளிலும் ஈடுபடுவதும் இந்து சமயம் ஆகாது. மெய்ப்பொருளை உணர வேண்டும். நம்பினால் மட்டும் போதாது, மெய்ப்பொருளை உணர்ந்து, தானே அதுவாக மாறவேண்டும்.

இடைவிடாத முயற்சியின் மூலம் பூரணத்துவம் பெறுவதும், தெய்வத்தன்மை அடைவதும், ஆண்டவனை அணுகுவதும், அவனைக் காண்பதும், பிறகு பரமண்டலத்தில் உள்ள பிதா எப்படிப் பூரணமாக இருக்கிறாரோ, அதே மாதிரி பூரணத்துவம் அடைவதும்தான் அவர்களுடைய நெறியின் நோக்கமாகும்.

பூரணத்துவம் பெற்ற மனிதன் என்ன ஆகிறான் ? அவன் எல்லையற்ற பேரானந்தப் பெருக்கில் திளைத்து வாழ்கிறான். பேரின்பம் பெறுவதற்கு எந்தப் பொருளை அடைய வேண்டுமோ, அந்த ஆண்டவனை அடைந்து அவனுடன் பேரானந்தத்தில் திளைக்கிறான்.

இதுவரையில் எல்லா இந்துக்களும் ஒத்துப் போகிறார்கள். இந்தியாவிலுள்ள அனைத்துச் சமயப் பிரிவுகளைச் சார்ந்தவர்களுக்கும் இதுதான் பொதுவாக உள்ள சமயம். பூரணத்துவம் எல்லையற்றது. எல்லையற்றது இரண்டாகவோ, மூன்றாகவோ இருக்க முடியாது. அதற்குக் குணங்கள் இருக்க முடியாது. ஆதலால் எப்பொழுது ஓர் ஆன்மா முழுமை நிலையையும், எல்லையற்ற நிலையையும் அடைகின்றதோ, அப்பொழுதே அது பிரம்மத்துடன் ஒன்றாகிவிட வேண்டும். பின்னர் அது எங்கும் நிறைந்த, எல்லாம் ஆன, எல்லாம் உணர்ந்த பேரானந்த மயமான நிலையை எய்தி, தான் பிரம்மம் என்பதை உணர்கிறது.

இது, தான் என்கிற நிலையை இழந்து, ஒரு கட்டையைப் போன்றோ, கல்லைப் போன்றோ ஆகிவிடுகிறது என்று அடிக்கடிக் கூறப்படுவதைப் படித்துள்ளேன். 'காயம் படாதவன் தான் தழும்பைக் கண்டு நகைப்பான்'.

நான் கூறுகிறேன், அது அம்மாதிரி அல்ல. இந்தச் சிறிய உடலின் உணர்வை அனுபவிப்பது இன்பமானால், இரண்டு உடல்களின் உணர்வை அனுபவிப்பது இன்னும் மிகுந்த இன்பமாகும். உடல்களின் எண்ணிக்கை பெருகப் பெருக, இன்பத்தின் அளவும் பெருகி, பிரபஞ்ச உணர்வாக மாறி, குறிக்கோளாகிய பேரின்பத்தின் முழுமை கிட்டும்.

ஆதலால், எல்லையற்று, எங்கும் நிறைந்திருக்கின்ற அந்தத் தனித் தன்மையைப் பெற வேண்டுமாயின், துன்பம் நிறைந்த இந்த உடற்சிறை என்னும் தனித்தன்மை போகவேண்டும். நாம் உயிருடன் ஒன்றிவிடும் போதுதான் மரணம் அகல முடியும். இன்பத்துடன் ஒன்றிவிடும் போதுதான் துன்பம் அகல முடியும். அறிவுடன் ஒன்றிவிடும்போது தான் பிழைகள் அகல முடியும். இதுதான் அறிவியலுக்கு ஒத்த முடிவாகும். உடலைச் சார்ந்த தனித்தன்மை நிலை ஒரு மாயை, இடைவெளியற்றுப் பரந்து நிற்கும் சடப்பொருளாகிய கடலில், தொடர்ந்து மாறிக் கொண்டே செல்லும் ஒரு சிறிய பொருளே என் உடல் என்று அறிவியல் நிரூபித்துவிட்டது. என் இன்னொரு பாகமான ஆன்மாவோ அத்வைதம் (ஒருமை), என்ற முடிவுக்குத் தான் வரவேண்டியிருக்கிறது.

ஒருமை நிலையைக் கண்டு பிடிப்பதுதான் அறிவியல், முழுமையான ஒருமை நிலை கிட்டியதும் அறிவியல் மேலே செல்லாமல் நின்று விடுகிறது. ஏனெனில் அது தன் குறிக்கோளை எட்டி விட்டது. எந்த மூலப்பொருளிலிருந்து எல்லாப் பொருள்களும் படைக்கப்படுகின்றனவோ, அதைக் கண்டு பிடித்ததும் வேதியியல் மேலே முன்னேற முடியாது. எந்த மூலசக்தியிலிருந்து எல்லாச் சக்திகளும் வெளிப்படுகின்றனவோ அதைக் கண்டறிந்ததும் இயற்பியல் நின்றுவிடும். மரணம் நிறைந்த இந்தப் பிரபஞ்சத்தில், மரணத்தைக் கடந்து நிற்கும் அந்த ஒரே உயிரைக் கண்டு பிடித்ததும், மாறிக் கொண்டேயிருக்கும்





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உலகின் ஒரே மாறாத அடிப்படையான அவனைக் கண்டு பிடித்ததும், எந்த ஓர் ஆன்மாவிலிருந்து மற்ற எல்லா ஆன்மாக்களும் வெளிப்படுவது போன்ற மாயை உள்ளதோ, அந்த ஆன்மாவைக் கண்டு பிடித்ததும் சமய விஞ்ஞானம் பூரணமாகிறது.

அறிவியல் அனைத்தும் கடைசியில் இந்த முடிவுக்குத்தான் வந்தாக வேண்டும். ஒடுங்கியிருப்பவை வெளிப்படுகின்றனவே தவிர படைப்பு என்பதில்லை என்பதுதான் இன்றைய அறிவியல் கூற்று. இந்து, தான் பல்லாண்டுகளாக எதனைத் தன் இதயத்தில் வைத்து, நெஞ்சார நேசித்து வந்தானோ, அந்த உண்மை, உள்ளத்தில் பதியக்கூடிய மொழியில், தற்கால அறிவியல் முடிவுகளில் கண்ட மேலான ஆதார விளக்கங்களுடன் புகட்டப் படப்போகின்றது என்பதை அறிந்து பெருமகிழ்ச்சியடைகிறான்.

தத்துவ நாட்டத்திலிருந்து இப்போது நாம் பேதை மக்களின் சமயத்திற்கு வருவோம். பல தெய்வவழிபாடு இந்தியாவில் இல்லை என்று நான் முதலிலேயே சொல்லி விடுகிறேன். ஆலயங்களில், ஒருவர் அருகிலிருந்து கவனித்தால், வழிபடுகிறவர், அங்குள்ள திருவுருவங்கள் எங்கும் நிறைந்தவர் என்று கூறுவதுடன் கூட, கடவுளின் அனைத்துக் குணங்களும் அந்த உருவங்களுக்கு இருப்பதாகக் கூறி வழிபடுவதைக் காணலாம். அது பலதெய்வ வழிபாடாகாது. ஒரு முழு முதற் கடவுளை மட்டும் நம்பும் கோட்பாடு என்றும் இதனை விளக்க முடியாது. 'ரோஜா மலரை எந்தப் பெயரிட்டு அழைத்தாலும் அதே நறுமணம் தான் கமழும்.' பெயர்கள் விளக்கங்களாக மாட்டா.

நான் சிறுவனாயிருந்தபோது, கிறிஸ்தவ சமயப் பாதிரியார் ஒருவர், ஒரு கூட்டத்தில் தம் சமயத்தைப் பற்றிப் பிரசாரம் செய்து கொண்டிருந்த நிகழ்ச்சி என் நினைவிற்கு வருகிறது. அப்போது பிரசாரகர், பல சுவையான செய்திகளைக் கூறிக்கொண்டே வந்து, இடையில், "நான் உங்கள் விக்கிரத்தை என் கைத்தடியால் ஓங்கி ஓர் அடிஅடித்தால் அது என்னை என்ன செய்து விடும்? "என்று கேட்டார், அதனைக் கேட்டுக் கொண்டிருந்தவர்களில் ஒருவர், உடனே எழுந்து, "உங்கள் ஆண்டவரை நான் கீழ்த்தரமாகத் திட்டினால் அவர் என்னை என்ன செய்வார் ?" என்று கேட்டார், "இறந்ததும் நீ தண்டிக்கப்படுவாய்" என்று பதிலளித்தார் பிரசாரகர். "அப்படியே எங்கள் விக்கிரகமும், நீர் இறந்ததும் உம்மைத் தண்டித்து விடும்" என்று திருப்பிச் சொன்னார் அந்த இந்து!

பழத்தைக் கொண்டு மரம் அறியப் படுகிறது. உருவ வழிபாட்டினர் என்று கூறப்படுபவர்களில், ஒழுக்கத்திலும் ஆன்மிகத்திலும் பக்தியிலும் ஈடு இணையற்று விளங்குபவர்களை நான் காணும்பொழுது, "பாவத்திலிருந்து புனிதத் தன்மை பிறக்குமா?" என்று என்னை நானே கேட்டுக் கொள்கிறேன்.

மூட நம்பிக்கை மனிதனின் பெரும் பகையாகும். ஆனால் மதவெறி அதை விட மோசமானது. ஒரு கிறிஸ்தவன் ஏன் கோயிலுக்குச் செல்கிறான்? சிலுவை ஏன் புனிதமானது? பிரார்த்தனை செய்யும்போது முகம் ஏன் வானை நோக்க வேண்டும்? கத்தோலிக்க ஆலயங்களில் ஏன் அத்தனை உருவங்கள் இருக்கின்றன? பிராட்டஸ்டன்டினர் பிரார்த்தனை செய்யும்போது அவர்கள் உள்ளங்களில் ஏன் அத்தனை உருவங்கள் உள்ளன?

என் சகோதரர்களே! சுவாசிக்காமல் உயிர் வாழ முடியாதது போல, உள்ளத்தில் ஓர் உருவத் தோற்றமின்றி, நாம் எதனையும் நினைத்துப் பார்க்க முடியாது. இணைப்பு விதியின்படி (Law of Association) வெளி உருவம் உள் உருவத்தையும் தோற்றுவிக்கிறது. அதனால்தான் இந்து வழிபடும் பொழுது, ஒரு புறச்சின்னத்தைப் பயன்படுத்துகிறான். அவனைக் கேட்டால், தான் வழிபடும் பரம்பொருளின் மீது தன் சிந்தனையைப் பதியச் செய்வதற்கு அது உதவுகிறது என்று கூறுவான். அந்த உருவம் கடவுள் அல்ல, அது எங்கும் நிறைந்தது அல்ல என்று உங்களைப்போல அவனுக்கும் தெரியும். 'எங்கும் நிறைந்துள்ளது' என்று சொல்லும் போது உலகினர் என்ன புரிந்து கொள்கிறார்கள்? அது ஒரு சொல், சின்னம் மட்டுமே, இறைவனுக்குப் பரப்பு உண்டா?

'எங்கும் நிறைந்தவர்' என்று நான் திரும்பத் திரும்பச் சொல்லும் போது, விரிந்த வானையும், பரந்த வெளியையும் மட்டுமே நினைக்கிறோம். அவ்வளவுதான்.

மன அமைப்பு விதிப்படி, முடிவற்றது என்ற நம் கருத்தை நீல வானின் அல்லது கடலின் தோற்றத்துடன் தொடர்புபடுத்திப் பார்க்க வேண்டியுள்ளது. அவ்வாறே தெய்வத்தன்மை பற்றிய நம் எண்ணத்தையும் கிறிஸ்தவ ஆலயம், பள்ளி வாசல் அல்லது சிலுவை பற்றிய உருவத்துடன் இணைத்துப் பார்ப்பதுதான் இயல்பானது. புனிதம், தூய்மை, உண்மை, எங்கும் நிறைந்த நிலை ஆகியவை பற்றிய கருத்துக்களை பல்வேறு உருவங்களுடனும், தோற்றங்களுடனும் இந்துக்கள் தொடர்புப் படுத்தியுள்ளனர். ஆனால் ஒரு வித்தியாசம். சிலர், சமயம் என்றால் சிலகோட்பாடுகளை ஒப்புக் கொள்வது, பிறருக்கு உதவி செய்வது என்று மட்டும் நினைப்பதால், கோவிலின் உருவ வழிபாட்டுடன் தங்கள் வாழ்க்கை முழுவதையும் இணைத்துக் கொண்டு, அதற்கு மேல் உயர்வதில்லை.

ஆனால் இந்துவின் சமயமோ இறைவனை உணர்வது; தெய்வத்தை உணர்ந்து, மனிதனும் தெய்வமாவது. திருவுருவங்கள், கோவில்கள், நூல்கள் இவையெல்லாம் ஆன்ம ஞானத்தின் குழந்தைப் பருவத்தில் இருக்கும் மனிதனுக்கு உதவிகள், ஆதாரங்கள். ஆனால் இன்னும் மேலே மேலே முன்னேற வேண்டும்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவன் எங்குமே நின்று விடக் கூடாது. 'புறவழிபாடும் சடப்பொருள் வழிபாடும் கீழ் நிலையாகும்'. மேல்நிலைக்கு வர முயன்று, மனத்தால் பிரார்த்தனை செய்தல், அடுத்த உயர்நிலையாகும். ஆண்டவனை உணர்தல், அதாவது, சாட்சாத்காரம் பெறுதல்தான் அனைத்திலும் மேலான நிலை' என்று சாஸ்திரங்கள் கூறுகின்றன. அதே உறுதிப்பாடு கொண்டவர், விக்கிரகத்தின் முன்னால் முழந்தாளிட்டுக் கொண்டு கூறுவதைக் கேளுங்கள்: 'அவனை சூரியனும் விவரிக்க முடியாது, சந்திரனும் விவரிக்க முடியாது. விண்மீன்களாலும், மின்னலாலும் உணர்ந்துரைக்க முடியாது. தீயும் அவனைத் தேர்ந்துரைக்காது. அவை அனைத்தும் அவனருளால் தான் விளக்கமுறுகின்றன.'

ஆனால் அவன் யாருடைய வழிபாட்டையும் இழிவுபடுத்திப் பேசுவதில்லை; எந்த ஆராதனையும் பாவம் என்று கூறுவதில்லை. அது வாழ்க்கையின் இன்றியமையாத படி என்று அவன் ஏற்றுக் கொள்கிறான். 'குழந்தை மனிதனின் தந்தை'. குழந்தைப் பருவம் பாவமானது, அல்லது வாலிபப் பருவம் பாவமானது என்று வயதானவர் சொல்வது சரியாகுமா ? !

ஓர் உருவத்தின் மூலமாக தெய்வீக நிலையை ஒருவன் உணர முடிகிறது என்றால், அதைப் பாவம் என்று கூறுவது சரியா? இல்லை அவர் அந்த நிலையைக் கடந்த பிறகு அவரே அதைப் பிழை என்று கூறலாமா ? இந்துவின் கொள்கைப்படி, மனிதன் பிழையிலிருந்து உண்மைக்குச் செல்லவில்லை, ஆனால் உண்மையிலிருந்து உண்மைக்கு அதாவது கீழ்நிலை உண்மையிலிருந்து மேல் நிலை உண்மைக்குப் பயணம் செய்கிறான்.

அவனுக்கு, சடப்பொருள் வழிபாட்டிலிருந்து அத்வைதம் வரையில் உள்ள எல்லாச் சமயங்களும், பரம்பொருளைப் பற்றி உணர்வதற்காக மனித ஆன்மாவால் செய்யப்படும் பல முயற்சிகளேயாகும். ஒவ்வொன்றும் அது பிறந்த இடத்தையும் சூழலையும் பொறுத்தது. ஒவ்வொன்றும் முன்னேற்றத்தின் ஒருபடியைக் குறிக்கிறது. ஒவ்வொர் ஆன்மாவும் மேலே மேலே, பறந்து செல்லும் ஓர் இளங்கழுகைப் போன்றது. அது உயரச் செல்லச் செல்ல மேலும் மேலும் வலுவைப் பெற்று, கடைசியில் அது ஒளிமிக்க சூரியனை அடைகின்றது.

வேற்றுமையில் ஒற்றுமை என்பதுதான் இயற்கையின் நியதி. அதை இந்து உணர்ந்துள்ளான். மற்றச் சமயங்கள் எல்லாம் சில திட்டமான கோட்பாடுகளை நிர்ணயித்து அவற்றைச் சமுதாயம் ஏற்றுக் கொள்ள வேண்டுமென்று வற்புறுத்த முயல்கின்றன. அவை சமுதாயத்துக்கு முன்னரே ஒரே ஒரு சட்டையை வைத்து, அந்த ஒரு சட்டைதான் ஜாக், ஜான், ஹென்றி எல்லாருக்கும் பொருந்த வேண்டும் என்று கூறுகின்றன. ஜானுக்கோ, ஹென்றிக்கோ சட்டை பொருந்தாவிட்டால் அவர்கள் உடலில் அணியச் சட்டையின்றித்தான் இருக்கவேண்டும்.

ஆனால் சார்புப் பொருள்கள் மூலமே இறைவனை உணரவோ, நினைக்கவோ பேசவோ முடியும். திருவுருவங்களும் சிலுவைகளும் பிறைகளும் வெறும் சின்னங்களே, ஆன்மிகக் கருத்துக்களை மாட்டி வைப்பதற்குப் பயன்படும் முனைகளே என்று இந்துக்கள் கண்டு பிடித்துள்ளனர். இந்த உதவி எல்லோருக்கும் தேவை என்பது அல்ல. ஆனால் தேவைப்படாதவர்கள், அது தவறு என்று கூற உரிமையில்லை. இந்து சமயத்தில் அது கட்டாயமும் அன்று.

ஒன்று நான் சொல்ல வேண்டும். இந்தியாவில் உருவ வழிபாடு என்பது அச்சத்திற்குரிய ஒன்றல்ல; விலைமகளிரை உருவாக்கும் இடமுமல்ல. மாறாக ஆன்மீக உண்மைகளைப் புரிந்து கொள்வதற்கு, பக்குவப்படாதவர்களின் முயற்சியாகும் அது. இந்துக்களிடம் தவறுகள் உண்டு. ஆனால் ஒன்றைக் கவனியுங்கள். அவர்கள் தங்கள் உடல்களைப் பலவாறு வருத்திக் கொள்வார்களேயன்றி அடுத்தவனின் கழுத்தை அறுக்கமாட்டார்கள். இந்து மத வெறியன் தன்னைத் தீயில் கொளுத்திக் கொள்வானேயன்றி பிறரையல்ல. சூனியக்காரிகள் கொளுத்தப்பட்டதற்கு எப்படிக் கிறிஸ்தவ சமயம் பொறுப்பில்லையோ, அதே மாதிரி இதற்கு இந்து சமயம் பொறுப்பல்ல.

ஆகவே இந்துவுக்கு, உலகின் எல்லாச் சமயங்களும், பலவித நிலைகளிலும், சந்தர்ப்பங்களிலும் உள்ள மாறுபட்ட ஆண்களும் பெண்களும் ஒரே இலக்கை நோக்கிப் பயணம் செய்வது போலத்தான். சடப்பொருளான மனிதனிடத்திலிருந்து கடவுளை வெளிப்படச் செய்வது தான் எல்லா சமயங்களின் நோக்கமும். அவர்கள் எல்லாருக்கும் எழுச்சியை ஊட்டுகிறவர் ஒரே கடவுள் தான். அப்படியானால் இத்தனை மாறுபாடுகள் இருக்கக் காரணம் என்ன ? அவையனைத்தும் வெளித்தோற்றமே என்கிறான் இந்து. பல்வேறு சூழ்நிலைகளுக்கும் பல்வேறு இயல்புகளுக்கும் ஏற்ப தன்னை மாற்றியமைத்துக் கொள்ளும் அதே உண்மையிலிருந்துதான் இந்த மாறுபாடுகள் எழுகின்றன.

ஒரே ஒளிதான் பல்வேறு வண்ணக் கண்ணாடிகளின் மூலம் பல நிறங்களில் வருகின்றது. நம்மை மாற்றி அமைத்துக் கொள்ள இந்த வேறுபாடுகள் அவசியம். ஆனால் எல்லாவற்றின் மையத்திலும் அதே உண்மைதான் ஆட்சி புரிகிறது. கிருஷ்ணாவதாரத்தின் போது பகவான் இந்துக்களுக்கு சொன்னார் : "முத்து மாலையின் நடுவே உள்ள கயிறு போன்று நான் எல்லாச் சமயங்களிலும் இருக்கிறேன். மக்களினத்தை உயர்த்திப் புனிதப்படுத்தும் அசாதாரணமான தூய்மையும் அசாதரணமான ஆற்றலும் எங்கெல்லாம் காணப்படுகின்றனவோ அங்கெல்லாம் நான் இருக்கிறேன் என்று அறி" என்று. அதன் பலன் என்ன ? இந்துக்கள் மட்டுமே காப்பாற்றப்படுவார்கள்,





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மற்றவர்கள், அல்ல என்று சம்ஸ்கிருதத் தத்துவ இலக்கியத்தில் எங்காவது கூறப்பட்டிருக்கிறதா என்று கண்டு பிடிக்கும்படி நான் உலகத்துக்குச் சவால் விடுகிறேன். வியாசர் கூறுகிறார் : "நம்முடைய சாதிக்கும், கோட்பாடுகளுக்கும் அப்பால் கூட பூரண மனிதர்களைப் பார்க்கிறோம்" என்று. இன்னொன்று, எண்ணங்கள் எல்லாம் கடவுளிடமே மையசக்தி கொண்ட இந்து, எப்படி சூனிய வாதம் பேசும் பௌத்தர்களை, நாத்திகவாதம் பேசும் சமணர்களையும் நம்புவான் ?

பௌத்தர்களோ, சமணர்களோ கடவுளை நம்பி வாழ்வதில்லை. ஆனால் மனிதனைத் தெய்வமாக்க வேண்டும் என்னும் எல்லாச் சமயங்களின் மையக் கருத்து இருக்கிறதே, அதுதான் அவர்களுடைய சமயங்களின் முழு நோக்கமாகும். அவர்கள் தந்தையைப் பார்த்ததில்லை, ஆனால் மகனைப் பார்த்துள்ளார். மகனைப் பார்த்தவன் தந்தையையும் பார்த்து விட்டான்.

சகோதரர்களே ! இந்து சமயக் கருத்துக்களின் சுருக்கம் இதுதான். தன் திட்டங்களை எல்லாம் நிறைவேற்ற இந்து தவறியிருக்கலாம். ஆனால் என்றாவது உலக சமயம் (Universal Religion) என்ற ஒன்று இருக்க வேண்டுமானால், அது இடத்தாலும் காலத்தாலும் எல்லைப்படுத்தப் படாததாக இருக்க வேண்டும். அந்தச் சமயம் யாரைப் பற்றிப் பிரசாரம் செய்கிறதோ, அந்தக் கடவுளைக் போன்று அது எல்லையற்றதாக இருக்கவேண்டும். சூரியன், தன் ஒளிக்கிரணங்களை எல்லார் மீதும் சமமாக வீசுவதும் போன்று அது கிருஷ்ண பக்தர்கள், கிறிஸ்து பக்தர்கள், ஞானிகள், பாவிகள், எல்லோரையும் சமமாக எண்ண வேண்டும். அது பிராமண மதமாகவோ பௌத்த மதமாகவோ இருக்காமல், இவற்றின் ஒட்டு மொத்தமாக இருப்பதுடன், இன்னும் வளர்ச்சியடைய எல்லையற்ற இடம் உள்ளதாக இருக்க வேண்டும். விலங்கினங்களைப் போலவே உள்ள காட்டுமிராண்டி மக்களிலிருந்து, இவரும் மனிதரா என்று சமுதாயம் பயபக்தியுடன் வணங்கி நிற்கும் அளவுக்கு அறிவாலும் உள்ளப்பண்பாலும் உயர்ந்து மனித இயல்புக்கு மேலோங்கி விளங்கும் சான்றோர்வரை, எல்லோருக்கும் இடமளித்து தன் அளவற்ற கரங்களால் எல்லோரையும் தழுவிக் கொள்ளும் பரந்த மனப்பான்மை உள்ளதாக இருக்க வேண்டும். அந்த மதத்தில் பிற மதத்தினரைத் துன்புறுத்தலும், அவர்களிடம் சகிப்புத் தன்மையற்று நடந்து கொள்ளுதலும் இருக்காது. அது, ஆண் பெண் எல்லாரிடமும் தெய்வத்தன்மை இருப்பதை ஏற்றுக்கொள்ளும். மனித இனம் தன் உண்மையான தெய்விகத் தன்மையை உணர்வதற்கு உதவி செய்வதே அதன் நோக்கமாகும். அதன் முழு ஆற்றலும் அதற்கே பயன்படும்.

அத்தகைய சமயத்தை உருவாக்குங்கள், எல்லா நாடுகளும் உங்களைப் பின்பற்றும். அசோகருடைய சபை பௌத்த சமயச் சபையாக இருந்தது. அக்பரது சபை இதைவிடச் சற்று நோக்கத்தை நிறைவேற்றுவதாக இருந்தாலும் வீட்டுச் சபையாகவே இருந்தது. கடவுள் எல்லாச் சமயங்களிலும் இருக்கிறார் என்று உலகனைத்திற்கும் முழக்கம் செய்ய அமெரிக்கா ஒன்றுக்குத்தான் கொடுத்து வைத்திருந்தது.

இந்துக்களுக்கு பிரம்மமாகவும் சௌராஸ்தர்களுக்கு அஹுராமஸ்தாவாகவும், பௌத்தர்களுக்குப் புத்தராகவும், யூதர்களுக்கு ஜெஹோவாவாகவும், கிறிஸ்தவர்களுக்கு பரமண்டத்தில் இருக்கும் பிதாவாகவும் அமையும் ஆண்டவன் உங்கள் உன்னதமான நோக்கம் நிறைவேற உங்களுக்கு வலிமை அளிப்பானாக ! விண்மீன் கிழக்கிலே எழுந்து அது மேற்கு நோக்கி நேராகச் சென்றது. அது சில வேளைகளில் மங்கலாகவும், சில பொழுது ஒளி மிக்கதாகவும் உலகத்தைச் சுற்றியது. இப்பொழுது கிழக்குத் திசையிலே சான்போ நதிக்கரையினில் முன்னைவிட ஆயிரம் மடங்கு ஒளியுடன் மறுபடியும் உதயமாகிக் கொண்டிருக்கிறது.

சுதந்திரத்தின் தாயகமாகிய கொலம்பியாவே, நீ வாழ்க ! அயலாரின் இரத்தத்தில் கையினைத் தோய்க்காமல், அயலாரைக் கொள்ளையடிப்பது தான் பணக்காரன் ஆகக் குறுக்கு வழி என்று கண்டு பிடிக்காத உனக்குத்தான் சமரசக் கொடி பிடித்து, நாகரிகப் படையின் முன்னணியில் வெற்றி நடைபோடும் பெரும்பேறு கொடுத்து வைத்திருந்தது !

## சமயம் இந்தியாவின் அவசரத் தேவையன்று

*(1893 செப்டெம்பர் 20ஆம் நாள்)*

நல்ல குற்றச் சாட்டுக்களைக் கிறிஸ்தவர்கள் எப்பொழுதும் ஏற்கத் தயாராக இருக்கவேண்டும். எனது சிறிய குற்றச்சாட்டைக் கூறினால், அதை நீங்கள் பொருட்படுத்த மாட்டீர்கள் என்று நினைக்கிறேன். அஞ்ஞானிகளின் ஆன்மாக்களைக் காப்பாற்றுவதற்கு, சமயப் பிரசாரகர்களை அனுப்பும் கிறிஸ்தவர்களாகிய நீங்கள் அவர்களுடைய உடல்களைப் பட்டினியிலிருந்து காப்பாற்ற ஏன் முயல்வதில்லை ? இந்தியாவில், கடுமையான பஞ்சங்களின் போது ஆயிரக்கணக்கானவர்கள் செத்தார்கள். இருந்தும் கிறிஸ்தவர்களாகிய நீங்கள் ஒன்றும் செய்யவில்லை !

இந்தியா முழுவதிலும் கோயில்கள் கட்டுகிறீர்கள். ஆனால் கீழ்த்திசை நாடுகளின் அவசரத் தேவை சமயம் அன்று – அவர்களிடம் சமயம் நிறைய உள்ளது. எரிகிற இந்தியாவில் அவதியுற்றுக் கொண்டிருக்கும் அந்த லட்சக்கணக்கான மக்கள் தொண்டைத் தண்ணீர் வற்றக் கூக்குரலிடுவது உணவுக்காகத்தான். அவர்கள் உணவு கேட்கிறார்கள். நாம் கற்களைக் கொடுக்கிறோம். பசியால் வாடும் மக்களுக்கு மதப் பிரசாரம் செய்வது அவர்களை அவமதிப்பதாகும். பசியால்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

துடிப்பவனுக்குத் தத்துவ போதனை செய்வது அவனை அவமதிப்பதாகும்.

இந்தியாவில் பணத்துக்காகச் சமயப் பிரசாரம் செய்பவரைச் சாதியை விட்டு விலக்கி, முகத்தில் காறித் துப்புவார்கள். வறுமையில் வாடும் எங்கள் மக்களுக்கு உதவி கோரி இங்கு வந்தேன். கிறிஸ்தவ நாட்டில் கிறிஸ்தவர்களிடமிருந்து, உதவி கிடைப்பது எவ்வளவு கடினமானது என்பதை நன்றாக உணர்ந்து விட்டேன்.

## புத்த சமயம் இந்து சமயத்தின் நிறைவு

*(1893 செப்டம்பர் 26ஆம் நாள்)*

நான் பௌத்தன் அல்ல என்பதை நீங்கள் கேள்விப்பட்டிருப்பீர்கள். ஆனால் நான் ஒரு பௌத்தன் தான். சீனாவும் ஜப்பானும் இலங்கையும் இந்த மகானின் உபதேசங்களைப் பின்பற்றுகின்றன. ஆனால்இந்தியாவோ அவரைக் கடவுளின் அவதாரம் என்றே போற்றி வணங்குகிறது. நான் பௌத்த மதத்தைக் குறைகூறப் போவதாகச் சற்று முன்தான் கூறினேன். ஆனால் நான் அப்படிக் கூறியது எதற்காகவென்று நீங்கள் புரிந்து கொள்ள வேண்டும். கடவுளின் அவதாரம் எனக் கூறி நான் வழிபடுபவரை நானே குறை கூறுதல் தவறாகும். ஆனால் புத்தர் பெருமானை அவரது சீடர்கள் சரியாகப் புரிந்து கொள்ளவில்லை என்பது தான் எங்கள் கருத்து. இந்து சமயத்துக்கும் (நான் இந்து சமயம் எனக் குறிப்பிடுவது வேத சமயத்தைத்தான்) இந்நாளில், பௌத்த சமயம் என்று கூறப்படுகிறதே, அதற்கும் உறவு, யூத சமயத்துக்கும் கிறிஸ்தவ சமயத்துக்கும் உள்ள உறவுதான்.

இயேசு கிறிஸ்து ஒருயூதர்; சாக்கிய முனிவர் ஓர் இந்து. யூதர்கள் கிறிஸ்துவை ஒதுக்கித் தள்ளியது மட்டும் அன்று, அவரைச் சிலுவையிலும் அறைந்தார்கள். ஆனால் இந்துக்கள் சாக்கிய முனிவரைக் கடவுள் என்று ஏற்று வணங்குகிறார்கள். இந்துக்களாகிய நாங்கள் எடுத்துக் கூறவிரும்பும், தற்கால பௌத்த மதத்துக்கும் புத்த பகவானின் உண்மை உபதேசத்துக்கும் உள்ள முக்கியமான வேறுபாடு என்னவென்றால், சாக்கிய முனிவர் எதையும் புதிதாக உபதேசிக்க வரவில்லை. அவரும் இயேசுநாதரைப் போன்று, நிறைவு செய்யவே வந்தார், அழிக்க வரவில்லை.

இயேசுநாதர் விஷயத்தில், பழைய மக்களாகிய யூதர்கள் தாம் அவரைச் சரியாகப் புரிந்து கொள்ளவில்லை. ஆனால் புத்தர் விஷயத்தில் அவரைப் பின்பற்றியவர்களே அவரது உபதேசக்ளின் கருத்தை உணரவில்லை. பழைய ஏற்பாடு நிறைவு செய்யப்படுவதை யூதர்கள் புரிந்து கொள்ளாதது போன்று, பௌத்தர்கள் இந்துமத உண்மைகள் நிறைவு செய்யப்படுவதை அறிந்து கொள்ளவில்லை. மீண்டும் சொல்கிறேன்; சாக்கிய முனிவர் இந்து மதக் கொள்கைகளை அழிக்க வரவில்லை, இந்து மதத்தின் நிறைவு, அதன் சரியான முடிவு, அதன் சரியான வளர்ச்சி – இவையே சாக்கிய முனிவர்.

இந்து சமயம் இரு பாகங்களாகப் பிரிந்துள்ளது. ஒன்று கர்மகாண்டம், மற்றொன்று ஞான காண்டம். ஞானகாண்டத்தைத் துறவிகள் சிறப்பாக ஓதுகின்றனர். இதில் சாதி கிடையாது. மிக உயர்ந்த சாதியைச் சேர்ந்தவரும் மிகத் தாழ்ந்த சாதியில் பிறந்தவரும் துறவியாகலாம். அப்பொழுது அந்த இரண்டு சாதிகளும் ஒன்றாகின்றன.

சமயத்துக்குச் சாதியில்லை. சாதி என்பது வெறும் சமுதாய ஏற்பாடுதான். சாக்கிய முனிவரே ஒரு துறவிதான். வேதங்களில் மறைந்து கிடந்த உண்மைகளை வெளிக் கொணர்ந்து, அவற்றை உலகம் முழுவதற்கும் பரவச் செய்த பெரும் உள்ளம் படைத்தவர் என்ற புகழ் பெற்றவர் அவர். உலகத்திலேயே, முதன் முதலாக சமய பிரசாரத்தைச் செயல்படுத்தியவர். ஏன், மத மாற்றக் கொள்கையை உருவாக்கிக் காட்டியவர் அவரேயாவார்.

எல்லாரிடமும், குறிப்பாக, அறியாதாரிடத்து, ஏழை எளியவரிடத்தும் ஆச்சரியப்படும் வகையில் பரிவு காட்டிய பெரும் புகழுக்குரியவர் அவர். அவருடைய சீடர்களில் சிலர் பிராமணர்கள். புத்தர் உபதேசம் செய்த காலத்தில், சமஸ்கிருத மொழி பேச்சு மொழியாக இல்லை. பண்டிதர்களின் இடையில் மட்டுமே அந்த மொழி இருந்தது. புத்தரின் பிராமணச் சீடர்களில் சிலர், அவரது உபதேசங்களை சமஸ்கிருதத்தில் மொழி பெயர்க்க விரும்பினர். ஆனால் அவர், ''நான் ஏழைகளுக்காகவே வந்தவன். மக்களுக்காகவே வாழ்கிறேன். மக்கள் மொழியிலேயே பேச என்னை விட்டு விடுங்கள்'' என்று திட்டவட்டமாகக் கூறிவிட்டார். அதனால்தான் இன்றளவும், அவர் போதனைகளில் பெரும் பகுதி, அந் நாளையப் பேச்சு மொழியிலேயே உள்ளன.

தத்துவ சாஸ்த்திரன் நிலை என்னவாகவும் இருக்கட்டும். மெய்ஞ்ஞான நிலை என்னவாகவும் இருக்கட்டும். உலகத்தில் மரணம் என்ற ஒன்று உள்ளவரையில், மனித இதயத்தில் பலவீனம் என்ற குறை இருக்கும் வரையில், மனிதனின் பலவீனம் காரணமாக, அவன் இதயத்திலிருந்து எழும் கூக்குரல் இருக்கும்வரை, கடவுள் மீது நம்பிக்கை இருந்தே தீரும்.

தத்துவ சாஸ்திரத்தைப் பொறுத்தவரை, புத்த தேவரின் சீடர்கள் அழியாத மலை போன்ற வேதங்களோடு மோதிப் பார்த்தார்கள். ஆனால் அவற்றை அழிக்க முடியவில்லை. ஆனால் மற்றொரு புறம் அவர்கள், ஆண், பெண் அனைவரும் பாசத்தோடு பற்றிக் கொண்டிருந்த அழிவற்ற இறைவனை





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நாட்டினின்றும் எடுத்துச் சென்றுவிட்டார்கள். அதன் பயன், பௌத்தமதம் இந்தியாவில், இயற்கை மரணம் எய்தியது. அது பிறந்த நாட்டிலேயே, பௌத்தன் என்று கூறிக் கொள்ள ஒருவர்கூட இன்று இல்லை.

ஆனால், அதே நேரத்தில், பிராமண சமுதாயத்துக்கு சில இழப்புக்கள் ஏற்பட்டன. சீர்திருத்தம் ஆர்வம், எல்லாரிடமும் வியக்கத்தக்க வகையில் பரிவும் இரக்கமும் காட்டல், பக்குவமாய் மாற்றியமைக்கும் இங்கிதப்பாங்கு முதலிய பௌத்தப் பண்புகளை பிராமண சமுதாயம் இழந்தது. இந்தப் பண்புகள் தாம் இந்தியாவைப் பெருமையுறச் செய்தது. அந்நாளைய இந்தியாவைப் பற்றி, ஒரு கிரேக்க வரலாற்று ஆசிரியர், "பொய் சொல்லும் இந்துவையோ, கற்பிழந்த இந்துப் பெண்ணையோ நான் பார்க்கவில்லை" என்று கூறுகிறார்.

புத்த சமயமின்றி இந்து சமயம் வாழ முடியாது. அவ்வாறே இந்து சமயமின்றிப் புத்த சமயமும் வாழ முடியாது. பிரிவின் காரணமாக என்ன நேர்ந்ததென்று பாருங்கள் ! பிராமணர்களின் நுண்ணறிவும், தத்துவ ஞானமுமின்றி பௌத்தர்கள் நிலைத்து வாழ முடியாது. பௌத்தர்களின் இதயமின்றி பிராமணர்களும் வாழ முடியாது. பௌத்தர்களின் இதயமின்றிப் பிராமணர்களும் பிரிந்ததுதான் இந்தியாவின் வீழ்ச்சிக்குக் காரணம். அதனால்தான் இந்தியா முப்பது கோடி பிச்சைக்காரர்களின் இருப்பிடமாகிவிட்டது. கடந்த ஆயிரம் ஆண்டுகளாக, நாடு பிடிப்பவர்களின் அடிமையாக இருக்கிறது. ஆகவே பிராமணனின் அற்புதமான நுண்ணறிவைவும், புத்தரின் இதயம், உயர்ந்த உள்ளம், வியப்புக்குரிய மனிதாபிமானம் இவற்றையும் ஒன்று சேர்ப்போமாக!

## நிறைவு நாள் உரை
*(1893 செப்டெம்பர் 27ஆம் நாள்)*

உலக சமயப் பெருமன்றம் நடந்து முடிந்த ஒன்றாகி விட்டது. இதை உருவாக்க முயற்சி செய்தவர்களுக்கு இறைவன் துணை நின்று, அவர்களுடைய தன்னலமற்ற உழைப்புக்கு வெற்றிவாகை சூட்டியுள்ளார்.

இந்த அற்புதமான கனவை முதலில் கண்டு, பிறகு அதை நனவாக்கிய அந்தப் பரந்த இதயமும், உண்மையில் பற்றும் கொண்ட அந்த உத்தமர்களுக்கு என் நன்றி, இந்த மேடையில் கரைகடந்து வழிந்தோடிய உணர்ச்சிப் பொழிவுக்கு என் நன்றி. இங்கு வந்திருந்த அறிவுகூர்ந்த பெருமக்கள் என்மீது ஒருமித்த அன்பு காட்டியதற்காகவும் சமய சமரசத்தின் ஒவ்வொரு கருத்தையும் அவர்கள் பாராட்டியதற்காகவும் அவர்களுக்கு என் நன்றி. இந்த இன்னிசையில் அவ்வப்போது சில அபசுரங்கள் கேட்டன. அவர்களுக்கு என் சிறப்பு நன்றி. ஏனெனில் அவர்கள் தங்கள் மாறுபட்ட ஒலியால், பொது இன்னிசையை மேலும் இனிமையாக்கினார்கள்.

சமய ஒருமைப்பாட்டுக்குரிய பொதுநிலைக்களம் பற்றி அதிகம் பேசப்பட்டது. என் சொந்தக் கோட்பாட்டை இப்பொழுது கூற நான் துணியப் போவதில்லை. ஏதாவது ஒரு சமயத்தின் வெற்றியாலும், மற்ற சமயங்களின் அழிவாலும் இந்த ஒருமைப்பாடு கிட்டும் என்று இங்குள்ள யாரேனும் நம்பினால், அவரைப் பார்த்து நான், "சகோதரரே ! உம்முடைய நம்பிக்கை வீண்" என்று சொல்லுகிறேன். கிறிஸ்தவர் இந்துவாகிவிட வேண்டுமா ? கடவுள் தடுப்பாராக ! இந்துவோ, பௌத்தரோ கிறிஸ்தவராக வேண்டுமா? கடவுள் தடுப்பாராக !

விதை தரையில் ஊன்றப்பட்டு, மண்ணும், காற்றும், நீரும், அதனைச் சூழ அமைக்கப்படுகின்றன. விதை மண்ணாகவோ, காற்றாகவோ, நீராகவோ ஆகிவிடுகிறதா? இல்லை. அது செடியாகிறது. தனக்குரிய வளர்ச்சி விதிக்கு ஏற்ப விருத்தியடைகிறது. காற்றையும், மண்ணையும், நீரையும் தனதாக்கிக் கொண்டு, தனக்கு வேண்டிய சத்துப் பொருளாக மாற்றி, ஒரு செடியாக வளர்கிறது.

சமயத்தின் நிலையும் இதுவே. கிறிஸ்தவர், இந்துவாகவோ பௌத்தராகவோ மாற வேண்டியதில்லை. அல்லது இந்து, பௌத்தகராகவோ கிறிஸ்தவராகவோ மாற வேண்டியதில்லை. ஆனால் ஒவ்வொருவரும் மற்றச் சமயங்களின் நல்ல அம்சங்களைத் தமதாக்கிக் கொண்டு தம் தனித்தன்மையைப் பாதுகாத்துக் கொண்டு, தம் வளர்ச்சி விதியின்படி வளர வேண்டும்.

இந்த அனைத்துச் சமயங்களின் பெருமன்றம் உலகத்துக்கு எதையாவது எடுத்துக் காட்டியுள்ளது என்றால் அது இதுதான். பரிசுத்தம், தூய்மை, கருணை இவை உலகின் எந்த ஒரு கோயிலின் தனிப்பட்ட சொத்து அல்ல என்றும், ஒவ்வொரு சமய முறையும் மிகச் சிறந்த பண்புள்ள ஆண்களையும், பெண்களையும் தோற்றவித்திருக்கிறத என்றும் நிரூபித்துள்ளது என்பது தான். இந்த சாட்சியங்களுக்கு முன்பு, தம் சமயம் மட்டும்தான் தனித்து வாழும், மற்றச் சமயங்கள் அழிந்துவிடும் என்று யாராவது கனவு காண்பார்களானால் அவரைக் குறித்து நான் என் இதய ஆழத்திலிருந்து பச்சாதாபப்படுவதோடு, இனி ஒவ்வொரு சமயத்தின் கொடியிலும் "உதவி செய்; சண்டை போடாதே, ஒன்றுபடுத்து. அழிக்காதே. சமரசமும் சாந்தமும் வேண்டும் : வேறுபாடு வேண்டாம்" என்ற எழுதப்பட்டிருப்பதையும் அவருக்குச் சுட்டிக் காட்ட விரும்புகிறேன்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# Chicago Addresses

Swami Vivekananda


1893 SEP. 11 - RESPONSE TO WELCOME
1893 SEP. 15 - WHY WE DISAGREE
1893 SEP. 19 - PAPER ON HINDUISM
1893 SEP. 20 - RELIGION NOT THE CRYING NEED OF INDIA
1893 SEP. 26 - BUDDHISM; THE FULFILMENT OF HINDUISM
1893 SEP. 27 - ADDRESS AT THE FINAL SESSION

## RESPONSE TO WELCOME

*At the World's Parliament of Religions, Chicago, 11th September 1893.*

Sisters and Brothers of America,

It fills my heart with joy unspeakable to rise in response to the warm and cordial welcome which you have given us. I thank you in the name of the most ancient order of monks in the world; I thank you in the name of the mother of religions; and I thank you in the name of the millions and millions of Hindu people of all classes and sects.



My thanks, also, to some of the speakers on this platform, who referring to the delegates from the Orient, have told you that these men from far-off nations may well claim the honour of bearing to different lands the idea of toleration. I am proud to belong to a religion which has taught the world both tolerance and universal acceptance. We believe not only in universal toleration, but we accept all religions as true. I am proud to belong to a nation which has sheltered the persecuted and the refugees of all religions and all nations of the earth. I am proud to tell you that we have gathered in our bosom the purest remnant of the Israelites, who came to southern India and took refuge with us in the very year in which their holy temple was shattered to pieces by Roman tyranny. I am proud to belong to the religion which has sheltered and is still fostering the remnant of the grand Zoroastrian nation. I will quote to you, brethren, a few lines from a hymn which I remember to have repeated from my earliest boyhood, which is every day repeated by millions of human beings : *'As the different streams having their sources in different places all mingle their water in the sea, so, O Lord, the different paths which men take through different tendencies, various though they appear, crooked or straight, all lead to Thee.'*

The present convention, which is one of the most august assemblies ever held, is in itself a vindication, a declaration to the world, of the wonderful doctrine preached in the Gita: *'Whosoever comes to Me,*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

*through whatsoever form, I reach him; all men are struggling through paths which in the end lead to Me.'* Sectarianism, bigotry, and its horrible descendant, fanaticism, have long possessed this beautiful earth. They have filled the earth with violence, drenched it often and often with human blood, destroyed civilization, and sent whole nations to despair. Had it not been for these horrible demons, human society would be far more advanced than it is now. But their time is come; and I fervently hope that the bell that tolled this morning in honour of this convention may be the death-knell of all fanaticism, of all persecutions with the sword or with the pen, and of all uncharitable feelings between persons wending their way to the same goal.

## WHY WE DISAGREE
*15th September 1893.*

I will tell you a little story. You have heard the eloquent speaker who has just finished say, 'Let us cease from abusing each other,' and he was very sorry that there should be always so much variance.

But I think I should tell you a story which would illustrate the cause of this variance. A frog lived in a well. It had lived there for a long time. It was born there and brought up there, and yet was a little, small frog. Of course, the evolutionists were not there then to tell us whether the frog lost its eyes or not, but, for our story's sake, we must take it for granted that it had its eyes, and that it every day cleansed the water of all the worms and bacilli that lived in it with an energy that would do credit to our modern bacteriologists. In this way it went on and became a little sleek and fat. Well, one day another frog that lived in the sea came and fell into the well.

'Where are you from?'

'I am from the sea.'

'The sea ! How big is that? Is it as big as my well?' and he took a leap from one side of the well to the other.

'My friend,' said the frog of the sea, 'how do you compare the sea with your little well?'

Then the frog took another leap and asked, 'Is your sea so big?'

'What nonsense you speak, to compare the sea with your well !'

'Well, then,' said the frog of the well, 'nothing can be bigger than my well; there can be nothing bigger than this; this fellow is a liar, so turn him out.'

That has been the difficulty all the while.

I am a Hindu, I am sitting in my own little well and thinking that the whole world is my little well. The Christian sits in his little well and thinks the whole world is his well. The Mohammedan sits in his little well and thinks that is the whole world. I have to thank you of America for the great attempt you are making to break down the barriers of this little world of ours, and hope that, in the future, the Lord will help you to accomplish your purpose.

## PAPER ON HINDUISM
*Read at the Parliament on 19th September 1893.*

Three religions now stand in the world which have come down to us from time prehistoric - Hinduism, Zoroastrianism, and Judaism. They have all received tremendous shocks, and all of them prove by their survival their internal strength. But while Judaism failed to absorb Christianity and was driven out of its place of birth by its all-conquering daughter, and a handful of Parsees is all that remains to tell the tale of their grand religion, sect after sect arose in India and seemed to shake the religion of the Vedas to its very foundations, but like the waters of the sea-shore in a tremendous earthquake it receded only for a while, only to return in an all-absorbing flood, a thousand times more vigorous, and when the tumult of the rush was over, these sects were all sucked in, absorbed and assimilated into the immense body of the mother faith.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

From the high spiritual flights of the Vedanta philosophy, of which the latest discoveries of science seem like echoes, to the low ideas of idolatry with its multifarious mythology, the agnosticism of the Buddhists and the atheism of the Jains, each and all have a place in the Hindu's religion.

Where then, the question arises, where is the common centre to which all these widely diverging radii converge? Where is the common basis upon which all these seemingly hopeless contradictions rest? And this is the question I shall attempt to answer.

The Hindus have received their religion through revelation, the Vedas. They hold that the Vedas are without beginning and without end. It may sound ludicrous to this audience, how a book can be without beginning or end. But by the Vedas no books are meant. They mean the accumulated treasury of spiritual laws discovered by different persons in different times. Just as the law of gravitation existed before its discovery, and would exist if all humanity forgot it, so is it with the laws that govern the spiritual world. The moral, ethical and spiritual relations between soul and soul and between individual spirits and the Father of all spirits were there before their discovery, and would remain even if we forgot them.

The discoverers of these laws are called Rishis, and we honour them as perfected beings. I am glad to tell this audience that some of the very greatest of them were women.

Here it may be said that these laws as laws may be without end, but they must have had a beginning. The Vedas teach us that creation is without beginning or end. Science is said to have proved that the sum total of cosmic energy is always the same. Then, if there was a time when nothing existed, where was all this manifested energy? Some say it was in a potential form in God. In that case God is sometimes potential and sometimes kinetic, which would make Him mutable. Everything mutable is a compound, and everything compound must undergo that change which is called destruction. So God would die, which is absurd. Therefore there never was a time when there was no creation.

If I may be allowed to use a simile, creation and creator are two lines, without beginning and without end running parallel to each other. God is the ever-active providence, by whose power systems after systems are being evolved out of chaos, made to run for a time, and again destroyed. This is what the Brahmin boy repeats every day: '*The sun and the moon, the Lord created like the suns and moons of previous cycles.*' And this agrees with modern science.

Here I stand and if I shut my eyes, and try to conceive my existence, 'I,' 'I,' I,' what is the idea before me? The idea of a body. Am I, then, nothing but a combination of material substances? The Vedas declare, 'No.' I am a spirit living in a body. I am not the body. The body will die, but I shall not die. Here am I in this body; it will fall, but I shall go on living. I had also a past. The soul was not created, for creation means a combination, which means a certain future dissolution. If then the soul was created, it must die. Some are born happy, enjoy perfect health with beautiful body, mental vigour, and all wants supplied. Others are born miserable; some are without hands or feet; others again are idiots, and only drag on a wretched existence. Why, if they are all created, why does a just and merciful God create one happy and another unhappy, why is He so partial? Nor would it mend matters in the least to hold that those who are miserable in this life will be happy in a future one. Why should a man be miserable even here in the reign of a just and merciful God?

In the second place, the idea of a creator God does not explain the anomaly, but simply expresses the cruel fiat of an all-powerful being. There must have been causes, then, before his birth, to make a man miserable or happy and those were his past actions.

Are not all the tendencies of the mind and the body accounted for by inherited aptitude? Here are two parallel lines of existence-one of the mind,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

the other of matter. If matter and its transformations answer for all that we have, there is no necessity for supposing the existence of a soul. But it cannot be proved that thought has been evolved out of matter; and if a philosophical monism is inevitable, spiritual monism is certainly logical and no less desirable than a-materialistic monism; but neither of these is necessary here.

We cannot deny that bodies acquire certain tendencies from heredity, but those tendencies only mean the physical configuration through which a peculiar mind alone can act in a peculiar way. There are other tendencies peculiar to a soul caused by his past actions. And a soul with a certain tendency would, by the laws of affinity, take birth in a body which is the fittest instrument for the display of that tendency. This is in accord with science, for science wants to explain everything by habit, and habit is got through repetitions. So repetitions are necessary to explain the natural habits of a newborn soul. And since they were not obtained in this present life, they must have come down from past lives.

There is another suggestion. Taking all these for granted, how is it that I do not remember anything of my past life? This can be easily explained. I am now speaking English. It is not my mother tongue; in fact, no words of my mother tongue are now present in my consciousness; but let me try to bring them up, and they rush in. That shows that consciousness is only the surface of the mental ocean, and within its depths are stored up all our experiences. Try and struggle, they would come up, and you would be conscious even of your past life.

This is direct and demonstrative evidence. Verification is the perfect proof of a theory, and here is the challenge thrown to the world by the Rishis. We have discovered the secret by which the very depths of the ocean of memory can be stirred up-try it and you would get a complete reminiscence of your past life.

So then the Hindu believes that he is a spirit. Him the sword cannot pierce-him the fire cannot burn-him the water cannot melt-him the air cannot dry. The Hindu believes that every soul is a circle whose circumference is nowhere but whose centre is located in the body, and that death means the change of this centre from body to body. Nor is the soul bound by the conditions of matter. In its very essence, it is free, unbounded, holy, pure, and perfect. But somehow or other it finds itself tied down to matter, and thinks of itself as matter.

Why should the free, perfect, and pure being be thus under the thraldom of matter, is the next question. How can the perfect soul be deluded into the belief that it is imperfect? We have been told that the Hindus shirk the question and say that no such question can be there. Some thinkers want to answer it by positing one or more quasi-perfect beings, and use big scientific names to fill up the gap. But naming is not explaining. The question remains the same. How can the perfect become the quasi-perfect; how can the pure, the absolute change even a microscopic particle of its nature? But the Hindu is sincere. He does not want to take shelter under sophistry. He is brave enough to face the question in a manly fashion; and his answer is: 'I do not know. I do not know how the perfect being, the soul, came to think of itself as imperfect, as joined to and conditioned by matter.' But the fact is a fact for all that. It is a fact in everybody's consciousness that one thinks of oneself as the body. The Hindu does not attempt to explain why one thinks one is the body. The answer that it is the will of God is no explanation. This is nothing more than what the Hindu says, 'I do not know.'

Well, then, the human soul is eternal and immortal, perfect and infinite, and death means only a change of centre from one body to another. The present is determined by our past actions, and the future by the present. The soul will go on evolving up or reverting back from birth to birth and death to death. But here is another question: Is man a tiny boat in a tempest, raised one moment on the foamy crest of a billow and dashed down into a yawning chasm the next, rolling to and fro at the mercy of good and bad actions - a powerless, helpless wreck



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

in an ever-raging, ever-rushing, uncompromising current of cause and effect-a little moth placed under the wheel of causation, which rolls on crushing everything in its way and waits not for the widow's tears or the orphan's cry? The heart sinks at the idea, yet this is the law of nature. Is there no hope? Is there no escape? - was the cry that went up from the bottom of the heart of despair. It reached the throne of mercy, and words of hope and consolation came down and inspired a Vedic sage, and he stood up before the world and in trumpet voice proclaimed the glad tidings: 'Hear, ye children of immortal bliss! even ye that reside in higher spheres! I have found the Ancient One who is beyond all darkness, all delusion: knowing Him alone you shall be saved from death over again.' 'Children of immortal bliss'-what a sweet, what a hopeful name ! Allow me to call you, brethren, by that sweet name-heirs of immortal bliss-yea, the Hindu refuses to call you sinners. We are the Children of God, the sharers of immortal bliss, holy and perfect beings. Ye divinities on earth-sinners ! It is a sin to call a man so; it is standing libel on human nature. Come up, O lions, and shake off the delusion that you are sheep; you are souls immortal, spirits free, blest and eternal; ye are not matter, ye are not bodies; matter is your servant, not you the servant of matter.

Thus it is that the Vedas proclaim not a dreadful combination of unforgiving laws, not an endless prison of cause and effect, but that at the head of all these laws, in and through every particle of matter and force, stands One, 'by whose command the wind blows, the fire burns, the clouds rain, and death stalks upon the earth'.

And what is His nature?

He is everywhere, the pure and formless One, the Almighty and the All-merciful. 'Thou art our father, Thou art our mother, Thou art our beloved friend. Thou art the source of all strength; give us strength. Thou art He that beareth the burdens of the universe; help me bear the little burden of this life.' Thus sang the Rishis of the Veda. And how to worship Him? Through love. 'He is to be worshipped as the one beloved, dearer than everything in this and the next life.'

This is the doctrine of love declared in the Vedas, and let us see how it is fully developed and taught by Krishna whom the Hindus believe to have been God incarnate on earth.

He taught that a man ought to live in this world like a lotus leaf, which grows in water but is never moistened by water; so a man ought to live in the world - his heart to God and his hands to work.

It is good to love God for hope of reward in this or the next world, but it is better to love God for love's sake; and the prayer goes: 'Lord, I do not want wealth nor children nor learning. If it be Thy will, I shall go from birth to birth; but grant me this, that I may love Thee without the hope of reward-love unselfishly for love's sake.' One of the disciples of Krishna, the then Emperor of India, was driven from his kingdom by his enemies and had to take shelter with his queen, in a forest in the Himalayas and there one day the queen asked him how it was that he, the most virtuous of men, should suffer so much misery. Yudhishthira answered, 'Behold, my queen, the Himalayas, how grand and beautiful they are; I love them. They do not give me anything but my nature is to love the grand, the beautiful, therefore I love them, Similarly, I love the Lord, He is the source of all beauty, of all sublimity. He is the only object to be loved; my nature is to love Him, and therefore I love. I do not pray for anything; I do not ask for anything. Let Him place me wherever He likes. I must love Him for love's sake. I cannot trade in love.'

The Vedas teach that the soul is divine, only held in the bondage of matter; perfection will be reached when this bond will burst, and the word they use for it is, therefore, Mukti-freedom, freedom from the bonds of imperfection, freedom from death and misery.

And this bondage can only fall off through the mercy of God, and this mercy comes on the pure. So purity is the condition of His mercy. How does



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

that mercy act? He reveals Himself to the pure heart; the pure and the stainless see God, yea, even in this life; then and then only all the crookedness of the heart is made straight. Then all doubt ceases. He is no more the freak of a terrible law of causation. This is the very centre, the very vital conception of Hinduism. The Hindu does not want to live upon words and theories. If there are existences beyond the ordinary sensuous existence, he wants to come face to face with them. If there is an all-merciful universal Soul, he will go to Him direct. He must see Him, and that alone can destory all doubts. So the best proof a Hindu sage gives about the soul, about God, is : 'I have seen the soul; I have seen God'. And that is the only condition of perfection. The Hindu religion does not consist in struggles and attempts to bėlieve a certain doctrine or dogma, but in realizing- not in believing, but in being and becoming.

Thus the whole object of their system is by constant struggle to become perfect, to become divine, to reach God, and see God; and this reaching God, seeing God, becoming perfect even as the Father in Heaven is perfect, constitutes the religion of the Hindus.

And what becomes of a man when he attains perfection? He lives a life of bliss infinite. He enjoys infinite and perfect bliss, having obtained the only thing in which man ought to have pleasure, namely God, and enjoys the bliss with God.

So far all the Hindus are agreed. This is the common religion of all the sects of India; but then perfection is absolute, and the absolute cannot be two or three. It cannot have any qualities. It cannot be an individual. And so when a soul becomes perfect and absolute, it must become one with Brahman, and it would only realize the Lord as the perfection, the reality, of its own nature and existence, the existence absolute, knowledge absolute, and bliss absolute. We have often and often read this called the losing of individuality and becoming a stock or a stone.

'He jests at scars that never felt a wound.'

I tell you it is nothing of the kind. If it is happiness to enjoy the consciousness of this small body, it must be greater happiness to enjoy the consciousness of two bodies, the measure of happiness increasing with the consciousness of an increasing number of bodies, the aim, the ultimate of happiness, being reached when it would become a universal consciousness.

Therefore, to gain this infinite universal individuality, this miserable little prison-individuality must go. Then alone can death cease when I am one with life, then alone can misery cease when I am one with happiness itself, then alone can all errors cease when I am one with knowledge itself; and this is the necessary scientific conclusion. Science has proved to me that physical individuality is a delusion, that really my body is one little continuously changing body in an unbroken ocean of matter, and Advaita (unity) is the necessary conclusion with my other counterpart, Soul.

Science is nothing but the finding of unity. As soon as science would reach perfect unity, it would stop from further progress, because it would reach the goal. Thus chemistry could not progress farther when it would discover one element out of which all others could be made. Physics would stop when it would be able to fulfil its services in discovering one energy of which all the others are but manifestations, and the science of religion become perfect when it would discover Him who is the one life in a universe of death, Him who is the constant basis of an ever-changing world, One who is the only Soul of which all souls are but delusive manifestations. Thus is it, through multiplicity and duality, that the ultimate unity is reached. Religion can go no farther. This is the goal of all science.

All science is bound to come to this conclusion in the long run. Manifestation, and not creation, is the word of science today; and the Hindu is only glad that what he has been cherishing in his bosom for ages is going to be taught in more forcible language and with further light from the latest conclusions of science.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Descend we now from the aspirations of philosophy to the religion of the ignorant. At the very outset, I may tell you that there is no *polytheism* in India. In every temple, if one stands by and listens, one will find the worshippers applying all the attributes of God, including omnipresence, to the images. It is not polytheism, nor would the name henotheism explain the situation.

'The rose, called by any other name, would smell as sweet.' Names are not explanations.

I remember, as a boy, hearing a Christian missionary preach to a crowd in India. Among other sweet things he was telling them was, that if he gave a blow to their idol with his stick, what could it do? One of his hearers sharply answered, 'If I abuse your God, what can He do?' 'You would be punished,' said the preacher, 'when you die.' 'So my idol will punish you when you die,' retorted the Hindu.

The tree is known by its fruits, When I have seen amongst them that are called idolaters, men, the like of whom, in morality and spirituality and love, I have never seen anywhere, I stop and ask myself, 'Can sin beget holiness?'

Superstition is a great enemy of man, but bigotry is worse. Why does a Christian go to church? Why is the cross holy? Why is the face turned towards the sky in prayer? Why are there so many images in the Catholic Church? why are there so many images in the minds of Protestants when they pray? My brethren, we can no more think about anything without a mental image than we can live without breathing. By the law of association the material image calls up the mental idea and vice versa. This is why the Hindu uses an external symbol when he worships. He will tell you, it helps to keep his mind fixed on the Being to whom he prays. He knows as well as you do that the image is not God, is not omnipresent. After all, how much does omnipresence mean to almost the whole world? It stands merely as a word, a symbol. Has God superficial area? If not, when we repeat that word 'omnipresent', we think of the extended sky, or of space-that is all.

As we find that somehow or other, by the laws of our mental constitution, we have to associate our ideas of infinity with the image of the blue sky, or of the sea, so we naturally connect our idea of holiness with the image of a church, a mosque, or a cross. The Hindus have associated the ideas of holiness, purity, truth, omnipresence, and such other ideas with different images and forms. But with this difference that while some people devote their whole lives to their idol of a church and never rise higher, because with them religion means an intellectual assent to certain doctrines and doing good to their fellows, the whole religion of the Hindu is centred in realization. Man is to become divine by realizing the divine. Idols or temples or churches or books are only the supports, the helps, of his spiritual childhood; but on and on he must progress.

He must not stop anywhere. *'External worship, material worship,'* say the scriptures, *'is the lowest stage; struggling to rise high, mental prayer is the next stage, but the highest stage is when the Lord has been realized,'* Mark, the same earnest man who is kneeling before the idol tells you, *'Him the sun cannot express, nor the moon, nor the stars, the lightning cannot express Him, nor what we speak of as fire; through Him they shine,'* But he does not abuse any one's idol or call its worship sin. He recognizes in it a necessary stage of life. *'The child is father of the man,'* Would it be right for an old man to say that childhood is a sin or youth a sin?

If a man can realize his divine nature with the help of an image, would it be right to call that a sin? Nor, even when he has passed that stage, should he call it an error. To the Hindu, man is not travelling from error to truth, but from truth to truth, from lower to higher truth. To him all the religions, from the lowest fetishism to the highest absolutism, mean so many attempts of the human soul to grasp and realize the Infinite, each determined by the conditions of its birth and association, and each of these marks a stage of progress; and every soul is a young eagle soaring higher and higher, gathering more and more strength till it reaches the Glorious sun.

**Chicago Addresses**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Unity in variety is the plan of nature, and the Hindu has recognized it. Every other religion lays down certain fixed dogmas and tries to force society to adopt them. It places before society only one coat which must fit Jack and John and Henry, all alike. If it does not fit John or Henry, he must go without a coat to cover his body. The Hindus have discovered that the absolute can only be realized, or thought of, or stated through the relative, and the images, crosses, and crescents are simply so many symbols-so many pegs to hang spiritual ideas on. It is not that this help is necessary for everyone, but those that do not need it have no right to say that it is wrong. Nor is it compulsory in Hinduism.

One thing I must tell you. Idolatry in India does not mean anything horrible. It is not the mother of harlots. On the other hand, it is the attempt of undeveloped minds to grasp high spiritual truths. The Hindus have their faults, they sometimes have their exceptions; but mark this, they are always for punishing their own bodies, and never for cutting the throats of their neighbours. If the Hindu fanatic burns himself on the pyre, he never lights the fire of Inquisition. And even this cannot be laid at the door of his religion any more than the burning of witches can be laid at the door of Christianity.

To the Hindu, then, the whole world of religions is only a travelling, a coming up, of different men and women, through various conditions and circumstances, to the same goal. Every religion is only evolving a God out of the material man, and the same God is the inspirer of all of them. Why, then, are there so many contradictions? They are only apparent, says the Hindu. The contradictions come from the same truth adapting itself to the varying circumstances of different natures.

It is the same light coming through glasses of different colours. And these little variations are necessary for purposes of adaptation. But in the heart of everything the same truth reigns. The Lord has declared to the Hindu in His incarnation as Krishna: *'I am in every religion as the thread through a string of pearls. Wherever thou seest extraordinary holiness and extraordinary power raising and purifying humanity, know thou that I am there.'* And what has been the result? I challenge the world to find, throughout the whole system of Sanskrit philosophy, any such expression as that the Hindu alone will be saved and not others. Says Vyasa, *'We find perfect men even beyond the pale of our caste and creed.'* One thing more. How, then, can the Hindu, whose whole fabric of thought centres in God, believe in Buddhism which is agnostic, or in Jainism which is atheistic?

The Buddhists or the Jains do not depend upon God; but the whole force of their religion is directed to the great central truth in every religion, to evolve a God out of man. They have not seen the Father, but they have seen the Son. And he that hath seen the Son hath seen the Father also.

This, brethren, is a short sketch of the religious ideas of the Hindus. The Hindu may have failed to carry out all his plans, but if there is ever to be a universal religion, it must be one which will have no location in place or time; which will be infinite like the God it will preach, and whose sun will shine upon the followers of Krishna and of Christ, on saints and sinners alike; which will not be Brahminic or Buddhistic, Christian or Mohammedan, but the sum total of all these, and still have infinite space for development; which in its catholicity will embrace in infinite arms, and find a place for, every human being from the lowest grovelling savage, not far removed from the brute, to the highest man towering by the virtues of his head and heart almost above humanity, making society stand in awe of him and doubt his human nature. It will be a religion which will have no place for persecution or intolerance in its polity, which will recognize divinity in every man and woman, and whose whole scope, whose whole force, will be centred in aiding humanity to realize its own true, divine nature.

Offer such a religion and all the nations will follow you. Asoka's council was a council of the Buddhist faith. Akbar's, though more to the purpose, was only a parlour meeting. It was reserved for



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

America to proclaim to all quarters of the globe that the Lord is in every religion.

May He who is the Brahman of the Hindus, the Ahura-Mazda of the Zoroastrians, the Buddha of the Buddhists, the Jehovah of the Jews, the Father in Heaven of the Christians, give strength to you to carry out your noble idea! The star arose in the East; it travelled steadily towards the West, sometimes dimmed and sometimes effulgent, till it made a circuit of the world, and now it is again rising on the very horizon of the East, the borders of the Sanpo*, a thousandfold more effulgent than it ever was before.

Hail Columbia, motherland of liberty! It has been given to thee, who never dipped her hand in her neighbour's blood, who never found out that the shortest way of becoming rich was by robbing one's neighbours, it has been given to thee to march at the vanguard of civilization with the flag of harmony.

## RELIGION NOT THE CRYING NEED OF INDIA

*20th September 1893.*

Christians must always be ready for good criticism and I hardly think that you will mind if I make a little criticism. You Christians, who are so fond of sending out missionaries to save the soul of the heathen - why do you not try to save their bodies from starvation? In India, during the terrible famines, thousands died from hunger, yet you Christians did nothing. You erect churches all through India, but the crying evil in the East is not religion-they have religion enough-but it is bread that the suffering millions of burning India cry out for with parched throats. They ask us for bread, but we give them stones. It is an insult to a starving people to offer them religion, it is an insult to a starving man to teach him metaphysics. In India a priest that preached for money would lose caste and be spat upon by the people. I came here to seek aid for my impoverished people, and I fully realized how difficult it was to get help for heathens from Christians in a Christian land.

## BUDDHISM ; THE FULFILMENT OF HINDUISM

*26th September 1893.*

I am not a Buddhist, as you have heard, and yet I am. If China, or Japan, or Ceylon follow the teachings of the Great Master, India worships him as God incarnate on earth. You have just now heard that I am going to criticize Buddhism, but by that I wish you to understand only this. Far be it from me to criticize him whom I worship as God incarnate on earth. But our views about Buddha are that he was not understood properly by his disciples. The relation between Hinduism (by Hinduism, I mean the religion of the Vedas) and what is called Buddhism at the present day, is nearly the same as between Judaism and Christianity. Jesus Christ was a Jew, and Shakya Muni was a Hindu. The Jews rejected Jesus Christ, nay, crucified him, and the Hindus have accepted Shakya Muni as God and worship him. But the real difference that we Hindus want to show between modern Buddhism and what we should understand as the teachings of Lord Buddha, lies principally in this: Shakya Muni came to preach nothing new. He also, like Jesus, came to fulfil and not to destroy. Only, in the case of Jesus, it was the old people, the Jews, who did not understand him, while in the case of Buddha, it was his own followers who did not realize the import of his teachings. As the Jew did not understand the fulfilment of the Old Testament, so the Buddhist did not understand the fulfilment of the truths of the Hindu religion. Again, I repeat, Shakya Muni came not to destroy, but he was the fulfilment, the logical conclusion, the logical development of the religion of the Hindus.

The religion of the Hindus is divided into two parts, the ceremonial and the spiritual; the spiritual portion is specially studied by the monks.

In that there is no caste. A man from the highest caste and a man from the lowest may become a monk in India and the two castes become equal. In religion there is no caste; caste is simply a social institution. Shakya Muni himself was a monk, and it

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

was his glory that he had the large-heartedness to bring out the truths from the hidden Vedas and throw them broadcast all over the world. He was the first being in the world who brought missionarizing into practice - nay, he was the first to conceive the idea of proselytizing.

The great glory of the Master lay in his wonderful sympathy for everybody, especially for the ignorant and the poor. Some of his disciples were Brahmins. When Buddha was teaching, Sanskrit was no more the spoken language in India. It was then only in the books of the learned. Some of Buddha's Brahmin disciples wanted to translate his teachings into Sanskrit, but he distinctly told them, 'I am for the poor, for the people; let me speak in the tongue of the people.' And so to this day the great bulk of his teachings are in the vernacular of that day in India.

Whatever may be the position of philosophy, whatever may be the position of metaphysics, so long as there is such a thing as death in the world, so long as there is such a thing as weakness in the human heart, so long as there is a cry going out of the heart of man in his very weakness, there shall be a faith in God.

On the philosophic side, the disciples of the Great Master dashed themselves against the eternal rocks of the Vedas and could not crush them, and on the other side they took away from the nation that eternal God to which everyone, man or woman, clings so fondly. And the result was that Buddhism had to die a natural death in India. At the present day there is not one who calls himself a Buddhist in India, the land of its birth.

But at the same time, Brahmanism lost something-that reforming zeal, that wonderful sympathy and charity for everybody, that wonderful leaven which Buddhism had brought to the masses and which had rendered Indian society so great that a Greek historian who wrote about India of that time was led to say that no Hindu was known to tell an untruth and no Hindu woman was known to be unchaste.

Hinduism cannot live without Buddhism, nor Buddhism without Hinduism. Then realize what the separation has shown to us, that Buddhists cannot stand without the brain and philosophy of the Brahmins, nor the Brahmin without the heart of the Buddhist. This separation between the Buddhists and the Brahmins is the cause of the downfall of India. That is why India is populated by three hundred millions of beggars, and that is why India has been the slave of conquerors for the last thousand years. Let us then join the wonderful intellect of the Brahmin with the heart, the noble soul, the wonderful humanizing power of the Great Master.

## ADDRESS AT THE FINAL SESSION

*27th September 1893.*

The World's Parliament of Religions has become an accomplished fact, and the merciful Father has helped those who laboured to bring it into existence, and crowned with success their most unselfish labour.

My thanks to those noble souls whose large hearts and love of truth first dreamed this wonderful dream and then realized it. My thanks to the shower of liberal sentiments that has overflowed this platform. My thanks to this enlightened audience for their uniform kindness to me and for their appreciation of every thought that tends to smooth the friction of religions. A few jarring notes were heard from time to time in this harmony. My special thanks to them, for they have, by their striking contrast, made the general harmony the sweeter.

Much has been said of the common ground of religious unity. I am not going just now to venture my own theory. But if anyone here hopes that this unity will come by the triumph of any one of the religions and the destruction of the others, to him I


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

say, 'Brother, yours is an impossible hope.' Do I wish that the Christian would become Hindu? God forbid. Do I wish that the Hindu or Buddhist would become Christian? God forbid.

The seed is put in the ground, and earth and air and water are placed around it. Does the seed become the earth, or the air, or the water? No. It becomes a plant, it develops after the law of its own growth, assimilates the air, the earth, and the water, converts them into plant substance, and the grows into a plant.

Similar is the case with religion. The Christian is not to become a Hindu or a Buddhist, nor a Hindu or a Buddhist to become a Christian. But each must assimilate the spirit of the others and yet preserve his individuality and grow according to his own law of growth.

If the Parliament of Religions has shown anything to the world it is this: It has proved to the world that holiness, purity, and charity are not the exclusive possessions of any church in the world, and that every system has produced men and women of the most exalted character. In the face of this evidence, if anybody dreams of the exclusive survival of his own religion and the destruction of others, I pity him from the bottom of my heart, and point out to him that upon the banner of every religion will soon be written, in spite of resistance: 'Help and not Fight', 'Assimilation and not Destruction', 'Harmony and Peace and not Dissension'.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# விவேகானந்தரின் இலங்கை விஜயம்

அமெரிக்கா, ஐரோப்பா, இங்கிலாந்து ஆகிய நாடுகளில் இந்து மதத்தின் உயர்ந்த கருத்துகளால் சுவாமி விவேகானந்தர் மக்கள் மனதை வென்றார்.

அவர் வெற்றி வீரராக இந்தியா திரும்பியபோது அவரை முதன்முதலாக வரவேற்கும் பாக்கியம் இலங்கை மக்களுக்குக் கிடைத்தது.

எந்த ஒரு மன்னருக்கோ, அரசியல்வாதிக்கோ அது வரையில் அளிக்கப்படாத மகத்தான வரவேற்பை இலங்கை வாழ் இந்துக்கள் துறவியாகிய சுவாமி விவேகானந்தருக்கு அளித்தார்கள்!

1897 ஆம் ஆண்டு ஜனவரி 15–ஆம் தேதி மாலை 6 மணிக்கு சுவாமி விவேகானந்தர் தமது மேலைநாட்டுச் சீடர்களுடன் கொழும்புத் துறைமுகம் வந்தடைந்தார்.

அப்போது இலங்கை சட்ட மன்ற உறுப்பினர் பி. குமாரசாமி, பி. அருணாசலம் ஆகியோரின் தலைமையில் வரவேற்புக் குழுவினர் சுவாமிஜியை மலர்மாலை அணிவித்து துறைமுகத்தில் வரவேற்றார்கள். இந்த வரவேற்பில் சுவாமி நிரஞ்ஜனானந்தரும் வலந்துகொண்டார்.

துறைமுகத்தில் கட்டுக்கடங்காத மக்கள் உணர்ச்சிவசப்பட்டவர்களாக முட்டி மோதிக் கொண்டு வந்து சுவாமிஜியின் திருவடிகளில் வீழ்ந்து பணிந்தனர்.

அங்கு கூடியிருந்த மக்கள் செய்த கரகோஷம் கடல் அலைகளின் சத்தத்தையே மூழ்கடித்து விட்டது.

பின்னர் இரண்டு குதிரைகள் பூட்டிய வண்டியில் சுவாமிஜி அமர்ந்திருக்க, அதைத் தொடர்ந்து ஏனைய வாகனங்களும் ஆயிரக்கணக்கான மக்களும் பின்தொடர வாகன ஊர்வலம் தொடங்கியது. அந்த ஊர்வலம் இறுதியில் பாண்ஸ் வீதியில் அமைக்கப்பட்டிருந்த முதலாவது வரவேற்புப் பந்தலை அடைந்தது.

அங்கு குதிரை வண்டியிலிருந்து இறங்கிய சுவாமிஜியைப் பூர்ண கும்பம் வைத்து, மேளதாளத்துடன் சம்பிரதாய பூர்வமாக மக்கள் வரவேற்றார்கள். அதைத்தொடர்ந்து அதே வீதியில் அமைந்திருந்த இரண்டாது பந்தலை நோக்கி ஊர்வலம் சென்றது.

வீதிகள் தோறும் சுவாமிஜியை வரவேற்று வண்ணவண்ணத் துணிகள் தொங்கவிடப்பபட்டிருந்தன. கொடி பிடித்து, நடைபாவாடை போட்டு, மலர்தூவி, பன்னீர் தெளித்து பழந்தமிழர் மரபின்படி சுவாமிஜியைக் கொழும்பு மக்கள் வரவேற்றார்கள்.

இறுதியில் ஊர்வலம் மிகவும் அழகாக அலங்கரிக்கப்பட்டிருந்த இரண்டாவது மண்டபத்தை அடைந்தது.

மண்டப அலங்காரங்களைக்கூட ரசிக்காமல் மக்களின் கவனம் முழுவதும் சுவாமிஜியை நோக்கியபடியே இருந்தது.

மண்டபத்திற்குள் சிறப்பாக அமைக்கப்பட்டிருந்த மேடையை சுவாமிஜி அடைந்ததும் அங்கு ஒரு செயற்கைத் தாமரை தனது இதழ்களை விரித்துக் கொண்டது.

அதிலிருந்து ஒரு பறவை சிறகடித்துப் பறந்தது. இந்த நிகழ்ச்சி விவேகானந்தரின் வருகையில் இவ்வளவு காலமும் கூம்பியிருந்த சானாதன தர்மம் மறுமலர்ச்சி பெற்றதுடன், மறைந்திருந்த அதன் பெருமை உலக அரங்கில் சிறகடித்துப் பறக்கிறது என்பதற்கு அடையாளமாக அமைந்திருந்தது.

அங்கு கூடியிருந்த மக்களின் ஆரவாரம் ஒருவாறு அடங்கியதும் தேவார இசையுடன் வரவேற்பு விழா ஆரம்பமாயிற்று.

சுவாமிஜிக்கென்றே இயற்றப்பட்ட சம்ஸ்கிருத ஸ்துதி ஒன்றும் இசைக்கப்பட்டது.

கொழும்புவாழ் இந்துப் பெருமக்கள் சார்பாக சுவாமி விவேகானந்தருக்கு ஒரு வரவேற்பு பத்திரம் வாசித்தளிக்கப்பட்டது.

அதில் சில வரிகள் வருமாறு:

"கண்ணியம் பொருந்திய புண்ணியராகிய ஐயா, தேவரீருக்கு நாங்கள் மனப்பூர்வமாக நல்வரவு கூறுகிறோம்."



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"மேனாட்டில் மெய்ஞ்ஞானத்தைப் பரப்பும் மகத்தான பணியைத் தாங்கள் செய்திருக்கிறீர்கள். அந்தப் பணியை முடித்துக் கொண்டு தாய் நாட்டுக்குத் திரும்பி வரும் தேவரீரை முதலில் வரவேற்று உபசரிக்கும் வாய்ப்பை நாங்கள் பெற்றதை மிகவும் பெரிய பாக்கியமாகக் கருதுகிறோம்."

வரவேற்புரையை ஏற்றுக் கொண்ட சுவாமிஜி அதிரும் கரவொலிக்கிடையே எழுந்து, எழுச்சி மிக்க ஒரு சொற்பொழிவை நிகழ்த்தினார்.

அதில் அவர், "பிச்சைக்காரனான துறவி ஒருவருக்கு இப்படிப்பட்ட ராஜோபசாரம் செய்வதிலிருந்தே இந்துக்கள் ஆன்மிகத்துக்கு அளிக்கும் மதிப்பு தெரிகிறது" என்று மனம் நெகிழ்ந்து கூறினார்.

மறுநாள் 16–ஆம் தேதி நகரிலுள்ள ஒரு மண்டபத்தில் 'இந்திய புண்ணிய பூமி' என்ற தலைப்பில் அவர் உரை நிகழ்த்தினார். அதில் சுவாமிஜி இவ்விதம் குறிப்பிட்டார்.

"உலகில் எந்த நாடாவது புண்ணிய பூமி என்று சொல்வதற்கு உரியதாக இருந்தால் அது நம் தாய் நாடாகிய இந்தியாவே ஆகும். இந்த நாடே ஆத்ம சிந்தனையிலும், தெய்வத்தன்மையிலும் மற்ற எல்லா நாடுகளைக் காட்டிலும் சிறந்து விளங்கியிருக்கிறது."

17–ஆம் தேதி ஞாயிற்றுக்கிழமை காலை முதல் மாலை வரையில் தம்மைக் காண வந்த அன்பர்களோடு சுவாமிஜி உரையாடினார்.

அன்று மாலை கொச்சிக்கடை பொன்னம்பலவாணேஸ்வரர் கோயிலுக்குச் சென்று வழிபட்டார்.

கோயில் வாயிலில் பெருந்திரளான பக்தர்கள் கூடியிருந்து ஆலய மரியாதைகளுடன் சுவாமிஜியை வரவேற்றார்கள்.

சுவாமிஜி ஆலயத்திலிருந்து தமது இருப்பிடம் திரும்பியபோது அங்கு பலர் அவருக்காகக் காத்திருந்தனர். அவர்களுடன் அவர் இரவு இரண்டு மணி வரை உரையாடினார்.

18–ஆம் தேதி செல்லையா என்பவரின் வீட்டிற்கு சுவாமிஜி விருந்தினராகச் சென்றார்.

அந்த இல்லத்திற்குச் சுவாமிஜி எழுந்தருளுகிறார் என்பதைக் கேள்விப்பட்டு மக்கள் அங்கும் திரள்திரளாகக் கூடியிருந்தார்கள்.

அந்த வீட்டில் மாட்டப்பட்டிருந்த பகவான் ஸ்ரீராமகிருஷ்ணரின் திருவுருவப் படத்தைக் கண்ட சுவாமிஜி எழுந்து தமது அஞ்சலியைச் செலுத்தினார்.

அங்கு கூடியிருந்தவர்களுக்கு சுவாமிஜி விபூதிப் பிரசாதம் வழங்கினார். அனைவருக்கும் சிற்றுண்டி வழங்கப்பட்டது.

அன்று சில பஜனைப் பாடல்களுடன் அந்த இல்லத்தின் நிகழ்ச்சிகள் நிறைவு பெற்றன.

அன்று மாலை சுவாமிஜியின் சொற்பொழிவைக் கேட்பதற்காக கொழும்பு பொதுமன்றத்தின் உள்ளேயும், வெளியேயும் மக்கள் வெள்ளம் நிரம்பி வழிந்தது. அங்கு சுவாமிஜி 'வேதாந்தத் தத்துவம்' என்ற தலைப்பில் சொற்பொழிவு நிகழ்த்தினார்.

அந்தச் சொற்பொழிவில் அவர் பின்வருமாறு குறிப்பிட்டார்:

"வேறுவேறு துறைகளில் சென்றாலும், எல்லோரும் ஓர் இடத்திற்குத் தான் செல்கிறார்கள். சிலர் வளைந்து செல்லலாம்; சிலர் நேராகச் செல்லலாம்; ஆனால், அனைவரும் ஒரே ஆண்டவனைத்தான் அடைகிறார்கள்."

"சிவபெருமானை வணங்கும் நீங்கள், எப்போது சிவலிங்க வடிவத்தில் மட்டுமில்லாமல் எல்லா உயிர்களிலும் சிவபெருமானைக் காண்பீர்களோ அப்போதுதான் உங்கள் பக்தி பூரணம் அடையும். ஹரியை எல்லோரிடமும் எங்கும் காண்பவன்தான் ஹரியின் உண்மையான பக்தனாவான்."

சுவாமிஜி கொழும்பிலிருந்து நேராக சென்னைக்குச் செல்வதாக முதலில் ஏற்பாடாகி இருந்தது. ஆனால் இலங்கையின் பல பாகங்களிலிருந்தும் மக்கள் தங்களுடைய ஊர்களுக்கும் வருகை தருமாறு கேட்டு சுவாமிஜிக்கு அனுப்பிய தந்திகள் நூற்றுக்கணக்கில் வந்து குவிந்தன. ஆகவே அவர் தமது பிரயாணத் திட்டத்தை மாற்றி யாழ்ப்பாணம் வரை தரை மார்க்கமாகச் சென்று பிறகு அங்கிருந்து கப்பல் மூலம் இந்தியா செல்லத் தீர்மானித்தார்.

ஜனவரி 19–ஆம் தேதி ஒரு விசேஷ ரயில் மூலம் சுவாமிஜி கண்டிக்குப் புறப்பட்டார். அப்போது பி. அருணாசலம் என்பவரும் சுவாமிஜியுடன் சென்றார்.

கண்டி ரயில் நிலையத்தில் பெருந்திரளான மக்கள் கூடிநின்று சம்பிரதாய பூர்வமாக சுவாமிஜியை வரவேற்றார்கள்.

அங்கும் மக்கள் சுவாமிஜியை ஊர்வலமாக அழைத்துச் சென்று மரியாதை செலுத்தினார்கள்.

இறுதியில் ஊர்வலம் ஒரு பங்களாவை அடைந்தது.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கண்டிவாழ் இந்து மக்களின் சார்பாக தில்லையம்பலம் முகாந்திரம் என்பவர் சுவாமிஜிக்கு ஒரு வரவேற்புரையை வாசித்தளித்தார். அவர்களுடைய வரவேற்புக்குப் பதிலளித்து சுவாமிஜி ஆசியுரை வழங்கினார்.

பின்னர் தம்மை விட்டுப் பிரிய மனமில்லாத கண்டி அன்பர்களிடம் இருந்து சுவாமிஜி ஒருவாறு விடைபெற்றார்.

சுவாமிஜியும் அவரது குழுவினரும் அன்று மாலையே மாத்தளையைச் சென்றடைந்தனர்.

சுவாமிஜியின் குழுவினர் மாத்தளையில் ஒரு விடுதியில் இரவைக் கழித்தனர்.

மறுநாள் காலை 20–ஆம் தேதி புதன்கிழமை ஒரு குதிரை வண்டியில் அவர்கள் தங்கள் பிரயாணத்தைத் தொடர்ந்தனர்.

மறுநாள் காலை 10.30 மணியளவில் அவர்கள் அனுராதபுரத்தை அடைந்தனர்.

அன்று பிரசித்தி பெற்ற போதி மரத்தடியில் 'வழிபாடு' என்னும் தலைப்பில் சுவாமிஜி ஒரு சொற்பொழிவாற்றினார். அங்கு அவருடைய சொற்பொழிவு உடனுக்குடன் தமிழிலும், சிங்களத்திலும் மொழி பெயர்க்கப்பட்டது.

சுவாமிஜி சொற்பொழிவு நிகழ்த்திக் கொண்டிருந்தபோது மதவெறி பிடித்த பௌத்தப் பிக்குகள் சிலரும், மற்றும் சிலரும் சேர்ந்து அவரைத் தொடர்ந்து பேசவிடாமல் ஆரவாரம் செய்து, நிகழ்ச்சிக்கு இடையூறு விளைவித்தனர். அவர்களின் பண்பற்ற நடத்தை இந்துக்களின் சகிப்புத் தன்மைக்கு ஒரு சோதனையாக அமைந்தது. அங்கு கூடியிருந்த இந்துக்களை அமைதி காக்கும் படி சுவாமிஜி கேட்டுக் கொண்டதால் அன்று எந்தக் கலவரமும் அங்கு நடைபெறாமல் தவிர்க்கப்பட்டது.

மறுநாள் காலை சுவாமிஜி யாழ்ப்பாணம் செல்லும் வழியில் வவுனியா மக்கள் அளித்த வரவேற்பை மகிழ்ச்சியோடு ஏற்றுக்கொண்டார். அவர்களுடைய ஆர்வத்தைப் பாராட்டி விட்டு அவர் தமது பிரயாணத்தைத் தொடர்ந்தார்.

யாழ்ப்பாணத்தில் தென் எல்லையாகிய ஆனையிறவில் மக்கள் பெருந்திரளாக வந்து சுவாமிஜியை வரவேற்கத் தொடங்கினார்கள். யாழ்நகரிலிருந்து 12 மைல்களுக்கு முன்னாலேயே யாழ்நகர் பிரமுகர்கள் சுவாமிஜியைச் சம்பிரதாய பூர்வமாக வரவேற்று குதிரை வண்டியில் ஊர்வலமாக யாழ்நகரை நோக்கி அழைத்துச் சென்றனர்.

3.2.1897 அன்று வெளியான 'இந்து சாதனம்' என்ற பத்திரிகை யாழ்ப்பாணத்தில் சுவாமிஜிக்கு அளிக்கப்பட்ட வரவேற்பைப்பற்றி பின்வருமாறு குறிப்பிடுகிறது:

''பல்லாயிரக்கணக்கான மக்கள் புடைசூழ, மேளவாத்திய கோஷங்கள் எல்லா திசைகளிலும் முழங்க, இரண்டு குதிரைகள் பூட்டிய வண்டியின் மீது அமர்ந்து இந்துக் கல்லூரியில் தயார் செய்யப்பட்டிருந்த அலங்கார மேடைக்குச் சுவாமி விவேகானந்தர் எழுந்தருளியபோது பெரியகடை முதல் கல்லூரி வரையில் செய்யப்பட்டிருந்த வீதியலங்காரம் அம்மம்மா! எம்மால் சொல்லத் தக்கதன்று. எங்கே பார்த்தாலும் தோரணங்கள்! எங்கே பார்த்தாலும் பூரண கும்பங்கள் ! எங்கே பார்த்தாலும் தூப தீபங்களுமாக இருந்தன...''

சுவாமி விவேகானந்தருக்கு அளிக்கப்பட்ட இந்த வரவேற்பு விழாவில் இந்துக்கள், கிறிஸ்தவர்கள், முஸ்லிம்கள், பௌத்தர்கள் ஆகியோர் மதவேறுபாடின்றி கலந்து கொண்டது குறிப்பிடத்தக்கது.

விழாவில் சுவாமிஜிக்கு அளிக்கப்பட்ட வரவேற்புரையில் இடம் பெற்றிருந்த சில கருத்துக்கள் வருமாறு:

''தெய்விகத்தன்மை வாய்ந்த இந்திய தத்துவ ஞானத்தை அமெரிக்கா, இங்கிலாந்து போன்ற நாடுகளில் பரப்பியதன் மூலம் மேலை நாடுகளுக்கு கீழை நாடுகளுக்குமிடையில் நல்லுறவை ஏற்படுத்தியதற்காக எங்களின் மனமார்ந்த நன்றியைத் தங்களுக்குத் தெரிவித்துக் கொள்கிறோம்...''

மறுநாள் காலை இந்துக் கல்லூரியில் நடைபெற்ற ஒரு கூட்டத்தில் சுவாமிஜி 'வேதாந்தம்' என்ற தலைப்பில் ஓர் அரிய சொற்பொழிவு நிகழ்த்தினார்.

யாழ்நகரிலுள்ள முக்கிய பிரமுகர்களும், அறிஞர்களும் இந்தக் கூட்டத்தில் கலந்து கொண்டார்கள்.

அன்று சுவாமிஜி ஒரு மணி நாற்பது நிமிடங்கள் பேசினார்.

இலங்கையின் பல பாகங்களிலிருந்து சுவாமிஜிக்குப் பல அழைப்புகள் வந்து குவிந்தன. காலம் போதாமையால் அந்த அழைப்புகளை எல்லாம் சுவாமிஜியால் ஏற்றுக் கொள்ள இயலவில்லை.

இவ்விதம் இலங்கையில் 11 நாட்கள் தங்கியிருந்த சுவாமிஜி இலங்கை அன்பர்களிடமிருந்து பிரியா விடைபெற்று தமிழகம் நோக்கிப் பயணமானார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சுவாமிஜி தனக்கு அளிக்கப்பட்ட இந்த வரவேற்பைக் குறிப்பிட்டு, அது ஒரு சிறந்த அரசியல்வாதிக்கோ போர் வீரனுக்கோ செல்வந்தனுக்கோ தரப்படவில்லை; மாறாக, பிச்சையேற்று வாழும் ஒரு துறவிக்கு அளிக்கப்பட்டுள்ளது; இதுவே மதத்தைப் பொறுத்தவரை இந்துக்களின் மனப்போக்கைக் காட்டுவதாக அமைகிறது என்றார். நமது நாடு வாழ வேண்டுமானால் மதமே தேசிய வாழ்க்கையின் முதுகெலும்பாக அமையவேண்டும் என்பதை வற்புறுத்தினார். தமக்கு அளிக்கப்பட்ட வரவேற்பு, ஒரு கொள்கைக்குக் கிடைத்த வரவேற்பே தவிர, தனிமனிதனுக்கு அளிக்கப்பட்டது அல்ல என்பதையும் சுவாமிஜி கூறினார்.

மிகப் பழங்காலத்திலிருந்தே ஆச்சாரிய புருஷர்கள் இந்தப் பூமியைப் புனிதமான, வற்றாத ஆன்மீக வெள்ளத்தால் மீண்டும்மீண்டும் நிறைத்திருக்கிறார்கள். அதனால்தான் இங்கிருந்து கிளம்பிய தத்துவப் பேரலைகள் கிழக்கு, மேற்கு, வடக்கு, தெற்கு என்று உலகின் எல்லா திசைகளிலும் பரந்துள்ளன. அதனால்தான் உலகாயதக் கலாசாரத்தை ஆன்மீகமயமாக்கப் போகின்ற அலையும் இங்கிருந்துதான் எழுந்தாக வேண்டும். மற்ற நாடுகளிலுள்ள லட்சக்கணக்கான மக்களின் இதயத்தின் அடியாழங்களைச் சுட்டுப் பொசுக்குவதான உலகாயதப் பெருந்தீயைத் தணிக்கின்ற, வாழ்க்கை வளத்தை நல்குகின்ற நீர் இங்கேதான் உள்ளது. என்னை நம்புங்கள் நண்பர்களே, இது நடக்கத்தான் போகிறது.

# நமது பெருமை

## (சுவாமி விவேகானந்தரின் கொழும்பு சொற்பொழிவு)

என்னால் செய்யப்பட்ட ஏதோ சிறிதளவு பணி என்னுள் இருக்கும் ஆற்றலால் செய்யப்பட்டதல்ல; மிகுந்த அன்பிற்குரியதும் மிகப் புனிதமானதும் பிரியமானதுமான இந்த நமதுதாய் நாட்டிலிருந்து என்னைத் தொடர்ந்து வந்த உற்சாக மொழிகளாலும் நல்வாழ்த்துக்களாலும் ஆசிகளாலுமே செய்யப்பட்டது. சிறிது நற்பணி நடைபெற்றுள்ளது, உண்மைதான். ஆனால் எனக்குத்தான் அதனால் அதிக நன்மை விளைந்துள்ளது. ஏனெனில், ஒருவேளை என் உணர்ச்சிப் பெருக்கின் விளைவாக இருந்த என் பணி இப்போது திடவுறுதி பெற்றுள்ளது அதைச் செயல்படுத்துவதற்கான வலிமையும் திறமையும் இப்போது எனக்கு வந்துள்ளது.

ஒவ்வோர் இந்துவும் நினைப்பதைப்போல் இந்த நாடு புண்ணியபூமி, கர்மபூமி என்று நானும் முன்பு நினைத்திருந்தேன், அவ்வளவுதான். நமது அவைத்தலைவரும் சற்று முன்பு அதையே குறிப்பிட்டார். ஆனால் இன்று, இதோ இங்கே நின்றுகொண்டு, அது அப்படியே உண்மை என்று உண்மையின் உறுதிப்பாட்டுடன் சொல்கிறேன். இந்த உலகத்தில் புண்ணிய பூமி என்று சொல்லத்தக்க ஒரு நாடு இருக்குமானால், தங்கள் வினைப்பயன்களைத் தீர்த்துக் கொள்வதற்காக ஒவ்வோர் உயிரும் வந்தாக வேண்டிய ஓர் இடம் இருக்கிறது என்றால், கடவுளைத் தேடிச் செல்கின்ற ஒவ்வொரு ஜீவனும் வந்து சேர வேண்டிய கடைசி வீடு ஏதாவது இருக்கிறது என்றால், மென்மையிலும் தாராள மனப்பான்மையிலும் புனிதத்திலும் அமைதியிலும், இவ்வனைத்திற்கும் மேலாக அக நோக்கிலும் ஆன்மீகத்திலும் மனித சமுதாயம் உச்சத்தை அடைந்த நாடு ஏதாவது உண்டென்றால் அது பாரதத் திருநாடே. எனவே தான்

இதை நான் காண்கிறேன், உங்களுள், மனித இனங்களின் வரலாற்றைப் படித்தவர்களுக்கு இந்த உண்மை தெரிந்திருக்கும். நமது தாய்த் திருநாட்டிற்கு இந்த உலகம் பட்டுள்ள கடன் அளவற்றது. ஒவ்வொரு நாடாகப் பாருங்கள்; அமைதியான, சாதுவான இந்துவிற்குக் கடன்பட்ட அளவிற்கு உலகம் வேறெந்த இனத்திற்கும் கடன்பட்டதில்லை. 'சாதுவான இந்து' என்னும் சொல்லில்தான்.

உலகின் மற்ற பகுதிகளில் கலாசாரங்கள் தோன்றியுள்ளன. வலிமையும் பெருமையும் வாய்ந்த இனங்களிலிருந்து மகத்தான சிந்தனைக் கிரணங்கள் அன்றும் இன்றும் எழுந்து பரந்துள்ளன. இனங்களுக்கிடையே அற்புதமான கருத்துக் கருவூலங்கள் அன்றும் இன்றும் பரிமாறப்பட்டன. மகோன்னதமான உண்மை மற்றும் ஆற்றலின் விதைகள், முன்னேறி வருகின்ற தேசிய வாழ்க்கையின் பேரலைகளால் அயல் நாடுகளில் அன்றும் இன்றும் பரப்பப்பட்டுள்ளன.

ஆனால் நண்பர்களே, ஒன்றைப் புரிந்துகொள்ளுங்கள்; இவையனைத்தும் போர்முரசுகளின் காதைப் பிளக்கின்ற முழக்கங்களோடுமே சாதிக்கப்பட்டன. ஒவ்வொரு கருத்தும் ரத்த வெள்ளத்தில் தோய்த்தே பரப்பப்பட்டது. லட்சக்கணக்கான நம் உடன் பிறந்தவர்களின் ரத்தத்தின்மீது நடந்து சென்றே ஒவ்வொரு சிந்தனையும் பரப்பப்பட்டது. வலிமைமிக்க அந்தக் கருத்துக்கள் சென்ற இடங்களில் எல்லாம், அவற்றைத் தொடர்ந்து லட்சக்கணக்கானோரின் மௌன ஓலங்களும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அனாதைகளின் அழுகுரலும் விதவைகளின் கண்ணீரும்தான் எழுந்தன. மற்ற நாடுகள் முக்கியமாகக் கற்றுத்தந்த பாடம் இதுதான்.

ஆனால் இந்தியா ஆயிரமாயிரம் ஆண்டுகளாக அமைதியுடன் வாழ்ந்து வருகிறது. கிரீஸ் என்ற நாடு தோன்று முன்னரே, ரோமப் பேரரசு கற்பனையில் கூட உதிக்கு முன்னரே, இன்றைய இதே ஐரோப்பியரின் மூதாதையர் தங்கள் உடம்புகளில் நீல நிறச் சாயத்தைப் பூசிக்கொண்டு காடுகளில் வாழ்ந்த காலத்திலேயே இங்கே மிகச் சிறந்த வாழ்க்கைமுறைகள் உருவெடுத்து விட்டன. அதற்கு முன்புகூட, வரலாறு என்ற ஒன்று இருந்ததற்குச் சான்றுகள் இல்லாத காலத்திலிருந்தே, கடந்த காலத்தின் இருண்ட கருவறைக்குள் தங்கள் பார்வையைச் செலுத்தப் பாரம்பரியங்கள் அஞ்சி நிற்கின்ற அந்தக் காலத்திலிருந்தே இன்றுவரையில், ஒன்றன்பின் ஒன்றாகச் சிந்தனைப் பேரலைகள் இந்தியாவிலிருந்து அணி வகுத்து உலகெங்கும் சென்றுள்ளன. ஆனால் அந்த ஒவ்வொரு வார்த்தைகளும் உச்சரிக்கப்பட்ட போதெல்லாம், முன்னால் அமைதியும் பின்னால் ஆசிகளும் மட்டுமே விளைவாக இருந்தது. நாம் மட்டுமே பிற நாடுகளை அடிமைப்படுத்தாத இனமாக வாழ்கிறோம். அந்தப் பேராசிகளின் காரணமாகத்தான் நாம் இன்றும் வாழ்கிறோம்.

கிரேக்கப் படைகளின் அணிவகுப்பு முழக்கத்தைக் கேட்டு, இந்தப் பூமியே அதிர்ந்த ஒரு காலம் இருந்தது. அந்தப் பழம்பெரும் நாடு இன்று அழிந்துவிட்டது; தனது பெருமையை எடுத்துச் சொல்வதற்குக்கூட ஒருவரின்றி பூமியிலிருந்தே மறைந்துவிட்டது. மதிப்பு வாய்ந்தவையாக இருந்த அனைத்தின்மீதும் ரோமானியர்களின் கழுகுக்கொடி உயர்ந்தோங்கிப் பறந்த காலம் ஒன்று இருந்தது. எங்கும் அதன் அதிகாரம் கொடிகட்டிப்பறந்தது; அந்த அதிகாரம் மனித குலத்தின்மீது சுமத்தவும் பட்டது. அதன் பெயரைக் கேட்டே இந்தப் பூமி நடுங்கியது. ஆனால் இன்று கேபிடோலின் குன்று உடைந்து சின்னாபின்னப்பட்டுக் கிடக்கிறது. சீசர்கள் ஆண்ட இடத்தில் சிலந்திகள் வலை பின்னுகின்றன. அது போலவே பல நாடுகள் பெரும் புகழுடன் எழுந்தன; செல்வச் செழிப்புடனும் மகிழ்ச்சிப் பேராரவாரத்துடனும் ஆதிக்க வெறியுடனும் கொடிய லட்சியங்களுடனும் வாழ்ந்தன; ஆனால் கண நேரத்திற்குத்தான், நீர்மேல் குமிழிபோல் எல்லாம் மறைந்துவிட்டன. அவற்றின் அடையாளச் சுவடுகள் மட்டுமே இன்று மனித குலத்தின் நினைவில் நிழலாடுகிறது.

ஆனால் நாம் வாழ்கிறோம். மனு இன்று மீண்டும் வந்தால்கூட, தான் ஏதோ அன்னிய நாட்டிற்கு வந்துவிட்டதாக எண்ணி அவர் அஞ்சி நடுங்க வேண்டியிருக்காது. ஏனெனில் அவர் வகுத்த நியதிகளே இன்றும் உள்ளன. இந்த ஆயிரக்கணக்கான ஆண்டுகளில் அந்த நியதிகளைக் காலத்தின் தேவைகளுக்கு ஏற்ப ஏதோ சிறிது மாற்றியிருக்கலாம். ஆனால் நமது சிந்தனைசக்தியின் விளைவாகக் காலங்காலமாக இருந்துவருகின்ற பழக்கவழக்கங்களும் நமது அனுபவங்களும் அழிவற்றவைபோல் அப்படியே உள்ளன. காலப்போக்கில் துரதிர்ஷ்டத்தின் எத்தனையோ பேரடிகள் ஒன்றன்பின் ஒன்றாக அவற்றின்மீது விழுந்தன. ஆனால் அந்த அடிகள் ஒவ்வொன்றும் அவற்றை மேலும் வலுவுடையவையாக, மேலும் நிரந்தரமானவையாகச் செய்தனவே தவிர, அவற்றைச் சற்றும் அசைக்கவில்லை. அவற்றின் மையப்பகுதி, அந்த இதயப்பகுதி, தேசிய வாழ்க்கையின் அடிப்படை ஆதார ஊற்று எங்கே உள்ளது என்பதை ஆராய்ந்து பார்த்தோமானால், அது இங்கே உள்ளது என்றே என் உலக அனுபவம் சொல்கிறது. இதை நம்புங்கள் ; மற்ற நாடுகளுக்கு மதம் என்பது வாழ்க்கையின் எத்தனையோ அம்சங்களுள் ஒன்று. அரசியல் உள்ளது, சமுதாய வாழ்வின் சுகபோகங்கள் உள்ளன; பணத்தால் வாங்கக்கூடிய, அதிகாரத்தால் சாதிக்கக்கூடிய எல்லாம் உள்ளன; புலன்களால் அனுபவிக்க முடிந்தவை எல்லாம் உள்ளன. இவற்றுக்கிடையே, ஏற்கனவே சுக அனுபவங்களால் திகட்டிப்போன புலன்களுக்கு மேலும் கொஞ்சம் இன்பம் தருபவற்றைத் தேடுகின்ற தேடலுக்கு இடையே மதத்திற்கும் ஏதோ ஒரு சிறு இடம் உள்ளது, அவ்வளவுதான்.

ஆனால் இங்கே இந்தியாவில் மதம் ஒன்றுதான் வாழ்க்கை. சீனாவுக்கும் ஜப்பானுக்கும் இடையில் போர் நடந்ததுபற்றி உங்களுள் எத்தனை பேருக்குத் தெரியும்? தெரிந்திருந்தாலும் அது ஏதோ ஒரு சிலருக்குத்தான். மேலை நாட்டின் சமுதாய அமைப்பை மாற்றுவதற்காக மகத்தான அரசியல் இயக்கங்களும் சோஷலிச இயக்கங்களும் முயற்சி செய்து வருவதைப்பற்றி உங்களுள் எத்தனை பேருக்குத் தெரியும்? நிச்சயமாக மிகச்சிலருக்கே. ஆனால் அமெரிக்காவில் சர்வசமயப் பேரவை ஒன்று கூடியது, அதில் கலந்துகொள்ள இந்துத் துறவி ஒருவர் அனுப்பப்பட்டார்–இதை இங்கே ஒரு சாதாரணக் கூலியாள் கூட அறிந்திருப்பது எனக்குப் பிரமிப்பைத் தருகிறது. நமது பாதை எது, நமது தேசிய வாழ்க்கை எதை ஆதாரமாகக் கொண்டிருக்கிறது என்பதையே இது காட்டுகிறது. உலகைச் சுற்றிவருகின்ற, குறிப்பாக அன்னிய நாட்டு யாத்திரிகர்கள் எழுதிய நூல்களை நான் படிப்பதுண்டு. கீழை நாட்டு மக்களின் அறியாமையைப்பற்றி அவர்கள் ஏதேதோ எழுதியிருக்கிறார்கள்; அதில் ஓரளவிற்கு உண்மை இருந்தாலும் பொய்யும் கலந்தே உள்ளது. இங்கிலாந்து, அமெரிக்கா, பிரான்ஸ் அல்லது ஜெர்மனியிலுள்ள ஒரு குடியானவனிடம், 'நீ எந்தக் கட்சியைச் சேர்ந்தவன்?' என்று கேட்டால், தான் ரேடிகல் (Radical) அல்லது கான்சர் வேடிவ் கட்சியைச் (Conservative) சார்ந்தவன், இன்னாருக்கு ஓட்டளிக்கப்போகிறேன் என்பதையெல்லாம் பளிச்சென்று கூறுவான். அமெரிக்கனாக இருந்தால், தான் ரிப்பளிக் (Republic) கட்சியைச் சார்ந்தவன் அல்லது டெமாக்ரடிக் (Democratic) கட்சியைச் சார்ந்தவன் என்பான்; ஒருவேளை வெளிப் பிரச்சினையைப் பற்றிக் கூடச் சிறிது அறிந்திருப்பான். ஆனால், 'உன் மதம் எது?' என்று கேட்டாலோ, ஏதோ ஒரு பிரிவின் பெயரைச் சொல்வான், தினமும் சர்ச்சுக்குப் போவதாகவும் கூறுவான். அவனுக்குத் தெரிந்தது அவ்வளவுதான். அதுபோதும் என்றே அவன் நினைக்கிறான்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இந்தியாவை எடுத்துக் கொள்வோம். இங்குள்ள ஒரு குடியானவனிடம், 'உனக்கு அரசியலைப்பற்றி ஏதாவது தெரியுமா?' என்று கேட்டுப் பாருங்கள். 'அது என்ன?' என்று கேட்பான் அவன். சோஷலிச இயக்கங்கள் பற்றியும் அவனுக்குத் தெரியாது, முதலாளியும் தொழிலாளி வர்க்கத்திற்கு இடையே உள்ள உறவு. அது இது என்பதெல்லாமும் அவனுக்குப் புரியாது. இவற்றைப் பற்றி அவன் கேள்விப்பட்டதும் இல்லை. அவன் கடினமாக உழைக்கிறான், வேண்டியவற்றைச் சம்பாதிக்கிறான், அவ்வளவுதான். ஆனால் அவனிடம் 'உனது மதம் எது?' என்று மட்டும் கேட்டுப் பாருங்கள். 'நண்பா, அதை என் நெற்றியிலேயே இட்டிருக்கிறேன் பார்' என்று தாமதமின்றிப் பதிலளிப்பான். மதத்தைப்பற்றி ஓரிரு விளக்கங்களைக்கூட அவனால் கொடுக்க முடியும். இது என் அனுபவம். இது தான் நமது தேசிய வாழ்க்கைமுறை.

ஒவ்வொருவரும் சில தனித்தன்மைகளைப் பெற்றிருக்கிறார்கள். ஒவ்வொரு மனிதனுக்கும் தான் வளர்வதற்கான ஒரு தனிப்பட்ட முறை உள்ளது. அவனது வாழ்க்கைகூட–இந்துக்களாகிய நாம் சொல்கிறோமே அது போல், முடிவற்ற தனது முற்பிறவிகளால், வினைப்பயனால் நிர்ணயிக்கப்பட்ட–தனி வாழ்க்கையாகவே உள்ளது. கடந்தகால வினைகளின் மொத்தச்சுமையுடன் அவன் இந்த உலகிற்கு வருகிறான். முடிவற்ற அந்தக் கடந்த காலம் நிகழ்காலத்தை நிர்ணயிக்கிறது. நிகழ்கால வாழ்க்கையை நாம் பயன்படுத்துகின்ற விதம் எதிர்காலத்தை உருவாக்குகிறது. இவ்வாறு இந்த உலகத்தில் பிறந்த ஒவ்வொருவருக்கும் தனிப்பாதை உள்ளது; அவன் எந்தத்திசையில் போக வேண்டும், எப்படி வாழ வேண்டும் என்பது நிர்ணயிக்கப்பட்டுள்ளது.

தனிமனிதனின் விஷயத்தில் எது உண்மையோ அது ஓர் இனத்தைப் பொறுத்தவரையிலும் உண்மை. எனவே ஒவ்வோர் இனத்திற்கும் ஒரு தனிப் பண்பு உள்ளது; அது இருப்பதற்குத் தனிக் காரணம் உள்ளது; இந்த உலகத்தில் நடத்தி முடிக்க அதற்கென்று தனிப் பணியும் உள்ளது. தன் லட்சியத்தை அந்த இனமே முடிவு செய்ய வேண்டும்; அதுவே அதனைச் சாதிக்கவும் வேண்டும்.

அரசியல் மகோன்னதமோ ராணுவ அதிகாரமோ நம் இனத்தின் தனிச் செய்தி அல்ல; அப்படி இருந்ததும் இல்லை, இருக்கவும் இல்லை; என் வார்த்தையைக் குறித்துக் கொள்ளுங்கள், இனி இருக்கப்போவதும் இல்லை. ஆனால் நமக்கென்று மற்றொரு லட்சியம் தரப்பட்டிருக்கிறது. அது, நம் இனத்தின் எல்லா ஆன்மீக சக்தியையும் ஒன்று திரட்டி, அதனைப் பாதுகாத்து, அதை ஒரு 'டைனமோ' விற்குள் சேமிப்பதுபோல் சேமித்து, ஒருங்கிணைந்த அந்தச் சக்தியை, தகுந்த வாய்ப்பு கிடைக்கும்போதெல்லாம், உலகம் முழுவதும் வெள்ளம்போல் பெருக்கெடுக்கச் செய்வதாகும். பாரசீகனும் கிரேக்கனும் ரோமானியனும் அரேபியனும் ஆங்கிலேயனும் படைகளை நடத்தட்டும், உலகை வெல்லட்டும், அதன்மூலம் வெவ்வேறு நாடுகளை இணைக்கட்டும். அந்த இணைப்புப் பாதையின் வழியாக இந்தியாவின் தத்துவமும் ஆன்மீகமும் உலக நாடுகளின் நாடி நரம்புகளுள் பாய்வதற்குத் தயாராக இருக்கும். மனித சமுதாயத்தின் ஒட்டுமொத்த முன்னேற்றத்தில் இந்துவின் அமைதியான மூளையும் தன் பங்கைக் கொடுத்தே ஆக வேண்டும். ஆன்மீக ஒளியே உலகிற்கு இந்தியாவின் நன்கொடையாகும்.

இவ்வாறே கடந்த காலங்களில் நடந்துள்ளது. எப்போதெல்லாம் உலகை வெல்லும் ஒரு நாடு தோன்றி பல்வேறு இன மக்களை வென்று, இந்தியாவை அவைகளோடு இணைத்தோ, தனக்குள் ஆழ்ந்திருந்தது போலிருந்த இந்தியாவைத் தனிமையிலிருந்தும் ஒதுங்கிய நிலையிலிருந்தும் விலக்கி உலகத்தோடு ஒன்று சேரும் படி வைத்ததோ, அப்போதெல்லாம், அத்தகைய சூழல் உருவாக்கப்பட்ட போதெல்லாம், அதன் விளைவாக உலக நாடுகள் முழுவதும் இந்திய ஆன்மீகம் பாய்ந்து சென்று பரவி இருக்கிறது.

இந்த நூற்றாண்டின் ஆரம்பத்தில் ஜெர்மனியின் சிறந்த தத்துவ ஞானியான ஷோபனேர் (Schopenhauer) வேதங்களின் லத்தீன் மொழிபெயர்ப்பைப் படித்தார். அது முதலில் பாரசீக மொழியிலும் பின்னர் அதிலிருந்து பிரெஞ்சு இளைஞன் ஒருவனால் லத்தீனிலும் மொழிபெயர்க்கப்பட்டது. அவ்வளவு சிறப்பான மொழி பெயர்ப்பாக அதனைக் கருதுவதற்கில்லை. இருப்பினும் அதைப் படித்த பின் அவர், 'உபநிடதங்களைப்போல் நன்மையளிப்பதும் உன்னதமான நிலைக்கு அழைத்துச் செல்வதுமான நூல் எதுவும் இல்லை. அது என் வாழ்விற்கு அமைதியைத் தருவதாக உள்ளது; என் மரணத்திற்கும் அமைதியை அளிப்பதாக இருக்கும்' என்று கூறியுள்ளார். இந்த மகத்தான ஜெர்மானியப் பேராசிரியர் முன்பே தீர்க்கதரிசனமாக, 'கிரேக்க இலக்கியங்களால் உலகச் சிந்தனையில் ஏற்பட்ட மறுமலர்ச்சியை விட மிக ஆற்றல் வாய்ந்த, மிகவும் தீவிரமான சிந்தனை மறுமலர்ச்சி ஏற்படப்போவதை உலகம் காணப்போகிறது' என்று கூறினார். இப்போது அவரது வார்த்தைகள் உண்மையாகிக் கொண்டிருக்கின்றன. யாரெல்லாம் கண்களைத் திறந்து வைத்துள்ளனரோ, யாரெல்லாம் மேலைத் திசையில் உள்ள பல்வேறு நாட்டு மக்களின் மனப்போக்குகளைப் புரிந்து கொண்டார்களோ, யாரெல்லாம் பல்வேறு நாடுகளைப்பற்றிப் படிக்கின்ற சிந்தனையாளர்களோ, அவர்கள், மெதுவாக ஆனால் தொடர்ச்சியாக எல்லா இடங்களிலும் பரவிக் கொண்டிருக்கின்ற இந்த இந்தியச் சிந்தனைகளால் உலக இலக்கியங்களின் கண்ணோட்டமும் போக்கும் வழிமுறைகளும் வெகுவாக மாறி வருவதைக் காண்பார்கள்.

ஆனால் முன்பு நான் கோடிகாட்டியதுபோல் மற்றொரு விசித்திரம் இதில் உள்ளது. நாம் ஒரு போதும் நம் கருத்துக்களை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வாள்மூலமோ நெருப்பின் மூலமோ பரப்பவில்லை. இந்தியா உலகிற்குத் தந்த கொடையை விளக்குவதற்கு ஒரு சொல் ஆங்கில மொழியில் இருக்கிறதென்றால், இந்திய இலக்கியங்களால் புனித சமுதாயத்தில் ஏற்பட்ட விளைவுகளை விளக்குவதற்கு ஒரு சொல் இருக்குமானால், அது, (Fascination) வசீகரம் என்பதே. அது திடீரென்று ஒருவரை அப்படியே பற்றிப் பிடித்துக் கொள்கின்ற கவர்ச்சி அல்ல; உணர முடியாத வகையில் ஒருவர் மீது ஆதிக்கம் செலுத்துகின்ற வசீகரம் அது. இந்தியச் சிந்தனை, இந்தியப் பழக்க வழக்கங்கள், இந்தியத் தத்துவம், இந்திய இலக்கியம் முதலானவை எடுத்த எடுப்பில் பலருக்கு வெறுப்பைத் தருவதாக இருக்கும். ஆனால் அவர்கள் பொறுமையைக் கைக்கொள்ள வேண்டும், தொடர்ந்து படிக்க வேண்டும். அந்தக் கொள்கையின் அடிஊற்றாக ஓடுகின்ற மகத்தான கருத்துக்களோடு நெருங்கிய தொடர்பு கொள்ள வேண்டும். அப்போது நூற்றுக்கு தொண்ணூற்றொன்பது பேரும் அதன் தாக்கத்தைப் புரிந்து கொள்வார்கள். அந்த வசீகரத்தை உணர்வார்கள். அதிகாலையில் மெதுவாக அமைதியாக உதிர்கின்ற பனித்துளிகளைக் காணவோ கேட்கவோ முடியாது, இருந்தாலும் அவை எத்தனை அற்புதங்களை நிகழ்த்தி விடுகின்றன ! அமைதியான, பொறுமையான, துயரத்தையே அனுபவித்து வந்துள்ள இந்த ஆன்மீக இனமும் அது போலவே உலகின் சிந்தனைப் போக்கில் மிகப் பெரிய தாக்கத்தை ஏற்படுத்தியுள்ளது.

வரலாறு மீண்டும் திரும்பப் போகிறது. ஏனெனில் ஆற்றல் மிக்கவையாகவும் தகர்க்க முடியாதவை போலவும் தோன்றிய பழங்கால நம்பிக்கைகள் எல்லாம் இன்று நவீன விஞ்ஞானத்தின் கண்கூசுகின்ற ஒளி வெள்ளத்தில் வேருடன் சாய்க்கப்படுகின்றன; மனித குலத்தின் கடமை இதுதான் என்று பல்வேறு மதப் பிரிவுகளும் வகுத்தளித்த விசேஷ ஆணைகள் எல்லாம் அணு அணுவாகச் சிதறி, காற்றோடு காற்றாகக் கரைந்து மறைகின்றன; பழங்காலத்தைப் பற்றிய நவீன ஆராய்ச்சிகளின் கூர்மையான சம்மட்டி முனைகள் புராதனத்தின் குறுகிய கருத்துக்களை எல்லாம் பீங்கான் சில்லுகளைப் போல் நொறுக்கித் தூள் தூளாக்குகின்றன. மேலை நாட்டின் மதமோ அறிவற்றோரின் கைகளில் சிக்கிக் கிடக்கிறது. அதனால் அறிஞர்கள் மதத்தைச் சார்ந்த எதையும் வெறுப்போடு பார்க்கின்றனர். இந்த நிலையில்தான், இந்திய மனங்களின் மிகவுயர்ந்த ஆன்மீக லட்சியங்களின் வெளிப்பாடாக இருப்பதும், தத்துவ உண்மைகளின் சிகரங்களைத் தொடுகின்ற, அதே வேளையில் மக்களின் அன்றாட வாழ்வில் செயல் முறைப்படுத்தக் கூடியதாக இருப்பதும் ஆகிய இந்தியத் தத்துவ ஞானம் முன்னே வருகிறது. எல்லோரும் ஒன்றே என்னும் கருத்து, எல்லையில்லா தன்மை, அருவக் கொள்கை, மனிதனின் ஆன்மா அழிவற்றது என்னும் அற்புதக் கோட்பாடு, உயிர்களின் முன்னேற்றத்திலுள்ள தடையற்ற தொடர்ச்சி பற்றிக் கூறும் கொள்கை, முடிவேயில்லாத அண்ட சராசரங்களைப்பற்றிக் கூறும் கொள்கை, –இவை அவர்களை மீட்பதற்குத் தாமாகவே வருகின்றன.

உலகத்தை ஒரு சிறிய சேற்றுக் குட்டை என்றும், காலம் என்பது சில நாட்களுக்கு முன் துவங்கியது என்றும் பழங்கால மதங்கள் நினைத்து வந்தன. ஆனால் நம் சாஸ்திரங்களில், நம் சாஸ்திரங்களில் மட்டுமே, முடிவேயில்லாத மகத்தான காலத்தையும் பிரபஞ்சத்தைப் பற்றியும், தோற்றங்களின் காரணம் பற்றியும், இவற்றுக்கு எல்லாம் மேலாக மதங்களின் தேடலுக்கு முக்கியப் பொருளான ஆன்மாவின், மனிதனின் எல்லையற்ற பெருமை பற்றியும் குறிப்பிடப்பட்டுள்ளது.

தற்காலத்தின் பரிணாமக் கொள்கை (Theory of Evolution), ஆற்றல் மாறாகக் கொள்கை (Law of Conservation of Energy) முதலிய கொள்கைகள், குருட்டுத்தனமான மதக் கோட்பாடுகளுக்கு மரண அடி கொடுத்து வருகின்றன. இந்த நிலையில், மனித மனத்தின் மிகச் சிறந்த கண்டுபிடிப்பான, ஆண்டவனின் அற்புதக் குரலான வேதாந்தம் கூறுகின்ற மிகவும் ஆச்சரியகரமான, நம்பிக்கையைத் தருகின்ற, மனத்தை விரிவுபடுத்துகின்ற மகத்தான கருத்துக்களைத் தவிர வேறு எது பண்பட்ட மனித சமுதாயத்தின் அன்பைப் பெறுவதாக இருக்க முடியும்?

இந்தியாவிற்கு வெளியே உள்ள நாடுகளில் நமது மதம் செயல்படுகிறது என்று கூறினேன். இங்கு நான் மதம் என்று குறிப்பிடுவது, மதத்தின் கோட்பாடுகளை, அதன் பின்னணியை, எந்த அடிப்படைமீது மதம் கட்டப்பட்டுள்ளதோ அந்த அடிப்படையை மட்டுமே. பல்வேறு விளக்கங்களோ, சமுதாயத்தின் தேவைகளுக்காகப் பல நூற்றாண்டுகளாக ஏற்படுத்திக் கொண்ட நுட்பமான கருத்துக்களோ, சமுதாய நலனிற்காக பழக்க வழக்கங்களுக்குக் கொடுத்த காரணகாரிய விளக்கங்களோ அந்த மதத்தில் இடம் பெறாது.

இரண்டு தனித்துவமான உண்மைகளை நமது சாஸ்திரங்கள் கூறுகின்றன: ஒன்று, என்றென்றும் நின்று நிலவுகின்ற உண்மைகள்; மனிதனின் இயல்பு, ஆன்மாவின் இயல்பு, இறைவனுக்கும் ஆன்மாவுக்கும் உள்ள தொடர்பு, இறைவனின் இயல்பு, பூரணத்துவம் போன்றவற்றின் மீது எழுப்பப்பட்டவை இவை. மேலும் பிரபஞ்சத்தின் படைப்பு, சரியாகச் சொல்வதானால் பிரபஞ்சத்தின் வெளிப்பாடு, பிறப்பு இறப்பாகிய சுழற்சி பற்றிய அற்புதமான விதி–இவை போன்றவையும் இதில் அடங்கும். இவையெல்லாம் இயற்கையில் காணப்படுகின்ற பிரபஞ்சம் தழுவிய நிலையான நியதிகள் மீது அமைக்கப்பட்டவை.

மற்றொரு பகுதி அன்றாட வாழ்க்கைக்குப் பயன்படுகின்ற சாதாரண விதி முறைகள். அவை பெரும்பாலும் புராணம், ஸ்மிருதி முதலிய பகுதிகளைச் சார்ந்தவை; வேதங்களைச் சேர்ந்தவையல்ல. இந்த விதிகள் முதல்வகை உண்மைகளுடன் சிறிதும் தொடர்புடையவை அல்ல. நமது நாட்டில்கூட இந்த விதிகள் மாறிக்கொண்டே வந்திருக்கின்றன. ஒரு காலத்தின், ஒரு யுகத்தின் பழக்கங்களாக இருக்காது. யுகங்கள் மாறிமாறி வருவதற்கு ஏற்ப அவையும் மாறிக்கொண்டே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இருக்கும். மாபெரும் ரிஷிகள் தோன்றி அந்த யுகத்தின் சூழலுக்கும் இயல்பிற்கும் தேவையான புதிய பழக்க வழக்கங்களை உருவாக்கி நம்மை வழிநடத்திச் செல்வார்கள்.

மனிதனையும் கடவுளையும் உலகையும் பற்றிய இந்த ஆச்சரியமான, முடிவே இல்லாத, உன்னதமான, மிகப்பரந்த கருத்துக்களின் அடிப்படையாக விளங்குகின்ற மகத்தான கோட்பாடுகள் இந்தியாவில் தோற்றுவிக்கப்பட்டன. இந்தியாவில் மட்டும் தான் மனிதன் பல்வேறு குழுக்களின் தெய்வங்களுக்காக எழுந்து நின்று,'என் தெய்வம்தான் உண்மை, உன் தெய்வம் உண்மையில்லை. இதைக் குறித்து நாம் கடுமையாகச் சண்டை செய்வோம்' என்று மற்றவனை அறைகூவிச் சண்டைக்கு அழைக்கவில்லை. அத்தகைய எண்ணங்கள் இங்கு ஏற்படவே இல்லை. இந்த மகத்தான அடிப்படைக் கோட்பாடுகள், மனிதனின் அழிவற்ற இயல்பின் மீது எழுப்பப்பட்டுள்ளதால், அவை ஆயிரமாயிரம் ஆண்டுகளுக்கு முன்பு போலவே, இன்றும் மனித இனத்தின் நன்மைக்காகச் செயல்படும் திறன் படைத்தவை; அவ்வாறே, இந்தப் பூமி இருக்கும்வரை, கர்ம நியதி இருக்கும்வரை, நமது கர்மங்களை நமது ஆற்றலினாலேயே வாழ்ந்து முடிப்பதற்காக நாம் தனி மனிதர்களாகப் பிறந்து கொண்டிருக்கும் வரை அவை நிலைத்து நிற்கவும் செய்யும்.

எல்லாவற்றிற்கும் மேலாக இந்தியா உலகிற்குக் கொடுக்க வேண்டியது இதுதான். பல்வேறு இனங்களில் மதம் தோன்றி வளர்ந்த வரலாற்றை நாம் கவனித்தால், ஆரம்பத்தில் ஒவ்வோர் இனத்திற்கும் சொந்தமாக ஒரு தெய்வம் இருப்பதைக் காணலாம். ஒன்றுக்கொன்று சுமுகமான உறவுள்ள இனங்களின் தெய்வங்களின் பெயர்களிலும் பொதுமை இருக்கும் பாபிலோனிய தெய்வங்களின் பெயர்களைப் பார்த்தால் இது புரியும். யூதர்கள் பல்வேறு இனங்களாகப் பிரிந்த போது, அவர்களின் தெய்வங்கள் மொலாக் (Moloch) என்ற பொதுப்பெயரைப் பெற்றனர்; அதுபோல் தான் பாபிலோனியர்கள் பிரிந்த போது அவர்களின் தெய்வங்கள் பால் (Baal) என்ற பொதுப் பெயரைப் பெற்றனர். இவர்களுள் ஓர் இனம் மற்ற இனங்களைவிட ஆற்றல் பெறும்போது, அந்த இனத்தின் அரசனே எல்லா இனங்களுக்கும் அரசன் ஆவான். அதுபோலவே அந்த இனம் தங்கள் தெய்வத்தை மற்ற இனங்களுக்கும் தெய்வம் ஆக்குகிறது. இப்படித்தான் பாபிலோனியர் பால்மெரோடக் (Baal-Merodach) தான் உயர்ந்த தெய்வம், மற்றவர்கள் தாழ்ந்தவாகள் என்று சொன்னார்கள். மொலாக்–யவஹ் (Moloch-Yavah) மற்ற எல்லா மொலாக் தெய்வங்களுக்கும் மேலானவர். இந்தப் பிரச்சினைகள் போரின் வெற்றியால் தீர்மானிக்கப்பட வேண்டியிருந்தது.

இங்கேயும் இதே போராட்டம் இருந்தது. இந்தியாவிலும் தெய்வங்கள் தங்கள் தலைமைக்காகப் போராடினார். ஆனால் இந்த நாட்டின் மகத்தான நற்பேற்றின் காரணமாகவும் உலகத்தின் நற்பேறு காரணமாகவும் அந்தக் கூச்சலுக்கும் குழப்பங்களுக்கும் இடையே ஒரு குரல் எழுந்து, 'ஏகம் ஸத் விப்ரா பஹுதா வதந்தி (இருப்பது ஒன்றே; மகான்கள் அதைப் பல பெயர்களால் அழைக்கிறார்கள்)' என்று முழங்கியது. சிவன் விஷ்ணு மட்டும்தான் எல்லா ஆற்றல்களையும் உடையவர், சிவபெருமான் ஒன்றுமே இல்லாதவர் என்பதில்லை. சிவன், விஷ்ணு என்றெல்லாம் எத்தனையோ நூறு பெயர்களால் அழைக்கப்படுவது ஒரே கடவுள்தான். பெயர்கள் வேறு, ஆனால் இருப்பது ஒன்றுதான். இந்தச் சின்னஞ்சிறு வாக்கியத்தில் இந்தியா முழுவதையுமே படித்துவிடலாம் ! வரலாறு முழுவதிலும் இந்த மையக் கருத்தே அற்புதமான மொழியில் மகத்தான ஆற்றலுடன் திரும்பத் திரும்பச் சொல்லப்படுகிறது. இந்தக் கருத்து நாட்டின் ரத்தத்தில் ஊறும்வரை, அதன் நாடி நரம்புகளில் ஓடுகின்ற ஒவ்வொரு சொட்டு ரத்தத்தோடு ரத்தமாகக் கலந்து துடிக்கும் வரை, உயிருடன் உயிராக மாறும்வரை, அது உண்டாக்கப் பட்டிருக்கிறதே அந்தப் பொருட்களின் கூறுகள் அனைத்திலும் ஊடுருவும்வரை இந்தக் கருத்து மீண்டும்மீண்டும் சொல்லப்பட்டு வந்தது. அந்தக் காரணத்தால் நமது இந்தப் புராதனமான தாய்நாடு வியக்கத்தக்க பொறுமையின் உறைவிடமாக மாற்றப்பட்டுவிட்டது; எல்லா மதங்களையும் எல்லா நெறிகளையும் தன்னிடம் வரவேற்கின்ற உரிமை பெற்றதாக விளங்குகிறது. இதற்கான நிரூபணத்தை, ஒன்றுக்கொன்று முற்றிலும் முரணானவைபோல் தோன்றுகின்ற மதப் பிரிவுகள் வியக்கத்தக்க சமரசத்துடன் நிலவுவதை இங்கேதான் காணமுடியும். நீங்கள் துவைதியாக இருக்கலாம், நான் அத்வைதியாக இருக்கலாம்; நீங்கள் இறைவனின் நிலையான சேவகன் என்று உங்களை நம்பலாம், நான் என்னைக் கடவுளுடன் ஒன்று பட்டவனாகக் கூறிக்கொள்ளலாம். என்றாலும் நாம் இருவரும் நல்ல இந்துக்களாகவே இருப்போம். இது எப்படி முடிகிறது? 'ஏகம் ஸத் விப்ரா பஹுதா வதந்தி– இருப்பது ஒன்றே; மகான்கள் அதைப் பல பெயர்களால் அழைக்கிறார்கள்' என்பது நம் மனத்தில் ஊறி இருப்பதால்தான். என் நாட்டு மக்களே! எல்லாவற்றுக்கும் மேலாக நாம் உலகத்திற்குப் போதிக்க வேண்டியது இந்த உண்மையைத்தான்.

பிற நாடுகளிலுள்ள பேரறிஞர்கள் கூட, நமது மதத்தை உருவ வழிபாடு என்று கூறித் தங்கள் மூக்குகளை 45 டிகிரி கோணத்தில் திருப்பிக் கொள்கிறார்கள். நான் நேரிலியே அதைப் பார்த்திருக்கிறேன். ஆனால் தங்கள் மூளையில் எவ்வளவு மூட நம்பிக்கைகள் குவிந்து கிடக்கின்றன. என்பதை அவர்கள் நினைத்துப் பார்ப்பதில்லை. கீழ்த்தரமான இந்தப் பிரிவினைவாதம் இன்னும் எல்லா இடங்களிலும் அப்படியேதான் இருக்கிறது.

தன்னிடம் இருப்பதே உயர்ந்தது, தகுதியானது; பணத்தையும் பண தேவதையையும் வணங்கி வாழ்கின்ற குறுகிய வாழ்க்கையே வாழத்தக்கது, தனது சிறிய சொத்து மட்டுமே மதிப்பு வாய்ந்தது–வேறு எதுவும் தகுதியுடையதாக அவனுக்குத் தெரியவில்லை. பயனற்ற ஏதோ ஒன்றை வெறும் களி மண்ணில் செய்துவிடுவான், எந்திரம் ஒன்றைக் கண்டுபிடித்துவிடுவான், அவ்வளவுதான், அதை மகத்தானதாக எல்லோரும் பாராட்ட வேண்டும் ! இவ்வளவு அதிகமாகப் படிப்பும் சிந்தனையும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இருந்தும் உலகம் முழுவதும் நிலைமை இப்படித்தான் இருக்கிறது. கல்வி என்பது இனிதான் வர வேண்டும். பண்பாடு—அது இதுவரை எங்கேயும் தோன்றவே இல் 99.9 சதவீத மக்கள் இன்றும் காட்டுமிராண்டிகள் போலவே உள்ளார்கள். விட்டுக் கொடுத்தல், மதங்களிடையே சகிப்புத்தன்மை என்றெல்லாம் புத்தகங்களில் படிக்கலாம். ஆனால் அதில் இம்மியளவுகூட உலகில் காணப்படவில்லை—இது என் அனுபவம்; நூற்றுக்குத் தொண்ணூற்று ஒன்பது பேர் அதுபற்றி நினைப்பதுகூட இல்லை. நான் பார்த்த எல்லா நாடுகளிலும் மதத்தின் பெயரால் படுகொலைகள் சர்வசாதாரணமாக நடக்கின்றன; புதியனவற்றைக் கற்பதற்கும் கடுமையான தடைகள் முன்புபோலவே விதிக்கப்படுகின்றன.

மதங்களிடையே ஏதோ சிறிதளவு சகிப்புத்தன்மையும் ஏதோ சிறிது அனுதாபமுமாவது உலகில் காணப்படுகிறது என்றால், அது ஆசியர்களின் பூமியான இந்த இந்தியாவில்தான; வேறு எங்கும் இல்லை. இங்கேதான் இந்தியர்கள் முகமதியர்களுக்கும் கிறிஸ்தவர்களுக்கும் கோயில்களைக் கட்டித் தந்திருக்கிறார்கள்; வேறெங்கும் இல்லை. நீங்கள் வெளி நாடுகளுக்குச் சென்று அங்கு முகமதியர்களிடமோ மற்ற மதத்தினரிடமோ உங்களுக்காகக ஒரு கோயிலைக் கட்டித்தரும்படி கேளுங்கள்; அவர்கள் எப்படி உதவி செய்கிறார்கள் என்பதை அப்போது காண்பீர்கள். உங்களுக்காகக் கோயில் கட்டித் தருவதைவிட உங்கள் கோயில்களை இடிப்பதிலும், முடிந்தால் உங்களையே தீர்த்துக் கட்டவும்தான் அவர்கள் முயல்வார்கள்.

உலகிற்கு இன்று மிகமிகத் தேவையானதும், இந்தியாவிடமிருந்து அது கற்றுக்கொள்ள வேண்டியதுமான மகத்தான உண்மை சகிப்புத்தன்மை மட்டுமல்ல, அனுதாபமும் கூட. சிவ மஹிம்ன ஸ்தோத்திரம் கூறுவது போல், 'பல்வேறு மலைகளிலிருந்து புறப்படுகின்ற ஆறுகள் நேராக ஓடினாலும், வளைந்து வளைந்து ஓடினாலும் இறுதியில் கடலையே சென்று அடைகின்றன. எனவே ஓ சிவபெருமானே ! மனிதர்கள் தங்கள் மனநிலைக்கு ஏற்பத் தேந்நதெடுக்கின்ற பாதைகள் வெவ்வேறாகத் தோன்றினாலும் நேராகவோ வளைந்தோ சென்றாலும் எல்லாம் உன்னை நோக்கியே வருகின்றன', பாதைகள் வெவ்வேறாக இருக்கலாம், ஆனால் அனைவரும் செல்வது பாதையில்தான். சிலர் கொஞ்சம் வளைந்த பாதையில் செல்லலாம். சிலர் நேரான பாதையில் செல்லாம். எல்லோரும் ஒரே கடவுளிடம்தான் சென்று சேர்கின்றனர்.

சிவபெருமானை சிவலிங்கத்தில் மட்டுமல்லாமல் எல்லா இடங்களிலும் காணும்போதுதான் அவரிடம் நீ கொண்ட பக்தி முழுமை பெறுகிறது. ஹரியை ஒவ்வொன்றிலும், ஒவ்வொருவரிலும் யார் காண்கிறானோ அவனே ஹரியின் உண்மை பக்தன். நீ உண்மையான சிவ பக்தனாக இருந்தால் சிவனை ஒவ்வொன்றிலும் ஒவ்வொருவரிலும் காண வேண்டும். வழிபாடுகள் எந்தப் பெயரில் இருந்தாலும் சரி, எந்த விதத்தில் இருந்தாலும் சரி, அவை அனைத்தும் ஒரே கடவுளுக்குச் செய்யப்படுகின்றன என்பதை நீங்கள் உணர வேண்டும். காபாவை நோக்கி மடிகின்ற, சர்ச்சில் முழந்தாளிடுகின்ற, புத்தர் கோயிலில் மண்டியிடுகின்ற எல்லா கால்களும், அவர்களுக்குத் தெரிந்தாலும் சரி தெரியாவிட்டாலும் சரி, அவர்கள் அதை உணர்ந்தாலும் சரி உணராவிட்டாலும் சரி, அவை அந்த ஒரே இறைவனையே பணிகின்றன. எந்தெந்த வடிவங்களில், எந்தெந்தப் பெயர்களில் மலர்களை அர்ப்பித்தாலும், அவை அத்தனையும் அந்த ஒரே இறைவனின் திருவடிகளில்தான் இடப்படுகின்றன. ஏனெனில் எல்லோருக்கும் ஒரே தலைவர் அவரே, ஆன்மாக்களின் ஆன்மா அவரே. உலகிற்கு எது தேவையென்று உங்களையும் என்னையும்விட அவருக்கு மிகமிக நன்றாகவே தெரியும்.

வேற்றுமைகளே இல்லாமல் போவது என்பது முடியாத காரியம்; அவை இருந்தேயாகு வேண்டும். வேறுபாடுகள் இல்லையென்றால் வாழ்க்கையே இருக்காது. இந்த மோதல்தான், வேறுபட்ட இந்தக் கருத்துக்கள்தாம் தெளிவை உண்டாக்குகின்றன, எல்லாவற்றையும் இயக்குகின்றன, எல்லாவற்றையும் நடைபெறச் செய்கின்றன. வேற்றுமைகள், முற்றிலும் முரணான வேற்றுமைகள் நிச்சயம் இருக்க வேண்டும். ஆனால் அதற்காக நாம் ஒருவரை ஒருவர் வெறுக்க வேண்டியதில்லை; ஒருவரோடு ஒருவர் போரிட வேண்டும் என்பதும் இல்லை.

எனவே இங்கே நமது தாய்நாட்டில் மட்டுமே போதிக்கப்பட்ட ஒரு சிறந்த மையக் கருத்தை நாம் மறுபடியும் கற்க வேண்டும். அது மறுபடியும் இந்தியாவிலிருந்து உலகத்திற்கு உபதேசிக்கப்பட வேண்டும். ஏன்? ஏனெனில் அது நம் நூல்களில் மட்டும் இருக்கின்றன என்பதில்லை, நம் தேசிய இலக்கியத்தின் ஒவ்வொரு பகுதியிலும் தேசிய வாழ்வின் ஒவ்வொரு நிலையிலும் அது உள்ளது. இங்கே, இங்கே மட்டும்தான் அது நாள்தோறும் நடைமுறையில் பின்பற்றப்பட்டது. கண்களைத் திறந்து வைத்துக்கொண்டு பார்க்கின்ற எந்த மனிதனும் அது இங்கு, மட்டுமே நடைமுறையில் உள்ளதைக் காண்பான். இவ்வாறு நாம் உலகிற்கு மதத்தைப் போதித்தாக வேண்டும். இந்தியா போதிக்கத்தக்க மேலான வேறு போதனைகளும் உள்ளன; ஆனால் அவை அறிஞர்களுக்கு போதிக்கப்பட வேண்டியவை. சாதுத்தன்மை, மென்மை, மன்னிக்கும் குணம், சகிப்புத்தன்மை, அனுதாபம், சகோதரத்துவம் முதலியவற்றை ஜாதி மத இன வேறுபாடுகள் இல்லாமல் ஆண், பெண், குழந்தைகள், படித்தவர், பாமரர் என்று அனைவரும் கற்கலாம். 'இறைவா, உன்னை மக்கள் பல பெயரால் அழைக்கின்றனர். ஆனால் நீ ஒருவனே !'



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# நமது அடிப்படை

(சுவாமி விவேகானந்தரின் யாழ்ப்பாணச் சொற்பொழிவு)

விஷயமோ மிகவும் பெரியது, நேரம் மிகக் குறைவாகவே உள்ளது. ஒரு சொற்பொழிவில் இந்துக்களின் மதத்தைப் பற்றிய ஒரு முழுமையான ஆராய்ச்சியை நடத்துவது என்பது முடியாதது. எனவே நமது மதத்தின் முக்கியக் கருத்துக்களை என்னால் இயன்ற அளவு எளிய மொழியில் உங்கள் முன் வைக்கிறேன்.

நம்மை நாம் இப்போது நாகரீகமாக அழைத்துக் கொள்கின்ற 'ஹிந்து' என்ற வார்த்தை, அதன் முழுப்பொருளையும் இழந்துவிட்டது. ஏனெனில் இந்த வார்த்தை சிந்துநதிக்கு மறுபக்கத்தில் வாழ்ந்தவர்களைக் குறிப்பிடுகிறது, அவ்வளவுதான். சிந்து என்ற சொல் பழங்காலப் பாரசீகர்களால் சிதைக்கப்பட்டு ஹிந்து என்று ஆகியது; சிந்து நதிக்கு மறுபுறம் வாழ்ந்த அனைவரையும் அவர்கள் ஹிந்து என்றே அழைத்தார்கள். இவ்வாறு இந்தச் சொல் நம்மிடம் வந்தது. முகமதியர்களின் ஆட்சிக் காலத்தில் நாமும் இந்தப் பெயரை ஏற்றுக் கொண்டோம். இந்த வார்த்தையைப் பயன்படுத்துவதால் எந்தத் தீமையும் இல்லை. ஆனால் நான் முன்பே சொன்னதுபோல், அது தன் பொருளை இழந்துவிட்டது. தற்காலத்தில் சிந்து நதிக்கு இந்தப் பக்கத்தில் வாழ்கின்ற எல்லா மக்களும் பழங்காலத்தைப்போல் ஒரே மதத்தைப் பின்பற்றவில்லை. எனவே இந்தச் சொல் தற்போது இந்துக்களை மட்டுமின்றி முகமதியர்கள், கிறிஸ்தவர்கள், சமணர்கள் என்று இந்தியாவில் வாழ்கின்ற அனைவரையும் குறிக்கிறது. அதனால் இங்கு இந்து என்ற சொல்லை நான் பயன்படுத்தப் போவதில்லை. அப்படியானால் எந்த வார்த்தையை உபயோகிப்பது? நாம் பயன்படுத்தத்தக்க வார்த்தைகள் இரண்டே: வைதீகர்கள்– வேதத்தைப் பின்பற்றுபவர்கள்; அல்லது இதைவிடச் சிறப்பாக, வேதாந்திகள்–வேதாந்தத்தைப் பின்பற்றுபவர்கள்.

உலகின் சிறந்த மதங்களுள் பெரும்பாலானவை சில குறிப்பிட்ட நூல்களை ஆதாரமாகக் கொண்டுள்ளன; அவற்றுள் கூறப்பட்டுள்ளதை இறைவனின் வார்த்தைகள் என்றோ, இயற்கையைக் கடந்த சில தேவதைகளின் வாக்குகள் என்றோ அவர்கள் நம்புகிறார்கள். அவையே அவர்களது மதத்தின் அடிப்படையாக உள்ளன. இன்றைய மேலை நாட்டு அறிஞர்களின் கருத்துப்படி, இந்த நூல்களுள் பழமையானது இந்துக்களின் வேதங்களே. எனவே வேதத்தைப்பற்றிச் சிறிது அறிந்து கொள்வது அவசியமாகும்.

வேதங்கள் என்ற பெயரால் அழைக்கப்படுகின்ற நூற்களஞ்சியங்கள் மனிதர்கள் சொன்னவை அல்ல. அவற்றின் காலமும் நிர்ணயிக்கப்படவில்லை; நிர்ணயிக்கப்படவும் முடியாது. நம் கருத்துப்படி, வேதங்கள் என்றுமே உள்ளவை. ஒரு முக்கிய விஷயத்தை நான் உங்களுக்கு நினைவூட்ட விரும்புகிறேன். மற்ற மதங்கள் தங்கள் தோற்றத்திற்கு ஒரு தெய்வத்தையோ, பல மனிதர்களையோ, தேவதைகளையோ, இறைவனின் விசேஷ தூதர்களையோ காரணமாகக் காட்டி, குறிப்பிட்ட சிலர் மூலமாக அவர்கள் அந்த மதத்தை வெளிப்படுத்தியதாகக் கூறுகின்றன. இவ்வாறு தங்கள் அத்தாட்சியை நிலைநாட்டுகின்றன. ஆனால் இந்துக்களோ வேதங்களுக்கு அப்படியோர் அத்தாட்சியைக் கூறவில்லை. என்றென்றும் நிலையான இறைஞானத்தை அவை கூறுவதால் அவையும் அழிவற்றவை, அதனால் வேதங்களுக்கு வேதங்களே அத்தாட்சி என்று இந்துக்கள் கூறுகிறார்கள். அவை எந்தக் காலத்திலும் எழுதப்படவில்லை, எந்தக் காலத்திலும் உருவாக்கப்படவில்லை. காலங்காலமாக அவை இருக்கின்றன. எவ்வாறு படைப்பு தோற்றமும் முடிவும் இல்லாமல் எல்லையற்றதாகவும் நிரந்தரமானதாகவும் இருக்கிறதோ, அவ்வாறே இறையறிவும் தோற்றமும் முடிவும் இல்லாமல் என்றும் இருக்கிறது. இந்த அறிவுதான் வேதங்கள் (வித்–அறிதல்) என்று அழைக்கப்படுகிறது.

வேதாந்தம் என்ற பெயரால் அழைக்கப்படுவதான அறிவுக் களஞ்சியம், ரிஷிகளால் கண்டுபிடிக்கப்பட்டவை. ரிஷி என்றால் 'மந்த்ர த்ரஷ்டா' அதாவது மந்திரத்தை, ஒரு சிந்தனையை நேரே கண்டவர் என்று கூறப்படுகிறது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவர்கள் அந்தச் சிந்தனையைக் கண்டவர்களே தவிர, அந்தச் சிந்தனைகள் அவர்களுடையவை அல்ல. வேதத்தின் இன்ன பகுதி இன்ன ரிஷியிடமிருந்து வெளிவந்தது என்றால் அந்தப் பகுதியை அவர் எழுதினார் என்றோ, அவர் தம் மனத்திலிருந்து அதனை உருவாக்கினார் என்றோ நினைத்துக் கொள்ளாதீர்கள். ஏற்கனவே இருந்த சிந்தனையை அவர் கண்டார், அவ்வளவுதான். அது பிரபஞ்சத்தில் எப்போதும் இருக்கிறது. ரிஷி அதனைக் கண்டுபிடித்தவர்.

வேதங்கள் முக்கியமாகக் கர்மகாண்டம், ஞான காண்டம்–செயல் பகுதி; ஆன்மீகப் பகுதி – என்று இரண்டு பகுதிகளாகப் பிரிக்கப்பட்டுள்ளன. கர்மகாண்டம் பல்வேறு யாகங்களைப் பற்றிக் கூறுகிறது. தற்போதைய சூழ்நிலையில் செய்யப்பட முடியாதவை என்று அவற்றுள் பலவும் கைவிடப்பட்டுவிட்டன. எஞ்சியவை ஏதோ ஒருவிதத்தில் இன்றுவரை இருக்கவே செய்கின்றன. சாதாரண மனிதன், மாணவன், இல்லறத்தான், துறவி என்று வாழ்வின் பல்வேறு நிலைகளில் உள்ளவர்களுக்கான கடமைகள் கர்மகாண்டத்தில் முக்கியக் கருத்துக்கள் ஆகும். இவை இன்றும் ஓரளவிற்கு வழக்கத்தில் உள்ளன.

நமது மதத்தின் ஆன்மீகப் பகுதி இரண்டாம் பகுதியான ஞான காண்டத்தில் உள்ளது. இதுவே வேதாந்தம், வேதங்களின் நிறைவு, வேதங்களின் சாரம், அதன் லட்சியம் வேதங்களின் சாரமான கருத்து வேதாந்தம் எனப்படுகிறது. இந்தப் பகுதியில்தான் உபநிடதங்கள் உள்ளன. துவைதம், அத்வைதம், விசிஷ்டாத்வைதம், சைவம், வைணவம், சாக்தம், சௌரம், காணபத்யம் என்று இந்தியாவிலுள்ள மதப் பிரிவுகள் எதுவாயினும், இந்து மதத்தின் ஒரு பிரிவாகத் தன்னைக் கூறத் துணிவுள்ள எந்த நெறியாயினும் அவை வேதங்களின் இந்த உபநிடதங்களை ஏற்றுக்கொண்டாக வேண்டும். அவை அவற்றைத் தங்களுக்கு ஏற்றவாறு பொருள் கொள்ளலாம். ஆனால் உபநிடதங்களை ஏற்றுக்கொண்டே தீர வேண்டும். அதனால் தான் நாம் இந்து என்பதற்குப் பதிலாக வேதாந்தி என்ற சொல்லைப் பயன்படுத்த விரும்புகிறோம். இந்தியாவின் வைதீகத் தத்துவ அறிஞர்கள் அனைவரும் வேதாந்தத்தை ஏற்கத்தான் வேண்டும். தற்கால மதங்களை எடுத்துக் கொள்ளுங்கள். அவற்றுள் சில வளர்ச்சி அடையாதவையாக இருக்கலாம், சில பயனற்றவை போலவே தோன்றலாம். ஆனால் அவற்றை ஆழ்ந்து படிப்பவர்கள், புரிந்து கொள்பவர்கள், அவையும் உபநிடதக் கருத்துக்களையே ஆதாரமாகக் கொண்டிருப்பதைக் காணலாம்.

இந்து மதத்தின் கீழ்நிலைப் பிரிவுகள் ஏதாவது ஒன்றில் காணப்படுகின்ற சின்னங்களை ஆராய்ந்து பாருங்கள்; அவற்றுள் பலவும் உபநிடதங்களில் உருவமாகக் கூறப்பட்டிருப்பதைக் கண்டு ஆச்சரியமடைவீர்கள். இந்த உபநிடத உருவங்களே காலப்போக்கில் சின்னங்களாக மாறின. அந்த அளவிற்கு ஆழமாக உபநிடதங்கள் நம் இனத்தில் ஊறிப்போயிருக்கின்றன. உபநிடதங்களில் உள்ள உயர்ந்த ஆன்மீகச் சிந்தனைகளும் கருத்துக்களும் பல்வேறு சின்னங்களின் வடிவில் இன்றும் நம் வீடுகளில் வழிபடப்பட்டு நம்முடன் இருக்கின்றன. இவ்வாறு நாம் பயன்படுத்தி வருகின்ற சின்னங்கள் எல்லாமே வேதாந்தத்திலிருந்து வந்தவைதாம். வேதாந்தத்தில் அவை உருவங்களாகக் கூறப்படுகின்றன. இவை நாடு முழுவதும் பரவி இறுதியில் சின்னங்களாக ஒவ்வொருவரின் அன்றாட வாழ்க்கையோடு ஒன்றிவிட்டன.

வேதாந்தத்திற்குப் பிறகு ஸ்மிருதிகள் வருகின்றன. இவையும் மகான்களால் எழுதப்பட்டவையே. ஆனால் அத்தாட்சியைப் பொறுத்தவரை இவை வேதாந்தத்திற்கு அடுத்த படியில் உள்ளவை. மற்ற மதங்களுக்கு அவற்றின் சாஸ்திரங்கள்போல் நமது மதத்திற்கு உள்ளவை இவை. இந்த ஸ்மிருதிகள் சில குறிப்பிட்ட ரிஷிகளால் எழுதப்பட்டவை என்பதை நாம் ஏற்றுக் கொள்கிறோம். இந்த நிலையில்தான் அவை பிற மத சாஸ்திரங்களைப் போன்றவை. ஸ்மிருதிகள் இறுதி அத்தாட்சி அல்ல. ஸ்மிருதியில் வேதாந்தத்திற்கு மாறாக ஏதாவது இருக்குமானால் அதை ஒதுக்கிவிட வேண்டும், அதன் அத்தாட்சி போய்விட்டது. இந்த ஸ்மிருதிகள் காலத்திற்குக் காலம் மாறிக்கொண்டே இருப்பதையும் நாம் காண்கிறோம். சத்திய யுகத்தில் இன்ன ஸ்மிருதி அத்தாட்சி பெற்றது, திரேதா யுகத்தில் இன்ன ஸ்மிருதி, அதுபோல் துவாபர யுகத்தில் சிலவும், கலியுகத்தில் சிலவும் அத்தாட்சி பெற்றிருந்தன என்று நாம் படிக்கிறோம். ஸ்மிருதிகள் முக்கியமாக மக்களின் பழக்கவழக்கங்களை நெறிப்படுத்துபவை. காலத்திற்கேற்ப நாட்டின் அடிப்படைச் சூழல்கள் மாறி, வேறு சூழல்களின் ஆதிக்கம் ஏற்படும்போது, மக்களின் வாழ்க்கை முறை மாறுவதற்கு ஏற்றாற்போல் ஸ்மிருதிகளும் மாறும். இந்த விஷயத்தை நினைவில் வைத்துக் கொள்ள வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

வேதாந்தக் கோட்பாடுகள் மாறாதவை ஏன்? ஏனெனில் அவை மனிதனிலும் இயற்கையிலும் உள்ள மாறாத உண்மைகளின் அடிப்படையில் எழுப்பப்பட்டவை. அவை ஒருபோதும் மாறாது. ஆன்மா பற்றிய உண்மைகள் மற்றும் சொர்க்கத்திற்குப் போவது போன்ற கருத்துக்கள் எப்போதுமே மாற முடியாது. ஆயிரக்கணக்கான ஆண்டுகளுக்கு முன் அவை இருந்தது போலவே இன்றும் உள்ளன; லட்சக்கணக்கான ஆண்டுகளுக்குப் பிறகும் இப்படியேதான்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இருக்கும். ஆனால் சமுதாய நிலைகள், பரஸ்பரத் தொடர்பு ஆகியவற்றின் அடிப்படையிலேயே முற்றிலும் அமைவதான சமயப் பழக்கவழக்கங்கள் சமுதாயம் மாறும் போது மாறியே தீரும். எனவே குறிப்பிட்ட ஒரு காலத்திற்குத்தான் நல்லவையாகவும் பொருத்தமானவையாகவும் அவை இருக்கும்; மற்ற காலங்களுக்கு ஏற்புடையவையாக இருக்காது. ஒரு குறிப்பிட்ட உணவு ஒரு காலத்தில் உண்பதற்கு அனுமதிக்கப்பட்டது, அடுத்த காலகட்டத்தில் அனுமதிக்கப்படவில்லை. ஏனெனில் அந்தக் காலத்தில் அந்த உணவு பொருந்தவில்லை, கால நிலையும் மற்றச் சூழல்களும் மாறியது, வேறு பல சூழல்களையும் எதிர்கொள்ள நேர்ந்தது. எனவே பிற்கால ஸ்மிருதிகள் உணவையும் பிறவற்றையும் மாற்றி விட்டன. இவ்வாறே காலத்திற்குக் காலம் மாறுதல்கள் ஏற்பட்டன. இன்றைய நமது சமுதாயம் ஏதாவது மாற்றங்களை விரும்பினால் அவற்றையும் செய்தாக வேண்டும். மகான்கள் தோன்றி அதனை எப்படிச் செய்வது என்பதைக் காட்டுவார்கள். ஆனால் நமது மதத்தின் கோட்பாடுகள் ஒரு துளிகூட மாறாது; அவை அப்படியே இருக்கும்.

பின்னர் வருபவை புராணங்கள். 'புராணம் பஞ்ச லக்ஷணம்'–புராணங்களை ஐந்து அடையாளங்களால் அறிந்து கொள்ளலாம்; அவை வரலாறு, பிரபஞ்ச இயல், தத்துவக் கருத்துக்களுக்கு பல்வேறு உருவ விளக்கம் போன்றவை. புராணங்களில் கூறப்படுகின்ற வேதக் கருத்துக்களைப் பரப்புவதற்காக எழுதப்பட்டவை புராணங்கள். வேதங்கள் எழுதப்பட்ட மொழி மிகவும் பழமையானது. அறிஞர்கள் கூட ஏதோ சிலரால்தான் அந்த நூல்கள் எழுதப்பட்ட காலத்தை அறிந்து கொள்ள முடியும். புராணங்கள் அக்கால மக்கள் பேசிய மொழியிலேயே எழுதப்பட்டுள்ளன. அந்த மொழியே இன்றைய நவீன சம்ஸ்கிருதம். அவை அறிஞர்களுக்காக எழுதப்பட்டவை அல்ல, சாதாரண மக்களால் தத்துவங்களைப் புரிந்துகொள்ள முடியாது. அத்தகைய விஷயங்கள் சுலபமாகப் புரிந்து கொள்ளக்கூடிய வகையில் மகான்கள், அரசர்கள் மற்றும் பிரபலமானவர்களின் வரலாறுகள் மூலமாகவும், அக்காலத்தில் அந்த இனத்தில் நடைபெற்ற வரலாற்று நிகழ்ச்சிகள் முதலியவற்றின் வாயிலாகவும் புராணங்களில் விளக்கப்படுகின்றன. இவற்றைப் பயன்படுத்தி மக்களுக்கு நிலையான தத்துவங்களை மகான்கள் புகட்டினார்கள்.

இவற்றைத் தவிர தந்திர நூல்கள் உள்ளன. இவை சில விஷயங்களில் புராணங்களைப் போலவே உள்ளன. இவற்றுள் சில கர்மகாண்டத்தில் உள்ள யாகம் பற்றிய பழைய கருத்துக்களைத் திரும்பவும் நடைமுறைக்குக் கொண்டு வருவதற்கான முயற்சி காணப்படுகிறது.

இந்த நூல்கள் அனைத்தும் சேர்ந்ததே இந்துக்களின் சாஸ்திரங்கள், இவ்வளவு அதிகமான புனித நூல்கள் இருக்கின்ற ஒரு நாட்டில், தன் ஆற்றலின் பெரும் பகுதியை இத்தகைய தத்துவ நாட்டத்திலும், ஆன்மீகச் சிந்தனைகளிலும் செலவிட்ட ஓர் இனத்தில் (எத்தனை ஆயிரம் ஆண்டுகளாக என்பது யாருக்கும் தெரியாது), அதிகமான இவ்வளவு மதப் பிரிவுகள் இருப்பது இயல்பானது. இன்னும் ஆயிரக்கணக்கில் இல்லாததுதான் ஆச்சரியம். அந்தப் பிரிவுகள் சில கோட்பாடுகளில் முற்றிலும் வேறுபடுகின்றன. அந்த வேறுபாடுகள் எல்லாவற்றையுமோ அவற்றின் ஆன்மீகக் கோட்பாடுகள் அதைத்தையுமோ அறிந்து கொள்ள நமக்கு நேரமில்லை. எனவே இந்தப் பிரிவுகள் அனைத்திற்கும் அடிப்படையானதும், ஒவ்வோர் இந்துவும் நம்பியே தீரவேண்டுவதுமான சில கருத்துக்களை நான் பேச எடுத்துக் கொள்கிறேன்.

முதலாவது, படைப்பைப் பற்றியது; அதாவது இயற்கை, பிரகிருதி, மாயை பற்றியது. மாயை எல்லையற்றது, தோற்றமில்லாதது. இன்ன நாள் இந்த உலகம் உருவாக்கப்பட்டது, ஒரு கடவுள் வந்து இந்த உலகங்களைப் படைத்தார், அதன்பிறகு இன்றுவரை அவர் தூங்கிக் கொண்டிருக்கிறார் என்பதில்லை; ஏனெனில் அவ்வாறு நடக்க முடியாது. படைப்பாற்றல் இன்னும் இயங்கிக் கொண்டேதான் இருக்கிறது. கடவுள் எப்போதும் படைத்துக் கொண்டே இருக்கிறார், ஒருபோதும் ஓய்வு கொள்வதில்லை. 'நான் ஒரு கணம் ஓய்வெடுத்தாலும் இந்தப் பிரபஞ்சம் அழிந்துவிடும்' என்று கீதையில் ஸ்ரீகிருஷ்ணர் சொல்வதை நினைவுகூருங்கள், நம்மைச் சுற்றி இரவும் பகலும் இயங்கிக் கொண்டே இருக்கின்ற அந்தப் படைப்பாற்றல் ஒரு வினாடி நின்று போனாலும் எல்லாம் தரைமட்டமாகிவிடும். பிரபஞ்சம் முழுவதும் அந்தச் சக்தி இயங்காத நேரமே கிடையாது.

ஆனால் பிரளயம் அல்லது சுழற்சி நியதி (Law of Cylces) என்பது உள்ளது. படைப்பிற்கான சமஸ்கிருதச் சொல்லைச் சரியாக மொழிபெயர்த்தால் அது வெளிப்பாடு (Projection) என்று பொருள்படுமே தவிர படைப்பு (Creation) என்று பொருள் தராது. ஏனென்றால், ஆங்கில மொழியில், படைத்தல் என்ற சொல் சூன்யத்திலிருந்து ஏதோ ஒன்று தோன்றுதல், ஒன்றுமில்லாததிலிருந்து படைப்பு, இல்லாத ஒன்று இருப்பதாக மாறுதல் என்றெல்லாம், துரதிர்ஷ்டவசமாக, மிகவும் வேதனைத்தருகின்றன, முதிர்ச்சியற்ற பொருள்களைத் தருகிறது. இந்தக் கருத்தை நம்பும்படிக் கூறி உங்களை நான் இழிவுபடுத்த மாட்டேன். இதற்கு நம் சொல் 'வெளிப்பாடு' என்பது. இந்த இயற்கை மொத்தமும் இருக்கிறது; பிறகு நுட்பமாகிறது, மறைகிறது. ஒரு குறிப்பிட்ட கால ஓய்விற்குப்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பின்னர், வெளிப்படுவதுபோல் மீண்டும் எல்லா பொருட்களும் தோன்றுகின்றன; அதே சேர்க்கை, அதே பரிணாமம், அதே வெளிப்பாடுகள் தோன்றுகின்றன. ஒரு குறிப்பிட்ட காலம் விளையாடல் நடைபெறுவது போல் தோன்றுகிறது. பின்னர், சேர்ந்த அனைத்தும் மீண்டும் சிதறி, நுட்பமாகி, மேலும் நுட்பமாகி மாறி எல்லாம் மறைந்து விடுகிறது. மறுபடியும் வெளி வருகிறது. இவ்வாறு ஓர் அலையைப்போல் முன்னால் வருவதும் பின்னால் போவதுமாக காலங்காலமாக இந்த இயக்கம் நடைபெற்றுக் கொண்டேயிருக்கும். காலம், இடம், காரணம் எல்லாம் இந்த இயற்கைக்குள்தான் உள்ளன. எனவே இந்தப் பிரபஞ்சம் ஒரு காலத்தில் படைக்கப்பட்டது என்று சொல்வது சுத்த முட்டாள்தனம். அதன் தோற்றத்தைப் பற்றியோ முடிவைப் பற்றியோ எந்தக் கேள்வியும் எழ முடியாது. எனவே நம் சாஸ்திரங்களில் எங்கெல்லாம் பிரபஞ்சத்தின் தோற்றம் மற்றும் முடிவு என்று வருகிறதோ அதனை ஒரு சுழற்சியின் தோற்றம் மற்றும் முடிவு என்று கொள்ள வேண்டும். இதுவே அதன் பொருள், வேறெதுவும் அல்ல.

எது இதனைப் படைத்தது? கடவுள் God (கடவுள்) என்னும் இந்த ஆங்கிலச் சொல்மூலம் நான் எதைக் குறிப்பிடுகிறேன்? சாதாரணமாக அந்த வார்த்தை ஆங்கில மொழியில் கூறப்படும் பொருளில் அல்ல. நான் கொள்ளும் பொருளுக்கும் அதற்கும் மிகுந்த வித்தியாசம் உள்ளது. அதனைக் குறிப்பதற்குப் பொருத்தமான வேறு ஆங்கிலச் சொல் எதுவும் இல்லை. எனவே 'பிரம்மம்' என்ற சம்ஸ்கிருதச் சொல்லையே பயன்படுத்துகிறேன். அவர் இந்த எல்லா வெளிப்பாடுகளுக்கும் பொதுக் காரணமாக இருக்கிறார்.

இந்த பிரம்மம் என்பது என்ன? அவர் என்றும் இருப்பவர், என்றும் தூய்மையானவர், என்றும் விழிப்போடு இருப்பவர், எல்லா ஆற்றலும் கொண்டவர், எல்லாம் அறிந்தவர், கருணை மயமானவர், எங்கும் நிறைந்தவர், உருவமற்றவர், பிரிவு இல்லாதவர். அவர் இந்தப் பிரபஞ்சத்தைப் படைக்கிறார். அவர் எப்போதும் படைத்துக் கொண்டும் காத்துக் கொண்டும் இருப்பதாகச் சொன்னால் இரண்டு சங்கடங்கள் எழுகின்றன. நாம் இந்தப் பிரபஞ்சத்தில் ஏற்றத்தாழ்வுகளைப் பார்க்கிறோம். ஒரு மனிதன் பிறந்ததிலிருந்தே மகிழ்ச்சியாக இருக்கிறான், மற்றொருவன் துயருறுகிறான்; ஒருவன் பணக்காரனாக இருக்கிறான், மற்றொருவன் ஏழையாக இருக்கிறான். இது ஓரவஞ்சனையையே காட்டுகிறது. அதோடு, படைப்பில் கொடூரம் இருக்கிறது; வாழ்க்கையின் நியதியே மரணமாக அல்லவா உள்ளது. ஒரு மிருகம் மற்றொரு மிருகத்தை நார்நாராகக் கிழிக்கிறது. ஒவ்வொருவனும் தன் சொந்த சகோதரனிடமிருந்து எவ்வளவு முடியுமோ அவ்வளவு பறித்துக்கொள்ள முயல்கிறான். இந்தப் போட்டி, கொடூரம், பயங்கரம், ஏக்கப் பெருமூச்சுக்கள் எல்லாம் இரவும் பகலும் இதயங்களைக் கிழித்துக் கொண்டே இருக்கின்றன. இதுதான் நமது உலகத்தின் நிலைமை. இது கடவுளின் படைப்பு என்றால், அந்தக் கடவுள் கொடூரத்தைவிட மோசமானவர்; மனிதனால் கற்பனை செய்ய முடிவதைவிட மிகவும் பயங்கரமான பிசாசு அவர்.

ஆனால் இங்கே ஓரவஞ்சனை இருக்கிறது என்றால், போட்டி நிலவுகிறது என்றால் தவறு கடவுள் மீது இல்லை என்கிறது வேதாந்தம். அப்படி என்றால் இவற்றை உண்டாக்குவது யார்? நாமே. மேகம் எல்லா நிலங்களின் மீதும் சமமாகவே மழையைப் பொழிகிறது ஆனால் நன்றாக உழுது பண்படுத்தப்பட்ட நிலம் மட்டுமே அந்த மழையால் பலன் பெறுகிறது; பண்படுத்தப்படாத நிலமோ, நல்ல முறையில் கவனம் செலுத்தப்படாத நிலமோ மழையின் எந்தப் பலனையும் பெற முடியாது. அது மேகத்தின் குற்றம் அல்ல. அதுபோல் கடவுளின் கருணை நிரந்தரமானது, மாறாதது. நாம்தான் வேற்றுமைகளை உண்டாக்குகிறோம். ஆனால் பிறந்ததிலிருந்தே சிலர் மகிழ்ச்சியோடு இருப்பதையும், சிலர் துன்பத்தில் வாடுவதையும் எப்படி விளக்குவது? இந்த வேற்றுமையை உண்டாக்க அவர்கள் எதுவும் செய்யவில்லை; இந்தப் பிறவியில் ஒன்றும் செய்யவில்லை, உண்மைதான்; ஆனால் சென்ற பிறவியில் செய்தார்கள். சென்ற பிறவியில் செய்தவை இந்தப் பிறவியின் நிலைமைக்கான காரணங்கள் என்பதே வேற்றுமைகளின் விளக்கம்.

எல்லா இந்துக்கள் மட்டுமன்றி, எல்லா பௌத்தர்களும் எல்லா சமணர்களும் ஏற்றுக் கொள்கின்ற இரண்டாவது கோட்பாட்டிற்கு இப்போது வருவோம். நாம் எல்லோரும் வாழ்க்கை நிரந்தரமானது என்பதை ஏற்றுக்கொள்கிறோம். ஒன்றும் இல்லாததில் இருந்து இது வரவில்லை, அப்படி வரவும் முடியாது. அத்தகைய வாழ்க்கை வாழத்தகுந்ததும் அல்ல. காலத்தின் கட்டிற்குள் தோன்றுகின்ற எல்லாம் அதற்குள்ளேயே முடிந்தாக வேண்டும். வாழ்க்கை நேற்றுதான் துவங்கி இருக்குமானால் அது கட்டாயம் நாளை முடிவுக்கு வந்து விடும், முழுமையான அழிவுதான் அதன் விளைவாக இருக்க முடியும். வாழ்க்கை இருந்துகொண்டே இருக்கிறது. இதனை அறிந்து கொள்வதற்கு, இன்று பிரமாதமான அறிவுக் கூர்மை தேவையில்லை. ஏனெனில் இன்றைய விஞ்ஞான முடிவுகள் எல்லாமே இந்த விஷயத்தில் நமக்குத் துணையாக உள்ளன; தூல உலகின் உதாரணங்களையே காட்டி அவை நமது சாஸ்திரங்களிலுள்ள கருத்துக்களை விளக்குகின்றன.

நாம் ஒவ்வொருவரும் முடிவற்ற கடந்தகாலத்தின் விளைவு என்பது ஏற்கனவே உங்களுக்குத் தெரியும். கவிஞர்கள் கவிதைகளில் பாடி மகிழ்வார்களே, அவ்வாறு

"நமது அடிப்படை" - யாழ் சொற்பொழிவு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மின்னல் வெட்டுவதுபோல் இயற்கையின் கைகளிலிருந்து குழந்தை திடீரென உலகில் வந்துவிடவில்லை. எல்லையற்ற கடந்த காலம் என்னும் சுமை அவனிடம் உள்ளது. நல்லதற்கோ கெட்டதற்கோ, அவன் தன் கடந்தகாலக் கர்மங்களைக் கழிப்பதற்காக வந்துள்ளான். இந்தக் கர்மங்கள்தாம் மக்களிடையே வேற்றுமையை உண்டாக்குகின்றன. இது கர்ம நியதி. நாம் ஒவ்வொருவரும் நமது சொந்த விதியை உருவாக்குபவர்களாக இருக்கிறோம். நமது வாழ்க்கையை வேறு யாரோ முன்பே வகுத்து வைத்திருக்கிறார்கள் (Predestination), விதிப்படிதான் எல்லாம் நடக்கும் என்றெல்லாம் கூறுவதை ஒரேயடியாக வீழ்த்திவிட்டு, இந்தக் கர்மநியதி இறைவனுக்கும் மனிதனுக்கும் இடையில் ஒரே பாலமாகத் திகழ்கிறது.

நாம் துயருறுவதற்கு நாம், நாமே தான் காரணம்; வேறு யாரும் அல்ல. நாமே விளைவுகள், நாமே காரணங்கள். எனவே நாம் சுதந்திரர்கள். நான் துன்பப்பட்டால் அது எனக்கு நானே உண்டாக்கிக் கொண்டது; நான் விரும்பினால் என்னால் மகிழ்ச்சியாக இருக்க முடியும் என்பதையும் இது காட்டுகிறது. நான் தூய்மையற்றனாக இருந்தால் அதுவும் நான் செய்து கொண்டது தான். இதுவே, நான் விரும்பினால் தூயவனாக இருக்க முடியும் என்பதையும் காட்டுகிறது. மனித சங்கல்பம் எல்லா சூழ்நிலைகளையும் கடந்து நிற்கிறது. அந்த வலிமையான, உறுதியான எல்லையற்ற சங்கல்பத்திற்கும் சுதந்திரத்திற்கும் முன்னால் எல்லா ஆற்றல்களும், இயற்கையின் ஆற்றல்கள்கூட, கட்டாயம் தலைவணங்கியே தீர வேண்டும், ஒடுங்கியாக வேண்டும், சேவகர்களாக வேண்டும். இதுதான் கர்ம நியதியின் விளைவு.

இயல்பாகவே எழும் அடுத்த கேள்வி, ஆன்மா என்றால் என்ன என்பதுதான். ஆன்மாவை அறியாமல் நமது சாஸ்திரங்கள் கூறுகின்ற கடவுளை நாம் புரிந்துகொள்ள முடியாது. புற இயற்கையை ஆராய்வதன் மூலம், அனைத்தையும் கடந்த பொருளைச் சிறிதாவது உணர்ந்து விடலாம் என்று அதற்கான முயற்சிகள் இந்தியாவிலும் வெளிநாடுகளிலும் நடந்து வந்துள்ளன. இந்த முயற்சிகள் எவ்வளவு படுதோல்வியைத் தழுவ நேர்ந்தது என்பதை நாம் அறிவோம். இயற்கையைக் கடந்த பொருளைக் காண்பதற்குப் பதிலாக, நாம் எவ்வளவு அதிகமாக உலகப் பொருட்களை ஆராய்ந்தோமோ அந்த அளவிற்கு உலகியலின் வசப்பட்டு வருகிறோம். இந்த உலகத்தை அதிகமாகப் பயன்படுத்தும்போது நம்மிடம் இருக்கின்ற சிறிதளவு ஆன்மீகம்கூட மறைந்து போகிறது. எனவே இயற்கையை ஆராய்வது ஆன்மிகத்தை, இறைஞானத்தை அடைவதற்கான வழி அல்ல. அந்த வழி நிச்சயம் இதயத்தின் மூலம், மனித ஆன்மாவின் மூலம் வர வேண்டும். புற முயற்சி எதுவும், அனைத்திற்கும் அப்பால் உள்ள எல்லையற்ற பொருளைப்பற்றி நமக்கு எதையும் கற்பிக்காது; அக முயற்சிகள் மட்டுமே அதைச் செய்ய முடியும். எனவே ஆன்மாவின் மூலம், மனித ஆன்மாவை ஆராய்ச்சி செய்வதன்மூலம் மட்டுமே நாம் கடவுளை அறிய முடியும்.

மனித ஆன்மாவின் இயல்புபற்றி இந்தியாவில் உள்ள பல்வேறு நெறிகளிடையே கருத்து வேறுபாடுகள் உள்ளன. ஆனால் அவை எல்லாமே ஏற்றுக்கொள்கின்ற சில கருத்துக்கள் உள்ளன. ஆன்மாக்களுக்குத் தோற்றமும் முடிவும் இல்லை, அவை இயல்பாகவே அமரத்துவம் வாய்ந்தவை என்பதை நாம் எல்லோரும் ஏற்றுக்கொள்ளுகிறோம். எல்லா சக்திகளும், ஆசீர்வாதங்களும், தூய்மையும், எங்கும் நிறைந்த தன்மையும், எல்லாம் அறிகின்ற தன்மையும் ஒவ்வோர் ஆன்மாவிலும் உள்ளது–இவை நம் அனைவருக்கும் ஏற்புடைய கருத்துக்கள்தாம். இது நாம் நினைவில் கொள்ளவேண்டிய ஓர் அற்புதமான கருத்து. பலவீனமானது, வஞ்சகமானது, உயர்ந்தது, தாழ்ந்தது போன்ற வேறுபாடுகள் எதுவும் இன்றி ஒவ்வொரு மனிதனிலும் ஒவ்வொரு மிருகத்திலும், எங்கும் நிறைந்த எல்லாம் அறிகின்ற ஒரே ஆன்மா உறைகிறது. வேற்றுமை ஆன்மாவில் இல்லை, அதன் `வெளிப்பாட்டிலேயே உள்ளது. எனக்கும் மிகச்சிறு பிராணிக்கும் உள்ள வேற்றுமை ஆன்மாவின் வெளிப்பாட்டிலேயே. ஆனால் அடிப்படையில் இருவரும் சமமே. அது என் சகோதரன். அதுவும் நானும் ஒரே விதமான ஆன்மாவைப் பெற்றிருக்கிறோம். இந்த மகத்தான உண்மையைத்தான் இந்தியா பிரச்சாரம் செய்தது. சகோதரத்துவம் பற்றிய பேச்சு இந்தியாவைப் பொறுத்தவரை உலகம் தழுவிய சகோதரத்துவமாக உள்ளது; பெரிய விலங்குகளிலிருந்து சிறிய எறும்புகள்வரை எல்லாமே நமது உடம்புகள் என்று கருதும் அளவிற்கு வளர்ந்து உள்ளது. 'இவ்வாறு எல்லா உடம்புகளிலும் ஒரே இறைவன் உறைகிறார் என்பதை அறிகின்ற மகான், எல்லா உடம்புகளையும் அவ்வாறே வழிபடுகிறார்' என்றே நமது சாஸ்திரங்களும் கூறுகின்றன. அதனால் தான் இந்தியாவில் ஏழைகள், விலங்குகள் என்று எல்லோரிடமும் எல்லாவற்றிடமும் கருணை காட்டும் போக்கு உள்ளது. ஆன்மாவைப் பற்றிய நமது அடிப்படைக் கருத்துக்களுள் இது ஒன்றாகும்.

இப்போது கடவுளைப் பற்றிய கருத்திற்கு வருகிறோம். அதற்குமுன் ஆன்மாவைப்பற்றி ஒரு விஷயம்: ஆங்கிலம் படித்தவர்கள் அடிக்கடி அதில் வரும் soul, mind என்ற சொற்களால் குழம்பியிருப்பீர்கள். ஆன்மா வேறு, மனம் வேறு, நாம் மனம் என்று எதைச் சொல்கிறோமோ, அதையே மேலை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நாட்டினர் soul என்கிறார்கள். சுமார் இருபது வருடங்களுக்கு முன் சம்ஸ்கிருதத் தத்துவத்தின் வாயிலாக அறியும்வரை ஆன்மா என்ற ஒன்றைப் பற்றியே மேலை நாடுகள் அறிந்திருக்கவில்லை. உடம்பு இதோ இருக்கிறது, இதைக் கடந்து மனம் இருக்கிறது. என்றாலும் மனம் ஆன்மா அல்ல; மனம் நுண்ணுடல், சூட்சும சரீரம்; மிக நுட்பமான பொருட்களால் ஆக்கப்பட்டது; பிறப்பிலிருந்து இறப்பு என்று தொடர்ந்து செல்கிறது. ஆனால் மனத்தையும் கடந்திருப்பது ஆன்மா, அதாவது மனிதனின் ஆன்மா. ஆன்மா என்னும் வார்த்தையை உயிர், மனம் என்றெல்லாம் எந்த வார்த்தையாலும் மொழிபெயர்க்க முடியாது. எனவே ஆன்மா என்ற சொல்லைப் பயன்படுத்த வேண்டும், அதாவது மேலை நாட்டுத்தத்துவ அறிஞர்கள் பயன்படுத்தும் Self என்ற வார்த்தையால் குறிப்பிட வேண்டும். எந்த வார்த்தையைப் பயன்படுத்தினாலும் சரி, ஆன்மா என்பது மனத்திலிருந்தும் உடம்பிலிருந்தும் வேறானது என்பதைத் தெளிவாகப் புரிந்துகொள்ள வேண்டும். இந்த ஆன்மாதான் நுண்ணுடலாகிய மனத்துடன் சேர்ந்து பிறப்பு-இறப்புச் சுழலில் சென்று கொண்டிருக்கிறது; உரிய காலத்தில் ஞானம் பெற்று, தனது பூரணத்துவத்தை வெளிப்படுத்துகிறது; அதன்பிறகு அதன் பிறப்பு-இறப்புச் சுழற்சி நின்றுவிடுகிறது. பின்னர் நுண்ணுடலாகிய மனத்தை வைத்துக்கொள்ள வேண்டுமா அல்லது அதை முற்றிலுமாக விட்டுவிட்டுச் சுதந்திரமாக நிரந்தரமான முக்திப்பேற்றில் திளைக்க வேண்டுமா என்பது ஆன்மாவின் விருப்பம். ஆன்மாவின் லட்சியம் முக்தி. இது நமது மதத்திற்கு மட்டுமே உரிய ஒரு தனித்தன்மை ஆகும்.

நமக்கும் சொர்க்கங்களும் நரகங்களும் உள்ளன. ஆனால் அவை நிரந்தரமானவை அல்ல, அப்படி இருக்கவும் முடியாது. சொர்க்கங்கள் இருக்குமானால் அவை இந்த உலகத்தின் நகல்களாகவே இருக்கும் – சற்று அதிக அளவில் மகிழ்ச்சியும், அதிகமான போகமும் அங்கே இருக்கலாம். ஆனால் இவை யாவும் ஆன்மாவிற்குக் கேடு விளைவிக்கக் கூடியவை. இத்தகைய சொர்க்கங்கள் பல உண்டு. பலனை எதிர்பார்த்து நற்செயல் புரிபவர்கள், இறந்தபின் ஏதாவது சொர்க்கங்களில் இந்திரன் போன்ற தேவர்களாகப் பிறக்கிறார்கள். தேவர்கள் என்பது சில குறிப்பிட்ட நிலைகளையே குறிக்கிறது. அவர்களும் மனிதர்களாக இருந்தவர்கள்தாம். நல்ல காரியங்கள் செய்ததால் தேவர்களாகி இருக்கிறார்கள். மேலும், இந்திரன் போன்ற பெயர்களும் ஒரே நபரின் பெயர்கள் அல்ல. ஆயிரக்கணக்கான இந்திரர்கள் இருப்பார்கள். நகுஷன் ஒரு பேரரசன் . அவன் இறந்த பின் இந்திரன் ஆனான். அது ஒரு பதவி, ஒரு ஜீவன் உயர்ந்த நிலையை அடைந்ததும் இந்திர பதவியைப் பெறுகிறது. குறிப்பிட்ட காலம்வரை அந்தப் பதவியில் இருக்கிறது. பிறகு இறந்து, மறுபடியும் மனிதனாகப் பிறக்கிறது. ஆனால் மனிதப் பிறவிதான் எல்லாவற்றிலும் மிக உயர்ந்த பிறவி, சொர்க்கத்திலும்கூட, சில தேவர்கள் அங்குள்ள இன்பங்களில் நாட்டம் கொள்ளலாம், அவற்றைத் துறந்து மேலே செல்ல முயலலாம். ஆனால் இந்த உலகத்தில் போலவே அவர்களுள் பெரும்பாலானோரை அங்குள்ள செல்வம், பதவி, போகம் முதலியவை மயக்கி விடுகின்றன. எனவே தங்கள் புண்ணிய பலனை அங்கே அனுபவித்து முடித்து விட்டு மீண்டும் பூமியில் மனிதர்களாகப் பிறக்கிறார்கள். அதனால்தான் இந்த உலகம் கர்மபூமி என்று அழைக்கப்படுகிறது. இந்த உலகத்திலிருந்துதான் நாம் முக்தி பெற முடியும். எனவே சொர்க்கங்களும்கூட நாம் அடையத்தகுந்தவை அல்ல.

"நமது அடிப்படை" - யாழ் சொற்பொழிவு

அப்படியானால் நாம் அடையத் தகுந்தது எது? முக்தி, சுதந்திரம். மேலான சொர்க்கங்களில் கூட நீங்கள் அடிமைகளாக இருக்கிறீர்கள் என்றே நம் சாஸ்திரங்கள் கூறுகின்றன. அங்கு இருபதாயிரம் ஆண்டுகள் அரசர்களாக இருந்தாலும் அதனால் என்ன பயன்? உடம்பு என்ற ஒன்று இருக்கும்வரை, மகிழ்ச்சிக்கு அடிமையாக நீங்கள் இருக்கும்வரை, காலம் உங்களைக் கட்டுப்படுத்தும்வரை, இடம் உங்களைக் கட்டுப்படுத்தும்வரை நீங்கள் அடிமைகளே. எனவே அக மற்றும் புற இயற்கைகளிலிருந்து விடுபடுவதே நமது நோக்கம். இயற்கை உங்கள் காலடியில் விழ வேண்டும். நீங்கள் அதைக் காலால் மிதித்து, அதற்கு அப்பால் சென்று சுதந்திரமாகவும் மகோன்னதமாகவும் இருக்க வேண்டும். அங்கு வாழ்வு இல்லை, மரணம் இல்லை; இன்பம் இல்லை, ஆகையால் துன்பமும் இல்லை. விளக்க முடியாத, அழிக்க முடியாத எல்லாவற்றையும் கடந்த பேரின்பம் அது. இங்கு நாம் மகிழ்ச்சி என்றும் நன்மை என்றும் எவற்றைச் சொல்கிறோமோ, அவை அந்த எல்லையற்ற பேரின்பத்தின் வெறும் துளிகள் மட்டுமே. அளவற்ற அந்தப் பேரின்பத்தை அடைவதுதான் நமது லட்சியம்.

ஆன்மா பால்வேற்றுமை இல்லாதது. அது ஆணா பெண்ணா என்று நம்மால் கூற முடியாது. பால்வேற்றுமை உடலுக்கு மட்டுமே. உடலைப் பொறுத்தவரையில் ஆண், பெண் என்று பேசுவது சரி. ஆன்மாவை அவ்வாறு பாகுபடுத்துவது அறிவீனம். வயது விஷயத்திலும் அவ்வாறுதான். அதற்கு வயதாகவே இல்லை. பழமையான அது எப்போதும் மாறாததாகவே இருக்கிறது. அது எப்படி இந்த வாழ்க்கையில் கட்டுண்டது? இந்தக் கேள்விக்கு நமது சாஸ்திரங்களில் ஒரே ஒரு பதில் இருக்கிறது: அறியாமைதான் இந்தப் பந்தங்களுக்கெல்லாம் காரணம். அறியாமையினால்தாம் நாம் கட்டுண்டோம்; ஞானம் இந்தக் கட்டினை விலக்கி, நம்மை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மறுகரைக்கு அழைத்துச் செல்லும். அந்த ஞானம் எப்படி வரும்? அன்பின் மூலம், பக்தியின் மூலம், கடவுளை வழிபடுவதன் மூலம், எல்லா உயிர்களையும் கடவுளின் கோயிலென்று அன்பு செலுத்துவதன் மூலம். ஏனெனில் எல்லோரிலும் கடவுள் இருக்கிறார். அந்தப் பேரன்பின் மூலம் ஞானம் வரும், அறியாமை மறைந்து போகும், பந்தங்கள் அறுந்து போகும், ஆன்மா சுதந்திரம் பெறும்.

சாஸ்திரங்களில் கடவுளைப்பற்றி இரண்டு கருத்துக்கள் உள்ளன: ஒன்று சகுணம், மற்றொன்று நிர்க்குணம். சகுணக் கடவுளைப் பற்றிய கருத்து என்னவென்றால், அவர் எங்கும் நிறைந்தவர்; எல்லாவற்றையும் படைத்தவர், காப்பவர், அழிப்பவர்; அண்டசராசரங்களின் நிலையான தந்தையும் தாயும் அவரே. நம்மிலிருந்தும் மற்ற உயிர்களிலிருந்தும் அவர் எப்போதும் வேறுபட்டவர். அவரை நெருங்குவதும் அவரில் வாழ்வதும்தான் முக்தி.

நிர்க்குணக் கடவுளைப் பற்றிய கருத்துக்கள் அடுத்து வருகின்றன. சகுணக் கடவுளை விளக்கிய குண நலன்கள் எல்லாம் உண்மைக்குப் புறம்பானவை என்றும், பொருளற்றவை என்றும் இங்கே விலக்கப்படுகின்றன. அவர் உருவம் அற்றவர், எங்கும் நிறைந்தவர். அறிபவர் என்று அவரைக் கூற முடியாது. ஏனென்றால் அறிதல், அறிவு என்பவையெல்லாம் மனித மனத்தில் மட்டுமே நிகழக்கூடியவை. சிந்திப்பவர் என்று அவரைக் கூற முடியாது. ஏனென்றால் சிந்திப்பது பலவீனர்களின் வழி. அவரை ஆராய்பவர் என்று சொல்ல முடியாது. ஏனென்றால் அது பலவீனத்தின் அடையாளம். பண்டைப்பவர் என்று அவரைக் கூற முடியாது. ஏனென்றால் கட்டுண்டு இருப்பவர்கள் தாம் படைப்பவர்கள், அவருக்கு என்ன தளை இருக்கிறது? ஆசைகளை நிறைவேற்றிக் கொள்வதற்காக மட்டுமே ஒருவர் செயல் புரிய வேண்டும், அவருக்கு என்ன ஆசை இருக்கிறது? சில தேவைகளைத் தீர்த்துக் கொள்வதற்காகத்தான் உழைக்க வேண்டும், அவருக்கு என்ன தேவை இருக்கிறது?

வேதங்களில் கடவுளைக் குறிப்பிடுவதற்கு 'அவன்' என்ற சொல் பயன்படுத்தப்படவில்லை. 'அது' என்ற சொல்லே பயன்படுத்தப்பட்டிருக்கிறது. ஏனெனில் 'அவன்' என்ற சொல் கடவுளை ஆண் என்று காட்டும். எனவே பால்வேற்றுமை இல்லாத 'அது' என்னும் சொல் பயன்படுத்தப்படுகிறது;'அது' என்பதே உபதேசிக்கப்படுகிறது. இந்த நெறி அத்வைதம்.

இந்த நிர்க்குணப் பொருளுடன் நமது தொடர்பு என்ன? நாமே அவர். அவரும் நாமும் ஒன்றே. நாம் ஒவ்வொருவரும் குணமற்ற, எல்லா உயிர்களின் அடிப்படையாக இருக்கின்ற அந் ஒன்றின் வெளிப்பாடே. அந்த எல்லையற்ற, நிர்க்குணப் பொருளிலிருந்து நம்மை வேறாக நினைப்பதால் தான் நாம் துன்பப்படுகிறோம். ஆச்சரியகரமான அந்த நிர்க்குணப் பொருளுடன் நாம் ஒன்றுபட்டவர்கள் என்பதை அறிவதில்தான் முக்தி இருக்கிறது. இது நமது சாஸ்திரங்களில் காணப்படுகின்ற கடவுள் பற்றிய சுருக்கமான இரண்டு கருத்துக்களாகும்.

இங்கே சில விஷயங்களைச் சொல்ல வேண்டும். நிர்க்குணக் கடவுள் கருத்தின் மூலம்தான். உங்களால் ஏதாவது நன்னெறிக் கோட்பாட்டினை உருவாக்க முடியும். 'பிறரையும் உங்களைப்போல் நேசியுங்கள். அதாவது மற்ற மனிதர்களையும் உங்களைப் போல் நேசியுங்கள்' என்று ஒவ்வொரு நாட்டிலும் மிகப் பழங்காலத்திலிருந்தே போதிக்கப்பட்டு வருகிறது. இந்தியாவிலோ 'எல்லா உயிர்களையும் உங்களைப்போல் நேசியுங்கள்' என்று உபதேசிக்கப்படுகிறது. மனிதர்கள், மிருகங்கள் என்று நாம் வேறுபாடு பார்ப்பது கிடையாது. ஆனால் நம்மைப்போல் பிறரையும் நேசிப்பது ஏன் நல்லது என்பதற்கான காரணத்தை யாரும் சொல்லவில்லை; யாருக்கும் தெரியவும் இல்லை. அந்தக் காரணம் நிர்க்குணக் கடவுள் கொள்கையில் உள்ளது. இந்த உலகம் முழுவதும் ஒன்று என்பதை நீங்கள் அறியும்போது, அதனைத் தெளிவாகப் புரிந்து கொள்வீர்கள் பிரபஞ்சத்தில் ஓர் ஒருமை உள்ளது, எல்லா உயிர்களும் ஒன்றாக இணைக்கப்பட்டுள்ளன; பிறரைத் துன்புறுத்தும்போது என்னையே நான் துன்புறுத்திக் கொள்கிறேன், யாரிடமாவது அன்பு செலுத்தினால் என்னிடமே நான் அன்பு செலுத்துகிறேன். பிறரை ஏன் துன்புறுத்தக் கூடாது என்பதை இப்போது நாம் அறிந்து கொள்கிறோம். எனவே நன்னெறிக்கான காரணத்தை இந்த நிர்க்குணக் கடவுள் கருத்திலிருந்து மட்டுமே நாம் பெறமுடியும்.

பிறகு இதில் சகுணக் கடவுளின் இடம் பற்றிய கேள்வி எழுகிறது. சகுணக் கடவுள் கருத்திலிருந்து பாய்ந்து வரும் அன்பு வெள்ளத்தை நான் புரிந்து கொள்கிறேன்; பல்வேறு காலங்களின் தேவைகளுக்கு ஏற்ப மனிதனுக்குப் பயன்படக்கூடிய அதன் சக்தியையும் அடிப்படை ஆற்றலையும் நான் முழுக்க முழுக்க ஆமோதிக்கிறேன். ஆனாலும் நம் நாட்டில் நமக்கு இப்போது தேவையானதெல்லாம் சிறிதாவது வலிமையேயன்றி, அளவுக்கு அதிகமான அழுகை அல்ல. எல்லா மூடநம்பிக்கைகளையும் தூர எறிந்துவிட்டு, 'குணங்கள் அற்ற ஒன்று நான்' என்ற ஞானத்தோடு சொந்தக் கால்களிலேயே ஒருவனை நிற்கச்செய்கின்ற இந்த நிர்க்குணக் கடவுள் கொள்கைதான் வலிமையின் எத்தகைய சுரங்கமாக இருக்கிறது! எது என்னைப் பயமுறுத்த முடியும்? நான்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இயற்கையின் நியதிகளைக்கூட பொருட்படுத்த மாட்டேன். மரணம் எனக்கு ஒரு கேலிக்கூத்து ! இங்கே மனிதன் நிரந்தரமான, எல்லையற்ற, மரணமற்ற ஆன்மாவின், தன் சொந்த ஆன்மாவின் பெருமையில் திளைக்கிறான். அந்த ஆன்மாவை எந்த ஆயுதங்களாலும் வெட்ட முடியாது. எந்தச் சூட்டினாலும் உலர்த்த முடியாது, நெருப்பினால் எரிக்க முடியாது, நீரினால் நனைக்க முடியாது. அது எல்லையற்றது, பிறப்பற்றது, இறப்பற்றது, ஆரம்பமும் முடிவும் இல்லாதது. அதன் முன்னிலையில் சூரிய சந்திரர்களும் வான மண்டலங்களும் கூட கடலின் முன் சிறு துளிகளாகத் தோன்றுகின்றன. அதன் பெருமைக்கு முன்னால் (Space) என்பது சூன்யத்தில் கரைகிறது; காலம் என்பது இல்லாமல் ஒடுங்கி விடுகிறது.

பெருமை மிக்க இந்த ஆன்மாவில் நாம் நம்பிக்கை கொள்ள வேண்டும். அதிலிருந்து ஆற்றல் வரும். எதை நினைக்கிறீர்களோ, அதுவாக ஆவீர்கள். நீங்கள் உங்களைப் பலவீனர்கள் என்று நினைத்தால், பலவீனர்கள் ஆவீர்கள் ; வலிமையானவர்களாக நினைத்தால் வலிமை மிக்கவர்கள் ஆவீர்கள்; தூய்மையற்றவர்களாக எண்ணினால் தூய்மையற்றவர் ஆவீர்கள், தூய்மையானவர்களாக எண்ணினால் தூயவர் ஆவீர்கள்.

எனவே நம்மைப் பலவீனர் என்று நினைக்க வேண்டாம்; நாம் வலிமை மிக்கவர்கள், எதையும் செய்யும் ஆற்றல் பெற்றவர்கள், எல்லாம் அறிந்தவர்கள் என்று நினைக்கும்படி இது போதிக்கிறது. நான் அதை இதுவரை வெளிப்படுத்தவில்லை என்றால், அதைப்பற்றிக்கவலை இல்லை; ஆனால் அது என்னில் இருக்கிறது. எல்லா அறிவும் எல்லா ஆற்றலும் எல்லா தூய்மையும் எல்லா சுதந்திரமும் என்னில் இருக்கிறது. அந்த அறிவை ஏன் என்னால் வெளிப்படுத்த முடியவில்லை? ஏனென்றால் அவைமீது எனக்கு நம்பிக்கை இல்லை. நான் அதை நம்பினால் அவை வெளிப்பட்டே தீர வேண்டும்; வெளிப்படவே செய்யும். இதைத்தான் நிர்க்குணக் கடவுள் கொள்கை போதிக்கிறது. உங்கள் குழந்தைகளைச் சிறுவயதிலிருந்தே வலிமை உடையவர்களாக ஆக்குங்கள். அவர்களுக்குப் பலவீனத்தைச் சொல்லித் தராதீர்கள். வெறும் புறச் சடங்குகளைக் கற்றுத் தராதீர்கள். அவர்களை வலிமையானவர்களாக ஆக்குங்கள். அவர்கள் தங்களின் கால்களிலேயே நிற்கட்டும், தைரியமானவர்களாக, எல்லாவற்றையும் வெல்பவர்களாக, எல்லா துன்பங்களையும் ஏற்பவர்களாக, அனைத்திற்கும் மேலாக, ஆன்மாவின் பெருமையை அறிபவர்களாக அவர்களை உருவாக்குங்கள்.

நீங்கள் அதை வேதாந்தத்தில், வேதாந்தத்தில் மட்டுமே பெற முடியும். பிற மதங்களிலுள்ள பக்தி, வழிபாடு போன்ற கருத்துக்களும், அவற்றைவிட மேலான வேறு பலவும் வேதாந்தத்தில் உள்ளது. ஆனால் அதிலுள்ள இந்த ஆன்மாவைப் பற்றிய கருத்துதான் உயிரோட்டம் தரும் சிந்தனையாக, மிகவும் ஆச்சரியமானதாக உள்ளது. அங்கே, அங்கே மட்டும்தான் உலகையே புரட்சிமயமாக்கப் போகின்ற, பௌதீக அறிவையும் ஆன்மீகத்தையும் இணைக்கப் போகின்ற மகத்தான கருத்து இருக்கிறது.

நமது மதத்தின் முக்கியமான கருத்துக்களை, கொள்கைகளை உங்கள் முன் கொண்டு வர நான் முயன்றேன். அப்போது அவற்றின் பயிற்சி மற்றும் செயல்முறைபற்றி சில வார்த்தைகள் சொல்லப்போகிறேன். இந்தியாவில் பல மதப்பிரிவுகள் தோன்றத்தான் செய்யும் என்பதை ஏற்கனவே கண்டோம். அவ்வாறே தோன்றியிருப்பதையும் நாம் காண்கிறோம். அதே நேரத்தில் இவை ஒன்றுக்கொன்று போரிட்டுக்கொள்ளாத விசித்திரத்தையும் பார்க்கிறோம். ஒவ்வொரு வைணவனும் அழியப் போகிறான் என்று சைவர்கள் சொல்வதில்லை. எல்லா சைவர்களும் நாசமாய் போவார்கள் என்று வைணவர்களும் சொல்வதில்லை. 'இது என்பாதை. உங்களுக்கு உங்கள் பாதை இருக்கிறது. முடிவில் நாம் இரண்டு பேரும் சேர்ந்தேயாக வேண்டும்' என்று சைவன் கூறுகிறான். இந்தியாவில் உள்ள எல்லோருக்கும் இது தெரியும். இதுவே இஷ்டதெய்வக் கொள்கை. பல்வேறு விதங்களில் கடவுளை வழிபடுவது மிகப் பழங்காலத்திலேயே ஏற்றுக்கொள்ளப்பட்ட ஒன்று. வெவ்வேறு மனநிலைகளுக்குப் பல்வேறான வழிபாட்டு முறைகள் தேவை என்பதும் ஏற்றுக்கொள்ளப்பட்டதே. நீங்கள் கடவுளிடம் வருகிற வழி எனக்கு ஏற்ற வழியாக இல்லாமல் போகலாம். எல்லோருக்கும் ஒரே வழி என்னும் கொள்கை அழிவைத் தருவதாகும்; அது பொருளற்றது, முற்றிலுமாகத் தவிர்க்கப்பட வேண்டியது.

எல்லோரும் ஒரே மதக் கருத்தை ஏற்றுக்கொண்டு, ஒரே வழியைப் பின் பற்ற நேர்ந்தால் உலகிற்கே அழிவு தான்; எல்லா மதங்களும் எல்லா சிந்தனைகளும் அழிக்கப்பட்டு விடும். வாழ்க்கையின் ஆதாரமே வேறு பாடுதான். அது முழுவதுமாக அழிந்தால் படைப்பே அழிந்துபோகும். வேறுபட்ட சிந்தனைகள் இருந்தால் தான் நாம் வாழ்வோம். வேற்றுமைகள் இருக்கிறதே என்று நாம் சண்டையிடத் தேவையில்லை. உங்கள் வழி உங்களுக்கு நல்லது, எனக்கு அல்ல. ஒருவருக்கு உரிய தனி வழி சம்ஸ்கிருதத்தில் இஷ்ட தெய்வம் என்று அழைக்கப்படுகிறது.

உலகத்தில் உள்ள எந்த மதத்துடனும் நமக்கு விரோதம் இல்லை. நம் ஒவ்வொருவருக்கும் தனி இஷ்ட

"நமது அடிப்படை" - யாழ் சொற்பொழிவு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தெய்வம் உள்ளது. ஆனால் வெளிநாட்டிலிருந்து சிலர் வந்து, 'இது ஒன்று தான் எல்லோருக்கும் வழி' என்று சொல்லி, அதையே பின்பற்றுமாறு நம்மை வற்புறுத்தும்போது நாம் அவர்களுக்கு ஒன்று சொல்ல வேண்டும்டு: 'உங்களைப் பார்த்துச் சிரிப்புத்தான் வருகிறது' கடவுளைக் காண்பதற்கு, மாறுபட்ட ஒரு பாதையைப் பின்பற்றுவதுபோல் தோன்றுவதால் தங்கள் சகோதரர்களை அழிக்க விரும்புகின்ற இவர்களிடம் அன்பைப்பற்றிப் பேசுவது வீண். இவர்கள் காட்டும் அன்பையும் பெரிதாக எடுத்துக் கொள்ளக்கூடாது. தங்கள் வழியிலிருந்து மாறுபட்ட பாதையைப் பின்பற்றுபவர்களைக் கண்டால் பொறுக்க முடியாத இவர்களால் எப்படி அன்பைப் போதிக்க முடியும்? அது அன்பென்றால், பிறகு வெறுப்பு என்பதுதான் என்ன?

உலகத்தில் உள்ள எந்த மதத்துடனும், அது ஏசுவையோ புத்தரையோ முகமதுவையோ அல்லது வேறு எந்த மகானையோ வழிபடச் சொன்னாலும் அவற்றுடன் நமக்குச் சண்டை கிடையாது. இந்து அவர்களைப் பார்த்து, 'வாருங்கள் சகோதரர்களே ! நான் உங்களுக்கு உதவுகிறேன். ஆனால் என் வழியில் நான் செல்ல நீங்களும் அனுமதிக்க வேண்டும். அது என் இஷ்ட தெய்வம். உங்கள் வழி மிகவும் நல்லது தான். அதில் சந்தேகமில்லை. ஆனால் எனக்கு அது அபாயமானதாக இருக்கலாம். எனக்கு எந்த உணவு நல்லது என்பதை என் அனுபவம்தான் எனக்குச் சொல்ல முடியும். ஒரு பெரிய டாக்டர் பட்டாளமும் அதைக் கூற முடியாது. எனவே நான் என் அனுபவத்திலிருந்தே அறிந்து கொள்கிறேன்' என்கிறான். அதுதான் லட்சியம்; அதுவே இஷ்டதெய்வம். எனவேதான் கோயிலோ சின்னமோ அல்லது ஒரு திருவுருவோ, உன்னுள் இருக்கும் தெய்வீகத்தை நீ உணர்ந்து கொள்ள உதவுமானால், நீங்கள் அதனை வைத்துக் கொள்ளுங்கள் என்று நாம் சொல்கிறோம். நீங்கள் விரும்பினால் இருநூறு விக்கிரகங்களை வைத்துக்கொள்ளுங்கள். சில குறிப்பிட்ட விக்கிரகங்களும் வழிபாட்டு முறைகளும் நீங்கள் தெய்வீகத்தை உணர உதவி செய்யுமானால், அந்த வழியில் விரைந்து செல்லக் கடவுள் உங்களுக்கு வலிமை தரட்டும். உங்களைக் கடவுளுக்கு அருகே கொண்டு செல்லுமானால், எந்த வடிவத்தையும் எந்தக் கோயிலையும் எந்த விதமான சடங்குகளையும் தாராளமாகப் பின்பற்றுங்கள். ஆனால் அது குறித்துச் சண்டையிடாதீர்கள். சண்டையிடத் தொடங்குகின்ற அந்தக் கணமே நீங்கள் கடவுளை நோக்கிச் செல்லவில்லை; மிருக நிலையை நோக்கிப் பின்னால் செல்கிறீர்கள்.

நமது மதத்தில் உள்ள சில கருத்துக்கள் இவை. இது எல்லோரையும் தன்னுள் அடக்கிக் கொள்கிறது. யாரையும் விலக்குவதில்லை. ஜாதிகளும் சமுதாய அமைப்புக்களும் மதத்துடன் தொடர்புள்ளதுபோல் தோன்றினாலும், அவை தொடர்பு உடையவை அல்ல. ஒரு நாடு என்ற வகையில் நம்மை இணைத்துக் காப்பதற்கு இந்தச் சமுதாய அமைப்புக்கள் தேவை; இந்தத் தேவை இல்லாமல் போகும் போது இவை தாமாகவே அழிந்துவிடும். ஆனால் எனக்கு வயது ஏறஏற, காலங்காலமாகப் போற்றப்பட்டு வந்த இந்த அமைப்புக்கள நன்மைகளை ஆழ்ந்து சிந்திக்கத் தோன்றுகிறது. இவற்றுள் பலவற்றைப் பயனற்றவை என்றும் நன்மையில்லாதவை என்றும் ஒரு காலத்தில் நினைத்தேன். ஆனால் நான் வளரவளர அவற்றுள் ஒன்றைப் பழிப்பதற்குக்கூட தைரியம் இல்லாதவனாக இருப்பதை உணர்கிறேன். ஏனெனில் அவை ஒவ்வொன்றும் பல நூற்றாண்டு கால அனுபவத்தின் திரட்சிகளாக உள்ளன.

நேற்றுப் பிறந்து நாளைமறுநாள் சாவதற்கு விதியால் நிர்ணயிக்கப்பட்ட ஒரு குழந்தை என்னிடம் வந்து, என் திட்டங்கள் அனைத்தையும் மாற்றச் சொல்கிறது. அந்தக் குழந்தையின் அறிவுரையைக் கேட்டு, அதன் கருத்திற்கு ஏற்ப என் திட்டங்களை நான் மாற்றிக்கொண்டால், நான்தான் முட்டாளே தவிர வேறு யாரும் அல்ல. பல்வேறு நாடுகளிலிருந்து நமக்கு வருகின்ற அறிவுரைகள் எல்லாம் இப்படிப்பட்டவைதாம். தங்களை அறிவாளிகள் என்று காட்டிக்கொண்டிருக்கின்ற இந்த முட்டாள்களுக்குச் சொல்லுங்கள்: 'முதலில் ஒரு நிலையான சமுதாயத்தை உனக்கென்று நீ ஏற்படுத்து. அதன்பிறகு நான் உன் உபதேசத்தை கேட்கிறேன். இரண்டு நாட்களுக்கு உங்களால் ஒரே கருத்தை முற்றிலுமாகக் கைக்கொள்ள முடியவில்லை. அதற்குள் அடித்துக்கொண்டு அதை விட்டுவிடுகிறீர்கள். மழைக் காலத்தில் தோன்றும் ஈசல்கள் போல் தோன்றி, அவற்றைப் போலவே ஐந்து நிமிடங்களுக்குள் செத்துப் போகிறீர்கள். நீர்க்குமிழிகளைப் போல் தோன்றுகிறீர்கள். அவற்றைப் போலவே உடைந்து அழிகிறீர்கள். முதலில் எங்களுடையதுபோல் நிலையான ஒரு சமுதாயத்தை அமையுங்கள். நூற்றாண்டுகள் பலவாகியும் ஆற்றல் குன்றாமல் நிலைத்திருக்கின்ற சட்டங்களையும் சமுதாய அமைப்புகளையும் உண்டாக்குங்கள். அதன் பிறகுதான் உங்களோடு இதைப்பற்றிப் பேசுவதற்கான நேரம் வரும். அதுவரை, என் நண்பர்களே, நீங்கள் வெறும் குழந்தைகளே.'

மதத்தைப்பற்றி நான் சொல்ல வேண்டியவற்றைச் சொல்லிவிட்டேன். இன்றைக்கு மிகவும் தேவையான ஒன்றை உங்களுக்கு நினைவுபடுத்தி விட்டு என் பேச்சை முடித்துக் கொள்கிறேன். மகாபாரதம் எழுதிய மகத்தான ஆசாரியராகிய வியாசருக்குப் புகழ் எல்லாம் செல்வதாக ! அவர் அதில், இந்தக்

"நமது அடிப்படை" - யாழ் சொற்பொழிவு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கலியுகத்தில் செய்ய வேண்டியது ஒரே ஒரு மகத்தான காரியம்தான் என்கிறார். மற்ற யுகங்களில் செய்யப்பட்ட கடினமான தவங்களும் யோகங்களும் இந்த யுகத்தில் பலன் தராது. இந்த யுகத்திற்குத் தேவையானது எதுவென்றால் கொடுப்பது, பிறருக்கு உதவி செய்வது, அதாவது தானம். தானம் என்பதன் பொருள் என்ன? தானங்களிலேயே மிகச் சிறந்தது ஆன்மிக ஞானத்தைத் தருவதாகும். அதற்கு அடுத்தது, பௌதீக அறிவைத் தருவது. அதற்கு அடுத்தது துன்பத்தில் காப்பது, கடைசியாக வருவது உணவும் நீரும் தருவது.

ஆன்மிக ஞானத்தை அளிப்பவன், பல பிறவிகள் எடுப்பதிலிருந்து உயிரைக்காப்பாற்றுகிறான். பௌதீக அறிவைத் தருபவன் ஆன்மிக ஞானத்தை நோக்கிச் செல்ல ஒருவனுடைய கண்களைத் திறந்து விடுகிறான். இதற்குக் கீழே தான் மற்ற தானங்களின் மதிப்பு வருகிறது. உயிரைக் காப்பாற்றுவது கூடக் கீழே தான் வருகிறது. ஆன்மிக ஞானத்தை அளிக்கின்ற செயலைவிடப் பிற செயல்கள் மதிப்புக் குறைந்தவை என்பதை அறிந்து கொள்வது அவசியம். மிகவுயர்ந்த, மகத்தான உதவி ஆன்மிக ஞானத்தை அளிப்பதுதான். ஆன்மிகத்தின் நிரந்தர நீரூற்று நம் சாஸ்திரங்களில் உள்ளது. துறவின் பெரும் பூமியான இந்த நாட்டில் அல்லாமல், செயல்முறை ஆன்மிகத்தின் இத்தகைய உன்னத எடுத்துக்காட்டுகளை உலக வேறெங்கும் காண முடியாது. எனக்கு ஏதோ சிறிது உலகில் அனுபவம் உண்டு. என்னை நம்புங்கள். மதத்தைப்பற்றி பிற நாடுகளில் அதிகமாகப் பேசப்படுகிறது. ஆனால் அதைத்தன் அன்றாட வாழ்வில் செயல்படுத்தியவன் இங்கே, இங்கே மட்டுமே இருக்கிறான்.

வெறும் பேச்சு மதம் ஆகாது. கிளிகள் பேசலாம், இப்போதெல்லாம் எந்திரங்கள் பேசுகின்றன. ஆனால் துறவு வாழ்வை, ஆன்மிக வாழ்வை, துன்பங்களை ஏற்கும் வாழ்வை, எல்லையற்ற அன்பு மயமான வாழ்வை எனக்கு நீங்கள் காட்டுங்கள் பார்க்கலாம். இத்தகைய வாழ்க்கைதான் ஓர் ஆன்மிகவாதியை அடையாளம் காட்டும். இத்தகைய கருத்துக்களும் அவற்றை வாழ்ந்து காட்டிய உன்னதமான வரலாறுகளும் நம் நாட்டில் உள்ளன. யோகியரின் மூளைகளிலும் இதயங்களிலும் செறிந்திருக்கின்ற இந்தக் கருவூலங்களை வெளியே கொண்டு வந்து ஏழை, பணக்காரர், உயர்ந்தவர், தாழ்ந்தவர் என்று இந்தியாவில் மட்டுமல்ல, உலகத்தில் உள்ள ஒவ்வொருவரின் சொத்தாகும்படிச் செய்யாமல் இருப்பது ஆழ்ந்த பரிதாபத்திற்குரியது. நாம் செய்ய வேண்டிய மகத்தான கடமைகளுள் இது ஒன்று. பிறருக்கு அதிகமாக உதவுகின்ற அளவிற்கு உங்களுக்கே நீங்கள் உதவி செய்து கொள்வதைக் காண்பீர்கள். நீங்கள் உங்கள் மதத்தை நேசிப்பது உண்மையானால், உங்கள் நாட்டை நேசிப்பது உண்மையானால் எழுந்து நின்று, உங்கள் சாஸ்திரங்களில் முடங்கிக்கிடக்கின்ற கருவூலங்களை வெளியே கொண்டு வந்து, அதற்கு உரிமையான வாரிசுகளிடம் தர வேண்டும் என்ற ஒரே கருத்துடன் முனைந்து செயலாற்றுங்கள். இது தவிர்க்க முடியாத கடமையாகும்.

இவை அனைத்திற்கும் மேலாக ஒன்று அவசியம். காலங்காலமாக நாம் பயங்கரமான பொறாமையால் இறுகிப் போயிருக்கிறோம்; ஒருவருக்கொருவர் பொறாமைப்பட்டபடியே இருக்கிறோம். இவனுக்கு ஏன் முன்னேற்றம். எனக்கு ஏன் கூடாது? கடவுளை வழிபடும்போதுகூட நமக்கு முக்கியத்துவம் தரப்பட வேண்டும் என்று எண்ணுகின்ற அளவிற்கு நாம் அடிமை நிலைக்குத் தாழ்ந்துவிட்டோம். இது தவிர்க்கப்பட வேண்டும். தற்போது இந்தியாவில் கொடிய பாவம் என்று ஒன்று உண்டென்றால் அது இந்த அடிமை மனப்பான்மைதான். கட்டளை இடவே எல்லோரும் விரும்புகிறார்கள். அடிபணிய யாரும் விரும்பவில்லை. இது பழங்காலத்தில் நம்மிடையே இருந்த ஆச்சரியமான பிரம்மச்சரிய முறை அழிந்து போனதால் ஏற்பட்ட விளைவாகும். முதலில் பணியக் கற்றுக் கொள்ளுங்கள், ஆணையிடுகின்ற தகுதி தானே வரும். எப்போதும் முதலில் வேலைக்காரனாக இருக்கக் கற்றுக் கொள்ளுங்கள், எஜமான் ஆவதற்குரிய தகுதி பெறுவீர்கள். இந்தப் பொறாமையை நீக்குங்கள், செய்து முடிக்க வேண்டிய மகத்தான காரியங்களைச் செய்வீர்கள். நமது முன்னோர்கள் அற்புதமான காரியங்களைச் செய்தார்கள். அவர்கள் செய்தவற்றைப் பெருமையோடும் மதிப்போடும் நாம் திரும்பிப் பார்க்கிறோம். நாமும் மகத்தான செயல்களைச் செய்யப் போகிறோம். நமக்குப் பின்வருபவர்கள் மகிழ்ச்சியோடும் பெருமையோடும் நம் செயல்களைத் தங்கள் முன்னோர்களின் காரியமாகப் போற்றட்டும்.

நம்முன்னோர்கள் எவ்வளவு தான் மகத்தானவர்களாகவும் பெருமைக்கு உரியவர்களாகவும் இருந்தாலும் அவர்களுடைய செயல்களை மங்கச் செய்யும் வகையில் நாம் ஒவ்வொருவரும் அதிகச் செயல்களை இறையருளால் செய்வோமாக !

"நமது அடிப்படை" - யாழ் சொற்பொழிவு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# விவேகானந்தன்

இதழ் 4

# எழுச்சியும் மலர்ச்சியும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



கனகசபை விவேகானந்தன்
கௌரவ பொருளாளர், விவேகானந்த சபை.

# நூற்றாண்டுப் பூர்த்தியை நெருங்கும்
# விவேகானந்த சபை, கொழும்பு
## 1902 முதல் 1998 வரை
## இடம் பெற்ற முக்கிய நிகழ்வுகள்

**1902**

**Vivekananda Society Founded in 13th July 1902**

**First AGM - 15th July 1903 and membership total 35**

* **Inauguration of Library took place on 19th Dec 1903 in the presence of a very large Concourse of people**

**The Society**

* Persons who recognise the Authority of the Vedas are elligible to become member of society. The enterance fee is only one rupee and monthly subscription fifty cents payble before 10th of every month.

**1905**

The Secretarit of the Society
63 Wolfendhal street colombo.

**1911**

1st March 1911 shifted to 45 Wolfendhal street owing to the failure of water supply.

* Swamis Birthday celebrated on 5/2/1911 on a grand scale at the Ginthupitiya TheatreHall.

* Coronation celebration His majesty the king was celebrated on 22/06/1911. Rice was doled out to the large number of the poor and cloth was also distributed to this in need . A beautifully illuminated address to his majesty was presented through His excellency the Governor in a silver casket.

**1912** - 3rd place of society shifted to. Dam street Colombo in January **1912.**

**1918** - 56th Birthday of Swami Vivekananda 15th January 1918 Celebrated at the Poly Technic Hall kindly lent by Mr. Lawrie Muttu at Krishna

**1919**

*Hon. Minister of Posts & Telecommunications*

The teachings of Swami Vivekananda are relevant to us in Sri Lanka today more than ever before, "said Posts and Telecommunication Minister Mangala Samaraweera at a ceremony to mark the centenary of Swami Vivekananda's visit to Sri Lanka, held at the Vivekananda Society, Vivekananda Hill, Colombo 13 yesterday.

The program also included the unveiling of a statue of Swami Vivekananda and the release of a commemorative Stamp.

The Minister said, "I am indeed greatly privileged to have been invited to participate in the centenary celebrations of Swami Vivekananda's historic visit to Sri Lanka in 1897. It is even a greater privilege to have been able to issue a stamp to commemorate this historic visit.

Swami Vivekananda was one of the finest spiritual leaders from the sub-continent of India which had produced some of the greatest sages, philosophers and religious leaders the world has ever seen. Swami Vivekananda preached the eternal truth of the Vedanta, the principles of unity of existence, harmony of all religious faiths and the universal brotherhood of mankind transcending the narrow boundaries of caste, creed. religion and nationality. His philosophy of oneness opened a new horizon in spiritual thought in the world and his call for universal brotherhood was triumphantly received even by the western world when he attended the World Parliament of Religions in Chicago.

Swami Vivekananda after his triumphant success at this forum visited Sri Lanka, then known as Ceylon, exactly 100 years ago this very day. A rousing welcome awaited the Swami and historians feel that there is no record of another personality receiving such a hearty welcome before. What was remarkable about the rousing welcome was that the thousands who filled the streets of Colombo to welcome this great saint were not only Hindus, many were Buddhist and some were Christians and Muslims.

During his short stay if 11 days he travelled throughout the country from Colombo to Kandy and Jaffna. His address under the Sacred Bo tree of Anuradhapura was attended by Hindus and Buddhists who came arm in arm. His call for brotherhood reverborated throughout the island. Today the teachings of Swami Vivekananda are relevant to us in Sri Lanka more than ever before.

Nearly five decades of racial intolerance, bigotry and ethnocentricity has eaten into the very core of our society creating disunity, suspicion and animosity among the communities. The very soul of our nation is at stake and its is still not too late in the day to be inspired by the teaching of Swami Vivekananda as we seek to overcome the tragedy of our beautiful country."

The Minister said, As a government committed to restoring racial harmony in this country and having the courage or our convictions to do so Swami Vivekananda's philosophy of oneness is an inspirational force as we strive to build a new Sri Lanka based on the ideals of Peace, and for bearance, tolerance and sympathy and universal brotherhood of all mankind.

"The greatest tribute to this great spiritual leader would be for us to unite in friendship and goodwill and love and understanding to build a new Sri Lanka where all an live in dignity, and honour where peace and prosperity will reign for ever. The Age of Aquarius may not be far away after all," the minister said in conclusion.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




விபரங்கள் மலரின் மற்றைய கட்டுரைகளில்இடம் பெற்றுள்ளன.

★ ஸ்ரீராம கிருஷ்ண சாரதா சேவாச்சிரமம், பருத்தித்துறை. சுவாமி விவேகானந்தர் இலங்கை விஜய நூற்றாண்டு விழா சிறப்பு மலர் யாழ் உதயன் 24.01.97 அன்று பத்திரிகையில் இரண்டு முழுப்பக்க வெளியீடாக மலர்ந்தது.

★ பருத்தித்துறை இந்து இளைஞர் சங்கம் நடத்திய எழுச்சி விழா.

இடம் : புலோலி பசுபதீஸ்வரர் ஆலய வெளி மண்டபம்
காலம் : 24.01.97 (வெள்ளிக்கிழமை)
நேரம் : பி. ப. 4.15 மணி

### நிகழ்ச்சிகள்

திருமுறை பாராயணம்
சொற்பொழிவுகள் :
செல்வி. அ. கனகரத்தினம் *(அதிபர் வடமராச்சி இந்து மகளிர் கல்லூரி)*
திரு. ஆ. சிவநாதன் *(ஆசிரியர், ஹாட்லிக் கல்லூரி)*

பி. ப. 3.30 மணிக்கு ஆரம்பித்து சுவாமி விவேகானந்தரின் திருவுருவப்படம் மருதடி ஞானவைரவர் கோயிலிருந்து மங்கள இசை, பஜனையுடன் ஊர்வலமாக விழா மண்டபத்துக்கு எடுத்துச் செல்லப்பட்டது. வடமராச்சியில் உள்ள அனைத்துப் பாடசாலை மாணவர்களும் ஊர்வலத்துக்குக்கும் விழாவுக்கும் அழைக்கப்பட்டிருந்தனர்.

### ★ விவேகானந்தர் பாலர் பாடசாலை

பருத்தித்துறை இந்து இளைஞர் சங்கமும் றோட்டரிக் கழகமும்இணைந்து விவேகானந்தர் பாலர் பாடசாலையை 24.01.97 அன்று பருத்தித்துறை இரண்டாம் குறுக்குத் தெருவில் அங்குரார்ப்பணம் செய்தார்கள்.

### ★ சுவாமிஜியின் யாழ் விஜயத்தின் நூற்றாண்டு நினைவு பொதுக் கூட்டம்.

இடம் : வடமராச்சி இந்து மகளிர் கல்லூரி
காலம் : 25.01.97 (சனிக்கிழமை)
நேரம் : பி. ப. 4 மணி

கீழ்க்காணும் விபரங்கள் பருத்தித்துறையிலும், பருத்தித்துறை ஸ்ரீராமகிருஷ்ண சாரதா சேவாச்சிரமத்தாரால் யாழ்ப்பாணத்தின் இதர ஊர்களிலும் நடாத்தப்பட்ட சுவாமி விவேகானந்தர் இலங்கை விஜய நூற்றாண்டு நினைவு விழாக்களின் தொகுப்பாகும். இவ் விபரங்கள் கொழும்பு இராமகிருஷ்ண மிஷன் தலைவர் ஸ்ரீமத் ஆத்மகனானந்தாஜி அவர்களின் கோவையிலிருந்தும் யாழ்./உதயன் பத்திரிகைச் செய்திக் குறிப்புகளிலிருந்தும் தொகுக்கப்பட்டன.

சுவாமி விவேகானந்தர் 1897இல் இலங்கை வந்த போது பருத்தித்துறை நகருக்கு விஜயம் செய்யவில்லை என்பது சகலரும் அறிந்த விடயமே. ஆயினும் அக்குறையை நிவர்த்தி செய்யும் வண்ணம் பருத்தித்துறை ஸ்ரீ சாரதா சேவாச்சிரமத்தாருடன் இணைந்து பருத்தித்துறை நகரத்திலுள்ள பாடசாலைகளும் நிறுவனங்களும் மக்களும் பாடசாலைகள் ஆலயங்கள் போன்றவற்றிக்கு ஊர்வலமாக இசை பஜனையுடன் எடுத்துச் சென்றதுமன்றி பின் தங்கிய மாணவர்க்கு புலமைப்பரிசில்கள் வழங்கியும், வீட்டுத்திட்டம், பாலர் பாடசாலை போன்றவற்றை சுவாமிஜி பெயரில் அங்குரார்ப்பணம் செய்தும் பொதுக் கூட்டங்கள் நடத்தி சுவாமிஜியின் கருத்துக்களை புதிய தலைமுறைக்கு அறிவுறுத்தியும் பிரமாண்டமான முறையில் இந் நூற்றாண்டைக் கொண்டாடினார்கள். இவ் விழாக்களின் மூலம் நாட்டின் தலைநகரில் நடைபெற்ற கொண்டாங்களுக்கு ஒரு படி மேலே சென்று யாழ் மாவட்டக் கொண்டாட்டங்கள் அமைந்திருந்தை நாம் காணக் கூடியதாயுள்ளது. அவர்கள் அன்றாடம் வசிக்கும் துன்பச் சூழலின் மத்தியிலும் சுவாமிஜியின் நூற்றாண்டைக் கொண்டாடிய யாழ் மக்களைக் கௌரவிக்கு முகமாக விழாக்களின் முழுவிபரங்களும் கீழே தரப்பட்டுள்ளன. யாழ் மாவட்டத்தின் இதர பகுதிகளில் நடைபெற்ற நிகழ்வுகளின்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தலைவர் : சுவாமி சித்ரூபானந்தா
வரவேற்புரை : திரு. ஏ. என். எஸ். திருச் செல்வம்
*(பிரதம நூலகர், பரு. பிரதேச சபை, புலோலி பொது நூலகம்)*
பிரதம விருந்தினர் : செல்வி அன்னபாக்கியம் கனகரத்தினம்
*(அதிபர், வட இந்து மகளிர் கல்லூரி)*

சொற்பொழிவுகள்
பக்தி இசைவிருந்து

- ❖ சுவாமிஜியின் திருவுருவப்படம் பி. ப. 3.30 மணிக்கு புற்றளை சித்தி விநாயகர் ஆலயத்திலிருந்து மங்கள இசை, பஜனையுடன் ஊர்வலமாக விழா மண்டபத்திற்கு எடுத்துச் செல்லப்பட்டது.
- ❖ சுவாமிஜி நினைவாக சேவாச்சிரமம் நிறைவேற்ற திட்டமிடப்பட்டிருந்த இதர பணிகள்....
- ❖ பின் தங்கிய மாணவர்களுக்குப் புலமைப்பரிசில்
- ❖ துணுக் காயில் 'விவேகானந்தபுரம்' வீட்டுத்திட்டம். முதற் கட்டமாக 100 வீடுகள் அமைத்தல்.
- ❖ குடா நாட்டுக் கல்லூரிகளில் சுவாமிஜியின் சிந்தனைகளை கருத்தரங்குகள் மூலம் பரப்புதல்.
- ❖ சுவாமி விவேகானந்தர் பெயரால் நூல் நிலையம் ஒன்றை அமைத்தல்.
- ❖ இவ்வாண்டு சேவாச்சிரம கோயில் கும்பாபிஷேகம் சுவாமி விவேகானந்தருக்கு அர்ப்பணிக்கப்படும்.
- ❖ செம்பியன் பற்று மந்துவில் போன்ற அபிவிருத்தி குன்றிய இடங்களில் பணி செய்தல்.
- ❖ சுவாமிஜியின் யாழ் விஜய நூற்றாண்டை ஒட்டிய சமய சமூகப்பணிகளை மேலும் விஸ்தரித்தல்

## சேவாச்சிரமத்தின் ஏற்பாட்டில் இடம்பெற்ற இதர நிகழ்வுகள் :

❖ நூற்றாண்டு ஞாபக முத்திரை வெளியீடு. 3.2.97 (திங்கட்கிழமை) சுவாமி விவேகானந்தரின் இலங்கை விஜயத்தின் நூற்றாண்டு நிறைவு ஞாபகார்த்த முத்திரை யாழ். இந்துக்கல்லூரியில் வைத்து வெளியிடப்பட்டது. யாழ் இந்துக்கல்லூரி பதில் அதிபர் திரு. நா. உலகநாதன் தலைமையில் இந்த முத்திரை வெளியீட்டு வைபவம் இடம் பெற்றது. முதல் முத்திரையிடப்பட்ட உறையை யாழ். பிரதம தபாலதிபர் திரு. த. கோடீஸ்வரன் பருத்தித்துறை ஸ்ரீ இராம கிருஷ்ண சாரதா சேவாச்சிரம முதல்வர் சுவாமி சித்ரூபானந்தாவிடம் வழங்கினார். இவ்வைபவத்தில் தபால் அதிகாரிகள் உட்பட பலர் கலந்து கொண்டு உரையாற்றினர்.

❖ சுவாமிஜியின் நூற்றாண்டு விழா 03.03.97 அன்று மானிப்பாய் இந்து மகளிர் கல்லூரியில் அதிபர் திருமதி. வ. பசுபதிபிள்ளை அவர்கள் தலைமையில் இடம் பெற்றது. சுவாமி விவேகானந்தரின் அபிலாசையாது ? என்ற தலைப்பில் சிறப்புரை இடம் பெற்றது.

❖ நூற்றாண்டு விழா நிகழ்ச்சிகள் 07.02.97 அன்று நீர்வேலி அத்தியார் இந்துக் கல்லூரியில் அதிபர் திரு. சோமா விஸ்வலிங்கம் அவர்கள் தலைமையில் நடைபெற்றது.

❖ நூற்றாண்டு விழா நிகழ்ச்சிகள் 10.02.97 அன்று கோப்பாய் கிறிஸ்தவக் கல்லூரியில் அதிபர் திரு. ந. சிவகடாட்சம் அவர்கள் தலைமையில் நடைபெற்றது. கல்லூரி பழைய மாணவர் சங்க ஆதரவில் 10.02.97 இலிருந்து 14.02.97 வரை நூலகவாரம் கல்லூரி கலையரங்க மண்டபத்தில் காலையில் கொண்டாடப்பட்டது. ஐந்து நாள் நிகழ்ச்சிகளிலும் பிரதம விருந்தினர்களாக முறையே சுவாமி சித்ரூபானந்தா, சிவத் திரு. சு. சுந்தரராசக் குருக்கள் (பழைய மாணவர்), திரு. தி. சோமசேகரம் (அதிபர், யா/கோப்பாய் தெற்கு கந்தவேள் த. க. பாடசாலை), திரு. எஸ். குமாரசாமி (தலைவர், நீர்வேலி ப. நோ. கூ. ச.) வைத்திய கலாநிதி வை. தியாகராஜா (பழைய மாணவர்) ஆகியோரும், சிறப்பு விருந்தினர்களாக திரு. பொ. விக்கினேஸ்வரலிங்கம் (பிரதம எழுதுவினைஞர்), திரு. வி. சோமசுந்தரம் (முன்னாள் உப அதிபர்), திரு. எஸ். பரமானந்தன், திரு. க. விநாயகலிங்கம் (அதிபர், கோப்பாய் வடக்கு றோ. க. பா), திரு. எஸ். கே. தங்கவடிவேல் (ப. ம. ச. செயலாளர், விலைமதிப்புப் பரிசோதகர்) ஆகியோரும் கலந்து சிறப்பித்தனர்.

## சாரதா சேவாச்சிரம ஆதரவில் சுவாமிஜி இலங்கை விஜய நூற்றாண்டு விழா.

திகதி : 12.01.97 ஞாயிறு காலை 9.00 மணி முதல் - பி. ப. 2.00 மணிவரை
இடம் : யாழ் பல்கலைக் கழக கைலாசபதி அரங்கு
கருத்தரங்கு : சுவாமி விவேகானந்தரின் சிந்தனைகள்
*யாழ். பல்கலைக் கழக சிரேஷ்ட விரிவுரையாளர்கள் - பங்குபற்றுகின்றனர்.*
மலர் வெளியீடு : யாழ்.பல்கலைக் கழக பதில் துணைவேந்தர் பேராசிரியர் பொ. பாலசுந்தரம் பிள்ளை அவர்கள் விசேடமலரை வெளியிட்டு வைத்தார்கள்.
புலமைப் பரிசில் : தூய அன்னை ஸ்ரீசாரதா தேவி புலமைப் பரிசில் செல்வி. த. நந்தினி அவர்களுக்கு வழங்கப்பட்டது.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

❖ நாள் 28.02.97 வெள்ளிக்கிழமை.

ஹிந்து கவுன்சில் தலைவர் திரு. யோகேந்திரா துரைசாமி அவர்கள் அன்பளிப்புச் செய்த கதிரை (wheel chair) புலோலி ஆதார வைத்தியசாலைக்கு அன்பளிப்பு.
இடம் : இலங்கை வங்கி, பருத்தித்துறை.
காலம் : காலை 8.00 மணி

யாழ்/ஞானாசிரியார் கல்லூரி, கரவெட்டியில் கல்லூரி அதிபர் திரு. வே. சிவசிதம்பரம் அவர்கள் தலைமையில் விவேகானந்தர் விழா இடம் பெற்றது.

01.03.97 சனிக்கிழமையன்று சாவகச்சேரி மகளிர் கல்லூரியில் விவேகானந்தர் விழா அதிபர் செல்வி. கி. வீரசிங்கம் தலைமையில் காலை 9.30 (பழைய நேரம்) மணிக்கு ஆரம்பமாகி நடைபெற்றது.

சிறப்புச் சொற்பொழிவு :
திரு. ஆறு. திருமுருகன் B. A. (ஆசிரியர், ஸ்கந்தவரோதயக் கல்லூரி
விடயம் : ''சுவாமி விவேகானந்தரின் வாழ்க்கை நெறி''

தென்மராட்சியில் முதன் முதலாகக் கொண்டாடப்பட்டதாகக் குறிப்பிடப்படும் இவ்விழா மாணவிகளின் இறைவணக்கத்துடன் ஆரம்பமாகியது. அதிபரின் தலைமையுரையைத் தொடர்ந்து பிரதம விருந்தினரும் விழா ஏற்பாட்டிற்கு உதவியவருமான சுவாமி சித்ரூபானந்தா அவர்களின் சிறப்புச் சொற்பொழிவு இடம் பெற்றது. இக்கல்லூரியில் ஆண்டு ஐந்து புலமைப் பரிசில் பரீட்சையில் சித்தியெய்திய மாணவர்க்கு சுவாமிகளால் பரிசுகள் வழங்கப்பட்டன. சுவாமி விவேகானந்தர் பற்றிய இனிய பாடல் ஒன்று இசைக்கப்பட்டது. பின்னர் திரு. ஆறு திருமுருகன் அவர்களின் சிறப்புச் சொற்பொழிவு இடம் பெற்றது. அதனைத் தொடர்ந்து மாணவி து. துர்க்காசினியால் 'சுவாமி விவேகானந்தர்' என்ற தலைப்பில் இனிய கவிதையொன்று வாசிக்கப்பட்டது. இறுதியாகக் கல்லூரி ஆசிரியர் திருமதி. ப. தியாகராசா நன்றியுரை வழங்கினார்.

**அகில இலங்கை இந்துமா மன்றமும்**
**யாழ். மத்திய கல்லூரி இந்துமா மன்றமும்**
**இணைந்து நடாத்திய**
**சுவாமி விவேகானந்தரின் இலங்கை வருகையின்**

## நூற்றாண்டு நினைவு தினம்

காலம் : 98.01.09 வெள்ளிக்கிழமை
நேரம் : காலை 10.00 மணி
இடம் : யாழ் மத்திய கல்லூரி தம்பர் மண்டபம்
தலைமை : திரு. த. மனோகரன்
*(துணைச் செயலாளர், அகில இலங்கை இந்துமாமன்றம்)*

### நிகழ்ச்சிகள்

மங்கள விளக்கேற்றல்
இறைவணக்கம்
தமிழ்த்தாய் வாழ்த்து
ஆரம்ப உரை :
*திரு. க. இராஜதுரை*
*(இந்துமாமன்ற காப்பாளர், அதிபர் யா. மத்திய கல்லூரி)*

சிறப்புச் சொற்பொழிவு:
'விவேகானந்தரின் கல்விச் சிந்தனைகள்'
*சுவாமி சித்ரூபானந்தா*

'விவேகானந்தரும் சமத்துவமும்'
*ஜனாப் முகமட் கனி பசீர்*
*(யாழ். மாநகர முன்னாள் துணை மேயர்)*

இசை வேளை
*திரு. தி. கருணாகரன்* (இசை ஆசிரியர்)

'எங்கும் நிறைந்த இறைவா' நூல் அறிமுகம்
நன்றியுரை
ஞான. திருக்கேதீஸ்வரன்
*(யாழ். மத்திய கல்லூரி இந்துமாமன்ற பொறுப்பாசிரியர்)*



பரு. துறையில் விவேகானந்தர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சுவாமி விவேகானந்தரின் நூற்றாண்டு விழாவை முன்னிட்டு திருநெல்வேலி இராமகிருஷ்ணாலயத்தினால் நடாத்தப்பட்ட

# நிகழ்வுகள்

திருநெல்வேலி இராமகிருஷ்ணாலயம் சுவாமி விவேகானந்தரின் இலங்கை விஜய நூற்றாண்டு விழாவினை சுவாமிஜி வருகை தந்த தினமாகிய தை 15ம் திகதி யாழ்/வேம்படி மகளிர் கல்லூரியில் அதன் இந்து மாணவர் மன்றத்துடன் இணைந்தும், சுவாமிஜியின் யாழ்ப்பாண விஜய நூற்றாண்டை வருகை தந்த தினமாகிய தை 24ம் திகதி இராமகிருஷ்ணாலயத்திலும், யாழ் இந்துக் கல்லூரியில் பேசிய தினமாகிய தை 25ம் திகதி யாழ் மாநகர சைவ சமய விவகாரக் குழுவுடன் இணைந்து நாவலர் கலாச்சார மண்டபத்திலும் கொண்டாடியிருந்தது. தளர்ந்து போயிருந்த மாணவ சமூகத்தினரிடையே எழுச்சியை ஏற்படுத்தக் கூடிய வகையில் இவ்விழாக்கள் ஒழுங்கு செய்யப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.

இவ்விழாவிற்கு முன்னோடியாக சுவாமி விவேகானந்தரின் வாழ்வையும் போதனைகளையும் மக்களிடையே பரப்பக் கூடிய வகையில் இரு கருத்தரங்கங்கள் பின்வரும் கல்லூரிகளில் அவற்றின் இந்து மாணவர் மன்றங்களுடன் இணைந்து ஒழுங்கு செய்யப்பட்டிருந்தன.

07–11–96 கருத்தரங்கம் (1) யாழ் வைத்தீஸ்வராக் கல்லூரியில் அதன் அதிபர் திரு.து.சந்தோஷம் தலைமையில் நடைபெற்றது. பிரதம விருந்தினராக யாழ் மேலதிக அரச அதிபர் திரு.து.வைத்தியலிங்கமும், கருத்தரங்குப் பேச்சாளர்களாக இராமகிருஷ்ணாலய இயக்குனர் திரு.இ.இராஜாமகேந்திரசிங்கம், யாழ்.போதனா வைத்தியசாலை வைத்தியக் கலாநிதி திருமதி .திருமகள் சிவசங்கர், கல்லூரி ஆசிரியர் திருமதி.ஜி.சண்முகதாஸ் கலந்து கொண்டார்கள்.

14–11.96 கருத்தரங்கம் (2) யாழ் இந்து மகளிர் கல்லூரியில் அதிபர் திருமதி.ச.ஜெயராசா தலைமையில் நடைபெற்றது. பிரதம விருந்தினராக நல்லூர் பிரதேசச் செயலாளர் திருமதி கமலா சிவசிதம்பரமும் கருத்தரங்குப் பேச்சாளர்களாக பல்கலைக்கழக இந்து நாகரிகத்துறை சிரேஷ்ட விரிவுரையாளர் திரு.எம்.வேதநாதன், இராமகிருஷ்ணாலய இயக்குனர் திரு.இ.இராஜாமகேந்திரசிங்கம், கல்லூரி ஆசிரியர் திருமதி.த.யோகீஸ்வரன் ஆகியோர் கலந்து கொண்டார்கள்.

குறிப்பு–மேற்படி இரு கருத்தரங்கு நிகழ்ச்சிகளில் கலைநிகழ்ச்சிகளுடன் சுவாமி விவேகானந்தரின் திருவுருவப்படம் திரைநீக்கம் செய்யப்பட்டு பேச்சுப் போட்டியில் பரிசில்கள் வென்ற மாணவர்களுக்கு பரிசில்கள் வழங்கப்பட்டன.

## சேவை நிகழ்ச்சிகள்

1) 01–01–19இல்திருநெல்வேலி இராமகிருஷ்ணாலயத்தில் திருநெல்வேலி பகுதியில் வாழும் மிகவும் பின்தங்கிய நிலையிலுள்ள நூறு குடும்பங்களுக்கு உலர் உணவுப் பொருட்களும், பாடசாலை உபகரணங்களும் வழங்கப்பட்டன.

2) மேற்படி நிகழ்ச்சியில் யாழ் சுகாதார வைத்திய அதிகாரி வைத்திய கலாநிதி இ.தெய்வேந்திரன் அவரின் பாரியார் வைத்திய கலாநிதி திருமதி செ.தெய்வேந்திரன் கலந்து சிறப்பித்ததுடன் மேற்படி வறிய குடும்பங்களுக்கு வேண்டிய சுகாதார நடவடிக்கைகள் பற்றியும் கலந்துரையாடினார்கள்.

3) யாழ். முத்துத்தம்பி மகாவித்தியாலயத்தில் மொழி அறிவு குறைந்த மாணவர்களிற்கு மொழி அறிவை விருத்தி செய்ய விசேட தமிழ் மொழிப் பயிற்சி வகுப்புக்கள் நடாத்துவதற்கு உதவி வழங்கப்பட்டன.

4) க. பொ. த. சாதாரண தரத்தில் திறமையான சித்தி பெற்ற யாழ். மாவட்ட பாடசாலைகளில் உயர்கல்விபெறும் வறுமைக் கோட்டு நிலையிலுள்ள மாணவர்களிற்கு கல்வியைத் தொடர ஒவ்வொருவருக்கும் தலா 2500/– வீதம் உதவித் தொகை வழங்கப்பட்டது.

மேற்படி உதவித் தொகைகளை கொழும்பு இராமகிருஷ்ண மிசன் உபதலைவர் சுவாமி ஆத்மகனானந்தாஜி அனுப்பிவைத்திருந்தார்.

## விழாக்கள்

தை 15ம் திகதி வேம்படி மகளிர் கல்லூரி என்றுமில்லாத வகையில் விழாக்கோலம் பூண்டிருந்தது. கடந்த கால அனர்த்தங்களினால் உடைந்து போயிருந்த மேபிள் தம்பையா மண்டபக் கட்டடத்தின் ஊடாக தமிழ் பக்தி கீதம் எங்கும் எதிரொலித்த வண்ணம் இருந்தது. உடைந்து போயிருந்த கூரைகளினூடாக வரும் சூரியனைத் தடுத்து நிறுத்தும் வண்ணம் மெழுகுசீலைகள் போடப்பட்டு அலங்கரிக்கப்பட்டிருந்தது. காலை 9.30 மணியளவில் மண்டபம் மாணவர்களாலும், ஆசிரியர்களாலும், அடியார்களாலும், நலன் விரும்பிகளாலும், பல்கலைக்கழக மாணவர், பேராசிரியர்கள் நிறைந்து வழிந்து காணப்பட்டது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

*குறிப்பு :-*

இவ்விழாவில் கலந்து கொள்ள யாழ். நகரிலுள்ள சகல பாடசாலைகளும் தமது பிரதிநிதிகளை அனுப்பியிருந்தமை குறிப்பிடத்தக்கது.

யாழ். பல்கலைக்கழக இந்து நாகரிகத்துறைத் தலைவர் பேராசிரியர் ப. கோபாலகிருஷ்ண ஐயரும், இராமகிருஷ்ணாலய இயக்குனர் திரு. இ. இராஜாமகேந்திரசிங்கம் அவர்களும் மங்கள விளக்கேற்றி விழாவை ஆரம்பித்து வைத்தார்கள்.

சுவாமிஜியின் திருவுருவப்படம் திரை நீக்கம் செய்யப்பட்ட பொழுது பருத்தித்துறை சாரதா சேவாச்சிரமத்தைச் சேர்ந்த சுவாமி சித்ரூபானந்தா மலர்தூவி பின்னர் ஆசியுரை வழங்கினார்.

கல்லூரி அதிபர் திருமதி க. பொன்னம்பலம் தலைமையில் நடைபெற்ற இவ்விழாவில் யாழ். பல்கலைக்ழகப் பேராசிரியர் ப. கோபாலகிருஷ்ண ஐயர் இந்து மதத்தின் சிறப்பினையும், சுவாமிஜி அவர்களின் பிரசங்கத்தினாலும் வருகையினாலும் ஏற்பட்ட மறுமலர்ச்சிகளையும் தெளிவாக எடுத்தியம்பினார். யாழ். போதனா வைத்தியசாலை வைத்திய கலாநிதி இ. சிவசங்கர், இராமகிருஷ்ணாலய இரஞ்சன் ஆகியோரும் உரையாற்றினார்கள்.

கல்லூரி மட்டத்தில் நடாத்தப்பட்ட பேச்சுப் போட்டியில் பரிசில்களை வென்ற மாணவர்களிற்கு பரிசில்கள் வழங்கப்பட்டன.

திருநெல்வேலி இராமகிருஷ்ணாலயம் தயாரித்தளித்த சுவாமி விவேகானந்தரின் வாழ்க்கையை எடுத்துக் காட்டும் "சங்கமம்" நாடகம் மாணவர்களால் நடித்துக் காண்பிக்கப்பட்டது. சகலரினதும் வரவேற்பையும் இந்நாடகம் பெற்றுக் கொண்டமையும் குறிப்பிடத்தக்கது. இவ்விழா பி. ப. 2 மணியளவில் இனிது நிறைவேறியது.

தை 24 ம் திகதி சுவாமி விவேகானந்தர் யாழ்ப்பாணம் வருகை தந்த நூற்றாண்டு தினத்தில் இராமகிருஷ்ணாலயத்தில் விசேட பூஜைகள், ஆராதனைகள் நடாத்தப்பட்டு, மதிய போசனமும் வழங்கப்பட்டது. மாலை நிகழ்ச்சிகள் பி. ப. 3 மணிக்கு இராமகிருஷ்ணாலயத்தில் ஆரம்பமாகியது. முக்கிய நிகழ்வாக சுவாமிஜியின் யாழ். வருகை நூற்றாண்டு நினைவாக அவரின் நூல்கள் அடங்கிய படிப்பகம் ஒன்று நல்லூர் பிரதேசச் சபையைச் சேர்ந்த திரு. சு. ஸ்ரீதரன் அவர்களால் தொகுக்கப்பட்ட "சுவாமி விவேகானந்தரின் வருகையும் மறுமலர்ச்சியும்" நூல் வெளியீடு பிரதிக் கல்விப் பணிப்பாளர் திருமதி. சி. இராமநாதன் தலைமையில் நடைபெற்றது.

யாழ். பல்கலைக்கழக சிரேஷ்ட விரிவுரையாளர் திரு. மா. வேதநாதன் நூலின் மதிப்பீட்டுரையையும், யாழ். வருகை நூற்றாண்டு தின உரையையும் நிகழ்த்தினார். அவர் தனது உரையில் "சுவாமி விவேகானந்தரின் யாழ்ப்பாண வருகையையும் அதன் சிறப்பு, பெருமை, மக்கள் மனதின் கண்ணே ஏற்பட்ட புத்துணர்வு என்பவற்றைத் தன்னகத்தே அடக்கியுள்ள சிறந்த நூல் இதுவென்றும், எதிர் காலத்தில் ஆய்வு செய்வதற்கு வழித்துணையாக இந்நூல் அமைந்துள்ளமை சிறப்பானது" என்றும் கூறினார். நூல் வெளியீட்டுரையை கவிஞர் காரை எம்.பி.அருளானந்தன் நிகழ்த்தினார்.

சகலருக்கும் இந்நூல் இலவசமாக வழங்கப்பட்டது. பி. ப. 6 மணியளவில் விழா இனிது நிறைவேறியது.

தை 25ம் திகதி சுவாமி விவேகானந்தர் யாழ். இந்துக் கல்லூரியில் பேசிய தினத்தை இராமகிருஷ்ணாலயமும் யாழ். மாநகர சபை சைவ சமய விவகாரக் குழுவும் இணைந்து நாவலர் கலாசார மண்டபத்தில் மிகவும் சிறப்பாகக் கொண்டாடியது. இந்நிகழ்விற்கு முன்னோடியாக யாழ். மாவட்டத்திலுள்ள பாடசாலை மாணவர்களிற்கு சுவாமி விவேகானந்தரின் யாழ் வருகையின் நூற்றாண்டுக் கட்டுரைப் போட்டி கீழ், மத்திய, மேல், அதிமேல் பிரிவாக நடாத்தப்பட்டது. இக்கட்டுரைப் போட்டி வடமராட்சி, தென்மராட்சி, நல்லூர், கொக்குவில் ஆகிய நான்கு இடங்களிலுள்ள நிலையங்களில் நடாத்தப்பட்டு சிறப்பான முறையில் தேர்ச்சி பெற்றவர்க்கு சான்றிதழ்களும் பணப் பரிசில்களும் இவ்விழாவில் வைத்து வழங்கப்பட்டது.

விழா மண்டபம் வாழை, மகர தோரணங்களால் அலங்கரிக்கப்பட்டு பக்தி கீதம் காற்றில் மிதந்து செல்லவிடப்பட்டது. காலை 9 மணிக்கு விழா மண்டபம் பெண்கள், ஆடவர்கள், மாணவர்களால் நிறைந்து காணப்பட்டது. வைத்திய கலாநிதி திருமதி செ. தெய்வேந்திரன் அவர்களும், திருமதி சுவரூபராணி, இராஜா மகேந்திரசிங்கம் அவர்களும் மங்கள விளக்கேற்றி விழாவை ஆரம்பித்து வைத்ததைத் தொடர்ந்து சுவாமி விவேகானந்தரின் திருவுருவப் படத்திற்கு மலர்மாலைகள் அணிவிக்கப்பட்டது, யாழ்.சுகாதாரப் பகுதி உத்தியோகஸ்தர்களால் தேவாரமும் யாழ். வைத்தீஸ்வராக் கல்லூரி மாணவர்களின் பஜனையும், கவிஞர் காரை எம். பி. அருளானந்தம் அவர்களின் கவிதாஞ்சலியும் இடம் பெற்றது. இவ்விழாவிற்கு தலைமை வகித்த யாழ். மாநகராட்சி மன்றத்தின் பதில் ஆணையாளர் திரு. வே. நவரத்தினராசா இவ்விழாவின் முக்கியத்துவத்தையும் சுவாமி விவேகானந்தரின் அறிவுரைகள் தற்போதைய இளைஞர்களிற்கு அவசியமாக இருப்பதையும் எடுத்து உரையாற்றினார்.

அடுத்து இராமகிருஷ்ணாலய இயக்குனர் திரு. இ. இராஜமகேந்திரசிங்கம் சிறப்புச் சொற்பொழிவாற்றுகையில் "சுவாமி விவேகானந்தர் இந்து மதத்தின்சீரிய சிந்தனைகளை உலகறிய வைத்தார். எமது. மூதாதையினர் சுவாமி விவேகானந்தரை நன்றிப் பெருக்குடன் வரவேற்றதன் மூலம் இந்து சமயத்தின் நவீன வரலாற்றில் ஒரு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சாதனையைப் படைத்து விட்டார்கள். இவ்வரலாற்று நிகழ்வுகளின் நூற்றாண்டில் காலை எடுத்து வைக்கும் இத்தருணத்திலாவது சுவாமி விவேகானந்தரின் செய்திகளை நாம் முழுமையாக ஏற்றுவாழப் பழகிக் கொண்டுளோமா? என்று சிந்தித்துப் பார்க்க வேண்டும். இது போன்ற விழாக்களை திறமையாக மனதில் பதித்துச் செயற்படுத்த முடிவும் என்று அவர் கூறினார்.

சைவ சமய விவகாரக் குழுத் தலைவர் வைத்திய கலாநிதி இ. தெய்வேந்திரன் தனதுரையின் போது சுவாமி விவேகானந்தரின் சிந்தனைக்கு செயல்வடிவம் கொடுக்கும் நிகழ்ச்சிகளை நடாத்துவதற்கு ஆர்வமுள்ள அனைவரையும் தம்முடன் இணையுமாறு கோரிக்கை விடுத்தார்.

யாழ். அருணோதயக் கல்லூரி மாணவி செல்வி சர்மிளா பத்மநாதனின் பேச்சைத் தொடர்ந்து யாழ். பல்கலைக்கழக இசைத் துறைத் தலைவர் திரு. எஸ். பத்மலிங்கம் அவர்களின் தெய்விக இசையரங்கும், யாழ். வேம்படி மகளிர் கல்லூரி மாணவிகளின் "சங்கமம் நாடகமும் விழாவிற்கு அணிகூட்டின. சபையோர் சார்பில் யாழ். இந்துக் கல்லூரி மாணவன் செல்வன் தி. திருக்குமரன் கவிதையில் வாழ்த்துக்களைத் தெரிவித்தார். தொடர்ந்து சைவ சமய விவகாரக்குழு செயலாளர் திரு. இ. இரத்தினசிங்கம் அவர்களின் நன்றியுடன் விழா பி. ப. 1.30 மணியளவில் இனிது நிறைவேறியது.

தொடர்ந்து இராமகிருஷ்ணாலயத்தின் ஆதரவுடன் பின்வரும் கல்லூரிகளின் இந்து மன்றங்கள் இவ்விழாவினை சிறப்பாக முன்னெடுத்தன.

10.04.1997 கொக்குவில் இந்துக் கல்லூரியில் அதிபர் பொ. கமலநாதன் தலைமையில் விழா சிறப்பாகக் கொண்டாடப்பட்டது. இராமகிருஷ்ணாலய இயக்குனர் கலந்து சிறப்புச் சொற்பொழிவாற்றினார்.

16.07.1997 இணுவில் இந்துக் கல்லூரியில் அதிபர் திரு. சுந்தரம் தம்பித்துரை தலைமையில் விழா சிறப்பாக நடைபெற்றது. விழாவில் கல்விப் பணிப்பாளர் திரு. அ. தற்பரானந்தன் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்டார். நல்லை ஆதின முதல்வர் ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர பரமாச்சாரிய சுவாமிகள் ஆசியுரை வழங்கினார். கலாரத்ன பிரம்ம ஸ்ரீ வீரமணிஐயர், இ. இராஜமகேந்திரசிங்கம், எம். பி. அருளானந்தம் ஆகியோர் சொற்பொழிவாற்றி சிறப்பித்தார்கள். கலை நிகழ்ச்சிகளில் கலந்து கொண்ட அனைவருக்கும் (மாணவர் உட்பட) மதிய போசனம் வழங்கப்பட்டது.

*குறிப்பு :-*

பின்வரும் ஸ்தாபனங்கள் சுவாமி விவேகானந்தரின் இலங்கை விஜய நூற்றாண்டை தாமாகவே முன்வந்து கொண்டாடினார்கள். இவ்விழாக்களில் இராமகிருஷ்ணாலய இயக்குனர் திரு. இ. இராஜாமகேந்திரசிங்கம் கலந்து சிறப்பித்ததுடன், சிறப்புச் சொற்பொழிவுகளையும் ஆற்றியிருந்தார்.

10.01.1997 யாழ். அருணோதயாக் கல்லூரி இவ்விழாவை அதிபர் திரு. அ. சிறிக்குமரன் தலைமையில் சிறப்பாக முன்னெடுத்தது.

20.01.1997 நாவற்குழி அறிவொளி மன்றம் / அறநெறிப்பாடசாலை நாவற்குழி மகா வித்தியாலயத்தில் மன்றத் தலைவர் திரு. செ. குமாரசுவாமி தலைமையில் இவ்விழாவைப் பெருவிழாவாகக் கொண்டாடியது. தென்மராட்சி பிரதேசச் செயலர் திரு. பு. சுந்தரம்பிள்ளை பிரதம விருந்தினராகக் கலந்து சிறப்பித்தார்.

சரித்திரப் பிரசித்தி பெற்ற சுவாமி விவேகானந்தரின் வருகையினை நூற்றாண்டினை முன்னெடுப்பதற்கு எம்முடன் ஒத்துழைத்த அனைவருக்கும் எமது மனப்பூர்வமான நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

## *மானிப்பாய் விவேகானந்த வித்தியாலயம் - 1904-1998*

*விவேகானந்தா வித்தியாலயம் என அழைக்கப்படும் 93 வருடங்கள் பழமை வாய்ந்த வித்தியாலயமொன்றை மானிப்பாய் லோட்டன் வீதியில் வேலக்கைப் பிள்ளையார் கோவில் வீதியில் காணக்கூடியதாய் உள்ளது. சுவாமி விவேகானந்தரின் மகா சமாதியின் பின்னர் இவ் வித்தியாலயம் 04-09-1904ல் ஸ்தாபிக்கப்பட்டதை இவ் வித்தியாலயத்தின் வரலாறுகள் எடுத்தியம்புகின்றன. இவ் வித்தியாலயத்தை சுவாமி ஞானானந்தர் திறந்து வைத்தார். விவேகானந்தரின் யாழ் வருகைக்கு 7 ஆண்டுகளுக்குப் பின் ஆரம்பிக்கப்பட்டுள்ள இவ்வித்தியாலயம் 4 1/2 பரப்பு 17 1/2 குழியில் இயங்கி வருகிறது.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மட்டக்களப்பு அம்பாறை மாவட்டங்களின் சுவாமி விவேகானந்தரின் இலங்கை விஜயத்தின் நூற்றாண்டு நினைவு முத்திரை வெளியீட்டு விழாக்கள்.

சுவாமி ஜீவனானந்தா
*இராமகிருஷ்ண மிஷன், மட்டக்களப்பு*

## ஆரம்ப ஏற்பாடுகள்.

சுவாமி விவேகானந்தரின் இலங்கை விஜயத்தினை நினைவு கூர்ந்து இலங்கை அரசினரால் வெளியிடப்படவிருக்கும் தபால் முத்திரை வெளியீட்டு விழாவை மட்டக்களப்பு, அம்பாறை மாவட்டங்களில் ஏற்பாடு செய்வதற்கான ஆலோசனைக் கூட்டம் ஒன்று நடைபெற்றது.

மட்டக்களப்பு ஸ்ரீராமகிருஷ்ண மிஷனில் நடைபெற்ற இக்கூட்டத்தில் சுவாமி ஜீவனானந்தஜீ மஹராஜ் அவர்கள் தலைமையில், ஸ்ரீமத் சுவாமி அஜராத்மானந்தஜீ மஹராஜ் அவர்களதும் சமுகத்தில் கிழக்குப் பிராந்திய தபால்மா அதிபர் திரு. இரா. தியாகலிங்கம் அவர்களும், தொடர்புடைய உத்தியோகஸ்தர்களும் தெரிவுசெய்யப்பட்ட இந்து நிறுவனங்களின் பிரதிநிதிகளும், ஸ்ரீராமகிருஷ்ண மிஷன் அன்பர்களும் அழைக்கப்பட்டிருந்தனர். இதில் எடுக்கப்பட்ட தீர்மானங்கள் பின்வருமாறு அமைந்தன.

* 1997. 01.15 அன்று எல்லா இடங்களிலும் தபால் திணைக்களத்துடன் இணைந்து பொதுநிறுவனங்கள் இம்முத்திரை வெளியீட்டைத் தத்தம் சூழலுக்கேற்ற வகையில் தங்களின் ஊர்களில் நடத்துவது.

* பிராந்தியத்தின் பிரதான விழாவை மட்டக்களப்பு ஆனைப்பந்தி விவேகானந்த மகளிர் வித்தியாலய விவேகானந்த மண்டபத்தில் ஏற்பாடு செய்வது. இதனை மட்டக்களப்பு இந்து இளைஞர் மன்றம் பொறுப்பேற்று நடத்துவது.

* அன்றைய தினத்தில் முன்பு ஸ்ரீராமகிருஷ்ண மிஷன் முகாமைத்துவத்தில் இயங்கிவந்த பாடசாலைகளிலும், விரும்பும் ஏனைய கல்விக் கூடங்களிலும் காலைப் பிரார்த்தனையைத் தொடர்ந்து சுவாமி விவேகானந்தரின் இலங்கை விஜயத்தின் சிந்தனைக் குறிப்பு ஒன்றை வாசித்து பயன்பெறுவதற்காக.

கல்வித் திணைக்களத்துடன் இணைந்து நடவடிக்கை எடுப்பது இதற்கான நற்சிந்தனைக் குறிப்பை ஸ்ரீமத் சுவாமி அஜராத்மானந்தஜீ மகராஜ் அவர்கள் தயாரித்து வழங்குவது.

இத்தீர்மானந்துக்கு அமைவாகவும், மட்டக்களப்பு பிராந்தியத்தில் முன்பு ஸ்ரீராமகிருஷ்ண மிஷன் ஆரம்பித்து நடத்திய பாடசாலைகளிலும் அவைகள் அமைந்துள்ள ஊர்களிலும் இந்நிகழ்ச்சிகள் சிறப்பாக ஏற்பாடு செய்யப்பட்டு நடத்தப்பட்டன.

## பிரதான விழா.

இந்த விழா மட்டக்களப்பு ஆனைப்பந்தி பெண்கள் மகாவித்தியாலயத்தில் மட்டக்களப்பு, இந்து இளைஞர் மன்றமும் இந்து மகளிர் மன்றமும் இணைந்து ஏற்பாடு செய்திருந்தது. இந்நிகழ்ச்சிக்கு ஆசியுரை வழங்க ஸ்ரீமத் சுவாமி ஜீவனானந்தஜீ மஹராஜ் அவர்களுடன் திருமலை–மட்டக்களப்பு கத்தோலிக்க திருச்சபை ஆண்டகை கலாநிதி கிங்ஸிலி சுவாம்பிள்ளை அவர்களும், வண.எஸ்.கே. ஜெபரெத்தினம், அவர்களும், மௌலவி எம்.எச்.எம். புகாரி அவர்களும் வந்திருந்து சிறப்பித்தனர்.

கிழக்குப் பிராந்திய தபால் மாஅதிபர் திரு. இரா. தியாகலிங்கம் அவர்கள் முத்திரை வெளியீட்டை ஆரம்பித்து வைத்தார். பிரதம விருந்தினராக மட்டக்களப்பு அரச அதிபர். திரு. அ.கி. பத்மநாதன் அவர்கள் கலந்து கொண்டார். முத்திரை வாங்கிச் சிறப்பிப்பதற்காக மட்டக்களப்பு மாநகர முதல்வர் கௌரவ திரு. செழியன் பேரின்பநாயகம் அவர்களும் விசேட விருந்தினர்களாக அழைக்கப்பட்டிருந்தனர். பிரதேசத்தின் திணைக்களங்கள், நிறுவனங்களின் தலைவர்கள், பாடசாலை ஆசிரியர்கள், பெற்றோர்களும் பொதுமக்களும் வந்திருந்து சிறப்பித்தனர்.

மட்டக்களப்பு இந்து இளைஞர் மன்றத் தலைவர் திரு.எம். பவளகாந்தன் அவர்கள் தலைமையில் நடைபெற்ற இக்கூட்டத்தில் முதல்நாள் தபால் உறையையும் முத்திரையையும் வெளியிடப்பட்டு கருத்துக்களும் இடம் பெற்றன. அத்துடன் தற்காலிக சிறப்புத் தபாலக கருமபீடம் ஒன்று உருவாக்கப்பட்டு மட்டக்களப்பு பிரதம தபாலதிபர். திரு.எஸ். சற்குணானந்தராசா அவர்களாலும், அவர்களது உத்தியோகஸ்தர்களாலும் முத்திரைகளும், முதல்நாள் உறைகளும் விற்பனை செய்யப்பட்டது.

## பிரதேச விழாக்கள்

### ஆரையம்பதி

மண்முனை பற்று பிரதேச சபையினால் இவ்விழா ஆரையம்பதி மகாவித்தியாலயத்தில் ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பிரதேச சபைத் தவிசாளர் திரு.க.நவரெத்தினராசா அவர்கள் தலைமையில் நடைபெற்ற இக்கூட்டத்திற்கு சுவாமி ஜீவனானந்தஜீ மஹராஜ் அவர்களும், மௌலவி ஏ.சி.எம். றிபாய் அவர்களும், அருட்திரு. சந்திரா பெர்ண்ணாண்டோ அடிகளும் மதப் பெரியார்களாக அழைக்கப்பட்டிருந்தனர்.

கிழக்குப் பிராந்திய பிரதி தபால்மா அதிபர் இரா.தியாகலிங்கம் பிரதேச செயலாளர் திரு.மா.உதயகுமார், உள்ளூராட்சி உதவி ஆணையாளர் திரு. ஏ.பி. விஜயரெத்தினம் அவர்களும் வந்திருந்து விழாவைச் சிறப்பித்தனர். ஆரையம்பதி தபாலகத்தின் சிறப்பு கருமபீடம் ஒன்றின்மூலம் முதல் நாள் தபால் உறை முத்திரை விற்பனை நடத்தப்பட்டது. பொதுக்கூட்டமும் மாணவர்களின் நிகழ்ச்சிகளும் இடம்பெற்றுச் சிறப்புற்றன.

## கல்லடி - உப்போடை.

மட்/சிவானந்த வித்தியாலய (தேசிய பாடசாலை) அதிபர். திரு. ந. இராஜரெத்தினம் அவர்களின் தலைமையில் இவ்விழா சிறப்பாக ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது.

சுவாமி ஜீவனானந்தா பிரதி தபால்மா அதிபர் திரு.இரா.தியாகலிங்கம் வடக்கு-கிழக்கு மாகாணக் கல்வி கலாசார அமைச்சின் முன்னாள் செயலாளர் திரு. க. தியாகராசா, பிரதேச பிரதி கல்விப்பணிப்பாளர் திரு. தி.பொன்னம்பலம் மற்றும் பழைய மாணவர் மன்றத் தலைவரும் பிரதேச செயலாளருமான திரு. செ.புண்ணியமூர்த்தி முதலிய பிரமுகர்கள் சமூகமளித்திருந்தனர். பெற்றோர், ஆசிரியர்கள், மாணவர்கள் மத்தியில் முத்திரை விற்பனையுடன் பொதுக் கூட்டமும் நடைபெற்றது.

கல்லடி உப்போடையில் அமைந்துள்ள மட்/விவேகானந்த மகளிர் வித்தியாலயமும் இந்நிகழ்ச்சியை சிறப்பாக ஏற்பாடு செய்திருந்தனர். இவர்கள் முத்திரை வெளியீட்டு விழாவுடன் சுவாமி விவேகானந்தரின் இலங்கை விஜய நினைவாக சுவாமி விவேகானந்தரின் திருவுருவம் தாங்கிய ஊர்வலம் நடத்தியதுடன், ஸ்டிக்கர் படம் ஒன்றையும் வெளியிட்டு மாதந்தோறும் மாணவர் சிறப்பு நிகழ்ச்சிகளையும் ஏற்பாடு செய்து நடத்தினர்.

## திருப்பழுகாமம்.

திருப்பழுகாமம், சுவாமி விவேகானந்தர் சிறுவர் இல்லமும், விவேகானந்தர் நலன்புரிச் சங்கமும் இணைந்து இல்ல மண்டபத்தில் நிகழ்ச்சியை ஏற்பாடு செய்திருந்தனர்.

திரு.க. தணிகாசலம் அவர்கள் தலைமையில் நடைபெற்ற இவ்விழாவில் பிரதேச செயலாளர் திரு. எஸ். பாஸ்கரன், பிரதி கல்விப்பணிப்பாளர் திரு.வ. கணபதிப்பிள்ளை, பெரியபோரதீவு தபால் அதிபர் திரு.பெ. புவனசுந்தரம் முதலிய பிரமுகர்கள் அழைக்கப்பட்டிருந்தனர்.

முத்திரை வெளியிடும், முதல்நாள் உறை விற்பனையும் பொதுக்கூட்டமும் இங்கு ஏற்பாடு செய்யப்பட்டு சிறப்பாக நடைபெற்றன.

## பெரியகல்லாறு

பெரியகல்லாறு மத்திய மகாவித்தியாலயத்தில் நடைபெற்ற அவ்விழாவை கல்லாறு தபாலகம் பொதுசேவை நிறுவனங்கள், ஆலயதர்மகர்த்தா சபைகள் பாடசாலைகள் ஆகியன ஏற்பாடு செய்திருந்தன.

கல்லாறு தபாலதிபர் திரு. வீ. ஞானமாணிக்கம் அவர்கள் தலைமையில் நடைபெற்ற கூட்டத்திற்கு மட்டக்களப்பு பாராளுமன்ற உறுப்பினர் திரு. பொ. செல்வராசா அவர்களும், ஸ்ரீராமகிருஷ்ண மிஷன் பழைய மாணவர் மன்றத் தலைவரும் ஓய்வுபெற்ற அதிபர் திரு. க. விநாயகமூர்த்தி உள்ளிட்ட பிரமுகர்களும் பலரும் அழைக்கப்பட்டிருந்தனர். முத்திரை விற்பனையும், பொதுக்கூட்டமும் நடத்தி விழாவைச் சிறப்புறச் செய்தனர்.

## கொக்கட்டிச்சோலை.

மண்முனை தென்மேற்கு பிரதேச சபை தவிசாளர் திரு.ச. அகிலேஸ்வரன் தலைமையில் கொக்கட்டிச்சோலையில் இவ்விழா ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது.

இப்பிரதேச செயலாளர் திரு. சிவநாதன் அவர்களும், பிரதேச கல்விப் பணிப்பாளர் உள்ளிட்டு பாடசாலை அதிபர்கள், ஆசிரியர்கள், பொதுநிறுவனங்களின் பிரதிநிதிகளும் இந்நிகழ்ச்சியில் கலந்து கொண்டு முத்திரை விற்பனையும் பொதுக்கூட்டத்தையும் நடத்திச் சிறப்பித்தனர்.

## களுதாவளை.

பிரதேச செயலாளர் திரு. கருணாகரன் அவர்கள் தலைமையில் களுவாஞ்சிக்குடி தபால் அதிபர், கல்வித்திணைக்கள உத்தியோகஸ்தர்கள், பாடசாலை அதிபர்கள், பொதுநிறுவனங்களின் பிரதிநிதிகள் இணைந்து இந்நிகழ்ச்சியை நடத்தினர். களுதாவளை விபுலானந்த இந்து கலாச்சார பொதுப்பணி மன்றம் பூர்வாங்க ஏற்பாடுகளை செய்திருந்தது.

## செங்கலடி.

ஏறாவூர் பற்று பிரதேச உதவிக்கல்விப் பணிப்பாளர் திரு.கே. விஜயரெத்தினம் அவர்களினால் ஏற்பாடு செய்யப்பட்ட இக்கூட்டத்தில் செங்கலடி பிரதம தபால் அதிபர் பாடசாலை அதிபர்கள், பிரதேச செயலாளர் திரு. கே. ஸ்ரீசங்கர் உள்ளிட்ட பிரமுகர்களும் கலந்து முத்திரை முதல் நாள் உறையையும் விற்பனை செய்ததுடன் பொதுக்கூட்டம் ஒன்றையும் நடத்தினர்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

செங்கலடி விவேகானந்த வித்தியாலயம் அன்று மட்/கல்விப்பணிப்பாளர் திரு.எஸ்.எஸ்.மனோகரன் அவர்களால் திறந்து வைக்கப்பட்டது.

## வந்தாறுமூலை.

வந்தாறுமூலை விஷ்ணு வித்தியாலயத்தில் அதன் அதிபர் ஆசிரியர்கள் பொதுமக்களால் இந்நிகழ்ச்சி தபாலகத்துடன் இணைந்து ஏற்பாடு செய்யப்பட்டது.

## வாழைச்சேனை.

வாழைச்சேனை இந்துக் கல்லூரியில் ஏற்பாடு செய்யப்பட்ட இவ்விழாவை இப்பிரதேச பிரதிகல்விப்பணிப்பாளர் திரு.எஸ்.நாகேந்திரம் அவர்கள் முன்னின்று நடத்தினார். பிரதேச செயலாளர் திரு.கதிர்காமநாதன் உள்ளிட்டு பிரமுகர்கள் பலரும் கலந்து விழாவைச் சிறப்பித்தனர்.

## கல்முனை.

அம்பாறை மாவட்டத்தின் பிரதான நிகழ்ச்சி கல்முனை இந்து மன்றத் தலைவர் திரு. க. பீதாம்பரம் அவர்கள் தலைமையில் கல்முனை ஸ்ரீராமகிருஷ்ண மிஷன் மகாவித்தியாலயத்தில் இந்நிகழ்ச்சி ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது.

தமிழ் பிரிவு பிரதேச செயலாளர் திரு.கே.இராஜ செல்லக்குமாரன் பொறியியலாளர் திரு.க. குணநாயகம், பிரதம தபால் அதிபர் திரு.ஆர். மனோரஞ்சிதம், ஸ்ரீராமகிருஷ்ண வித்தியாலய அதிபர் திரு. என். நாகராஜா உள்ளிட்ட பிரமுகர்கள் அழைக்கப்பட்டிருந்தனர். டாக்டர் எம். முருகேசபிள்ளை அவர்கள் முதல் முத்திரையைப் பெற்று நிகழ்ச்சியை ஆரம்பித்து வைத்தனர். கலை நிகழ்ச்சிகளுடன் பொதுக்கூட்டமும் ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது. நிகழ்ச்சிகளை திரு. பூவை. சரவணன் தொகுத்து வழங்கினார்.

## நற்பிட்டிமுனை.

நற்பிட்டிமுனை இந்து இளைஞர் மன்றம் இந் நிகழ்ச்சியை ஏற்பாடு செய்திருந்தது. மன்றத்தலைவர் செல்வன். ஆ. சசீந்திரன் தலைமையில் கல்முனைத் தமிழ்பிரிவு பிரதேச செயலாளர் திரு. கே. இராஜசெல்வக்குமாரன் அவர்களையும், கல்முனை பிரதம தபாலதிபர் திரு. ஆர். மனோரஞ்சிதம் அவர்களை பிரதம அதிதியாக நற்பிட்டிமுனை சிவசக்தி வித்தியாலய அதிபர் திரு.என். நாகமணி ஸ்ரீநகுலேஸ்வரர் ஆலயக் குரு தம்பிராசா குருக்கள் ஸ்ரீகந்தசாமி ஆலயகுரு ச. இராமச்சந்திரக் குருக்கள் ஸ்ரீகணேசாலயக் குரு ஸ்ரீ ஆதிநாராயணசர்மா ஓய்வுபெற்ற அதிபர் காசுபதி தெய்வநாயகம் அவர்களை சிறப்பு அதிதிகளாகவும் அழைத்து நிகழ்ச்சிகளை ஏற்பாடு செய்திருந்தனர்.

நற்பிட்டிமுனை சிவசக்தி வித்தியாலயத்தில் நடைபெற்ற இந்நிகழ்ச்சியில் பொது நிறுவனங்களும், பொதுமக்களும் கலந்து கொண்டு நிகழ்ச்சியைச் சிறப்பித்தனர்.

## அக்கரைப்பற்று

அம்பாறை மாவட்ட இந்து இளைஞர் பேரவையின் தலைவர் திரு. ச. கைலாயபிள்ளை அவர்களின் தலைமையில் அக்கரைப்பற்று விபுலானந்த மாணவர் இல்ல விவேகானந்த மண்டபத்தில் இந்நிகழ்ச்சி ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது.

ஆலையடிவேம்பு பிரதேச செயலாளர் திரு. எம். தயாபரன், பிரதேச கல்வி உதவிப் பணிப்பாளர் திருமதி. லோகநாதஸ்ரீ, அம்பாறை மாவட்ட சமூக நலன்புரி அமைப்பு நிறுவனத் தலைவர் திரு. எஸ். செந்தூரராசா சைவப்புலவர் திரு. எஸ். சாமித்தம்பி, திரு. ஏ. கே. சுந்தரசேகரக் குருக்கள் உள்ளிட்ட பிரமுகர்கள் நிகழ்ச்சிக்கு அழைக்கப்பட்டிருந்தனர். அக்கரைப்பற்று பிரதான தபாலதிபர் திரு. கே. சதானந்ததாசன் பிரமுகர்களுக்கு முத்திரை வழங்கி நிகழ்ச்சியை ஆரம்பித்து வைத்தார். பொதுக்கூட்டம் நடத்தி நிகழ்ச்சிகள் நிறைவுற்றது.

## காரைதீவு.

காரைதீவு விபுலானந்த மத்திய மகாவித்தியாலயத்தில் காரைதீவு, விவேகானந்த விளையாட்டுக் கழகம் இந்நிகழ்ச்சியை ஏற்பாடு செய்திருந்தது.

## தம்பிலுவில்.

தம்பிலுவில் திருநாவுக்கரசு நாயனார் குருகுல கனகசபை மண்டபத்தில் அங்குள்ள அன்பர்களினால் ஏற்பாடு செய்யப்பட்ட இந்நிகழ்ச்சியில் முத்திரை வெளியீடு நடத்தப்பட்டது.

## நிறைவு.

மட்டக்களப்பு அம்மாறை மாவட்டங்களிலுள்ள ஸ்ரீராமகிருஷ்ண மிஷன் பாரம்பரியத்துடன் தொடர்புபட்ட அனைத்து பாடசாலைகளிலும் பொதுநிறுவனங்களிலும் காலைப் பிரார்த்தனையுடன் முத்திரை வெளியீடும் பொதுக்கூட்டமும் கலாசார நிகழ்ச்சிகளும் சிறிதும் பெரிதுமாக சூழலுக்கு இசைந்த வகையில் சுவாமி விவேகானந்தரின் திருவுருவப் படத்திற்கு மாலையிட்டு பக்தி சிரத்தையுடன் நடத்தியுள்ளமையை நன்றியுடன் நினைவு கூறுகின்றேன்.

பகவான் ஸ்ரீராமகிருஷ்ண குருதேவரின் பேரருளும், அன்னை சாரதா தேவியின் கடாட்சமும் சுவாமிஜியின் நல்லாசியும் இந் நிகழ்ச்சிகளில் கலந்து கொண்ட அனைவருக்கும் நிறுவனங்களுக்கும் கிடைக்க பிரார்த்திக்கின்றேன்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நாட்டின் இதர பகுதிகளில் நடைபெற்ற சுவாமி விவேகானந்தரின் இலங்கை விஜய நூற்றாண்டு நினைவு நிகழ்ச்சிகள்

திருகோணமலை

நிகழ்ச்சிகள் 26.05.95 திங்கட்கிழமை மாலை 5.00 மணிக்கு ஆரம்பித்து இ. கி. ச. கோணேஸ்வரா இந்துக் கல்லூரி திருகோணமலை திறந்த வெளி அரங்கில் வணக்கத்துக்குரிய சுவாமி ஆத்மகனானந்தாஜீ மகராஜ் அவர்களின் தலைமையில் இடம் பெற்றது.

*நிகழ்ச்சி நிரல்.*

| | | |
|---|---|---|
| வரவேற்புரை | : | தலைவர் இராமகிருஷ்ண சேவா சங்கம், திருகோணமலை. |
| தலைமையுரை | : | சுவாமி ஆத்மகனானந்தாஜீ மகராஜ் |
| பரிசு வழங்கல் | : | மாவட்டத்தில் நடத்தப்பட்ட நூற்றாண்டு விழா போட்டிகளில் வெற்றி பெற்ற பாடசாலை மாணவர்களுக்கான பரிசு வழங்கல். |
| பேச்சு | : | செல்வன் தருஷான் அருனேந்திரன் *(புனித பிரான்சிஸ் சவேரியார் பாடசாலை)*<br>செல்வன் பிரபுசங்கர் சுப்ரமணியம் *(கோணேஸ்வரா இந்துக் கல்லூரி)*<br>செல்வி விஜயரதி செல்வராஜ் *(நிலாவெளி தமிழ் வித்தியாலயம்)*<br>செல்வி தயாபரி கணேசலிங்கம் *(ஸ்ரீ சண்முகா இந்து மகளிர் கல்லூரி)* |
| வில்லுப்பாட்டு | : | தி/விவேகானந்தா கல்லூரி |
| நாடகம் | : | தி/ விவேகானந்தா கல்லூரி "சுவாமி விவேகானந்தர் விஜயம்" |
| நாட்டிய நாடகம் | : | திருமதி. சாரதா ஸ்ரீஸ்கந்தராஜாவின் மாணவிகள் |
| நன்றியுரை | : | செயலாளர், இராமகிருஷ்ண சேவா சங்கம், திருகோணமலை. |

புத்தகக் கண்காட்சியொன்றும் 24.05.97 முதல் 26.05.97 வரை கோணேஸ்வரா இந்துக் கல்லூரி மண்டபத்தில் இடம் பெற்றது.

## கிழக்கில் சுவாமி விவேகானந்தர் முத்திரை வெளியீட்டு விழாக்கள்

சுவாமி விவேகானந்தர் இலங்கைக்கு விஜயம் மேற்கொண்ட 100வது ஆண்டை நினைவு கூரும் வகையில் அரசு 15.1.97 அன்று வெளியிட்ட முத்திரை வெளியீட்டு வைபவங்கள் கிழக்கில் வாழைச்சேனை தொடக்கம் அக்கரைப்பற்று வரையும் நடைபெற்றது.

மட்டக்களப்பு மாவட்டத்தின் பிரதான வைபவம் கல்லடி சிவானந்த தேசிய பாடசாலையில் நடைபெற்றது. மட்டு. எம்.பி, ஜோசப் பரராஜசிங்கம், மாநகர முதல்வர் செழியின் ஜே. பேரின்பநாயகம், கல்விப் பணிப்பாளர் எஸ். எஸ். மனோகரன் ஆகியோர் கலந்து கொண்டனர். இங்கு பாரிய ஊர்வலமும் நடைபெற்றது.

ஆரையம்பதி பிரதேச சபை அதன் தவிசாளர் அ. நவரட்ண ராஜா தலைமையில் முத்திரை வெளியீட்டு விழாவை நடத்தியது. பிரதம அதிதியாக கிழக்குப் பிராந்திய தபால்மா அதிபர் கே. தியாகலிங்கம் கலந்து கொண்டார். இந்து இளைஞர் மன்றம், ஆனைப்பந்தி மகளிர் மகா வித்தியாலயத்தில் நடத்தியது.

அம்பாறை மாவட்டத்தில் முத்திரை வெளியீட்டு விழாக்களும் ஞாபகார்த்த கூட்டங்களும் இடம் பெற்றன. கல்முனை இந்து இளைஞர் மன்றத்தினர் இராமகிருஷ்ண மகா வித்தியாலயத்தில் முத்திரை வெளியீட்டு விழாவை மன்றத் தலைவர் கே. பீதாம்பரம் தலைமையில் நடத்தினர். கல்முனை பிரதம தபாலதிபர் ஆர். மனோரஞ்சிதன் வெளியிட்டு வைக்க வைத்திய கலாநிதி எம். முருகேசு பிள்ளை முதற் பிரதியைப் பெற்றார். அதிபர் என். நாகராஜா சிறப்புரையாற்றினார்.

நற்பிட்டிமுனை சிவசக்தி வித்தியாலயத்தில் கே. சசீந்திரன் தலைமையிலும் காரை தீவு விபுலானந்த மத்திய கல்லூரியில் அதிபர் வெ. ஜெயநாதன் தலைமையிலும் வெளியீட்டு விழாக்கள் இடம் பெற்றன. விழாவில் தபாலதிபர் எம். தம்பிராஜா முதல் நாளுறையை பிரதேச செயலாளர் எஸ். இராமகிருஷ்ணனிடம் வழங்கி வைத்தார்.

அம்பாறை

சிறுவரில்லமான அம்பாறை மாவட்ட திருநாவுக்கரசு நாயனார் குருகுல ஆதீனத்தின் ஏற்பாட்டில் நடைபெற்ற விழா.

| | | |
|---|---|---|
| காலம் | : | 1997.01.15 |
| இடம் | : | திருநாவுக்கரசு நாயனார் குருகுல ஆதீன சுவாமி தம்பையா படிப்பகம். |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நேரம் : காலை 10.45
தலைமை : கண. இராஜரெத்தினம் (முகாமைப் பணிப்பாளர்)
வெளியிடுவோர் : உப தபாலதிபர் தம்பிலுவில்
தபாலதிபர் திருக்கோவில்

தபால் தலைப்புகள் பெறுவோர் :

திரு. எஸ். அமலநாதன் *(பிரதேச செயலாளர்)*
திருக்கோவில்
திருமதி டாக்டர் லோசனா இராஜேந்திரா
*(வைத்திய அதிகாரி)*
திரு. கே. எஸ். பஞ்சாட்சரம் *(பொது முகாமையாளர்)*
திரு. இரா. கோணேசமூர்த்தி *(தி. பி. வர்த்தகர் சங்கம்)*
திரு. ஆ. கணேசமூர்த்தி *(கணக்காளர்)*
திரு. இரா. ஜெயேந்திரா *(முகாமையாளர், இல. வங்கி)*

நூற்றாண்டு உரைகள் நிகழ்த்துவோர் :

திரு. க. சதானந்தம்
திரு. கா. விவேகானந்தன்
*(சிவானந்தா பழைய மாணவர்கள்)*

### குண்டசாலை

குண்டசாலை விவேகானந்தா தமிழ் வித்தியாலயத்தில் பாடசாலை ஆசிரியர்கள், மாணவர்கள் பாடசாலை அபிவிருத்திச் சங்கம், பழைய மாணவர்கள் ஆகிய சகலரும் இணைந்து நூற்றாண்டு விழாவை சிறப்பாக 13.06.97 அன்று கொண்டாடினார்கள். சிறப்புமலர் ஒன்றும் வெளியிடப்பட்டது.

### பதுளை

பதுளை காந்தி சேவா சங்கத்தின் ஏற்பாட்டின் பேரில் பதுளை இந்துக் கலாசார மண்டபத்தில் நூற்றாண்டு விழா விமரிசையாகக் கொண்டாடப்பட்டது. ஆயிரக் கணக்கான இந்து மக்கள் கலந்து கொண்ட ஆன்மீக ஊர்வலம் பதுளை ஸ்ரீகதிர் வேலாயுத சுவாமி ஆலயத்திற்கு முன்பாக ஆரம்பிக்கப்பட்டது.

### புசல்லாவை

சுவாமி விபுலானந்த அறநெறிப் பாடசாலையின் 5ஆம் ஆண்டு நிறைவாகவும் சுவாமி விவேகானந்தரின் இலங்கை விஜய நூற்றாண்டை முன்னிட்டு அறநெறி விழா 1997இல் நடைபெற்றது.

இடம் : க/சரஸ்வதி ம. வி. புசல்லாவை, இராஜலிங்கம் மண்டபம்
காலம் : 30.03.97 (ஞாயிற்றுக்கிழமை)

நேரம் : மு. ப. 9.00 மணி
தலைமை : திரு. செ. தமிழ்ச் செல்வன் *(அதிபர் க/சரஸ்வதி ம.வி)*
பிரதம அதிதி : ஸ்ரீமத் சுவாமி ஆத்மகணானந்த ஜீ மகராஜ்
*(தலைவர் ஸ்ரீ இராம கிருஷ்ண மிசன் கொழும்பு)*

கௌரவ அதிதிகள்

திருமதி பொ. முருகேசு
*(உதவிக் கல்விப் பணிப்பாளர், கம்பளை)*
திரு. வீ. விக்கிரமராஜா
*(உதவிப் பணிப்பாளர், இ. க. திணைக்கம்)*
திரு. க. நாகேஸ்வரன்
*(விரிவுரையாளர், சப்ர கமுக பல்கலைக்கழகம்)*
செல்வி கே. எம் இராஜேஸ்வரி
*(கலாசார உத்தியோகத்தர்)*
திருமதி நளாயினி சுப்பையா
*(கலாசார உத்தியோகத்தர்)*
புலவர் திரு. திருநாவுக்கரசு.

## நிகழ்ச்சி நிரல்

சுவாமி விவேகானந்தர் திருவுலாவும், பூஜையும்
வரவேற்புரை – திரு வே. அமிர்தலிங்கம்
*(தலைவர் சுவாமி விபுலானந்தர் அ. நெ. பா)*
தலைமையுரை – அதிபர்
பஜனை தியானம் – சுவாமி அவர்கள்
செயலாளர் உரை – திருமதி ஜெயரஞ்சி கிருஷ்ணபிள்ளை
கௌரவ அதிதிகள் உரை
விசேட அதிதி உரை
கலை நிகழ்ச்சிகள்
நன்றியுரை – திருமதி நாகேஸ்வரி சங்கர நாராயண ஐயர்
*(ஆலோசகர் சுவாமி விபுலானந்தர் அ. நெ. பா.)*

### நுவரெலியா

நுவரெலியா இந்து கலாசார பேரவை ஏற்பாட்டில் விவேகானந்தரின் முத்திரை வெளியீட்டு விழா 15.01.97 அன்று ஸ்ரீ முத்துமாரி அம்மன் மண்டபத்தில் வெகு சிறப்பாக நடைபெற்றது.

### அட்டன்

அட்டன் விவேகானந்தர் சபை 01.03.97 அன்று விவேகானந்தர் விழாவை சிறப்பாகக் கொண்டாடியது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# Centenary Celebration Of Swamiji's Return To India

Our centres in Tamil Nadu, led by the Chenni R.K. Math and the Coimbatore R.K.M. Vidyalaya, in collaboration with private centres and devotee-groups, jointly organized a marathon series of programmes spanning 21 days and covering a distance of 700 km. on the 26th January, Swamiji was ceremonially received at the same place Kundukal in Pamban, where he had landed a century ago, and symbolically installed on a colourful, attractive float which had an 8 ft. high image of Swamiji seated on a throne. Accompanying the float were many Swamis and devotee-volunteers in cars and vans. The convoy passed through Rameswaram, Ramnad, Paramakudi, Manamadurai, Madurai, Trichy, Thanjavur, Kumbakonam, Panruti, Chengalpattu, and reached Chennai on the 6th February, camphor-arati, and offerings of flowers and fruits, there were also processions, public meetings, and cultural programmes, the convey was, moreover, stopped many times on the way at a number of villages and towns for garlanding and arati. The response everywhere was overwhelming and spontaneous. On the 6th February, Swamiji was given a very emotional and devoted reception at Chennai Egmore railway station and this was followed by a long procession of nearly 12,000 students and devotees. The following 9 days there were public meetings, cultural programmes, visits to slums, and group- discussions organized in various parts of the city. Swami Ranganathanandaji presided over the valedictory function on the 14th february. The next morning Swamiji was given a farewell at Chennai Harbour, very near the spot where he boarded the ship for Calcutta a century ago. That spot has now been officially named Vivekananda Wharf. During these programmes, the chennai math distributed free of cost more than 70,000 copies of booklets containing Swamiji's lectures in tamil Nadu. Nearly 1,20,000 pictures of Swamiji were also distributed.

The Ramakrishna Mission Centenary Celebration Committee, in collaboration with several private and public institutions, observed the Centenary of Swamiji's return to Calcutta on the 19th and the 23rd February. A life-size portrait of Swamiji was brought from Budge Budge to Sealdah railway station by Swami Gahananadaji in a decorated special train. At each station between Budge Budge and Sealdah people in thousands greeted Swamiji with great enthusiasm and jubilation. Sri Prashanta Chatterji, Mayor of Calcutta, received the portrait at the Sealdah station amidst loud cheers by the huge concourse of people. The portrait was placed in a carriage which was drawn by youths, first to Surendranath College (formerly Ripon College) and then to Mitra Institution (a secondary school where Ripon College was situated during Swamiji's time)... Paralleling the events which took place a century ago. A large number of devotees, students, and monks followed the carriage in a procession. Two plaques commemorating the event were unveiled, one at the Suredranath college and another at the Mitra Institution, and meetings were held at both these institutions in which Swami Lokeswarananda and some other eminent persons spoke. In the evening, meetings were held at the historic house of late Pashupatinath Bose and at Alambazar Math, the two places visited by Swamiji on the very day of his return to Calcutta. On the 23rd, people from all walks of life, including young boys and girls from various educational institutions

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

came in colourful processions to Deshabandhu Park where a public meeting, presided over first by the Mayor Sri Prashanta Chatterji and then by Swami Gahananadaji, was held. The benedictory address of Revered President Maharaj was read out and Sri Chittatosh Mukherjee, chairman, Human Rights Commission, West Bengal, Dr. R.N.Basu, Vice-Chancellor, Calcutta University the General Secretary, and several other dignitaries spoke. A large number of people attended the programme. About 5000 copies of the Calcutta address of welcome were distributed free of cost on both days.

To mark the occasion, booklets on Swamiji's return to India were published by Udbodhan (6 titles in Bengali), Gol Park (2 titles in Bengali), and Advaita Ashrama (2 titles in English). Besides, Advaita Ashrama and Udbodhan published a special number of their journals.

The Chengalpattu centre organized competitions in elocution, essay-writing, recitation, sayings of Swamiji, music, devotional songs, drawing, drama, etc. from the 17th to the 24th November in which nearly 1090 students from various schools and colleges participated. The students and teachers of the Ashrama's school visited several nearby villages from the 25th to the 29th January and spoke on Swamiji's message. On the 5th February, a massive procession of about 10,000 students and many other local persons was conducted. Next morning, a function was held at the Chengalpattu railway station. The station was decorated tastefully and a number of devotees attended the programme. Besides, some programmes on Swamiji organized by the centre were telecast by Doordarshan.

The Allahabad centre organized a symposium on "The Relevance of Swami Vivekananda in the Present National Context" on the 26th January : eminent speakers addressed the gathering , A youth convention was held on the 2nd February in which 165 youths took part.

The Manasadwip Ashrama held programmes which included speeches, recitations, and musical performances at nine places in Sundarban Islands from the 22nd January to the 11th February. A total of nearly 6000 persons attended the programme.

The Delhi centre organized a programme on Swamiji's Triumphant Return to India in Doordarshan which was telecast on the 26th January on the national network.

The Chennai Mission Ashrama held competitions in recitation, elocution and quiz in Tamil, English and Telugu from the 6th to the 10th January in which 769 students from 64 schools participated. A public meeting held on the 9th february was attended by a large gathering.

Apart from these programmes, the various other branch centres of the Mission at Mumbai, Hyderabad, Mysore, Bangalore, Rajkot, Jaipur, raipur, thrissur, Shillong, Bhubaneswar, Kalady, Aqartala, Almore, Visakhapatnam, Ranchi, etc., also observed this occasion with various programmes such as, youth conferences, seminars, literary competitions, spiritual retreats, processions, public meetings, cultural programmes etc.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# VIVEKANANDA SOCIETY, COLOMBO

## WINNERS OF ORATORICAL CONTESTS FOR SCHOOL CHILDREN ORGANISED BY THE SOCIETY IN 1993

### JUNIORS (TAMIL)

**First Place** - M. Myooran,
Shri Koneswara Hindu College, Trincomalee.

**Second Place** - V. Terryson,
Wijeyaratnam M.M.V., Negombo.

**Third Place** - (a) K. Geetha,
Ramanathan Hindu Ladies College, Colombo.
(b) K. Pasupathan,
Shri Koneswara Hindu College, Trincomalee.

### INTERMEDIATES (TAMIL)

**First Place** - K. Arunthavavani,
Carl Merl Pathima College, Kalmunai.

**Second Place** - K. Thayapari,
Shri Shanmuga Vidyalayam, Trincomalee.

**Third Place** - A. Sivadeepan,
Sithi Vinayager Hindu College, Mannar.

### SENIORS (TAMIL)

**First Place** - K. Surenthiran,
St. Thomas Mixed School, Colombo.

**Second Place** - (a) N. Thajini,
St. Andrews M.M.V., Nawalapitiya.
(b) C.W. Saththiajitth,
Hindu College, Colombo.

### INTERMEDIATES (ENGLISH)

**First Place** - T. Sarvanantha,
Shri Koneswara Hindu College, Trincomalee.

**Second Place** - S. Vani,
Saivamangayar Vidyalayam, Colombo.

### SENIORS (ENGLISH)

**First Place** - M. Vijayanthi,
Rambaikulam M.M.V., Vavuniya.

**Second Place** - S. Nila,
Rambaikulam M.M.V.,
Vavuniya.

Gold Medals awarded to First Place
Silver to Second Place, Bronze to Third Place,
All Final participants get saving Pass Books with deposits of Rs. 1,000/- each.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நூற்றாண்டு விழாக்களை ஒட்டிய போட்டிகளின் முடிவுகள்

சுவாமி விவேகானந்தரின் இலங்கை விஜய நூற்றாண்டு தினத்தையொட்டி அகில இலங்கை ரீதியில் இடம் பெற்ற இப்போட்டி முடிவுகள் பின்வருமாறு :-

## ஆரம்ப பிரிவு

முதலிடம் - செல்வி. ஷியாமினி கலிஷ்ரா
*விவேகானந்த மகளிர் கல்லூரி – மட்டக்களப்பு.*

இரண்டாமிடம் - செல்வி சுதர்ஷினி இராமநாதன்
*மகளிர் கல்லூரி உயர்தர பாடசாலை கண்டி.*

மூன்றாமிடம் - செல்வி பொ. பிரிந்தா
*விவேகானந்த கல்லூரி கொழும்பு.*

## மத்தியபிரிவு

முதலிடம் - செல்வன் அ. பிறேமிநாத்
*சிவானந்த வித்தியாலயம், மட்டக்களப்பு.*

இரண்டாமிடம் - செல்வி யோ. மதுரா
